தமிழ் நயம்
2011

ரோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம்

VENUGA TEXTILES

Lowest prize , biggest collections...

- Fancy sarees
- Designer sarees
- Blouse meterial
- Wedding silks
- Fancy silks
- Designer silks
- Children's ready-made
- Suiting & shirting
- Dhotis
- Churidar & dress meterial
- Branded shirts
- Ethnic wear
- Wedding suits
- Men's ready-made
- Skirt & blouse

No.90, Bazar street, Vavuniya

Tel: 024-2225163

Mobile: 0777680954

ரோயல் கல்லூரி
தமிழ் இலக்கிய மன்றம்

பெருமையுடன் வழங்கும

"கலை விழா 2011"

13. 11. 2011 ஞாயிற்றுக்கிழமை, மாலை 04. 01 மணி

ரோயல் கல்லூரி "நவரங்கஹல"

பிரதம விருந்தினர்

திரு. எம். கே. ராகுலன்

(ஜனாதிபதியின் தொடர்பாடல் பணிப்பாளர்)

கௌரவ விருந்தினர் :

திரு. எச். ஏ. உபாலி குணசேகர

(அதிபர் – ரோயல் கல்லூரி)

Royal College
Tamil Literary Association

Proudly presents

"Kalai Vizha 2011"

Sunday, 13th November 2011, at 04.01 p.m

Royal College, "Navarangahala"

Cheif Guest

Mr. M. K. Rahulan

Director - President Communication

Guest of Honour

Mr. H.A. Upali Gunasekara

Principal - Royal College

HIRUNI MOTORS (PVT) LTD.

Danith Priyashantha
Managing Director

Importers of reconditioned & brand new motor vehicles from japan,thailand,singapore.

No.269, High level road, kirulapone,Colombo-05
Tel/Fax : 282528 Mobile: 0777 382575
Email : autorosdanith@yahoo.com

திசைமாறும் உலகினிலே
திக்கற்று நிற்கையிலே
பாரெங்கும் வாழ்ந்திடினும்
பார்ப்பாரற்றுப் போகையிலே ....

சொந்த மண்ணிலே
சோற்றுக்கு அழுகையிலே
முன்னாள் சகோதரர்கள்
முதுகைப் பதம் பார்க்கையிலே .....

வாவென்று எமையழைத்து
வருடிப் புன்னகைத்து
எம் தமிழருக்காய் ஒரு
வேழம் படையமைத்து

அவர் குருதிக் கனல்களிலே
தமிழ் வீரம் செரிக்கச் செய்து
அவர் பரிதிக் கண்களிலே
தீச்சுடர் ஒளிரச் செய்து

வெற்றிகளும் தோற்றுப்போகும்
தோல்விகளும் போற்றிப்பாடும்
வேத்தியர் நாமம் தனை
மகுடம் தரிக்கத் தந்த எம்

வேத்திய தாய்க்கு
இந்நூல்

சமர்ப்பணம்

J.Harshanth

J.Praveen

S.Aravindh

S.Anushan

A.Daniel

P.M.Nimalan

S.Nishanthan

A.T.Arunn

A.H.M.Afrath

A. Athas

C.Arun Divahar

12MSE

தமிழ் வாழ்த்து

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே...!

திங்களொடு செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம்
நாங்கள், ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு ஞாபகம் செய்
முழங்கு சங்கே!

சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென் றூதூது சங்கே!
பொங்கு தமிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிஜமெனச் சங்கே முழங்கு!

வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள்
வெற்றித் தோள்கள்!
கங்கையைப் போல் காவிரி போல் கருத்துக்கள் ஊறுமுள்ளம்
எங்கள் உள்ளம்!
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய் கின்றதமிழ்
எங்கள் மூச்சாம்!

(எங்)

- பாரதிதாசன் -

With Best Compliments

from

New Devan Stores

No. 22, Mill Road,
Vavuniya.

SCHOOL OF OUR FATHERS

Words and Music by Mr. H.L. Reed, Principal 1921-1932

Thy spirit first to life awoke
In eighteen hundred and thirty five
Beneath the sway of Marsh and Boake
Thenceforth did Lan[illegible]arning thrive

Refrain

School where our fathers l[illegible]he way before us
Learnt of books and learnt [illegible] men, through thee we'll do the same
True to our watchword "Disce Aut Discede
We will learn of books and men, and learn to play the game

Within thy shade our fathers trod
The path that leads to man's estate;
They have repaid the debt they owed;
They kept thy fame inviolate.

Refrain

And we their loyal sons now bear
The torch, with hearts as sound as oak;
Our lusty throats now raise a cheer
For Hartley, Harward, Marsh and Boake.

"Nature does not hurry, yet everything is accomplished"

- Lao Tsa

With Best Wishes

from

Ashwin Ganesh Balaratnarajah

7 · C

தமிழ் நயம் 2011

வதனத்தின் முகப்பில்

தமிழரின் திறம் அறிந்து/
அவர்தம் புகழறிந்து/
பொறுக்காத பகைவர்கள்
செருக்கோடு எமையடைந்து/

அவர் தோழமை காட்டி
எம் வேழவர் நெஞ்சில்
விடந்தனை பதித்து/
இடந்தனை பறிக்கையில்

திட்டங்கள் பல தீட்டி நம்
கொட்டங்கள்தனை சாய்த்த பல
எட்டப்ப சகோதரரும்
எம்மோடு வாழ்கையில்

வெறிபிடித்த ஓநாய்கள்
குறிபார்த்து/ உனைசாய்க்க
கர்ச்சிக்கும் சிங்கமாய்
கடைசி மூச்சுவரை
மறத்தமிழன் மரபுபேணி
தமிழருக்காய் வாழ்ந்து/
தமிழனுக்காய் மாண்ட
ஒற்றைத் தலைவன்

மண் காவுகொண்டதனால்
இற்றை வரைக்கும்
மனங்களிலே வாழும்
ஒற்றைத் தமிழன்
கட்டபொம்மன்
வரலாறுகள் மறந்தாலும்
தரவேடுகள் மறைந்தாலும்

உன் மறத்தமிழ்
வீரத்துக்காய்
வேத்தியர் மனங்களில்
என்றுமே வாழ்ந்துகொண்டிருப்பாய்.

—ஹர்ஷாந்த்

ரோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம்

With Best Compliments

from

SEP

SAHANA ENTERPRISES

IMPORTERS, GENERAL MERCHANTS &
COMMISSION AGENTS

No. 175A, 5th Cross Street,
Colombo 11, Sri Lanka.
Tel : 011 2334454, Fax : 011 2348133
Mobile : 077 3260199

இதழாசிரியர்களின் இதயங்களிலிருந்து ....

றோயல் கல்லூரியின் தமிழ் இலக்கியமன்றமானது தன் 73வது அகவையில் கால்தடம் பதிக்கின்ற இவ் அழகிய தருணத்தில் "தமிழ்நயம் 2011" இன் ஊடாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

எமக்கென்றதொரு தனித்துவம், எமக்கென்றதொரு மரபு, எமக்கென்றதொரு பண்பாடு இவை அனைத்தையும் மீறாது அனைத்து நல் நெஞ்சங்களினதும் வாழ்த்தினையும் ஆசியையும் பெற்று 'தமிழ்நயம் 2011' இனை எம் செந்தமிழ்ச் சொற்களால் செதுக்கியுள்ளோம்.

எம் வேத்தியத் தாயின் அருளினைப் பெற்றுக் கொண்டிருக்கும் மாணவச் செல்வங்களினதும், எம் தாய் வளர்த்துவிட்ட மாணவச் செல்வங்களினதும் அறிவொளியை இந்நூல் திறம்பட எடுத்துக் காட்டுகின்றது.

இம்மலரை மலரச் செய்கையில் எமக்கு ஏற்பட்ட துன்பங்கள், இடையூறுகள் அனைத்தும் இவ் இன்பமான வேளையில் புயல்காற்றில் சிக்கிக் கொண்ட புழுதிகளைப் போல் சிதைந்துள்ளன. இருந்தும், சிறியோர்களாகிய நாம் இம்மலரை வடிவமைப்பதில் சில பிழைகள் இழைத்திருக்கக் கூடும். கள்ளங்கபடமற்ற குழந்தை தன் பிஞ்சுக் கரங்களால் தன் தாய்க்கு அடிக்கையில் தாய் எவ்வாறு குழந்தையின் குறும்புகளைத் தன் புன்னகையால் மறைத்து குழந்தையை கட்டித் தழுவுவதைப் போல் தாங்களும் எம் பிழைகளைப் பொறுத்தருளி உங்கள் வாழ்த்துக்களால் எம்மை வடிவமைப்பீராக.

நிறைவாக இம்மலரைச் செய்ய எமக்கு உதவிய அனைத்து நல்நெஞ்சங்கங் களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் அல்லும் பகலுமாய் அயராதுழைத்து இம்மலரை சிறப்புற வடிவமைத்துத் தந்த ஏ.ஜே அச்சகத்தாருக்கும் எம் நன்றி கலந்த வணக்கங்கள்.

போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செய்வோம் .... !
ஏற்றதொரு கருத்தை எமது உள்ளம் என்றால்
எடுத்துரைப்போம் ; எவர் வரினும், நில்லோம் ! அஞ்சோம் !

இதழாசிரியர்கள் குழு :
2011/2012

With Best Compliments

from

R.T. OIL STORES

IMPORTERS OF EDIBLE OIL
GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

No. 77, 79, Wolfendhal Street,
Colombo 13.
Tel : 011-2391352, 2391353
Fax : 011-2391353

No. 178, Colombo Street,
Kandy.
Tel : 081-2202203
Fax : 081-4474909
Mobile : 077-3260199

ஆசிச்செய்தி

கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் நடாத்தவுள்ள 73வது கலைவிழா தொடர்பாக இவ்வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தில் முன்தோன்றிய மூத்த தமிழ் மொழியைப் பாதுகாத்து, அம்மொழியில் பல போட்டிகளையும் நிகழ்வுகளையும் தொடர்ந்து நடாத்தி வரும் கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தின் அயராத சேவைகளை நான் மனமார பாராட்டுகின்றேன்.

பல்வேறு துறைகளில் பல புத்திஜீவிகளை உருவாக்குவதிலும் இம்மன்றம் முன்னின்று உழைத்துள்ளது என்பதை அறியும் போது உள்ளம் உவகை கொள்கிறது. பல சவால்களை எதிர் நோக்கி, அவைகளை வெகுசாமர்த்தியமாக வெற்றி கொண்டு தமிழ் மொழிப்பற்றுடன் வீறு நடை போடுகின்ற தமிழ் இலக்கிய மன்றத்தின் சேவைகள் எதிர்வரும் காலங்களில் மேலும் விரிவடைந்து செல்ல உளமாற வாழ்த்துகின்றேன்.

தமிழ்மொழியின் ஆழத்தையும், அகலத்தையும் மேலும் அதிகரித்து அதன் தனித்துவத்தை பேணுவதற்கு எல்லாம் வல்ல இறைவனின் அருள் இம்மன்றத்திற்கு என்றென்றும் கிடைக்க வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க தமிழ் ! வளர்க தமிழ் !

எம்.கே ராகுலன்
(ஜனாதிபதியின் தொடர்பாடல், பணிப்பாளர்)

With Best Compliments

from

PARTHI BROTHERS

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

123, 5th Cross Street,
Colombo 11.
Tel : 011-4555552, 011-5738155, 011-5736595,
011-4377076
Mobile : 077-2311425

Message from the Principal

It is with my great pleasure, I contribute this message to the souvenir "Thamil nayam" of 2011 which will be published on the day of "Kalai vizha"

It is important to inculcate culture and aesthetic sense in the young minds. Literature,Drama & music mould them and encourage their minds to be active always. Tamil literary association of Royal college venture into subjects like these to promote aesthetic sense which is rare in this competitive world, for the past 73 years. It is commendable for an association to be alive for such long years.

I take this opportunity to thank the teacher in-charge and the members of the organizing comity for their untiring efforts taken to create aesthetic sense and skills among young generation in this modern information era.

I wish this association many more successful years.

H.A.U Gunasekara.
Principal.
Royal college.

With Best Compliments

from

Sole Agent for

KHIND ELECTRICAL HOME APPLIANCES · Mistral The Cool Air Specialist · CROWN Audio Visual Rarex Series

DIGITAL AIR CONDITIONER · FABER A Style Of Its Own

Crescent Lanka Trading

Dealers in Electrical, Household Appliances, Furniture, Audio/Video Components etc.

Showroom

587, Galle Road, Wellawatte,
Colombo 06. Sri Lanka.
Tel : 2559561, Fax : 2559560

Message from the Vice Principal

It is with my great pleasure, to contribute a few words to "Thamizh nayam" souvenir which is published to mark the "Kalai Vizha" another important event of the college calendar of the year 2011.

It is said that unity is strength. By organizing such event students gain strength and power which are needed for peace and harmony. Subsequently it will lead to mutual understanding with other nation and everyone feels that they represent the human race. Today we need people who possess such kind of attitude and who can apply their knowledge for the betterment of the country.

Let me thank the Teacher in charge Mr. Jeyakumar for guiding the members of the society on the correct path.

Mr. Sarath Keerthisena
Senior Deputy Principal

With Best Compliments

from

Gem Rich

Bambalapitiya Gemrich Shoe Co.

Gemrich Home Needs & Pharmaceutical

No. 02, Government Flats,
266, Galle Road, Bambalapitiya. Colombo 04.
Tel : 2585848, 2555631

பிரதி அதிபரின் ஆசிச்செய்தி

றோயல் கல்லூரித் தமிழ் இலக்கிய மன்றத்தின் கலைவிழா 2011ம் அதன் அடையாளமாய் வெளியிடப்படும் "தமிழ் நயம்" 2011ம் இவ்வாண்டும் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்படுவது மகிழ்வைத் தருகிறது.

தமிழ் இலக்கிய மன்றம் பல்வேறு ஆளுமையுள்ள பலரை ஆக்கித்தந்த மன்றம். அவர்களின் தலைமைத்துவ ஆற்றல், பிரச்சினை தீர்த்தல், தீர்மானம் எடுத்தல் போன்ற தலைமைத்துவப் பண்புகளை புடம் போட்டு வளர்த்த மன்றம். அத்தகைய மன்றத்தின் செயற்பாடுகள் அகில இலங்கையிலும் பேசப்பட்டது. தமிழ் இலக்கிய மன்றத்துக்கான கலாசார, பண்பாட்டம்சங்கள் எவ்வகையிலும் குறைவுறா வண்ணம் ஆண்டு தோறும் புதுமைகளுடன் அம்மன்றம் செயற்பட்டு வந்தது.

றோயல் கல்லூரியின் ஒவ்வொரு மன்றத்துக்கும் ஒவ்வொரு குறிக்கோள் உண்டு. அந்தக் குறிக்கோளைச் சரியாக புரிந்து செயலாற்றும் போது வெற்றி நிச்சயமாகும்.

இவ்வாண்டு தமிழ் இலக்கிய மன்ற செயற்குழுவுக்கும், குறிப்பாக அதன் தலைவர் இராசரத்தினம் பிரணவன் அவர்களின் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது. அம் மன்றத்தின் வழிநடத்தும் பொறுப்பாசிரியர்கட்கும் குறிப்பாக பொறுப்பாசிரியர் திரு. S.R. ஜெயக்குமார் அவர்கட்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். மன்ற நிகழ்வுகள் சிறப்பாய் அமைய அயராது பாடுகடும் பழைய மாணவர்கட்கும் அவர்களது அர்ப்பணிப்பான சேவைக்கும் எனது வாழ்த்துக்கள்.

இவ்வாண்டும் தமிழ் நயமும் கலைவிழாவும் மேலும் சிறப்புப்பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

- மா. கணபதிப்பிள்ளை
பிரதி அதிபர்

With Best Compliments

from

AM AM PEE & COMPANY TRADES (PVT) LTD.

No. 32, St. John's Road,
Colombo 11.
Tel : 011 2422126, 011 2325193
Fax : 011 4610176

Message from the Senior Games Master

It is indeed with great pleasure that I contribute this message to the souvenir 'Tamil Nayam' which is published annually by the Royal College Tamil Literary Association at the annual Kalai Vizha.

Royal College Tamil Literary Association has actively organized various activities for the past 73 years to help our students to build up their self confidence, leadership qualities and their all round personality.

I must express my gratitude to the Teacher-in-charge and the students of organizing committee for the inter school competitions and intergrade competitions for recongnizing the talents of our school as well as other schools.

My best wishes to all the participants. Let me conclude by wishing all the success in this event.

Mr. M.T.A. Rauf
Mr. S. Liyanagunawardana
Senior Games Master

With Best Compliments

from

Ranjitha Traders

Importers, General Merchants & Commission Agents

No. 180, Colombo Steeet,
Kandy, Sri Lanka.
Tel : 081-2232350, 081-2229155
Fax : 081-2229156

No. 121, 5th Cross Street,
Colombo 11
Sri Lanka.
Tel : 011-2422830/40
Fax : 011-2422850

தமிழ்த்துறைப் பொறுப்பாசிரியையின் ஆசிச் செய்தி

கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றத்தின் கலை விழாவும், அதன் அடையாளமாக வெளியிடப்படும் "தமிழ் நயம்" மலரும், ஆண்டு தோறும் மிகச் சிறப்பான விழாவாகவும், மலராகவும் போற்றப்பட்ட வரலாறுண்டு. பாடசாலை மட்டச் சங்கங்கள், கழகங்களில் முதல் பத்துக்குள் இருந்த மன்றம் தமிழ் இலக்கிய மன்றமாகும். அம் மன்றத்தின் வெளியீடான தமிழ்நயத்தின் ஊடாக உங்களோடு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் சந்தோஷம் அடைகின்றேன்.

இனத்தின் இருப்பை அவர்களின் அக் காலத்தின் இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டும் என்பார்கள். வரலாற்று ஆராய்ச்சியில் இலக்கியங்களின் ஆய்வும் முக்கிய பங்கெடுக்கிறது. எமக்கு பின்வரும் எம் எதிர்காலச் சந்ததியினர் எமது சமகால இலக்கியங்களை வைத்தே எம் வாழ்வியல் சிறப்பை, கலாச்சாரத்தை, பண்பாட்டை அளவிடுவார்கள். எனவே எமது எல்லா ஆக்கங்களிலும் வெளியீடுகளிலும் உயர் அந்தஸ்துக் காணப்பட வேண்டும். 70 ஆண்டுகளுக்கு மேலாக உன்னத தமிழ்ப்பணியை ஆற்றிவரும் தமிழ் இலக்கிய மன்றத்தின் இவ்வாண்டுக்கான செயற்குழுவை வாழ்த்துவதுடன் தங்களின் விழாவும், தமிழ் நயமும் போற்றப்படும் வகையில் தாங்கள் தங்கள் பணியில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழ் இலக்கிய மன்றத்தின் எல்லா நிகழ்வுகளும் சிறப்பாக அமைய இறையாசியை வேண்டுகின்றேன்.
நன்றி

அன்புடன்
ரஞ்சினி பிறேம்நாத்
தமிழ்த்துறைப் பொறுப்பாசிரியை

With Best Compliments

from

LOOK STEEL

Importers & General Hardware Merchants

333-2/1A, Old Moor Street, Colombo 12, Sri Lanka.
Tel : 009411-2342684, Fax : 009411-2342684
Email : looksteel@hotmail.com

தமிழ் இலக்கிய மன்றப் பொறுப்பாசிரியரின் ஆசிச் செய்தி

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். தமிழ் மிகவும் இனிமையுடைய மொழி, திருந்திய இலக்கண அமைதி நிரம்பிய மொழி; ஆகவே இதனை உயர் தனிச் செம்மொழி என்பர். திராவிட மொழிகளுள் தமிழ தலைமை வாய்ந்தது. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கு காணோம்" என்று பாரதியார் இதன் இனிமையைப் பாராட்டிக் கூறியுள்ளார்.

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் வழமை போல் இவ்வருடமும் அதன் விழாவை விமர்சையாகக் கொண்டாடுகின்றது. பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் நடாத்தப்பட்ட போட்டிகள் மூலம் மாணவர்கள் தம் திறமையை வெளிக்காட்டியுள்ளனர். மாணவர்கள் தம் புறக்கிருத்தியச் செயற்பாடுகளில் ஈடுபட தமிழ் இலக்கிய மன்றம் வழிகாட்டியுள்ளது.

மனதிலுறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்

- பாரதியார்

S.R ஜெயகுமார்
பொறுப்பாசிரியர்

With Best Compliments

from

AMRO SUGARS

IMPORTERS DISTRIBUTERS OF SUGAR AND AGRO COMMODITIES

AMRO SUGARS
187/2, 5th Cross Street, Colombo 11, Sri Lanka.
Tel : +94 11 2424063-64-67, +94 11 2459179, +94 11 2332637
Fax : +94 11 2424062 Direct : +94 11 4892133
Email : amrosugars@yahoo.com

மன்றத் தலைவரின் மனதிலிருந்து ....

"தமிழுண்டு தமிழ் மக்களுண்டு நல்ல தமிழுக்கு செய்வோம் நாளும் நல்ல தொண்டு."

றோயல் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றமானது தமிழ்தாய்க்கு மகுடம் சூட்டுமுகமாக ஒழுங்கு செய்துள்ள 73வது அகவையான கலைவிழா 2011 நிகழ்வின் 'தமிழ்நயம் 2011' இதழின் ஊடாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

'பாரெங்கும் பரவட்டும் பைந்தமிழ்' எனும் எமது மகுடவாக்கின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கும் எமது மன்றமானது நம் செந்தமிழ் மொழியை என்றும் சரியவிடாது தூக்கி நிறுத்தும் முகமாக, மாறும் உலகின் மரபிற்கேற்ப இணையத்திலும் தமிழைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

எம் மன்றமானது எமது பாடசாலை மாணவர்களினதும் வெளிப்-பாடசாலை மாணவர்களினதும் தமிழ் அறிவையும், ஆளுமையையும் வெளிக்-கொணரும் முகமாக பல்வேறுபட்டத் தமிழ்த் திறன் காண் போட்டிகளையும் நிகழ்வுகளையும் நடாத்தி, அவற்றில் வெற்றியும் கண்டுள்ளது.

தமிழையும், அதன் கலாசாரத்தையும், தமிழ்த் தனித்துவத்தையும், எம் மகத்துவத்தையும் மங்கவிடாது, அதை மென்மேலும் மலர வைக்க எம்மால் இயன்ற வரை பாடுபட்டுள்ளோம். இருப்பினும் இன்னும் எமக்கிருக்கும் பல நிறைவேறாக் கனவுகளை எம்மைத் தொடர்ந்து வரும் இளம் வேத்திய வேங்கைகள் நிறைவேற்றுவர். வேத்தியர்களின் வெற்றிப்பயணம் தொடரும்.

இ. பிரணவன்
மன்றத் தலைவர்

With Best Compliments

from

Shop & Save

Mini Market
04, Nelson Place, Colombo 06

செயலாளரின் சிந்தையிலிருந்து

றோயல் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றமானது தனது 73 வது அகவையின் நிறைவைக் கொண்டாடுகின்ற இந்த இனிய வேளையிலே "கலை விழா 2011" இல் வெளிவந்து உங்கள் கைகளில் தவழ்கின்ற "தமிழ் நயம் 2011" ஊடாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எமது மன்றமானது 72 வருடங்களுக்கு மேலாக இலங்கைத் தமிழ் மாணவ சமூகத்திற்கு அளப்பரிய சேவைகளை வழங்கி இலங்கைத் தமிழ் சமூகத்திற்கு ஒரு அழியாத அங்கீகாரத்தை பெற்றுத் தந்துள்ளது. அந்த நோக்கத்தினை இவ்வருடமும் இனிதே நிறைவேற்றி இருக்கிறது என்பதனை கூறுவதில் பெருமிதமடைவதோடு அதற்காக பெரிதும் உழைத்த எம் மன்றத்தின் சக மாணவர்களுக்கு சிரம்தாழ்த்தி என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

றோயல் கல்லூரியின் இந்த வெற்றிப்பயணம் எதிர்காலத்திலும் தொடரும் என்ற நம்பிக்கையுடன்

கு. சசிபாலன்

செயலாளர்

With Best Compliments

from

GAURAV IMPORTS (PVT) LTD

Importes of all food items

68A, 4th Cross Street, Colombo 11, Sri Lanka.
Tel : +94 11 2380130, 2380131, 2399832, 4899006
Fax : +94 11 2473439 Mob : +94 777 780931
Email : gauravimports@sltnet.lk

OFFICE BEARERS 2011

PRESIDENT

MR.H.A.U.GUNESEKARA

SENIOR VICE PRESIDENT

MR.S.R.JEYAKUMAR

SENIOR TREASURER

MR.S.K.SOTHILINGAM

VICE PRESIDENTS

MS. S. KATHIRGAMATHAMBY
MR.S.SIVAKUMAR
MR.V.SHANTHAKUMAR
MRS.V.SARVANANTHA
MRS.I.M.ANSARY

CHAIRMAN

R.PIRANAVAN

SECRETARY

K.SASIBALAN

ASSISTANT SECRETARY

T.RAGURAM

TREASURER

IMAZ IMTHIYAZ

ASSISTANT TREASURER

M.SHAFEEK

EDITORS

SHAAN KULASINGHAM
M.MALIK
E.PRAGALATHAN
M.MATHITHAYANAN

SUB EDITORS

Y.THIRUKUMARAN
J.HARSHANTH
S.ANUSHAN

COMMITTEE MEMBERS

T.SIVARUBAN
B.SIVAASHVIN
S.ANURAKAVAN
PRAVEEN NAMASIVAYAM
ATHEEF ANEES

With Best Compliments

from

MILLENNIAUM TRADING CO.

General Merchants & Commission Agents

No. 220, Prince Street, Colombo 11
Tel : 011-4555551, 011-4377067

RADHA STORES

Wholesale & Retail Dealers in Groceries

No. 02, Colombo Road, Avissawella
Tel : 036-4270294, 036-4927112, 036-4927113

SENIOR COMMITTEE

Seated (L to R) : Mr. S. Sivakumar, Mr. V. Shanthakumar, Mr. S.K. Sothilingam (Senior Treasurer), Mr. S.R. Jeyakumar (Senior Vice President), K. Sasibalan (Secretary), Mr. H.A.U. Gunasekara (Principal), R. Piranavan (Chairman), Mr. M. Kanapathipillai (Deputy Principal), Mrs.S. Kathirgamathamby, Mrs. Ismiya Ansari, Mrs. V. Sarvanantha, Imaz Imthiyaz (Treasurer)

Standing (L to R) : M. Maalik (Editor), S. Raguram (Asst. Secretary), M. Mathithayanan (Editor), Shaan Kulasingham (Editor), Y. Thirukumaran (Sub Editor)

Absentees : E. Pragalathan, M. Shafeek, S. Anushan, J. Harshanth

With Best Compliments

from

Kuita Tradings

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS

281/2/2, Old Moor Street, Colombo 12
Tel/Fax : 2336590 Hotline : 0777 888471

ORGANIZING COMMITTEE



Seated (L to R) : Mathithayan (Editor), Shaan Kulasingham (Editor), K. Sasibalan (Secretary), R. Piranavan (Chairman), Imaz Imthiyaz (Treasurer), M. Maalik (Editor), E. Pragalathan (Editor)
Standing 1st Row (L to R) : Sivaashvin, M. Shafeek (Asst. Treasurer), S. Raguram (Asst. Secretary), S. Arunan, V. Sathanandan, T. Thiviyan,
Standing 2nd Row (L to R) : Y. Thirukumaran (Sub Editor), J. Karthigan, M. Joel, R. Ragulan, V. Sudarshan, T. Kishathanan, L. Nithas, A.D. Anojan
Absentees : S. Anushan, J. Harshanth, P. Saidev, R. Aruntheep, M.Z.M. Zuhud, S. Arun Prasad, A.R. Harshed, M. Mushtaq

With Best Compliments from

Chndra Trading

No. 405, Galle Road, Wellawatte, Tel : 0112364190

With Best Compliments from

Manjula Hardwares

Dealers in Cement, Asbestos Sheets & Suppliers of Building Materials

No. 2, Nelson Place, Wellawatte, Colombo 06
Tel : 011-2361967

With Best Compliments

from

EASTERN TRADING AGENCY

Importers, Exporters, Estates & Corporation Suppliers
General Hardware Merchants, Dealers in Tyres & Tubes

204, 206, Wolfendhal Street, Colombo 13
Tel : 329753, 421457 Fax : 341467

JUNIOR AND INTERMEDIATE COMMITTEE

With Best Compliments from

BENZ TRAVELS

We Make Your Travel Easier

About us

Benz Travels, is a part of UK based Travel Mart Group, we newly launched our operations to Sri Lanka in order to give the international standard of services and facilities available to you.

Trust
We are Approved by Civil Aviation Authority of Sri Lanka. **Licence No. A(Grade)-837.**

Services
Our 24 hours customer services available 365 days in a year, Our committed customer services team will be able to communicate by Sinhala, Tamil and English.

Special
We are specialist for Europe countries and middle east, as well as we are providing excellent offers to Singapore, India, China, Canada and Worldwide.

New
We are introducing a new ticketing system for the 1st time in Sri Lanka, it's just '4 easy steps' to book flights wherever you are in Sri Lanka or World wide.

Easy steps for Reservations Wherever you are in the Island

1. Call our Hotline **0112 363664**
2. Make your booking over the phone & confirm your itinerary By E-Mail, or Fax.
3. Make your payment By Cash, bank deposit, online transfer or debit/credit card. (conditions apply)
4. Get the Ticket By E-Mail, Fax, Post or at Office.

OUR TOP DESTINATIONS

Flights to Singapore | Flights to Malaysia | Flights to Australia | Flights to France
Flights to United Kingdom | Flights to German | Flights to Switzerland

11/1 First Floor, 33rd Lane, Wellawatte, Colombo-06, Sri Lanka.
T: 0112 363664 F: 0112 363601
E: info@benztravels.com W: www.lankacheapflights.com

TAMIL TUTORIAL STAFF

Seated (L to R) : Mr. R.M. Hayeez, Mr. A. Saravanan, Mr. S. Sivakumar, Ms. S. Kathirgamathmaby, Mr. V. Selvaranjan, Mrs. S. Selavadas, Mr. M. Kanapathipillai (Deputy Principal), Mr. H.A.U. Gunasekara (Principal), Mr. Sarath Keerthisena (Senior Deputy Principal), Mrs. Y.M. Munaz, Mrs. Magilrajan, Mr. B. Shanmugarajah, Mrs. Z. Mizriya Nizar, Mrs. Mrs. R. Loganathan, Mrs. V. Elayathamby

Standing 1st Row (L to R) : Ms. K. Thadshaayani, Mrs. K. Jeyasingam, Mrs. P. Ganeshamoorthy, Mrs. U. Jeyarathnam, Mrs. V. Saravanathan, Mrs. Ismiya Ansari, Mrs. V. Yogaswary, Ms. S. Annetnira, Ms. Anne Subo Alfred, Mrs. S. Vijayarathnam, Mrs. V. Lavanya, Mrs.M. Veranica Nadi, Mrs. K. Srikanthan,

Standing 2nd Row (L to R) : Mr. S.K. Sothilingam, Mr. V. Parameswaran, Mr. B. Kirubaharan, Mr. V. Shanthakumar, Mr. V. Kamalaruban, Mr. M. Prashanthan, Mr. C. Nadesan, Mr. S.R. Jeyakumar, Mr. S. Manoharan, Mr. S. Sundaralingam, Mr. Sutharshan, Mr. M. Sureshkaran, Mr. K. Sri Ragavarajan,

MAYURAN TRAVELS

AC / NON AC

VAN & CANTER FOR HIRE 24 HOURS SERVICE

NO-41,5/4,42nd LANE,COLOMBO-06

Mobile : 0776398840

0777283688 / 0112360742

குறுந்தொகையில் உவமை

கற்பவர் நெஞ்சைத் தனக்குச் சொந்தமாக்கி கொள்ளும் இயல்புடையது குறுந்தொகை. தொட்ட இடமெல்லாம் மணக்கும் சந்தனம் போல், குறுந்தொகையின் எந்தப்பாடலும் பாடலின் எந்த வரியும் நினைக்க இனிக்கும் தன்மையவாம். பண்டைத் தமிழரின் தனி நாகரிகத்தையும், மாந்தர் தம் உள்ளத்து உணர்வுகளையும், பண்புகளையும் விளக்கும் நூலாக விளங்குவது குறுந்தொகையாகும்.

குறுந்தொகையில் நூற்றுக்கணக்கான உவமைகள் இடம் பெற்றுள்ளன. சில இடங்களில் உவமைகளே பாட்டுப் பொருளாகின்றன. மற்றும் சில பாக்களுக்கு பாடிய ஆசிரியர் பெயர் மறைந்து விட்டாலும், அவர்கள் கூறிய உவமைகளே அவர்களுக்குப் பெயராகியுள்ளமையும் நோக்கத்தக்கதாகும். கயமனார், செம்புலப்பெயல் நீரார், அணிலாடு முன்றிலார், நெடுவெண்ணிலவினார், மீனெறி தூண்டிலார், கூவன்மைந்தன் கல்பொரு சிறுநுரையார் குப்பைக் கோழியார் என இவ்வாறு பலர் பாடலடிகளால் பெயர் பெற்றுள்ளனர். இவர்களுட் பலர் உவமைத் தொடர்களால் பெயர் பெற்றவர்கள் என்பது அறியத்தக்கதாம்.

அறிவுத்திறன் கொண்ட சங்கத்துச் சான்றோர் தாங்கள் கண்ட காட்சிகளையும் பாடற் பொருளாக்கி மகிழ்ந்தனர். கட்புலன் நிரம்பிய குறுந்தொகைப் புலவர் செவிக்கு இனிமையாக்கிய சில பாடல்களையும் காண்போம். கிளி தன் அலகிலே கொண்டுள்ள வேப்பம் பழத்தை, சிவந்த நகங்களையுடையாள் ஒருத்தி நூலை நுழைக்கும் பொருட்டு தன் பெரு விரலாலும் சுட்டு விரலாலும் உகிர் நுனியிலே பற்றிய பொற்காசிற்கு உவமையாக்குகிறார் அள்ளூர் நன்முல்லையார். கிளி பழத்தைக் கவ்விய காட்சியையும், நூல் நுழைக்கும் பொருட்டுப் பொற்காசைப் பற்றிய காரிகையையும் கண்ட புலவரின் கூர்பார்வையே இவ்வுவமைக்கு வித்திட்டது எனலாம்.

குவிந்த கொத்துக்களையுடைய செங்காந்தள் மலரைக் கண்ட புலவர் மதுரைக் கண்ணனார் அதைச் சேவலின் சிவந்த கொண்டைக்கு உவமையாக்கி மகிழ்கின்றார். கண்ணனார் என்னும் பெயர் இவருக்கே சாலவும் பொருந்தும். கருவிளை மலரின் நடுவில் உள்ள புள்ளியைக் கண்ணுற்ற கிள்ளி மங்கலங்கிழார் "மயிற்பீலியின் நடுவிலுள்ள கண் போன்று உள்ளது" என்று கூறி இறும்பூது எய்துகின்றார்.

கருமை நிறம் வாய்ந்த பெரிய குண்டுக்கல்லைக் காணுகின்றார் புலவர் தீன்மதி நாகனார். சிறிய கருமை நிறம் வாய்ந்த பெண் யானை தன்னுடைய கையை மறைத்துக் கொண்டு நின்றால் எப்படி இருக்குமோ அப்படியிருந்தது அக் குண்டுக்கல் என்று மொழிகின்றார். மயிலின் அடியின் கண் அமைந்த விரல்களும் உள்ளங்காலும் போன்று அமைந்திருந்தது நொச்சி இலை என்று புலவன் அழிசி கூறி மகிழ்வார்.

ஓதியைக் கண்ணுற்ற புலவர் அள்ளூர் நன்முலையார் கருக்கரிவாள் போன்ற முதுகையுடைய ஓதியையே நம் கண் முன் கொணர்ந்து நிறுத்துகிறார். நாயின் மேல் உள்ள வரிகள் பிரம்பின் மேலுள்ள வரிகள் போன்றே இருப்பதைக் கண்ட ஔவையார் "பிரம்பின் வரிப்புற நீர்நாய்" என்று கூறி நீர் நாயின் தோற்றத்தைக் கண்ணுக்குப் புலனாக்குகிறார்.

கண்ணுக்குப் புலனாகிய காட்சியைப் பாடற் பொருளாக்கி உவமை கூறி மகிழ்ந்த புலவர்கள், செவிக்குப் புலனானவற்றையும் நுகர்ந்து, அவற்றை நமக்குச் செவி நுகர் களிகளாக்கினர்.

வாகையின் வெண்மையான நெற்றுகள் மேல் காற்று மோதுதலால் ஒலித்தன. அவ்வொலி, ஆரியக்கூத்தர்கள் கயிற்றில் ஏறி ஆடுங்கால் முழங்கும் பாறையின் ஓசை போல் ஒலித்ததாகப் பெரும் பதம்பனார் என்னும் புலவர் செப்புகின்றார்.

அம்பின் நுனியை உகிரால் வருடும் ஓசையைச் செவிமடுத்த புலவர், அவ்வோசையை ஆணண் பல்லிதம் காதல் துணையாகிய பெண் பல்லியை ஒலி செய்து அழைக்கும் ஓசைக்கு ஒப்புமையாக்குகின்றார்.

"உகிர்நுதி புரட்டும் ஓசைபோலச்
செங்காற் பல்லிதன் துணைபயிரும்"

என்று பாடிய புலவர் அம்போடு மிக நெருங்கிய நெடர்புடைய மன்னன் "பாலை பாடிய பெருங்கருங்கோ" என்று அறிந்து மகிழலாம். ஓசையை உவமையாக்கி மகிழ்ந்த புலவர் பலர் இரக்க, ஓசையை வாழ்க்கையோடு பின்னிப் பிணைத்த புலவர் ஒருவரும் உண்டு.

மலர்களின் உதிர்வால் உண்டாகும் ஓசையையும் உற்றுக் கேட்டு, அதையும் தம் பாடலில் இடம் பெறச் செய்த பெருமையுடையவர் "பொல்லன் அழசி" என்னும் நல்லிசைப் புலவரே யாவார்.

"மயிலடியிலைய மாக்குரல் நொச்சி அணி மிகு மென் கொம் பூழ்த்த தணி மருள் பூவின் பாடு நனி கேட்டே" ஊரெல்லாம் துயில, நொச்சி உதிர்த்த மலர்களின் ஓசையைக் கூடக் கேட்டுத் துயிலாத காரிகையொருத்தி, காளை வரவிற்கு காத்திருந் தாளாம். நெஞ்சையள்ளும் இத்தகைய பாடல்களே இலக்கியத்திற்குச் சுவையும் பெருமையும் நல்குவனவாகும்.

உள்ளுந்தோறும் உவகை பயக்கும் உவமைகள் பல குறுந்தொகையில் பொதிந்துள்ளன. பொருளுக்கேற்ற வகையில் அமைந்த அவ்வுவமைகளில் சிலவற்றைக் காண்போம்.

தாமரை மலரைப் போன்ற அழகிய செம்மையாகிய திருவடியையும், பவளத்தை ஒத்த சிவந்த நிறத்தையும், குன்றி மணியையொக்கும் சிவந்த ஆடையையும் உடையவன் முருகன் என்று குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலே உவமையோடு தொடங்குவதை உற்றறிந்து இன்புறலாம். முள்ளிச் செடியின் முள், அணிலினுடைய பல்லைப் போன்று இருக்கிறது என்பதை "அணிந் பல்லன்ன கொங்கு முதிர் முண்டகத்து" என்று விளக்குவார் அம் மூவினார்.

தலைவனைப் பெற்று இன்பம் துய்க்க இயலாவிட்டாலும், அவனைக் கண்டாவது மகிழ்வோம் என்று தலைவி கூறுகிறாள். தலைவியின் இந்நிலை "மரத்தின் மேலிருக்கும் தேனிறாலைப் பெற்று சுவைக்க இயலாத குறுங்கால் முடவன், ஒரு கையைக் குடையாகக் குவித்துக் கொண்டு மற்றொரு கையின் விரலால் தேனிறாலைச் சுட்டிக் காட்டிக் கொண்டு உள்ளங்கையை நக்கியதற்கு ஒப்பாகும் என்பார் பரணர். உடைந்த வளை போன்று பிறை தோன்றியது என்னும் உவமை நினைவிற்கினயதாகும்.

தலைவியின் உள்ளத்து உணர்வுகளைப் புலப்படுத்தும் பாங்கில் அமைந்தது மதுரை வேளாதத்தன் என்னும் பெரும் புலவரின் சிறிய பாடலாகும்.

"எழுதரு மதியங் கடற் கண்டா அங்
கொழுகு வெள்ளருவியோங்கு மலை நாடன் ஞாயிறனையன் தோழி
நெருஞ்சியனைய வென்பெரும் பணைத்தோளே"

இப் பாடலில் திங்கள் வீழ்கின்ற வெள்ளருவியின் தோற்றத்திற்கும், கடல் மலைக்கும் உவமையாயின. தலைவனை ஞாயிற்றுக்க ஒப்பிடும் தலைவி, தன்னுடைய தோளுக்கு நெருஞ்சி மலரை ஒப்பிடுவதன் காரணம் தான் என்ன? நெருஞ்சி மலர் ஞாயிற்றையே நோக்கி நிற்கும் இயல்பினது ஞாயிறு கீழ்த்திசை இருப்பின் கிழக்கு நோக்கியும், மேற்றிசை செல்லின் மேற்கு நோக்கியும், உச்சி வானத்திலிருப்பின் உச்சியை நோக்கியும் நிற்பதாகும். ஞாயிற்றை நோக்கிய நெருஞ்சி போல், தலைவன் எக்கருத்துடையவனோ அக்கருத்து உடையவளே தான் என்பதை உணர்த்தவே, ஞாயிற்றைத் தலைவனுக்கு உவமையாக்கிய தலைவி, தன்னுடைய தோளுக்கு நெருஞ்சியை உவமையாக்கினாள. இந் நான்கு வரிப் பாடலில் திங்களையும், ஞாயிற்றையும், அருவியையும், கடலையும், மலையையும் அடக்கி, வாழ்வியல் அறத்தையும் உணர்த்திய புலவரின் திறம் வியந்து போற்றுதற்குரியதாம்.

மேற்கூறிய சிறப்பு நலன்களோடு கூறாது விடுபட்ட "உள்ளுறை உவமம்" போன்ற இன்னோரன்ன பிற நலன்களையும் அணியாகக் கொண்டு திகழ்வதால் தான் குறுந்தொகையை "நல்ல குறுந்தொகை" என்று எல்லோரும் போற்றுகின்றனர்.

- திரு. சபாரத்தினம் சிவகுமார் (B.A.Dip.in.Education)

With Best Compliments

from

✲
✲
✲
✲
✲
✲
✲
✲
✲
✲
✲
✲

Mr. M.R. Fahumudeen

மொழி வளர மொழி பெயர்ப்பு தேவை

இலங்கை மும் மொழி பேசும் திருநாடு. எனவே ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்து கொண்டால் தான் எம் நாட்டில் ஐக்கியம், சமாதானம், புரிந்துணர்வு நிகழும். இம் மொழி பெயர்ப்பில் ஈடுபடுபவர்கள் குறைந்தது) இரு மொழிகளிலாவது பாண்டியத்தியம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் மொழி பெயர்ப்பு என்பது தமிழருக்கு புதியதன்று. அது நீண்டநாள் பராம்பரியமுடையது. ஆறுமுகநாவலரின் பைபிள் மொழி பெயர்ப்பு, பைபிள் பற்றி தமிழ் மொழியில் அறிய முடிந்தது. திருக்குறளின் உலக மொழிகளின் மொழி பெயர்ப்பு - திருக்குறளையும் தமிழ் மொழியின் சிறப்பையும் உலகம் அறியச் செய்தது. தொல்காப்பியத்தில்

"தொகுத்தல் விரித்தல் தொகை விரி மொழி பெயர்த்
ததர்ப்படயாத்தலோடணை மரபினவே"

என்பதில் தொல்காப்பியர் மொழி பெயர்ப்பு என்றால் அப்படியே பெயர்த்தல் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். ஆனால் மொழி பெயர்ப்பு என்பது ஒரு மொழியில் இருக்கின்ற தகவல்களை அல்லது கருத்துக்களை வேறொரு மொழியில் பொருள் மாறுபாடு ஏற்படாதவாறு மூலத்தில் உள்ள தலையும் தன்மையும் சற்றுக் குறையாமல் மூலத்திலுள்ளது போன்று அமைப்பது தான் மொழி பெயர்ப்பு என்று கூறலாம். மொழி பெயர்ப்பு ஆறுவகைகளில் அமையலாம் என பேராசிரியர் சண்முகதாஸ் குறிப்பிடுகிறார். அவையாவன :

1. சொல்லுக்கு சொல் மொழி பெயர்த்தல்
2. விரிவான மொழி பெயர்ப்பு
3. முழுமையான அல்லது சரியான மொழி பெயர்ப்பு
4. முந்துநூற் செய்திகளை சுருக்கமாக மொழி பெயர்த்தல்
5. தழுவல் மொழி பெயர்ப்பு
6. மொழியாக்கம் என்பனவாகும்.

இன்று எமது பாடசாலைகளில் நடைபெறும் தேர்வுகளாக இருந்தாலும் சரி அல்லது திணைக்களப் பரீட்சைகளாக இருந்தாலும் சரி வினாப்பத்திரங்களும் விடைப்பத்திரங்களும் முழுமையாக தயாரிக்கப்பட்டு ஒரு மொழியில் இருந்த மற்ற மொழிகளுக்கான வினாத் தாள்களை தயாரிக்கும் போது முழுமையான அல்லது சரியான மொழி பெயர்ப்புக்கு உட்படுவதைக் காண்கின்றோம். இதில் சிலவேளை மொழிப் புலமை இல்லாதவர்கள் வினாக்களையே மாற்றிவிடுவதையும் அது புள்ளிகள் வழங்குவதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விடுவதையும் விடைத்தாள்களை திருத்தப் போகும் சான்றோர் அறிந்திருப்பர். நீதிமன்றம், பொலிஸ் நிலையம், உல்லாசப் பிரயாணிகளின் மொழித் தேவை, அரச காரியாலயங்கள் என்பவற்றில் எல்லாம் மொழி பெயர்ப்பு மிகவும் செல்வாக்கு செலுத்தும் ஒன்றாக இருப்பதைக் காணலாம்.

கம்பராமாயணம் கூட வடமொழியில் வான்மீகி செய்ததை கம்பன் தேன்கவிசொட்ட சொட்ட தமிழில் தந்த நல்லதொரு மொழி பெயர்ப்பாளராக கம்பரைப் பார்க்கலாம். அதே போல காளிதாசன் என்னும் வடமொழியில் பெருங்கவிஞன் இயற்றியநூல்களுள் ஒன்றான ரகுவம்ச காவியத்தை ஈழத்தில் அரச கேசரி இரகுவம்சம் என தமிழில் மொழி பெயர்த்துள்ளார். பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஹர்ஷவர்த்தினுடைய ரத்னாவலி என்னும் நாடகத்தை மாணிக்கமாலை எனத் தமிழிலிலே மொழி பெயர்த்தார். மொழி பெயர்ப்பு வரலாற்றில் வடமொழியில் இருந்து தமிழுக்கு பெயர்க்கப்பட்ட இலக்கியங்கள் தமிழகத்திலும் ஈழத்திலும் நிறையவே உள்ளன.

சமயம் பரப்புதலும் முன்பு கூறியதுபோல் மொழி பெயர்ப்புக்கு காரணமாக அமைந்தது. பெருங்கதை, ஸ்ரீபுராணம் ஜோன் பனியன் எழுதிய Pilgrims Progress என்னும் நூர். தமிழில் கிருஷ்ண பிள்ளையார் இரட்சண்ய யாத்தீரீகம் எனும் நூலாக மொழி பெயர்க்கப்பட்டது. கிறிஸ்தவ மிசனரிமார் தங்களுடைய சமயத்தை போதிக்கவும் பரப்பவும் மொழி பெயர்ப்பினை உயர் தேவையாகக் கருதினர். மொழி பெயர்ப்பு வகைகளில் கவிதை மொழி பெயர்ப்பு என்பது மிகவும் கடினமான ஒன்று. ஏனெனில் கவிஞன் கருதிய உணர்வினை கருத்து ஆழத்தைப் பிறமொழியில் கொணர்வது என்பது கடினமான ஒன்றாகும். அம் மொழி பெயர்ப்பானது தழுவலாகவோ அல்லது புதிய படைப்பாகவோ தான் அமையும். இன்று கணிப்பொறி மூலமான மொழி பெயர்ப்பும் பிரபல்யமடைந்து வருகின்றது. இதில் சிக்கல் நிறைந்த மொழி பெயர்ப்புக்களை மனிதன் தான் செய்ய முடியும் என்பது மறுப்பதற்கில்லை.

சில மொழி பெயர்ப்புகளில் ஆங்கிலத்தில் உள்ள அப்பதங்களை தமிழில் அப்படியே பயன்படுத்தி வருகின்றனர். இதனால் தமிழ்நடை கலப்பு நடையாக மாறி விடும் அபாயம் நேரிடும் வாய்ப்புக்கள் உள்ளன. சில மொழி பெயர்ப்புக்கள் குறித்த பொருளுக்குரிய விளக்கமாக இருக்கின்றனவே ஒழிய அதற்குரிய நேரான மொழி மாற்றமாக அமைவதில்லை. விஞ்ஞானம், மருத்துவம், பொருளியல், சமூகவியல், அரசறிவியல் போன்ற அறிவுத்துறை சார்ந்த விடயங்களை மொழி பெயர்க்கும் போது பெருமளவுக்கு அகராதிகள் தேவைப்படுகின்றன. இத்துறை சார்ந்த கலைச் சொற்களுக்கும் குறைவாக இருப்பது மொழி பெயர்ப்பில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனையாக உள்ளது. எது எவ்வாறாயினும் அறிவியலின் வளர்ச்சி, பல்லின கலாச்சாரம், உலக மயமாக்கல் போன்ற பல்வேறு காரணங்களால் மொழி பெயர்ப்பு இன்றியமையாத தொன்றாக ஆகிவிட்டது என்பதே உண்மையாகும். இவ் உண்மை சாத்தியமானால் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை தமிழ் மொழிக்கு கொண்டுவரும் பாரதியின் கனவு நனவாகும்.

- கு. ஸ்ரீராகவராஜன் (ஆசிரியர்)

With Best Compliments

from

S.T.M. & COMPANY

General Merchants, Commission Agents and Dealers in Local Produce

72, Old Moor Street,
Colombo 12
T'Phone : 2330323

With Best Compliments

from

MARUTHI TRADER

General Rice Merchants & Commission Agents

68, Old Moor Street, Colombo 12
Tele : 2424013, 2424014

தமிழ் இலக்கியத்தில் நெய்தல் நிலம்

நாம் வாழும் புவிக்கோளத்தின் வெளிப்பரப்பு 510,100,934 ச.கி.மீ. இதில் நீர்ப்பரப்பு 71% ஆகும். நிலப்பரப்பு முழுவதும் நீர்ப்பரப்பால் சூழப்பட்டுள்ளது.

"இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து", "கடல்சூழ் மண்டிலம்". "புலவுக் கடல் உடுத்த மலர் தலை உலகம்" என ஆகிய பாடல்வரித் தொடர்கள் சங்க நூல்களில் காணப்படுகின்றன.

கடல் மிகப் பழமையானது அது பன்னெடுங்காலத்துக்கு முன்னரே உருவாகி இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தினால் அதனை "முதுநீர்" எனப் பண்டைத் தமிழர் வழங்கியிருத்தல் கூடும்.

கடல் நீர் பல்வேறு உப்புகள் கரைந்துள்ள ஒரு கரைசலாகும். இதில் சோடியம் குளோரைற்று மக்னீசியம் குளோரைற்று, மக்னீசியம் சல்பேற்று, கல்சியம் சல்பேற்று, பொட்டாசியம் சல்பேற்று, கல்சியம் காபனேற்று என்னும் உப்புகள் கரைந்துள்ளன.

கடல் நீரில் கலந்துள்ள உப்புகளுக்கும் மொத்த கரைசலுக்கும் உள்ள விகிதம் உப்பளவு எனப்படும்.

$$\text{உப்பளவு} = \frac{\text{கடல் நீரில் உப்புகளின் அளவு}}{\text{கரைசலின் மொத்த அளவு}} \times 100$$

கடலில் அலைகள் எழுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது காற்று காற்றிலிருந்து சக்தி நீருக்கு மாற்றப்படுவதால் கடல் அலைகள் தோன்றுகின்றன என்பர். கடல் அலைகளைத் "திரை" என்ற பெயரால் புலவர்கள் வழங்கி உள்ளனர். வெவ்வேறு புறச்சூழல்களால் வெவ்வேறு வகையாகத் தோன்றும் கடல் அலைகளின் நிலைகளை நுணுகி நோக்கி வெளிப்படுத்தி உள்ளார்கள் சங்கப் புலவர்கள்.

"தயங்கு திரைப் பெருங்கடல்",
"ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்னசீங்குதிரை"
"வில்லெறி பஞ்சுபோல மல் குதிரை வளி பொரு வயங்கு பிசிர் பொங்கும் நளி கடல்"
ஆகிய பாடல் தொடர்கள் அலைகள் பற்றிக் குறிப்பிடுகின்றன.

கடற்கரையில் தோன்றும் மணற்குவியலை எக்கர், சேர்ப்பு எனச் சங்கப் புலவர் வழங்குவர். இம் மணற் குவியல்கள் உருவாவதற்கான அடிப்படைக் காரணங்களுள் ஒன்று கடலலை என்பர்.

"கரை பொரு திரங்கும் கனையிரு முந்நீர்த் திரையிடு மணல்"

என வரும் சங்க இலக்கியத் தொடர் பண்டைத் தமிழர் சிந்தனையை எடுத்தியம்புகின்றன.

கடலில் கால வரையறைக்கு உட்பட்டு ஏற்படும் கடல் மட்ட ஏற்றத்தாழ்வுகளுக்கு ஓதங்கள் என்று பெயர் இவற்றை வேலை ஏற்றங்கள் அல்லது கடல் ஏற்றங்கள் என்றும் வழங்குவர். ஓதங்களுக்கு அடிப்படையான காரணங்களாக விளங்குவன ஞாயிறும், திங்களும். நாம் வாழும் புவி, ஞாயிறு, திங்கள் ஒன்றை ஒன்று ஈர்க்கின்றன.

ஈர்ப்பு விசை, கோள்களின் பொருண்மைக்கு நேர் விகிதத்திலும் அவற்றின் இடையே உள்ள தொலைவிற்கு எதிர் விகிதத்திலும் அமைந்துள்ளது. ஞாயிற்றின் பொருண்மை அதிகமாயினும் அது வெகு தொலைவில் இருப்பதால் அதினினும் பொருண்மையில் பெரிதும் குறைந்திருப்பினும் வெகு அண்மையிலிருக்கும் திங்களே, புவியிலுள்ள பொருள்களை ஈர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இதனால் தான் பௌர்ணமி, அமாவாசைத் தினங்களில் கடலில் ஓதங்கள் அளவில் மிக்கு விளங்குகின்றன.

"திங்களும் திகழ் வான் ஏர்தரும்; இளநீர்ப் பொங்கு திரைப் புனரியும் பாடோ வாதே ஒலி சிறந்து ஓதமும் பெயரும் ....." என நற்றிணைப்பாடல் சான்று பகரும். மேலும் இவ்வோதங்கள் கடலில் வாழ் மீன்கள் சுழிகளிலும், ஆறுகளிலும் புகுவதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன. "இறவொடு வந்து கோதையொடு பெயரும் பெருங்கடல் ஓதம் போல" என்னும் சங்கப் பாடலடிகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

கடல் வாழ் உயிரினங்கள் பற்றியும் புலவர்கள் தாமறிந்துள்ளனவற்றுள் சில உண்மைகளை மட்டும் இலக்கியங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். சங்க இலக்கியங்களில் சுறா இனத்து மீன்கள் பலவற்றுள்ளும் வாளு சுறா குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது.

கடற்கரை மணலைத் தோண்டி பெண் ஆமை முட்டை இடுவதும், அம் முட்டைகள் பொரிந்து குஞ்சுகளாகும் வரை ஆண் ஆமை அவற்றைக் காவல் காக்கும் என்ற செய்தியும் நப்பசலையார் பாடல் வழி அறிய முடிகின்றது.

இதுவரை கூறியவற்றால் இன்று போல் அறிவியலில் பெருவளர்ச்சி பெறாத இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தே வாழ்ந்த தமிழ் மக்கள் இன்று வளர்ந்து வரும் ஆழ்கடல் ஆய்வுகள் தரும் முடிவுகளோடு ஒத்து அமையும் ஒரு சில கருத்துக்களைக் கருதி இருந்தனர் என்பது தெளிவு.

- S.R. ஜெயக்குமார்

நிகழ்ச்சி நிரல்

- பாடசாலை கீதம்
- தமிழ்த் தாய் வாழ்த்து
- மங்கள விளக்கேற்றல்
- வரவேற்பு உரை
- வரவேற்பு நடனம்
- அதிபர் உரை
- பாடசாலைகளுக்கிடையிலான பரிசளிப்பு நிகழ்வு
- விவாத அணி அறிமுகம்
- கூத்து
- மலர் வெளியீடு
- இசைத்தென்றல்
- பிரதம அதிதியின் உரை
- பாடசாலைக்குள்ளான பரிசளிப்பு நிகழ்வு
- நடனம்
- நாடகம்
- நன்றியுரை
- தேசிய கீதம்

Programme

- School Song
- Thamizh Thai Valthu
- Lighting of Oil Lamp
- Welcome Speech
- Welcome Dance
- Principal Speech
- Prize Giving
- Debate Team introduction
- Koothu
- Releasing of the Souvenir
- Isaithendral
- Chief Guests Speech
- Prize Giving
- Dance
- Drama
- Vote of Thanks
- National Anthem

இனி ஒரு விதி செய்வோம் !

றோயல் கல்லூரி சிரேஷ்ட பிரதித் தலைமை மாணவ தலைவர் 2008 - 2009
றோயல் கல்லூரித் தமிழ் இலக்கிய மன்றத் தலைவர் 2007 - 2008
றோயல் கல்லூரித் தமிழ் விவாத அணித் தலைவர் 2007 - 2009.

-என்.கே அஷோக்பரன் (சட்ட மாணவன்)

இன்றைய இளைஞர்கள் எல்லாவற்றிலும் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். உலகைப் பரந்த நோக்கில் பார்க்கிறார்கள். வாழ்க்கையயை வெற்றிகரமாக நடத்த முயற்சிக்கின்றார்கள் ஆனால் சமூகம் தொடர்பான அவர்களது சிந்தனை இலங்கை இளைஞர்களிடையே வெகுவாகக் குறைந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஒவ்வொருவரும் தாம், தமது வாழ்க்கை என ஒரே நேர்கோட்டில் சிந்திப்பதே இப்பொழுது ஒரு பொதுப் பண்பாகி விட்டது. சமூகத்தைப் பற்றியோ அதன் தேவைகள், மாற்றங்கள் பற்றியோ சிந்திக்கும் நிலையில் அவர்கள் இல்லை என்பது கவலைக்குரியது. சினிமா, விளையாட்டு இதைத் தாண்டி இளைஞர்கள் சிந்திக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். இன்றைய இளைஞர்களுக்கு சமூக அக்கறை, விழிப்புணர்வு எல்லாம் இருக்கிறது ஆனால் அதை ஆழத்தோண்டி நீளப்புதைக்கும் காரணிகள் தான் இளைஞர்களின் சிந்தனை, செயற்பாடாவதைத் தடுக்கிறது.

சில தினம் முன்பு எனது நெருங்கிய நண்பன் ஒருவனிடம் ஒரு சமூக ஆர்வத் தொண்டு பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அவனும் கேட்டுக்கொண்டிருந்தான், உதவிக்கு ஆட்கள் தேடித்தருவதாக வாக்களித்தான் ஆனால் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விருப்பமில்லை அவனுக்கு. காரணம் கேட்டேன், "இல்லடா... வேலை நிறைய இருக்கு... படிக்கவும் வேண்டும்" எனச் சமாளித்துவிட்டான். ஆனால் எனக்குத்தான் தெரியுமே உண்மையான காரணம்! அவன் இப்படி சமூக அக்கறை இல்லாமல் இருந்தவன் இல்லை ஆனால் அவனது சமூக ஆர்வத்தால் வீட்டில் பிரச்சினை, ஒவ்வொரு நாளும் வீட்டில் திட்டு வாங்கினான். "படிச்சு வேலை வெட்டியைப் பாக்கிறத விட்டுட்டு உது வேண்டாத வேலை" எனத் திட்டித்திட்டி அவனது மனதில் அது ஆறாத வடுவாகி இன்று சமூகப் பொறுப்பையே அவன் மறந்துவிடும் அளவுக்கு கொண்டு வந்து விட்டார்கள் "பெரியவர்கள்". இதில் அவன் மேல் பிழையில்லை அவன் பெற்றோர் மீதும் பெரிதும் பழி சுமத்த வழியில்லை ஏனென்றால் சமூகப் பொறுப்பை மறந்து வாழ்க்கையை நடத்த நாம் கற்றுக் கொண்டுவிட்டோம் - உண்மையில் நாம் வாழ்கிறோமா இல்லைத் தப்பிப் பிழைக்கிறோமா என எனக்கு ஐயம் எழுவது கூட உண்டு.

இன்றைய இளைஞர்கள் சமூக சேவையென்றாலே வரத் தயங்குகிறார்கள் - இதற்கு ஆர்வமின்மை காரணமல்ல, அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடும் விருப்பமும் உண்டு

ஆனால் உற்றோரும் கற்றோரும் இது ஏன் வீண் வேலை என அவர்களுக்குத் தடை போடுவதால் அதனை இடித்தெறியும் வன்மை இலாது பொதுவான தனி வாழ்க்கையில் வெற்றி காட்டும் நேர்கோட்டிலேயே பயணிக்கின்றார்கள். சமூகப் பொறுப்புணர்வின் நிலைமையே இப்படியென்றால் அரசியல் பக்கம் இளைஞர்கள் வருகிறார்களா எனப் பார்த்தால், அரசியல் வாரிசுகளும் மற்றும் மிகச் சொற்ப இளைஞர்களும் போக மீதம் பேர் அரசியல் என்றாலே விலகித்தான் நிற்கின்றார்கள். அதுவும் கல்தோன்றி, மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த தமிழ் பேசும் எம்மவர் அரசியலைச் "சாக்கடை" "சாக்கடை" என்று கூறியே இளைஞர் மனதிலிருந்து அதனை விலக்கி வைத்து விட்டார்கள். விளைவு இன்று இன்னும் அந்தச் சாக்கடை சாக்கடையாகவே இருக்கிறது. அரசியலைச் "சாக்கடை" "சாக்கடை" என்று சொல்பவர்களை ஒன்று கேட்கின்றேன் உங்கள் வீட்டில் குப்பையிருந்தால் அதை நீங்களோ, உங்கள் பிள்ளையைக் கொண்டோ அப்புறப்படுத்துவீர்களா இல்லை குப்பை குப்பை எனச் சொல்லிக்கொண்டு அந்தப் பக்கம் போகாமலே குப்பையைப் பெருக விட்டு வீட்டை நாறவிடுவீர்களா? நாறவிடுவோம் எனச் சொல்பவர் பற்றி எனக்குக் கவலையில்லை அவர்கள் பற்றிக் கவலைப்பட வேண்டியது மனநல மருத்துவர்கள் தான் ஆனால் இல்லை எனச் சொல்பவர்கள் வீடு அழுக்கானால் சுத்தம் செய்கிறீர்களே ஆனால் நாடு அழுக்கானால் மட்டும் ஏன் பார்க்காமல் கண்ணை மூடிக்கொள்கிறீர்கள்?? கண்ணை மூடிக்கொண்டு எவ்வளவு காலம் வாழ்ந்துவிட முடியும்?? யோசியுங்கள் தப்பிப்பிழைப்பது வாழ்க்கையல்ல - அப்படியிருப்பதிலும் செத்துமடிவது மேல்.

அரசியல் என்பதே இன்று தலைகீழ் ஆகிவிட்டது. அது ஒரு கலை என்பதிலிருந்து இறங்கி வியாபாரம் ஆனதன் விளைவே இன்று நீங்கள் அதனைச் "சாக்கடை" என வையும் அளவுக்குக் கொண்டு வந்து விட்டிருக்கிறது. இந்தச் சாக்கடையினுள் ஊறியவர்களுக்கு அதனைச் சுத்தம் செய்ய வேண்டிய தேவை இருக்காது ஆக அவர்கள் சாக்கடையைச் சாக்கடையாகவே இருக்க விட்டுவிடுவார்களேயன்றி அதனைச் சுத்தம் செய்து மாற்றம் கொண்டுவர எத்தனிக்க மாட்டார்கள். ஏனென்றால் சாக்கடையில் வாழும் தன்மை அவனுக்கேயுண்டு வேற்றோர் அதனுள் வாழமுடியாது ஆனால் தனியுடைமையாக அதனைப் பரம்பரை பரம்பரையாக அனுபவிக்கின்றான். நீங்களும் அப்படியே விட்டுவிட்டீர்கள் - ஆனால் இது உங்கள் கழிவுகள் போகும் சாக்கடையல்ல உங்களுக்கு குடிக்க நீர் தரும் சாக்கடை உங்களை ஆளும் சாக்கடை அது எப்படியோ அப்படியே உங்கள் வாழ்க்கையும் அமையும். ஆனால் நீங்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் எத்தனை துன்பத்தை இந்த கெட்ட அரசியல்வாதிகள் தந்தாலும் தாங்கிக் கொண்டு மாற்றம் எதனையும் வேண்டாது அவர்களுக்கே மீண்டும் மீண்டும் வாக்களிக்கிறீர்களே - சாதனை தான்.

எங்கள் சமுதாயத்தில் மிகப்பிழையான ஒரு எண்ணப்பாடு உருவாகிவிட்டது. அதாவது, அரசியல் மற்றும் சமூக வாழ்க்கை மேற்கொள்ள படிப்பறிவு தேவையில்லை ஆகவே எங்கள் பிள்ளைகள் படிப்பறிவில்லாதவர்கள் செய்யும் தொழிலில் ஈடுபடக்கூடாது என்பதே அது. அதாவது ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளை "டொக்டர்" ஆக வேண்டும், "எஞ்சினியர்" ஆக வேண்டும் என்றுதான் சிறுவயதிலிருந்து ஊக்குவிக்கிறார்கள் அதுபோக இயல்பாகவே யௌவனப் பருவத்தின் மூன்றாங் கட்டத்தில் பிள்ளைகளுக்குள் எழும் சமூகம் பற்றிய சிந்தனையைக் கூட கட்டிப் போட்டு விடுகிறார்கள். இதன் மோசமான நிலையாக பாடப்புத்தகங்களுக்கு அப்பால் மாணவர்களின் வாசிப்பைக் கூட பல பெற்றோர் இன்று ஊக்குவிப்பதில்லை. இன்றைக்கு வாசிப்புப் பழக்கம் அருகிவருவதற்கும் இது ஒரு முக்கிய காரணம். இப்படியாக வெளியுலக நடப்புக்கள் பற்றி கவலைப்படாத மனிதர்களை எமது சமுதாயம் படைக்க விளைகிறது. அதாவது எமது சமுதாயத்தை சமூக அக்கறை குறைந்த மனிதர்களால் நிறைக்கவே பார்க்கிறது, விளைவு இவர்கள் உருவாக்கும் "படித்த" இளைஞர்கள் தங்கள் வேலையைப் பார்க்கப் போய்விட, தகுதியற்றவர்கள் அரசியல் மற்றும் முக்கிய சமூக அதிகாரங்களைக் கையிலெடுத்துக் கொள்கிறார்கள் விளைவு? - அழிவு தான்.

உலக நாடுகளை எடுத்துக்கொண்டால் வளர்ந்த தேசங்களிலெல்லாம் படித்தவர்கள் தான் அரசியலுக்கு வருகிறார்கள். தற்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஒக்ஸ்.போர்ட், கேட்பிரிஜ் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர். அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா, கொலம்பியப் பல்கலைக் கழகத்திலும், ஹாவர்ட் பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்றவர், சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் அரசியலமைப்புச் சட்ட விரிவுரையாளராகப் பணியாற்றியவர். தற்போதைய பிரித்தானியப் பிரதமர் ஒக்ஸ்.போர்ட் பல்கலைக்கழகத்தில் தத்துவம், பொருளியல் மற்றும் அரசறிவியில் பயின்றவர், முதற்தர இளமாணிப் பட்டமும் பெற்றவர். இதைவிட சிறந்த அரசியல் மேதைகளாக நாம் மதிக்கக்கூடியவர்கள் (ஒரு சில்ர் தவிர்த்து) மிகுந்த கல்வியறிவு உடையவர்களே. தனி நிறுவனங்களை நிர்வகிப்போர்களுக்கே உயர்ந்த அளவில் கல்வித்தரம் வேண்டப்படும் போது, ஒரு தேசத்தை நிர்வகிப்பதற்கு எவ்வளவு கல்வியறிவும், அனுபவமும் தேவைப்படும்? நாம் இது பற்றி என்றைக்காவது சிந்தித்ததுண்டா? அப்படி சிந்தித்தாலும் எமது பிள்ளைகளை அதற்குத் தயாராக அனுமதித்ததுண்டா? அதன் விளைவு தான் இன்று பள்ளிக்கூடப் பக்கம் கூட போகாதவர்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள்.

அரிஸ்டோட்டில் சொன்னார், "மனிதன் என்பவன் ஒரு அரசியல் விலங்கு" என்று. பெனடிக்ட் ஸ்பினோஸா என்ற ஸ்பானிய தத்துவவியலாளர் சொன்னார் "மனிதன் என்பவன் ஒரு சமூக விலங்கு" என்று. ஆகவே சமூகம், அரசியலைத் தவிர்த்து நாம் "தனித்து" வாழ முடியாது. ஒவ்வொரு அரசியல் மற்றும் சமூக மாற்றமும், அந்தச்

சமூகத்தில் வாழும் ஒவ்வொருவனையும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கிறது. அத்தகையை அனைவரையும் பாதிக்கக்கூடிய ஒன்றை "படிப்பறிவில்லாத, பண்பில்லாத" மனிதர்களிடம் கொடுத்தால் இந்தச் சமூகத்தின் நிலை என்ன? உங்களின் நிலை என்ன? இது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

நல்ல அரசியல் தலைவர்கள் இல்லையென்றால், நல்ல மருத்துவர்களும், நல்ல பொறியியலாளர்களும், நல்ல சட்டத்தரணிகளும் இருந்தும் எந்தப் பயனுமில்லை. சுயநலமில்லாத தலைவர்கள் இல்லையே என நினைத்துக் கொள்கிறோம் ஆனால் நம்மில் எத்தனை பேர் எமது பிள்ளைகளை அப்படி உருவாக்க எண்ணுகிறோம்? யாரோ ஒருவன் சுயநலமில்லாமல் எமக்காக உதவ வேண்டும், நாங்கள் சுயநலத்துடன் படித்து "நல்லா உழைக்கிற" வேலையாப் பார்த்து வாழ்க்கையில் "செட்டிலாக" வேண்டும். இந்தச் சிந்தனை சரிதானா? இந்த "சுயநல" எண்ணம் மாறும் வரை சமுதாய முன்னேற்றம் என்பது கனவில் கூட நிகழாது.

சிந்தியுங்கள் ... இளைஞர்களால் மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்த முடியும் ....
ஏனென்றால் எதற்கும் வளைந்துகொடுக்காத மனோதைரியம் இளைஞர்களுக்குத் தான் உண்டு. எத்தனை காலம் தான் இந்தத் தப்பியொட்டி வாழும் வாழ்க்கை .... ஆர்வத்துடன் இருக்கும் இளைஞர்களை தடுக்காதீர்கள் அவனது உறுதியான மனதிலே அடித்து அடித்து அதை வளைத்து விடாதீர்கள் ...நீங்கள் அறிந்த பெரியோரெல்லாம் வியந்து பாராட்டியது இளைஞனைத்தான். பாரதி தேச விடுதலைக்காக துணைக்கழைத்தது இளைஞர்களைத் தான் ... விவேகானந்தர் நாட்டைக் கட்டியெழுப்பக் கேட்டது 100 இளைஞர்களைத் தான் ... சேகுவேரா தூய்மையான விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதும் இந்த இளைஞர்களோடு தான் ... 39 வயதில் ஒரு இளைஞனாகவே மரித்துவிட்ட மார்ட்டின் லூதர் கிங் ஜீனியர் என்கிற இளைஞன் இல்லாவிட்டால் அமெரிக்காவில் அடிமைகளாக அல்லலுற்ற ஆபிரிக்க மக்களினம் உரிமைகள் பெற்றிருக்குமா? யோசியுங்கள்! அவர்கள் எல்லாம் ஏற்படுத்திய மாற்றம் அளப்பரியது. இளைஞர்களை அவர்களாகக் கனவு காணவிடுங்கள் - அவர்களது கனவினைக் கூட நீங்களே தீர்மானிக்க எத்தனிக்காதீர்கள்.
இனி ஒரு விதி செய்வோம்!

என் பெயர் முதலாளித்துவவாதி

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத் தலைவர் 2009
றோயல் கல்லூரி தமிழ் விவாத அணித் தலைவர் 2010
றோயல் கல்லூரி மாணவத் தலைவர் 2010/2011

- இ. அருணோதயன்

யுகங்கள் கடந்தும் பூமியின்மேல் வானம் வைத்திருக்கும் மோகம் குறைவதாயில்லை. வானம் கொடுத்தச் சாறல் முத்தத்தில் முழுவதுமாய் நனைந்த பூமி தன் வெட்கங்களை எல்லாம் இருட்டுப்போர்வை திரித்து மறைத்துக் கொண்டிருந்த ஒரு மாலை வேளை, நூற்றாண்டுகளாய் சிறுகச் சிறுகச் சேர்த்த தன் கிரணங்களை என்னைச் சுற்றிலும் கட்டவிழ்த்து விட்ட குளிரைக் கிழித்துக் கொண்டு என் வாகனம் பிரயாணித்துக் கொண்டிருந்தது. காலநிலை போட்ட கட்டாய உத்தரவினால் என் இருவிரல் நடுவே தனிவிரலாக ஒரு சிகரெட் புகைந்து கொண்டிருக்க தனிமையின் தாழ்வாரங்களில் என்னை நானே அடை காத்தபடியே வாகனத்தை செலுத்திக் கொண்டிருந்தேன்.

பணப் பாதையில் ஒரு ஆலயம்! வழமைக்கு மாறாக அழகழகாய் தோரணங்களும் ஆபரணமிளிர்ப்பில் விக்கிரகங்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தாவணிப் பூக்களுமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது!

'அப்பா வந்ததும் வெடி போடுவமா?' ஐந்து வயது நிரம்பாத என் மகன் காலையில் காதோடு மழலைத்தேன் பாச்சியது அப்பொழுது தான் ஞாபகத்திற்கு வந்தது இன்று தீபாவளி!

கோயிலோரமாய் மேகம் முட்ட கிளை பரப்பி, தரை எட்ட விழுது நிரப்பி ஒய்யாரமாய் ஓங்கி வளர்ந்திருந்த ஒரு ஆலமரத்தின் கீழிருந்து ஒரு பட்டாசுக் கடை ஓரமாய் வாகனத்தை நிறுத்தினேன். என் மகன் வயது மதிக்கத்தக்க சிறுவன் கடைக்குக் காவலிருந்தான்.

"வாங்கைய்யா! மழையால இன்னைக்கு வியாபாரமே ஆகல; என்ன பட்டாசு வேணும்?"

அந்தக் குரலுக்குள் தொனித்த சோகம் என் இதயத்தின் எல்லாப் பரப்பையும் ஆக்கிரமித்துக் கொண்டது. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வலியின் விஸ்தீரணமான ரணம் அது.

'தம்பி பெரியவங்க யாரும் இல்லையா?"

"அப்பா கோயில்ல செருப்பை பார்த்துக்கிறாரு; எங்கிட்ட வாங்குங்க அங்கிள்! இந்தப் பட்டாசு ஐம்பது ரூபா, அது நூறு ...." கோடிக் கண்களின் கண்ணீர் என் சோடிக் கண்களில் நிரம்பியெடுத்துப் பொங்கி வந்த என் கண்ணீருக்குள் நான் மூச்சுத்திணறிப் போனேன். இயற்கை சின்னச் சின்ன ஊர்களின் முந்தானையில் ஏழ்மையையும் முடிச்சுப் போட்டு வருகிறது.

யாருக்காக என் ஒவ்வொரு அணுவும் தினமும் பூப்பூக்கிறதோ, அதே வயதுடைய ஒரு அப்பாவிச் சிறுவனுடைய வாழ்வை வறுமைக் கரையான் அரித்துக் கொண்டிருக்கிறது. மலரத் துடிக்கின்ற ஒரு மொட்டை முகவரி தெரியாத புயல் அள்ளிக் கொண்டு போய் விட்டது.

"ஐயா சீக்கிரம் வாங்குங்க. மழை உரக்கப் போகுது! கடையைச் சாத்தணும்" ஏழ்மை தேசத்தின் நீள அகலங்களின் விஸ்தீரணத்தில் கொட்டிக் கிடக்கின்ற கோடிக் கணக்கன கடுகுகளில் இவனும் ஒருவன். தீபாவளி தீபங்கள் கூட இவன் எதிர்காலத்தை ஒளியூட்டுவதாக அன்றி எரியூட்டுவதற்காகவே இருந்திருக்கின்றன. உலகப் பொருளாதாரத்தின் கிழித்துப் போட்ட பக்கங்களுக்குச் சொந்தக்காரர்கள் இவர்கள். புகைந்து முடிந்த சிகரட் விரலிடுக்கில் லேசாக சுட்டது. அந்த உஷ்ணம் உடலெங்கும் பரவி கால்களில் லாடம் கட்டி என்னை நிகழ்காலத்துக்கு இழுத்து வந்தது. தெருவெல்லாம் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த மழையோசையின் இடையே என் புலம்பலோசை நிர்முலமாகித் தொலைந்து விட்டது.

"இந்தாப்பா! இருநூறு ரூபாய்க்கு பட்டாசு குடு!" எடுத்துத் தருகின்றபோது அவன் விழிகளெங்கும் சந்தோமும் ஏக்கமும் சண்டை போட்டுக் கொண்டன. அது ஒரு சுதந்திர தாகம். ஏழ்மையிலிருந்து தானா சுதந்திரம்! பசியிலிருந்துதானா சுதந்திரம்! இருட்டிப்போன தன் உலகிலிருந்துதானா சுதந்திரம்! என் சட்டைப் பையை துளாவி நோட்டுக்குவியல் ஒன்றை எடுத்து அவன் கையில் திணித்தபடி சொன்னேன்.

'தீபாவளிக்கு புது டிரெஸ் வாங்கிக்கோ!"

என் ஐந்து வயதுக் குயில் செல்போனில் என்னைக் காணவில்லை என சங்கீதம் பாடியது. வீட்டை நோக்கி வாகனத்தை செலுத்தினேன். காட்சிகளுக்கு இமைகள். காவல் போடும் போதுதான் ஞாபகப் பறவைகளுக்கு சிறகு முளைக்கிறது.

என் நினைவுகளில் என்றுமே அவன் ஓவியமாய் பரிமாணித்திருக்கிறான் அவனுக்காக இரக்கப்படுவது மட்டுமே போதாது எனத் தெரிந்திருந்தும் இரக்கப்படுவதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியாத சாமான்ய மனிதன் நான்.

என் பெயர் முதலாளித்துவவாதி

அழகாய் ஒரு 'அ'

றோயல் கல்லூரி மாணவ தலைவர் 2011 - 2012
றோயல் கல்லூரித் தமிழ் விவாத அணித் தலைவர் 2011
றோயல் கல்லூரித் தமிழ் இலக்கிய மன்றத் தலைவர் 2010

-ஜெ.நிஜந்தன்-

வெகுநேரம் ஆகியும் ஓயவில்லை
பக்கத்து வீட்டுச் சிறுவனின் அழுகைச் சத்தம்
பொறுக்க முடியாமல் பெற்றவளிடம் வினவினேன்
கோபத்தில் அடித்ததாக சிடுசிடுத்தாள் ...
பதிலேதும் பேசாமல் திரும்பி வந்தேன்

மறுநாளும் தொடரவே மறுபடியும் பதறினேன்
அடுத்து வந்த நாளும் அப்படியே தொடரவே
பொறுக்கமுடியாமல் துலாவினேன் காரணியை
சிலேட்டில் 'அ' போடவில்லையாம்
இதற்கா இப்படி என அங்கலாய்த்தேன்
தொடர்கிறதே!! என சலித்துக் கொண்டாள்

பொறுப்பேற்று அழைத்து வந்தேன் அழுபவனை
விசும்பல் ஓய காத்திருந்து
விளையாட்டுச் சிறுவனிடம் சிலேடெடுத்தேன்
"யூ ரூ புரூட்டஸ்" என்பது போல பதுங்கினான்

அடுத்த நாளும் கூட்டி வந்தேன்
முறைத்த தாயை கவனியாதது போல
ஒருவழியாய் கரம் பிடித்து 'அ' முயன்றேன்
அழகாய் வரவே அடுத்ததாய் அவன் முறையென
தனியே எழுதச் சொன்னேன்
மழங்க மழங்க விழித்தவன் மெதுவாய் கிறுக்கினான் ..
முட்டை மட்டும் போட்டுவிட்டு
முழுதாய் தப்பித்தான்

மறுண்ட விழிகளுடன்
மறுநாளுமே அதே பாடு தான் ...
மயக்கமே வந்ததாய் மறுபடியும் தொடர்ந்தேன் ...
ம்ஹூம் ...
மாறவே இல்லை அவன் பிடிவாதம்

நாட்கள் தொடரவே
நானும் திகைத்தேன்
இன்று மட்டுமென
இளிப்புடன் சலுகை கேட்டேன்
இனி முடியாது என அனுப்பி வைத்தாள்

செய்வதறியாது செயல் மறந்து
குழம்பியபடி எழுதியதால்
கோணலானது என் 'அ' வும்
பார்த்துக் கொண்டிருந்தவன் பட்டென பிடுங்கி
"அய்யே ... இப்படியா போடுவாங்க ... மக்கு ..." என்று
எழுதிக் காட்டினான் ... அழகாய் ஒரு 'அ'

With Best Compliments

from

YOGA TRADING

Dealers in Textiles Readymade Batik Garments

Kezyer Plaza,
147/2/15, Keyzer Stret, Colombo 11
Tel : 0777 805841

With Best Compliments

from

New Piersons Pharmacy

Dispensing Chemists, Duggists & Grocers

No. 56, Thurstan Road, Colombo 03
Hello : 2556468

FREE DELIVERY SERVICES

With Best Compliments

from

R.G. BROTHERS

Importers, Geneal Merchants & Commission Agents

81, 5th Cross Street,
Colombo 11.
Tel ; 2438468, 0115 734864

With Best Compliments from

SUN

Sun Traders (Pvt) Ltd

General Merchants & Commission Agents



No. 73, 5th Cross Street, Colombo 11.
Tel : 011-2421961

SVT

With Best Compliments from

SHRE VAANIE TRADERS

Importers, General Merchants & Commission Agents

No. 127, 5th Cross Street, Colombo 11.
Tel : 440341, 2438818 Fax : 2438808

"உறவுகள் உயர்ந்திட உழைப்பாய்"

- சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் -

எழுவாய்த் தமிழா எழுவாய்
தமிழின் திறனாய் எழுவாய்
தமிழர் உணர்வாய் எழுவாய்
தமிழைக் காத்திட எழுவாய்

இயலிசை நாடகம் வளர்ப்பாய்
இதயத்தில் தமிழனாய் சிறப்பாய்
அயல்மொழி மோகம் கலைவாய்
தமிழ்மொழி சிறந்திட துணிவாய்

தமிழர் துயரினைத் துடைப்பாய்
தமிழே சிறப்பென வளர்ப்பாய்
பயனுறும் கல்வியே கற்பாய்
பிறர்நலன்பேண் மனங்கொள்வாய்

மறத்தமிழர் நாமென நிமிர்வாய்
அறந்தனை வாழ்வினில் ஏற்பாய்
உறவுகள் உயர்ந்திட உழைப்பாய்
உணர்வினில் தமிழையே நிறைப்பாய்

இருப்பாய் தமிழா சிறப்பாய்
அடிமைத் தனத்தை அழிப்பாய்
உரிமைக் குரலை ஒலிப்பாய், வீரத்
தமிழர் நாமென உரைப்பாய்

With Best Compliments

from

K.K. Udayakumar

(Science Teacher)

Brilliant
Kotahena
011-2347728

C.T.S.
Wellawatta
011 3159302

உறுத்தல்

றோயல் கல்லூரி மாணவ தலைவர் 2011 - 2012
றோயல் கல்லூரித் தமிழ் விவாத அணி உபதலைவர் 2011
றோயல் கல்லூரித் தமிழ் நாடக மன்றத் தலைவர் 2010
-ச.லவன்

இருந்தபடியே தான் இருந்தாள்
அந்த எழுபது வயதுக் கிழவி

வருவோர் போவோர் தரும்
இரண்டிரண்டு பிஸ்கட்கள்

அவ்வப்போது யாராவது தரும் - ஒரு
அரை டம்ளர் தேநீர் சகிதம்

இருந்தபடியேதான் இருந்தாள்
அந்த எழுபது வயதுக் கிழவி

அந்த வங்கி வாசல் தேநீர் கடை
அவளின் வாடிக்கை வாழ்க்கை போல

இடது கையில் இரண்டாயிரம்
கொச்ச விலை ஷுவுடன்

இருந்தேன் நானும் அந்த
இடத்தில் ஒரு தேநீருடன்

ஒன்றிரண்டு நிமிடங்கள்
ஒருவாறாய் சிந்தித்தவன்

பர்சில் பளபளத்த
பல வண்ண நோட்டுக்களில்

ஒரு நூறைக் கொடுத்துவிட்டு வந்து
ஒரு வாரம் ஆன பின்னும்

குனிந்து அணியும் போதெல்லாம்
இன்னமும் உறுத்திக் கொண்டு தான் இருக்கிறது
இந்த இரண்டாயிரத்து கொச்ச விலை ஷு

With Best Compliments

from

Chanra Stores

Importers, General Merchants & Commission Agents

No. 211-A, Fifth Cross Street, Colombo 11.
Tel : 2434349, 2331724, 2471682

With Best Compliments

from

WC

WOODLANDS COMPANY

Importers exporters & commission Agents
dealers in all kinds of local produce

192, 4th Cross Street, Colombo 11
Tel : 2327451 - 2422426

பூக்கள் பூக்கும் தருணம் ஆருயிரே ....

கொட்டும் மழை முத்தமாக கொட்டட்டும்
வெட்டும் மின்னல் நித்தம் கண் சிமிட்டட்டும்
முட்டும் மேகம் யுத்தம் கொண்டு முழங்கட்டும்
எட்டும் வானில் உன் சித்தம் ஒளி வீசட்டும்

விடியல் கொஞ்சம் தீண்டும் நேரம்
மடியில் வந்து மழலை பாடும்
செடியில் இதழின் பனியும் படரும்
நொடியில் வண்ண மலர்கள் மலரும்

பிஞ்சிலே இவள் பாதம் செவ்வந்தி - என்
நெஞ்சிலே பூத்த சூரியகாந்தி
உதடுகள் ரோஜாவின் பூங்கொத்து
கூந்தலோ மல்லிகையின் மலர்மொட்டு

காற்றோடு கலந்து உந்தன் வாசம்
ஊற்றாக வந்து என் மேல் வீசும்
நேற்றொடு கலையாதோ உன் வேஷம் ...?
மாற்றாக வருமோ என் மேல் நேசம் ...?

கடலோரம் வீசும் இளந்தென்றல் காற்று
உறவாடியது என்னோடு நேற்று - என்
உள்ளத்திலே பெருக்கெடுத்த தமிழ் ஊற்று
உன் விழியாலே கவி பாடி என்னை மாற்று

காணாத கண்களும் கலங்கிடுமோ...?
தானாக வழிந்தோடி உறைந்திடுமோ...?
நானாக உன்னில் தொலைந்தேனோ....?
மானாக ஓடி நீயும் மறைந்தாயோ...?

காதல் சொல்லத் தேவையில்லை
கண்கள் கண்டால் போதுமடி
பூவின் முகவரி நீயல்லவா...?
புது ரகமாக எனை கொல்லவா...

கற்பனைகளை கருவாக்கி
கண்ணே உன்னை உருவாக்கி
கனவொன்று காணுகின்றேன்
தினமுன்னை தேடுகின்றேன்

மௌனம்தான் உனது மொழி - கருணை
கொள்ளாதோ உன் இரு விழி
மனம் உணர்ந்து கொள்வாயோ ...?
இல்லை மௌனமாய் என்னை கொல்வாயோ ...?

- T.Thana -

Royal College Tamil Literary Association

Past Chairmans & Secretaries

Year	Chairmans	Secretaries
1950	N.Amirthalingam	N.Sundaralingam
1952	K.Kailasapathy	N.Ramachandran
1959	S.Viknaraja	N.Sivarajaram
1960	N.Sivabalan	S.Rajasundaram
1962	M.Jeyakumar	T.Vasanthan
1963	M.Swaminathan	S.Rathinaathikkam
1964	P.Ramachandran	T.Ramachandran
1965	K.Gowrinathan	V.Thiruchelvam
1966	K.Kantharooban	V.Devendra
1967	I.Sirikanthan	I.Rathneswaran
1969	S.Ragavan	K.Moganarooban
1970	M.Thayananthan	K.Sivanathan
1971	T.Rajkumar	I.Kajendran
1972	K.Kulapoobathy	S.Vinokaran
1973	B.Dharmaraja	M.Sugubalan
1974	T. Premakumar	S. Jahendran
1975	S. Manoharan	A. Dayananda
1976	S. Jeyabalasingam	S. Ramachandran
1977	S. Ramachandran	S. Vasanthakumar
1978	S. Vasanthakumar	A.H.M. Dulip Nawaz
1979	A. Arulnathan	V.R. Nadeswaran
1980	C. V. Prathipan	S. Vengadeshan
1981	K. Vasikaran	M. Varagunam
1982	S. Sivapriyan	A.S. Subaratham
1983	V. Anandhan	M. Sritharan, M. Sutharsan
1984	T. Paraneetharan	P. Selvarajah
1985	N. Ratnasiva	S. Sivakumaran
1986	W. Sivaharan	R. Nirajanan
1987	S.S. Mohan	D. Richard, A. Anuraj
1988	S. Prabahar	K. Thayaparan
1989	T. Soumyrajah	A. Suwaminathan
1990	W. Udayashakar	M. Manivannan
1991	P. Giritharan	J. Devashankar, G. Amuthan
1992	N. Kumarakulasingam	E.D.J. Verthanayagam
1993	E.D. J. Verthanayagam	Y. Muhunthan
1994	Y. Manoharan	K. Nareshkumar
1995	S. Niluckshan	Y. Arunan
1996	K. Ramananaran	L. Jeyanthan
1997	G.S. sethukavalar	P. Thiruvarangan, S. Sutharshan
1998	S. Bawa	B. Yamunaharan
1999	T. Saravana	R. Rathisan, S.S. Kirubananthan
2000	S. Mayuran	N. Sangethakanna, T. Yogendran
2001	S. Karthick	M. Nesajeevan, S. Nimalshan
2002	U.L.M. Resha	M. Sidharth, M. Amsaraj
2003	K. Pratheepan	S. Vithushan, M. Alam
2004	N. Nishanthan	T. Sanjeewan, S. Samson
2005	S. Arujuna Jeyakumaran	B. Parthipan
2006.	B. Aravinth	N.H. Muhamath, M. Sinas Aleem
2007	N.K. Ashokbharan	V. Umesh, D. Raakesh
2008	T. Kapilan	M. Pranavan
2009	R. Arunothayan	T. Abienash
2010	J.Nijanthan	N.Arjuna, M.M.M. Ajmal

Royal College Tamil Literary Association

Past Editors

Year	Editors
1976	S. Sivakumaran, Chandreshan
1977	N. Navanethan
1978	A.H.M. Dulip Nawaz, R. Loganathan
1979	T. Shrivijayan, M. Gobiraj
1980	P. Jagatheesan, T. Shrikumaran
1981	S. Sivapriya, A.S. Sabarathnam
1987	S. Sureshkumar, S. Pirabahar
1990	Y. Aravindh, S. Senthikumar
1991	V. Sukathiswaran
1992	Nareshkumar, Satheeshkumar
1994	S. Aravinthan
1995	M. Ziharaniz
1996	C.I. Azziyan
1997	Vaseekaran
1998	M. Rumy
1999	R. Baramvinayagam
2000	P.S. senthuran
2001	S. Geethan
2002	S. Dinesh
2003	Azeem A. Makeen
2004	P. Sutharkumar, M. Nishath, J. Nitharshan
2005	M.S.A.M. Sinhas Aleem, B. Aravinth, M.I.M. Infas
2006	P. Pratheepan, M. Mothies, S. Veeshman
2007	S. Vishakan, T. Ragavan, S. Atchunna
2008	E. Arjunar, S. Mayuran, S. Shujan, M.A.C.M. Shariq
2009	G. Kulashangar, M.N.M. Hashim, G. Ramesh, R. Mathusagar
2010	Y.Anujon, M.N.M. Afsar, S.Lavan, T.Thanancheyan

Trophies Sponsor

Gnanam Imports (Pvt) Ltd.

- Pioneers In Importing Of Consumer Foods

Basmati Rice-PREMIER Brand &
WHITE GOLD Brand

Urid Dhal

Chilies

Chick peas

Coriander

Cummin Seed

Dry Yeast

Fennel Seeds

Garlic

Green Peas

Red split lentils

Yellow Split Peas

Methi Seeds

Mustard Seeds

Mung Beans

Sago Seeds

Turmeric

Thai Fragrant Rice

Canned Fish- Japaneese mackerel-
IDEAL Brand- from Thailand

Canned Fish- Jack mackerel-
PREMIER Brand- from Chile

Gnanam Imports (Pvt) Ltd.
UG 180/1/123, Peoples Park Complex,
Colombo - 11, Sri Lanka.
Tel. : 094-11-2441944, 094-11-2472171
Fax : 094-11-4715443
E-mail : gnanam@sierra.lk

Sales Outlet: No.46, 4th Cross Street,
Colombo - 11, Sri Lanka.
Tel.: 094-11-2392439

E-mail : sales@gnanamimports.com
Web: www.gnanamimports.com

With Best Compliments

from



Regal Steels Centre

GENERAL HARDWARE MERCHANTS

30, Abdul Jabbar Mawatha, Colombo-12
Phone : 4710472, 2470536, 2470550

With Best Compliments

from

Mr & Mrs. Jayasena

With Best Compliments

from

Sharukeshi Gnanachandran
Ragavarshi Gnanachandran

royal college tamil debaters' council

ரோயல் கல்லூரித் தமிழ் விவாதக் கழகம்

விவாதத் சவரதன் 2011

"வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு."

With Best Compliments

from

G.R. Accessories

Importers & Wholesale Dealers in Textiles & Garments Accesssories

No. 69, Bankshall Street, Colombo 11, Sri Lanka.
Tel : 011-4723414, 011-2424566
Fax : 011-2342027

றோயல் கல்ஷாரி
தமிழ் விவாத அணி
2011-2012

தலைவர்
ஜெ.நிஜந்தன்

உபதலைவர்
ச.லவன்

உறுப்பினர்கள்
த.தனஞ்சயன்
பா.அஜன்
யோ.திருக்குமரன்
ஜீ.ஹர் ~ாந்த்
சு.அனுசன்
கி.பிரபஞ்சன்

With Best Compliments

from

HARROW TRADERS

IMPORTS & EXPORT INTERNAITNAL
TRADING COMAPNY

(-)

157 A2/3, Rizza Abdeen Associate & Building
Mahavidyalaya Mawatha, Colombo 13, Sri Lanka.
Tel ; 0094 11 2333927, Fax : 0094 11 2333927
Email : info@harrowtraderrs.com
Mobile : 0094 777 666142
Website : www.harrowtraderrs.com

Royal College
Tamil Debaters Council

Debate Team - Past Captains

1976/1977	S. Ramachandra
1977/1978	R. Rajakariya
1978/1979	A.R. Hakeem
1979/1980	S. Janarthanan, S. Balamohan
1980/1981	C.V. Partheeban, S. Venkadesan
1981/1982	M. Varagunan, M.A. Sumathiran
1991/1992	M.R. Rushdhy Ameer
1993/1994	B. Chandaraprakash
1994/1995	S. Nilakshan
1995/1996	G.S. Sethukavalar
1996/1997	C.I. Azziyan
1997/1998	G.S. Sethukavalar
1998/1999	R. Sasitharan
1999/2000	R. Bramavinayagan
2000/2001	T. Yogendran
2001/2002	S. Gajendran
2002/2003	U.L.M. Resha
2003/2004	T. Jeyapragash
2004/2005	N. Neshanthanan
2005/2006	S. Sivaganesh
2006/2007	S. Sooriyaprathap
2007/2008	N.K. Ashokbharan
2008/2009	N.K. Ashokbaran
2009/2010	T. Kapilan
2010/2011	R.Arunothayan
2011/2012	J.Nijanthan

With Best Compliments

from

TAT

THAAI AUTO TRADERS

Importers & Dealers of all kind of Used Japanese Auto parts & New Scaffolding & Accessories

Address :
313, Main Road, Atthdiya, Dehiwala.
Telephone : 0112716760 Mobile : 0777 722164
Fax : 0112 719754 Email : thaaiauto@sltnet.lk

ROYAL COLLEGE TAMIL DEBATING TEAM 2011-2012

Seated (L to R) : Mr. K. Sri Ragavarajan (Teacher in charge), Mr. M.T.A. Rauf (Senior Games Master), Mr. M. Kanapathipillai (Deputy Principal), J. Nijanthan (Captain), Mr. H.A. Upali Gunasekara (Principal), S. Lavan (Vice Captain), Mr. S. Liyanagunawardana (Senior Games Master), T. Thananchayan

Standing (L to R) : J. Harshanth, K. Prabanchan, B. Ajan, S. Anushan, Y. Thirukumaran,

With Best Compliments

from

I'm Proud of My Home... Now!

"When you think that just a few months ago I used to cringe when people dropped in for a visit, this is nothing short of a miracle!

"There was a great big damp patch, right by the front door. It's not there any more. And it's all because Multilac introduced Multilac Water Proofing Sealer to the market.

"It was easy to use too. Just two coats of Multilac Water Proofing Sealer on the wall and the damp patch vanished, never to return again!

"Of course I did double check that I was getting the original – Multilac Water Proofing Sealer – and so should you. But that was all I had to do.

"I'm proud of my home now. You'd be too when you get rid of those unsightly water marks and damp walls. Like me, you'd be happy to welcome guests into your home.
Thank you, Multilac!"

Kanchana Warnakulasooriya
Housewife

macksonspaints

Multilac®
PREMIUM PAINTS

Hot Line : 0772 222555

வேத்தியரின் விவாதக் கண்ணோட்டம்

தன்னம்பிக்கை தளராத தோல்விகளால் துவளாத, தன் நிலைநின்று தாளாத 57 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட வீறு கொண்ட வேத்திய விவாத வேங்கைகளின் இப்பருவகாலத்துக்கான அணித்தலைமைப் பொறுப்பை 'சிம்மக்குரலோன்' ஜெ. நிஜந்தன் ஏற்ப இரண்டாம் விவாதியாக 'கருத்து விவாதி' பா.அஜன் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள மூன்றாம் இடத்தை 'அதிரடி விவாதி' த. தனஞ்செயனும் நான்காம் விவாதியாக 'கவர்ச்சி விவாதி' ச.லவனும் பொறுப்பேற்றுக் கொண்டனர். கன்னி விவாதிகளாக யோ. திருக்குமரன், சு. அனுஷன், ஜீ. ஹர்சாந்த் ஆகியோர் கைகோர்க்க வேத்தியரின் விவாதப் பயணம் இனிதே ஆரம்பித்தது.

தன் முதலாவது சுற்றுத் தொடராக கொ / இந்துக் கல்லூரியினால் அகில இலங்கை ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்ட விவாதத் தொடரில் பங்குபற்றியது இவ்வணி. முதல் சுற்றில் கொ / மத்திய கல்லூரியையும் இரண்டாம் சுற்றில் யாழ் / மத்திய கல்லூரியையும் வெற்றி கொண்டு காலிறுதிக்கு முன்னேறிய வேத்திய அணி காலிறுதியில் யாழ் / வேம்படி மகளிர் கல்லூரியையும் அரையிறுதியில் கொ / நல்லாயன் மகளிர் கல்லூரியையும் வெற்றி கொண்டு இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தது. கொ / புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியுடன் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் துரதிஷ்டவசமாக 5:4 விகிதத்தில் வேத்தியர் அணி தோல்வியைத் தழுவியது.

தொடர்ந்து இவ்வணி கடந்த வருடம் கொ / தமிழ் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாதத் தொடரின் கொ / புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி உடனான இறுதிப் போட்டியில் பங்கேற்றது. சமகால தமிழ் அரசியல் தொடர்பான தலைப்பில் சிறப்பானதொரு விவாதத்தை மேற்கொண்ட எமதணி இப்பருவகாலத்துக்கான தம் முதலாவது கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. அதே வேகத்துடன் கொ / இந்துக்கல்லூரி தமிழ் மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாதச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டு முதல் சுற்றில் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியையும் அரையிறுதியில் பு / ஆசீர்வாதப்பர் கல்லூரியையும் இறுதிப்போட்டியில் கொ / சைவ மங்கையர் கல்லூரியையும் வெற்றி கொண்டு தன் ஆதிக்கத்தை மீண்டுமொரு முறை நிரூபித்தது.

அதையடுத்து கொ / மகளிர் கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாதச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்ட வேத்திய அணி முதல் சுற்றில் போட்டியின்றி அரையிறுதிக்குத் தெரிவு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அரையிறுதியில் கொ / இந்துக் கல்லூரியிடம் விறுவிறுப்பான ஒரு விவாதத்தில் சிறிய புள்ளிகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. அதே தினத்தில் சட்ட பீடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பாராளுமன்ற ரீதியிலான விவாதச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய புதுமுகங்கள் உடனான எமதணி முதல் சுற்றில் மட் / புனித மைக்கேல் கல்லூரியையும் இரண்டாம் சுற்றில் களு / பாத்திமா முஸ்லீம் கல்லூரியையும் மூன்றாம் சுற்றில் கொ / நல்லயன் பெண்கள் கல்லூரியையும் வெற்றி கொண்டு காலிறுதிக்கு முன்னேறியது. அதைத் தொடர்ந்து காலிறுதியில் ஹட்டன் புனித பொஸ்கோ கல்லூரியையும் வெற்றிகொண்டு மூன்றாவது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்த எம்மணி கொ /

இந்துக் கல்லூரியுடன் சிறப்பானதொரு விவாதம் செய்த போது அதிர்ச்சிக்குரிய விதத்தில் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து 17வது முறையாக நடைபெற்ற வருாந்த றோயல் தோமிய விவாதப் போட்டியில் எமதணி பங்குபற்றியது. வழமையைப் போலவே இம்முறையும் சர்வதேச ரீதியில் சர்ச்சைக்குரிய தலைப்பான "நீதிமன்றங்களின் மீதான பாராளுமன்றத்தின் ஆதிக்கமானது நாட்டின் ஜனநாயகத்துக்கு பாதகமாக அமையாது" என்ற தலைப்பில் விவாதித்து யாரும் எதிர்பார விதத்தில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. இதன் மூலம் கடந்த 7 வருடங்களாக தம்வசம் இருந்த குலசேகரம் நினைவு கேடயத்தை இழக்கவும் நேர்ந்தது.

மேலும் அடுத்தாக சட்டக்கல்லூரி தமிழ் மன்றத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட விவாதப் போட்டியிலும் சிறப்பானதொரு விவாதத்தை மேற்கொண்டு இறுதிப் போட்டியில் இந்துக் கல்லூரியிடம் தோல்வி அடைந்தது. தொடர் தோல்விகளால் துவண்டு போகாத எமதணி கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட விவாதப் போட்டியில் பங்குபற்றி கோட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றதுடன் வலய மட்டத்துக்கு முன்னேறியது. பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் பங்குபற்றிய விவாதச் சுற்றுப் போட்டியில் சிறப்பாக திறமையை வெளிப்படுத்திய எமதணி அரையிறுதியில் கொ / புனித ஆசீர்வாதப்பர் கல்லூயினையும் சர்ச்சைக்குள்ளான இறுதிப்போட்டியில் கொ / இந்துக் கல்லூரியையும் செவ்வனே வெற்றி கொண்டு மாகாண ரீதியிலான தொடரில் கலந்து கொண்டது. மாகாண ரீதியாக நடைபெற்ற விவாதப் போட்டித் தொடரில் போட்டியின்றி அரையிறுதிக்குத் தெரிவான போதும் பரி / தோமாவின் கல்லூரியிடம் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

தடைகளைத் தாண்டி புதுமூச்சுடன் புறப்பட எமதணி கொழும்பு இந்து கல்லூரியின் விஞ்ஞான மன்றம் ஒழுங்கு செய்த விவாதப் போட்டியில் கொழும்பு இந்து மகளிர் கல்லூரியினை மிகவும் இலகுவாக வெற்றி கொண்டதன் மூலம் இறுதிச்சுற்றுக்கு தெரிவாகியது. இறுதிச்சுற்றில் கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியோடு விவாதித்து வெற்றிக்கேடயத்தை தன்வசப்படுத்தியது. அவ்வெற்றியினைத் தொடர்ந்து சட்டக்கல்லூரி ஒழுங்கு செய்த விவாதப் போட்டியில் கலந்து கொண்டது. முதல் சுற்றில் மெதடிஸ்ட கல்லூரியை இலகுவாக வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்கு முன்னேறிய எமதணி சைவ மங்கையர் கல்லூரி உடனான இறுதிப்போட்டியில் சிறப்பாக விவாதித்து தமக்கே உரிய பாணியில் தொடரை வெற்றி கொண்டது. மேலும் பு / ஆசீர்வாதப்பர் கல்லூரியால் நடாத்தப்பட்ட விவாத சுற்றுப் போட்டியில் கலந்து கொண்ட எமதணி முதல் சுற்றில் கொ / புனித சூசையப்பர் கல்லூரியையும் இரண்டாம் சுற்றில் விவேகானந்தா கல்லூரியையும் வெற்றி கொண்டு இறுதிப் போட்டியில் பரம வைரிகளான கொ / இந்துக் கல்லூரியுடன் இனிதே ஒரு விவாதம் செய்து வரலாற்றில் முதல் தடவையாக இத்தொடரின் கிண்ணத்தை வென்றெடுத்தது.

இப்பருவகாலத்தில் எமதணி தன் முழுத்திறமையையும் வெளிக்காட்டி மிகச் சிறப்பாக விவாதித்திருந்த போதும் சில புறக்காரணிகள் எமக்கு துரதிஷ்டவசமான அதிர்ச்சித் தோல்விகளையே அளித்திருந்தன. என்றுமே வெற்றி, தோல்வி பாகுபாடுகளைத் தாண்டி விவாதத்தின் தரத்தையே முதன்மையாகக் கருதும் வேத்திய அணி எதிர்வரும் காலத்திலும் தமிழ் விவாத உலகில் தம் தடத்தை பேணும்.

- செயலாளர்

இல்லங்களுக்கிடையிலான
விவாதத்திறன்காண் போட்டிகள்

1ம் இடம்
Harward House
1. Thirukumaran
2. Vinushithan
3. Shavieshkanth
4. Hari Dharshan
5. Sajishnaran

2ம் இடம்
Reed House
1. S. Apushan
2. T. Mayooran
3. M. Mayooran
4. V.F. Aqeel Ahamad
5. T. Kantharupan

3ம் இடம்
March House
1. S.F Faizal
2. N.K Abishekbharan
3. K. Thiriyan
4. M.N Abdul Malik
5. B. Gajiv

கீழ் பிரிவு சிறந்த விவாதி
S.Sajishnaran

மேற்பிரிவு சிறந்த விவாதி
S. Anushan

சுற்றுக்கான சிறந்த விவாதி
Y. Thirukumaran

With Best Compliments from

WINDSOR BOOK SHOP

No. 372, Galle Road, Colombo 06
Tel : 2589081

With Best Compliments from

Poobalasingham Book Depot

A Comprehensive Range of Books

Medical, Engineering, Electronics, School Text Book, Children Books, Computer Studies, Novels & Stationaries

309 A 2/3, Galle Road, Wellawatte,
Tel : 4515775, 2504266, Fax : 4515775

With Best Compliments from

Hessonite

Property Developers (Pvt) Limited

34, Rohini Road, Colommbo 06, Sri Lanka.
Tel /Fax : (+94) 112599864 Mob: (+94) 777780806
Email : hessonite.lk@gmail.com

With Best Compliments from

SRT

SRI RAMO TRADERS

Importers, General Merchants & Commission Agent

No. 214, Prince Street, Colombo -11
Tel : 2320380, 011-4380218

புலராக் காலை

கரும்பறவை சிறகடித்து
வானவெளியில பறக்க
சிறு கீற்றாய் சூரிய ஒளி
உலகம் எங்கும் பரவ
வெட்கம் கொண்ட மேகக்கூட்டம்
விலகியே ஓடிவிட
புலர்ந்தது காலை
புதுப்பொழிவு தர
இடைநெளிந்து உடல் வளைந்து
நிமிர்ந்து நிற்கும் மரங்கள்
உரிமையோடு உட்கார்ந்து
இசைபடிக்கும் குயில்கள்
அழகுடனே தலையசைத்து
மலர் தூவும் இலைகள்
அதிகாலை பொழுதுக்கு
அர்ச்சனை தூவும் குருக்கள்
ஊருக்கு குறுக்கே ஓடும்
கறுப்புதார ரோட்டு
உடல் முழுக்க ஈரமாகி
தலை குனியும் புல்லு
நீட்டி நிமிர்ந்து நிற்கும்
அணையாத மின்கம்பம்
புலர்கின்ற காலைக்கு
தீபமிடும் பூசாரி
ஆங்காங்கே அசையத் தொடங்கும்
மனித வலுக் கூட்டம்
அவர்களை ஏத்திச் செல்லும்
வாகனங்களின் சத்தம்
ஒருக்காலும் நின்றதில்லை
நிதானமாய் பார்த்ததில்லை
அழகாக புலர்கின்ற அதிகாலை பொழுதுதனை

- ஜெ. நிஜா

With Best Compliments

from

Ambiga

JEWELLERS (PTE) LTD.,

Off : 77, Sea Street, Colombo 11
Tel : 2422839, 2434954, Fax : 2433060

With Best Compliments

from

WESTERN JEWELLERY MART

Jewellery & Gem Merchants

88, Sea Street, Colombo 11, Sri Lanka.
Tel : 2433977, 2391271 Fax : 2335682

தமிழரின் ஆதிக்கம்

உலகில் வாழும் இனங்களை பொதுவாக இரண்டாகப் பிரிக்கலாம்.

1. மொழியைத் தழுவிய இனம்
2. மதத்தைத் தழுவிய இனம்

அந்த வகையில் தமிழர்களின் முதல் பிரிவைச் சேர்ந்தவர்களாவர். "தமிழ்" எனும் உன்னதமான மொழியை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததே தமிழ் இனமாகும்.

ஒரு வட்டத்தை வரைந்தால் அது எங்கிருந்து தொடங்கியது எனக் கூறமுடியாதோ அதே போன்றுதான் தமிழ் மொழியானது எப்போது தொடங்கியது என்பதை அறிய முடியாது. அத்தகைய பழம் பெரும் புகழை உடையது தமிழ் மொழி.

சங்கத்துக்கு முற்பட்ட காலம், சங்ககாலம், சங்கம் மருவிய காலம் என தமிழர்களது பூர்விகத்தை பொதுவாக விவரித்தாலும் இது தான் தமிழர்களின் ஆரம்பம் என யாராலும் உறுதியாக கூறமுடியாது. எனவே தமிழரது ஆரம்ப காலத்தையும், பூர்விகத்தையும் ஆராய்வது கல்லில் நாருரிப்பது போன்றாகும். ஆனால் தொன்று தொட்டே தமிழர்கள் இவ்வுலகை ஆட்டிப் படைத்திருக்கிறார்கள். அவர்களது ஆதிக்கம் எந்த வகையில் இருந்தது என்பதையே இக்கட்டுரை விளக்குகிறது. ஆகவே தமிழர்களது ஆதிக்கத்தின் உச்சி என தற்கால வரலாற்று வல்லுனர்களால் கணிக்கப்படும். கி.பி. 2ம் நூற்றாண்டு - கி.பி. 16ம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தையே இக்கட்டுரை ஆராய்கிறது.

பல்லவர்கள் (கி.பி. 3ம் நூற்றாண்டு - கி.பி. 9ம் நூற்றாண்டு)

தமிழர்களது சிற்பக்கலைகள் உள்ளிட்ட பல்வேறு கலைகளை தமிழ் நாட்டிலிருந்து முதலில் விஸ்தரித்த பெருமை பல்லவர்களையே சாரும். குறிப்பாக சிற்பக்கலைதான் பல்லவர்களால் பெரிதும் வளர்க்கப்பட்டது. இதற்கு இன்றும் தமிழ்நாட்டிலுள்ள மாமல்லபுரம் சான்று பகர்கின்றது. இது பல்லவர்களின் காலத்தில் நரசிம்ம மாமல்லச் சக்கரவர்த்தியின் பெயரில் உருவாக்கப்பட்டதாகும். மாமல்ல புரத்தில் திரும்பும் இடமெல்லாம் பல்லவச் சிற்பங்கள் காணக் கிடைக்கின்றன. பல்லவ கால "சிங்கத்தின்" சிற்பமானது உலகப் புகழ் வாய்ந்ததாகும். இலங்கையில் புவனேகபாகுவின் காலத்தின் தலைநகரான யாப்பஹுவ நகரில் அமைக்கப்பட்டுள்ள சிங்கமும் பல்லவர் கால சிங்கமும் கிட்டத்தட்ட முற்றிலும் ஒத்ததாக காணப்படுகிறது. அது மட்டுமல்லாது 7வது நூற்றாண்டு காலத்தில் அமைக்கப்பட்ட கண்டி நாலந்த கெடிகே தூபமும் பல்லவ சிற்பக் கலையிலேயே அமைக்கப்பட்டுள்ளதாக நீலகண்ட சாஸ்திரிகளின் 'A History of South India' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் சிங்கக் கொடியும் பல்லவரின் கலையைப் பின்பற்றியே ஏற்பட்டிருக்கும் என அந்நூல் கூறுகிறது.

இவையெல்லாவற்றையும் விட தற்போதைய உலகின் மிகப்பெரிய வழிபாட்டுத் தலம் எனப்படுகின்ற கம்போடிய நாட்டு 'அங்கோர்வாட்' தலமும் பல்லவ சிற்பக் கலையைத் தழுவியதாக இருப்பதை காண முடிகின்றது. இதைக் கட்டுவித்த மன்னன் எந்த அரச

பரம்பரையைச் சார்ந்தவன் என கூறமுடியாவிட்டாலும் அவனின் பெயர் "சூரிய வர்மன்" என வரலாற்றாசிரியர்களாலும் அந்நாட்டு மக்களாலும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் பல்லவ குல சக்கரவர்த்திகள் யாவரும் தங்கள் பெயர்களுக்குப் பின்னர் "வர்மன்" என்ற பெயரை சேர்த்துக் கொண்டிருந்தனர்.

உதாரணமாக மகேந்திரவர்மர், நரசிம்மவர்மர், நந்திவர்மர், தந்திவர்மன் போன்றோரைக் கூறலாம். சூரிய வர்மனும் இவர்களில் ஒருவனாக இருந்திருக்கலாம்.அது மாத்திரமின்றி பல்லவ ஆட்சியில் இருந்த இரு பெரும் மதங்கள் இந்து மற்றும் பௌத்தம் என்பனவாகும். அங்கோர்வாட்டின் உள்ளும் இந்து விக்கிரகங்களும் பௌத்த விக்கிரகங்கள் மற்றும் வழிபாடுகள் இருந்திருக்கின்றன என்பது உறுதியாகியுள்ளது.

ஆகவே மன்னனின் பெயர், சிற்பக்கலை, அதில் நிலவியிருந்த மதம் இவையெல்லாவற்றையும் வைத்து பார்க்கும் போது அங்கோர்வாட் என்ற அற்புத கட்டிடமானது நிச்சயம் பல்லவர் படைப்பாகவே இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரத் தோன்றுகின்றது.

போர்க் கலையிலும் பல்லவர் இணையற்று விளங்கியதற்கு சான்றாக "வாதாபிப்போர்" ஐக் குறிப்பிடலாம். இந்தியாவில் நடைபெற்ற மிகப்பாரிய யுத்தங்களில் ஒன்றாக இது கருதப்படுகின்றது. நரசிம்ம வர்மரால் நடாத்தப்பட்ட இப்பாரிய போரில் வெற்றியீட்டிய பின் தற்போதைய ஆந்திரா உள்ளிட்ட 3/4 பங்கு தென்னிந்தியா தமிழர் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது. இதை உறுதிப்படுத்து முகமாக ஹைதராபாத் நகருக்கு அருகாமையில் கிடைத்த கல் ஒன்றில் "வாதாபி கொண்ட நரசிங்கப் போர்த்தரசர்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நம்மில் அனேகமானோருக்கும், இந்தியாவில் இருந்துதான் தற்பாதுகாப்புக் கலையானது (Martial Arts) உலகிற்கு பரவியது என்பது தெரியும். ஆனால் எத்தனை பேருக்கு, தற்காப்புக் கலையில் தற்போது சிறப்பாக இருக்கும் சீனதேசத்துக்கே உரிய Shaolin என்ற தற்காப்புக் கலை "ஒரு தமிழனால்" எடுத்துச் செல்லப்பட்டது தெரிந்திருந்தது?. பல்லவகுல இளவலான "போதிதர்மன்" என்பவரால் சீனாவில் Shaolin தற்காப்புக்கலை மற்றும் சென் பௌத்தம் (Zen Buddhism) என்பவை தோற்றுவிக்கப் பட்டன. இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் போதிதர்மன் என்ற தமிழனை சீனர்கள் தெய்வமாக போற்றும் போது பெரும்பாலான தமிழர்கள் போதிதர்மனைப் பற்றி அறிந்தும் கூட இருக்காததுதான்.

அண்மையில் வெளிவந்த 7ம் அறிவு என்ற திரைப்படம் இந்தப் பல்லவ இளவலைப் பற்றி வரலாற்றில் மறைக்கப்பட்ட பல உண்மைகளைத் தழுவியே திரைப்படமாக்கப் பட்டது. இது போன்ற தமிழ உணர்வை ஏற்படுத்தத் தக்க திரைப்படங்கள் வரவேற்கத் தக்கன.

பல்லவர் காலத்திலேயே, தமிழரது வர்த்தக ஆதிக்கமானது ரோம சாம்ராஜ்யம் வரை பரவிக் கிடந்ததை அன்றைய பல்லவ தமிழரது தலைநகரான காஞ்சிபுரத்தில் கிடைக்கப் பெற்ற ரோம நாணயங்கள் தெளிவு படுத்துகின்றன. கலைகளில் ஒப்பற்றவர் பல்லவர்களென சீன நாட்டின் தேச சஞ்சாரி ஹியூங்சாங் என்பவரால் கூறப்பட்டுள்ளது. இதைப்பற்றி "The

Pallava Script" என்ற நூலும் தெளிவு படுத்துகிறது.

சேரர்கள்

தமிழரின் மூவேந்தரில் ஒரு மன்னர் பரம்பரை தான் சேரர் ஆவார். தற்போதைய கேரளப் பிரதேசத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தை தலைநகராகக் கொண்டு இவர்களது ஆட்சி மையம் விளங்கியது.

தற்போது மலையாளம் தனி மொழியாக கருதப்பட்டாலும் தமிழில் இருந்து பிரிந்த ஒரு மொழிதான் இது என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். தமிழர்களின் வரலாறை தமிழரே பேணாது போனது தான் தமிழர் செய்த பெரிய தவறு. அதன் விளைவுதான் இன்று கேரள மக்கள் தாமும் தமிழர் என்ற உணர்வின்றி வேறு ஒரு இனமாக அவர்களைக் கருதிக் கொண்டு வாழ்கின்றனர்.

கூலிப்படைகளை வழங்குவதில் சேரர்களுக்கு நிகர் சேரர்களே தான். மிகப் பலம் பொருந்திய கூலிப்படைகளை வைத்திருந்த சேரர், அவற்றை வெளிநாடுகளிடம் கூலிக்கு விற்று பாரிய அளவு செல்வத்தை ஈட்டிக் கொண்டனர் என Malayalam Literature (by Chitanya Krishna) என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கள மன்னர்களுக்கும் சோழர்களுக்கும் அடிக்கடி நிகழ்ந்த யுத்தங்களின் போது சிங்களப் படைகளுடன் அனேக சேரப் படைகள் சேர்க்கப்பட்டதாக மகாவம்சம் கூறுகிறது. வட இந்தியாவிலுள்ள பல இராச்சியங்களும் சேரக் கூலிப்படைகளை தமது போர்களுக்காக பயன்படுத்திக் கொண்டனர் என நீலகண்ட சாஸ்திரிகளின் A History of South India நூல் குறிப்பிடுகின்றது. இதிலிருந்து மிகப்பலம் பொருந்திய போர்த்திறனுடைய சேரப்படைகள் பல நாடுகளில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது கண்கூடாகிறது.

தமது கூலிப்படைகளால் அதிக செல்வம் கிடைத்ததால், தமது இராட்சியத்தை விஸ்தரிப்பதிலோ வர்த்தகத்தில் ஈடுபடவோ சேரர் அதிக ஆர்வத்தை காட்டவில்லை. இதுவே இவர்களது சிறிய பரப்புடைய ஆட்சிக்கு வித்திட்டது. இதன் விளைவு இறுதியில் சோழர் வசமாக நேரிட்டது. ஆனால் இவர்களின் ஆட்சிக் காலத்தில் செல்வம் நிறைந்து பல்வேறு துறைகளில் தன்னிறைவு காணப்பட்டது.

சோழர்கள் (கி.பி 9ம் நூற்றாண்டு - கி.பி. 13ம் நூற்றாண்டு)

ஆதி தொட்டே சோழ அரசு தமிழகத்தில் நிலவி இருந்தாலும் 9ம் நூற்றாண்டு - 13ம் நூற்றாண்டு வரையிலான கால கட்டமே சோழ சாம்ராஜ்யத்தின் உச்சம் என வரலாற்றாசிரியர்களால் கூறப்படுகிறது. தமிழர் ஆதிக்கத்தைப் பற்றி கூறப்போனால் அது சோழர்களைப் பற்றி கூறாமல் கூறமுடியாது எனலாம்.

இராஜராஜ சோழன் காலத்திலும் ராஜேந்திரசோழன் காலத்திலும் தென்னாசியா முழுக்க தமிழர் ஆதிக்கம் பரந்து விரிந்து காணப்பட்டது. கி.பி. 9ம் நூற்றாண்டளவில் பல்லவர்களை வெற்றி கொண்ட சோழர்கள், தமது இராச்சியத்தைப் பிரமாண்டமாக விஸ்தரித்தனர். பல்லவ

காலத்துக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சோழர்கள் இந்தியாவின் வட எல்லையான இமயமலை வரையிலும் ஆதிக்கம் செலுத்தியதாகப் பல செய்யுள் பாடல்கள் குறிப்பிட்டாலும், அவற்றுக்கான போதிய வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை.

பின்னர் முதலாம் இராஜேந்திரன் காலத்தில், கங்கை நதி பிரவாகிக்கும் இடம் வரையில் இராச்சியம் விரிவடைந்தது. இதன் ஞாபகமாக தமிழ் நாட்டில் "கங்கை கொண்ட சோழபுரம்" என்ற கிராமம் உருவாக்கப்பட்டது. இதை இன்றும் காணலாம் எனக் கூறப்படுகிறது. இதேவேளையில் தான் ஈழநாட்டின் தலைநகரான அநுராதபுரம் தமிழர் ஆதிக்கத்துக்குட்பட்டது. அதன் பின்னர் "றுகுனு தேசம்" என அழைக்கப்படும் இலங்கையின் தென்பகுதியில் சிங்கள ஆட்சி நிலவியது என இலங்கை வரலாற்றை கூறும் மகாவம்சம் நூல் குறிப்பிட்டாலும், Archelogical Survey of India மற்றும் Ancient Explorers (by M.Cory) போன்ற பல்வேறு வெளிநாட்டு நூல்கள் ஈழம் முற்றுமுழுதாக தமிழர் கட்டுப்பாட்டில் இருந்ததாகவே கூறுகின்றன.

வடநாட்டில் "கங்கை", தமிழகத்தில் "உறையூர்", தெற்கில் இலங்கையில் "பொலனறுவை" என்ற ஆட்சிமையங்களை உள்ளடக்கி "மும்முடிச்சோழ மண்டலம்" என்ற பெயரில் தென்னாசியா ஆளப்பட்டது. இவற்றை மையமாகக் கொண்டுதான்

வங்களாதேசம்
பர்மா (தற்போதைய மியன்மார்)
தாய்லாந்து
மலேசியா
கம்போடியா
இந்தோனேசியா
வியட்நாம்
சிங்கப்பூர்
மாலைதீவுகள்
அந்தமான், நிக்கோபார், வச்சத் தீவுகள்

போன்ற நாடுகள் முற்றாகச் சோழத் தமிழர் ஆதிக்கத்துக்கு உட்பட்டது.

ஐரோப்பாவில் மறுமலர்ச்சி நிகழமுன், ஆங்கிலேயரும், பிரான்சியரும் கப்பல் என்றால் என்ன என்று அறியுமுன்பே, சோழர் ஒரு சிறந்த பாரிய கடற்படையே அமைத்து மேற்கூறிய அத்தனை நாடுகளையும் தம் வசமாக்கினர். மேற்குலக நாடுகளை விட பன்மடங்கு உன்னத நிலையை தமிழர் அக்காலத்தில் எட்டியிருந்தனர். "கடாரம்" என்று அழைக்கப்பட்ட தற்போதைய மலேசியாவை வசப்படுத்த ஏற்பட்ட போர்(War of Keddah) மிகப் பிரபல்யம் வாய்ந்தது. பல வலைத்தளங்களில் இதைப்பற்றி ஆழமாக அறிய முடிகின்றது.

சோழர்களின் கடற்படை பின்வரும் ஒழுங்கில் அமைந்திருந்தது.

1. பிரிவு
2. அணி

3. கனம்
4. மண்டலம்
5. தாளம்
6. ஜல தாளம்
7. கண்ணி

இவை மாத்திரமின்றி மிகப் பயங்கர அளவிலான புகழ் வாய்ந்த பெரும் போர் மரக்கலங்கள் இருந்ததாக The history of Ship building in the subcontinent (by prof. Majumdar) என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தரணி"
"லூசா"
"திரிசடை"

என்பவை அவற்றுட் சிலவாம். குறிப்பாக இந்த மூன்று போர்க் கப்பல்களுக்கும் அண்டை நாடுகள் பயந்து ஒடுங்கி இருந்தன என்றும் அந்நூலில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

"அகர மந்தம்", "நீல மந்தம்" எனும் சொகுசு மரக்கலங்களையும், கரைப் பாதுகாப்பிற்கு "கரைப் பிரிவு" (Costal deffence) என்ற மரக்கலங்களையும் சோழர் உபயோகித்துள்ளனர். இவையெல்லாவற்றையும் விட, எதிரி நாட்டு வர்த்தகக் கப்பல்களை சூறையாட "கள்ள ராணி" என்ற பெயரில் ஒரு கொள்ளைக் கப்பல் கூட்டத்தையும் பயன்படுத்தினர் என மேலும் அந்நூல் விபரிக்கின்றது. கிட்டத்தட்ட சோழப் போரரசானது பிற்காலப் பிரித்தானியாவைப் போல் செயற்பட்டது என்று சொன்னால் அது பிரித்தானியாவை மிகைப்படுத்திக் கூறுவது போலாகும்.

தெற்காசியா, தென்கிழக்காசியா தவிர்ந்து மேற்குப் பகுதிகளிலும் தமிழர் நிச்சயமாக ஆதிக்கம் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவற்றுக்கான போதிய சான்றுகள் உலகத்தின் கைவசமில்லை. ஆபிரிக்க காடுகளில் பல கறுப்பின மக்களது நடனமானது தமிழகத்தின் சிவநடனத்தை ஒத்ததாகக் காணப்படுகிறது. சோழர் காலத்தில் கலை, உணவு, செல்வம், படைபலம் என சகல ரீதியிலும் தமிழர் தன்னிறைவு கண்டனர்.

1ம் இராஜராஜசோழன் காலத்தில், முழுக்க முழுக்க கல்லால் எழுப்பப்பட்ட தஞ்சை பெரிய கோயில் இன்னும் சோழர் சிற்பச் சாஸ்திரக் கலைகளை எழுத்தியம்புகிறது. "குத்து வரிசை", "வர்மக்கலை", "சிலம்பாட்டம்", "மான் கொம்புக் கலை", "வாள் வீச்சு" போன்ற கலைகள் சிறந்த வளர்ச்சியடைந்திருந்ததாகவும் நாட்டின் பல்வேறு இடங்களில் அவை மக்களுக்குப் புகட்டப்பட்டதாகவும் Browers.F, எழுதிய A Survey of Asian dance and drama எனும் நூல் கூறுகிறது.

சோழர் காலத்தில் வர்த்தகத்திலும் தமிழர் சிறந்து விளங்கியுள்ளனர். மிகுந்த கடற்படை பலமுள்ள தென்னிந்திய அரசு ஒன்றுடன் சீனா வர்த்தகம் செய்தது என சீனப் புத்தகமான "Sona dynasty" இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சீனாவும் அவ்வரசும் சேர்ந்து கடலை ஆட்டிப் படைத்ததாகவும் அது கூறுகிறது. அது சோழ அரசு தான் என்பதை உறுதிப்படுத்து

முகமாக "ஷங்காய்" நகருக்கு அருகாமையில் சோழ நாணயங்கள் கிடைத்திருக்கின்றன. இன்றும் கூட கொழும்பு நூதன சாலையில் வர்த்தகம் சம்பந்தமான ஒரு பழைய புத்தகம் பேணப்படுகிறது. அது மூன்று மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. அவை சீனமொழி, அராபிய மொழி, மற்றும் நம் செந்தமிழ் மொழியில் ஆகும். இவை அனைத்தும் சோழரது வர்த்தக சாம்ராஜ்யத்தை தெளிவு படுத்துகின்றன.

மேலும் "Sona dynasty" புத்தகத்தில் "சூளிய" இனத்து "Ti-hua kia-lo" என்ற தூதுவன் சீனாவிற்கு அடிக்கடி விஜயம் செய்ததாகக் கூறுகிறது. சூளிய என்பது சோழ என்றும் Ti-hua kia-lo என்பது தேவ குலோ என்றும் இருக்க வேண்டுமென்பது வரலாற்றாசிரியர்களது கருத்தாகும்.

சோழர் காலத்தைத் தழுவிய பல கதைகளும் வெளிவந்துள்ளன. அமரர் கல்கியின் "பொன்னியின் செல்வன்", "பார்த்திபன் கனவு", சாண்டியல்யனின் "கடல்புறா", "யவன ராணி" போன்ற பல கதைகளில் சோழர் காலத்தைப் பற்றி அறிய உதவும் பல ஆதார நூல்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தாண்டி இங்கு மனதுக்கு வேதனையளிக்கக் கூடிய விடயம் யாதெனில், இத்தனை அருமைப் பெருமைகளையுடைய தமிழ்ப் போரரசைப் பற்றி, தமிழர் செறிந்து வாழும், இலங்கை, இந்திய நாடுகளின் அரசுகள் கூட மக்களுக்கு புகட்டாததுதான். சோழர் மலேசியாவைப் பிடித்ததை மலேசியர் சொல்லி தமிழர் அறிய வேண்டியிருக்கின்றது.

தமிழனின் அழிவு தமிழனால் தான் என்று ஒரு பரவலான கருத்து மக்களிடையே காணப்படுகிறது. அதற்கேற்றாற்போல் தென்னாசியா முழுவதிலுமாக தமது ஆதிக்கத்தை செலுத்தி நிலைத்திருந்த சோழப் பேரரசைப் பாண்டிய அரசு 13ம் நூற்றாண்டளவில் முறியடித்தது.

பாண்டியர்கள் (13ம் நூற்றாண்டு - 16ம் நூற்றாண்டு)

சோழ அரசைப் போன்றே வலுவான அடித்தளத்தை பாண்டிய அரசும் கொண்டிருந்தது. சோழப் பேரரசைப் போன்று தென்னாசியா முழுவதும் ஆட்டிப் படைக்கா விட்டாலும், வட இந்திய அரசுகள் மற்றும் இலங்கை மீதும் மிகப்பெரிய அளவிலான செல்வாக்கை கொண்டிருந்தது. சோழர்களின் பரம வைரிகளான இலங்கை மன்னர்கள், மிகுந்த பலமிக்க சோழ அரசை முறியடிக்கக் கையாண்ட தந்திரங்களில் பாண்டிய அரசின் நட்பைப் பெற்றதே முக்கியமானது ஆகும். பாண்டிய அரசின் நட்பைப் பெற்றதனூடு, சோழரின் ஆக்கிரமிப்புக்களை அடியோடு நிறுத்த முடியாவிட்டாலும் ஓரளவுக்குக் குறைத்துக் கொண்டனர்.

எவ்வாறிருப்பினும் 9ம் நூற்றாண்டுக்குப் பின் எழுச்சி கண்ட தன்னிகரில்லா சோழப் பேரரசு, இலங்கை மற்றும் பாண்டிய அரசு இரண்டையுமே ஆதிக்கத்துக்கு உட்படுத்திக் கொண்டது. இதன் பின்னர் சோழரோடு ஒப்பந்தங்களை ஏற்படுத்திய பாண்டியர் சோழப்பேரரசின் கீழ் சிற்றரசாக செயற்பட்டு வந்தன. சோழரின் சரிவை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட பாண்டியர்கள் தமது வலுவான அடித்தளத்தை ஆதாரமாகக் கொண்டு வளர்ச்சியடையத் தொடங்கினர். இறுதியில் தென்னாசியாவின் சிம்மசொப்பனமாக விளங்கிய சோழரை வெற்றி

கொண்டனர். அத்துடன் நிறுத்தாமல், சாளுக்கிய மன்னர்களையும் வெற்றி கண்டு இந்தியாவின் ஒரிசா வரையிலும் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர்.

மேலும் எல்லாப் பாண்டிய மன்னர்களும் சிங்கள மன்னர்களை ஆதரிக்கவில்லை. பாண்டிய படையெடுப்புகளும் ஈழநாட்டில் அதிகம் ஏற்பட்டிருக்கின்றன. பாண்டியரிடமிருந்து தம்மைப் பாதுகாக்க சோழரின் பாதுகாப்பை நாடிய தருணங்களையும்,இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சம் நினைவு கூறுகிறது. பாண்டியரின் ஆதிக்கம் இலங்கை முழுவதும் பரவிக் கிடந்தமைக்கு இலங்கையின் தென்கிழக்கு பகுதியில் பாண்டிய கட்டடக் கலையில் அமைக்கப்பட்டுள்ள கோயிலின் சிதைவுகளும், மத்திய மாகாணத்திலும் அமைந்துள்ள கோயில் சிதைவுகளும் சான்று பகர்கின்றன. இருப்பினும் மகாவம்சமானது பொலனறுவையை அண்டிய வடபகுதிகளில் மாத்திரம் பாண்டியர் ஆண்டதாகக் கூறுகிறது. இது உண்மை என்ற பட்சத்தில் 500, 600 வருடங்கள் பழமை வாய்ந்த இக்கட்டடச் சிதைவுகள் எவ்வாறு ஏற்பட்டன என்பது எவருக்கும் விடை காண முடியாத வினாவாகும்.

இலங்கையில் பாண்டிய அரசினது ஆதிக்கம் அளப்பெரியது என்பது, மகாவம்சம், அறிந்தோ அறியாமலோ தெளிவாக விளக்கியுள்ளது. அதாவது, இலங்கையின் மன்னர் வம்சமானது "விஜயன்" மற்றும் அவனது 700 தோழரின் வருகையுடன் ஆரம்பிக்கின்றது. மேலும் அவ்வனைவரும் மணமுடிக்கப் பாண்டிய நாட்டுத் தலைநகர் மதுரையிலிருந்து இளவரசிகளை வரவழைத்ததாகவும் கூறுகிறது. வரலாற்றுக்கும், உலகுக்கும் தெரிந்த வகையில், மதுரையில் தமிழரைத் தவிர வேறு யாரும் இருந்திருக்கவில்லை.

உயிரியல் விஞ்ஞானமானது எதைக் கூறுகிறது என்றால், ஒரு குழந்தையின் பிறப்பில் அதன் தாயின் அம்சங்களே 80% க்கு மேற்பட்டு காணப்படுகிறதாம். ஆக இலங்கை அரச வம்சம் ஆரம்பமாக ஆதாரமாக இருந்தவர்களே தமிழர்கள் தான் என்பதை மகாவம்சம் மிக அழகாக விளக்குகிறது. இலங்கை மன்னர்கள் செய்ததாகக் கூறிக் கொள்ளப்படும் வீரசாகசங்களுக்கும் சிறந்த நிர்வாகத்துக்கும், அவர்களினுள்ளே கலந்து காணப்பட்ட வீரத் தமிழ்க்குருதியும் ஒரு காரணமாக அமைகிறது எனலாம்.

தமிழ் இளவரசிகள் வழிபடுவதற்காகவே தான் ஒவ்வொரு விகாரைக்கு அருகிலும் இந்து தேவாலயம் அமைக்கப்பட்டிருந்தது. இன்றும் நாம் "தம்புள்ளை" போன்ற புராதன காலத்து விகாரைகளுக்கு சென்றோமானால் அதன் அருகிலேயே இந்து தேவாலயங்களை காணக் கூடியதாக இருக்கும்.

சிங்களத்து மன்னன் மகாவிஜயபாகுவின் காலத்தில் பாண்டிய உறவுகளுக்கு அவன் அளித்த முக்கியத்துவமும் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. சோழர்கள் எவ்வாறு சீனாவிடமும் அராபியாவுடனும் சேர்ந்து தென்னாசிய வர்க்கத்தைப் பிடித்து ஆட்டிப் படைத்தனரோ அதைப் போன்றே பாண்டியர் ரோமாபுரி மற்றும் கிறீஸ் போன்ற நாடுகளிடம் மிகுந்த பலமான வர்த்தகத்தைக் கொண்டிருந்தனர். இதைப்பற்றி "Husaini, history of the pandya history" நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேச சஞ்சாரியான "மார்க்கோ போலோ" உலகிலேயே அதிகம் செல்வம் கொழிக்கும் இராச்சியம் என பாண்டிய அரசைக் குறிப்பிட்டுள்ளனர். (The richest empire in existance எனக் கூறப்பட்டுள்ளது).

ஆக ஒட்டு மொத்தத்தில் தமிழர்களது ஆதிக்கமானது தென்னாசியா முழுவதும் ஆட்டிப்படைத்திருப்பது தெள்ளெனத் தெரிகிறது. தென்னாசியா மட்டுமன்றி அரைவாசி உலகம் வரை வியாபித்திருக்கின்றது. ஆனால் அவற்றுக்கான போதிய வரலாற்று மூலாதாரங்கள் இல்லை. தமிழர் செய்த பெரும் பிழையும் இதுதான். தங்களுக்கென தனி வரலாற்றொன்றை பேணாதது தான். நாம் யார்? நமது தனித்துவம் என்ன? என்பவற்றை வரலாற்றின் மூலம் உலகுக்கு தெரியப்படுத்தியிருந்தால் இன்று தமிழர் வாழ்வே வேறு விதமாக இருந்திருக்கும். இன்று உலகளாவிய ரீதியில் பெரும்பாலான தமிழர் தமது தனித்துவத்தையும் வரலாற்றையும் அறியாத நிலையில் உள்ளனர். இந்த நிலைமை நீடிக்கக் கூடாது என்பது தான் ஒவ்வொரு தமிழ் உணர்வுள்ள தமிழனதும் நோக்கமாகும்.

ஆனாலும் தமிழர் இன்றும் தமது செல்வாக்கை உலகில் நிலை நிறுத்திக் கொண்டு தான் இருக்கின்றனர். "சி.வி.ராமன்", "சந்திரசேகரன்" போன்ற நோபல் பரிசு வெற்றியாளர்களும், "சிங்கப்பூர்", "மொரீஷியஸ்" போன்ற நாடுகளின் அரசியலில் தமிழர் ஈடுபாடும் தமிழர்களுக்கு இயற்கையிலேயே இரத்தத்தில் ஊறியுள்ள உத்வேகம் குறையவில்லை என்பதனைக் காட்டுகிறது.

தம்மை நிர்வகிக்க தனி அரசாங்கமோ, பாதுகாக்க தனி இராணுவமோ, வசிப்பதற்கென தனி நாடோ இல்லாத பட்சத்திலும், இன்று உலகில் மிகப் பரவலாக பேசப்படும், மதிக்கப்படும் ஒரு இனமாக தமிழர்கள் கருதப்படுகின்றனர் என்றால் அது அன்றிலிருந்து இன்றுவரை தமிழரின் வீரியம் குறையவில்லை என்பதையே காட்டுகிறது. இருப்பினும் அன்றிருந்த தமிழர் நிலையைக் காட்டிலும் தற்போதைய நிலை சற்றுச் சரிந்தே காணப்படுகின்றது. இந்நிலை நீடிக்கக் கூடாது என்பது தான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கட்டுரையானது, வெகு சில நாட்களாகவே ஆராயப்பட்டு ஒரு சில தினங்களில் எழுதப்பட்டதாகும். தமிழரது அருமை பெருமைகளை இச்சிறு கட்டுரையால் விளக்க முயல்வது ஒரு சிறு மணல் துணிக்கையில் இந்தப் பிரபஞ்சத்தையே நுழைக்க முயல்வது போன்றதாகும். இதை வாசிக்கும் யாரேனும் ஒருவராவது, தமிழரது வரலற்றை இணையத்திலும் இக்கட்டுரையிலுள்ள ஆதாரங்கள் மற்றும் வேறு ஆதாரங்களிலுமிருந்து தேடிப் படிப்பராயின், படித்து தமது தனித்துவத்தை உணர்ந்து செயற்படுவாராயின், அதுவே இக்கட்டுரையின் மாபெரும் வெற்றியாகும்.

அந்த வெற்றி இக்கட்டுரைக்கு கிடைக்கும் என நம்புகிறேன்.

- சு. அனுசன் 12 MSE
பௌதீக விஞ்ஞானப் பிரிவு

"Work is Worship

Love is God"

✦
✦
✦
✦
✦
✦
✦
✦
✦
✦

Ashwin Ganesh Balaratnarajah
7C

தேடிச் சோறு நிதந்தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி -மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப் பருவமெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போல் - இவனும்
வீழ்வான் என நினைத்தாயோ?

-மகாகவி சுப்பிரமணிய பாரதியார்-

எம் வீரன் பாரதி எம்மைவிட்டுப் பிரிந்து 90 வருடங்கள் கடந்துள்ளன.

ஆனால் அவன் ஊட்டிய வீரமும் கவியும் இன்னும் எம்மிடத்தே அழியவில்லை. (என்றும்)

Harshanth Thirukumaran Anushan

12MSE 12MT 12MSE

பாரதி காலப் பெண்ணியம்

முனைவர் மு. பழனியப்பன்

இந்திய விடுதலை என்னும் காலக்கட்டம் ஒரு குறிப்பிடத்தகுந்த காலக்கட்டம் ஆகும். ஏறக்குறைய மன்னூறு ஆண்டுகள் அந்நியர் ஆட்சி நடைபெற்று வந்த நிலையில் அதனை முற்றிலும் மறுத்து இந்தியர்களே இந்தியர்களை ஆளும் சூழலில் இந்தக் காலகட்டம் குறிப்பிடத் தகுந்ததாகின்றது. புதிய இந்தியாவின் விடியல் என்பதாக இந்த விடுதலை அமைந்தது.

புதிய இந்தியாவை நிர்மாணிப்பதில் பலர் பங்கு கொண்டனர். குறிப்பாக இதழாசிரியர்கள், அரசியல் தலைவர்கள், இலக்கியவாதிகள் என்ற பல தரப்பினர் விடுதலையை எண்ணித் தம் செயல்களை ஆற்றினர். புதிய இந்தியாவை அவரவர்கள் அவரவர்கள் கோணத்தில் வடிவமைக்க முயன்றனர்.

பாரதியின் வாழ்நாள் காலம் என்பது விடுதலைக்கு முந்தைய நிலையிலேயே முடிவு பெற்று விடுகிறது. பாரதி இக்காலகட்டத்தில் இதழ் ஆசிரியரராக, சமுதாய கவிஞராக, அரசியல்வாதியாக விளங்கினார். வரப்போகிய விடுதலைக்கு முன்னறிவிப்புகளை பாரதியார் தம் எழுத்துகளின் மூலம் வெளியிட்டார். வரப்போகிற வலிமையான இந்தியாவை வரவேற்றார். சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே சுதந்திரப் பள்ளுவைப் பாடினார். பாரதி நோக்கில் ஒரு ஒப்பில்லாத சமுதாயமாக விடுதலை பெற்று இந்திய சமுதாயம் விளங்கியது. எல்லோரும் அமரநிலை எய்தும் நன்முறையை இந்தியா உலகிற்கு அளிக்கும் என்ற உன்னதத் தன்மையைப் பாரதியார் தன் விடுதலைக் களவாகக் கண்டார்.

அவரது கவிதைகளில் உணர்ச்சிகள் மேலோங்கி இருந்தன. இதழ்ப்பணிகளில் உண்மைகளை மக்களுக்குச் சொல்லும் ஆர்வம் இருந்தது. அரசியலில் அவர் தீவிரவாதிகள் பக்கம் இருந்தார்.

1882 முதல் 1921 வரை ஆண்டு பாரதியின் காலம் நிகழ்ந்துள்ளது. இக்காலகட்டத்தில் தமிழகத்தில் பெண்கள் முன்னேற்றம் முகிழ்க்கத் தொடங்கியது. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் விந்தை மனிதர் தலைகவிழத் தொடங்கினர். அடிமை நிலையில் இருந்த பெண்கள் வெளிவரத் தொடங்கினர். "இந்து ஸ்திரீ ஏறக்குறைய அடிமை நிலையில் இருக்கிறாள். நம்முடைய வீடுகளில் அறைக்குள் அடைத்து வைப்பது கிடையாது. அறைக்குள்ளே தான் இருந்தால் என்ன? குடி கெட்டுப் போச்சுது அடிமையைத் தண்ணீர் கொண்டுவரத் தெருவில் விட்டால்தான் என்ன? அதுவும் கூடாதென்று கதவைப் பூட்டிக் கைதியாக வைத்திருந்தால் தான் என்ன? .... நம்முடைய ஸ்திரீகள் அடிமைகள். அதில் சந்தேகம் இல்லை." (பெ.தூரன், பரதி தமிழ் வசனத் திரட்டு, ப 79).

கொடியர் நம்மை அடிமைகள் என்றே
கொண்டு தாமுதல் என்றனர் அன்றே
அடியொடந்த வழக்கத்தைக் கொன்றே
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர், நம் தேசத்து வீரக்
காரிகைக் கணத்தீர் துணிவுற்றே (பாரதியார் கவிதைகள், ப.415)

என்ற பாரதியின் கருத்துகள் இந்தியாவில் விடுதலைக்குச் சற்று முந்தைய காலப் பெண்களின் அடிமை நிலையைத் தெற்றென விளக்குவதாகும்.

பெண்களை ஒரு மனித உயிரினமாகக் கூட பாரதியாரின் காலத்தில் கருதச் சமூகம் இடம் தரவில்லை என்பது இன்னும் கொடுமையான செய்தியாகும். ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு. மனம் உண்டு. புத்தியுண்டு. ஐந்து புலன்கள் உண்டு. அவர்கள் செத்த யந்திரங்கள் அல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர். சாதாரணமாக ஆண் மாதிரியாகவே தான். புறவுறுப்புகளில் மாறுதல். ஆத்மா ஒரே மாதிரி. (பெ.தூரன், பாரதி தமிழ் வசனத் திரட்டு, ப.83) என்ற பகுதி பெண்களை ஒரு மனித் உயிரியாக ஏற்கக் கோரும் பகுதியாகும்.

ஆணுக்குச் சமமான உரிமைகளைப் பெண் பெறவிரும்பும் காலகட்டமாக பாரதியின் காலக்கட்டம் இருந்துள்ளது.

கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அதனைப் பொதுவில் வைப்போம்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி
காட்சி கெடுத்திடலாமோ
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை அற்றிடும் காணீர்
காதல் ஒருவனைக் கைப்பிடிக்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி

இந்தப் பகுதிகள் சரிசம நிலை குறித்தமைவன. பெண்களின் கற்புக்கு ஈடாக ஆண்களும் கற்பு நிலையில் சமத் தகுதி பெறவேண்டும் என்பது பெண்ணைக் காட்டி ஆணுக்குச் சொல்லும் சம நிலை பாரதி காலத்தில் வலியுறுத்தப் பெற்றுள்ளது.

அறிவு, இல்லறம் ஆகியவற்றில் ஆண் பெற்றுள்ள மதிப்பு மிக்க நிலைக்கு ஈடான சமநிலையைப் பெண் பெறவேண்டும் என்பது அக்காலத்தில் இருந்த கருத்து ஆகும். அறிவு, மனம், இல்லறம் ஆகியவற்றில் சமநிலை பெறவிரும்பும் பெண் உடலளவில் ஆணுக்கு அடங்கியே நிற்கவேண்டிய காலகட்டமாக பாரதியின் காலகட்டம் இருந்துள்ளது என்பது இவற்றில் இருந்து பெறப்படுகிற மற்றொரு செய்தியாகும்.

பாரதி கற்பு குறித்துத் தன் உரைநடைப் பகுதிகளில் அதிகமாக சிந்தித்துள்ளார். ஸ்திரீகள் பதிவிரதைகளாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள். அதிலே கடினம் என்னவென்றால் ஆண் பிள்ளைகள் யோக்கியர்கள் இல்லை. ஆண் மக்களில் ஒவ்வொருவனும் தன் மனைவி பதிவிரதைகளாக இருக்க வேண்டுமென்பதில் எத்தனை பேர் ஆவலோடு இருக்கிறானோ அத்தனை ஆவல் இதர ஸ்திரீகளின் பதிவிரத்யத்திலே காட்டுவதில்லை.

... ஆண் பிள்ளைகள் தவறினால் ஸ்திரீகள் எப்படிப் பதிவிரதைகளாக இருக்க முடியும் கற்பனைக் கணக்குப் போட்டுப் பார்ப்போம். ஒரு பட்டணத்தில் லட்சம் ஜனங்கள் ஐம்பதினாயிரம் பேர் ஆண்கள், ஐம்பதினாயிரம் பேர் பெண்கள். அதில் நாற்பத்தையாயிரம் ஆண்கள் பர ஸ்திரீகளை இச்சிப்பதாக வைத்துக் கொள்வோம். அதிலிருந்து குறைந்த பட்சம் நாற்பத்தையாயிரம் ஸ்திரீகள் பர புருஷர்களின் இச்சைக்கிடமாக வேண்டும். இந்தக் கட்டத்தில் இருபதினாயிரம் புருஷர்கள் தம் இச்சையை ஓரளவு நிறைவேற்றுவதாக வைத்துக் கொள்வோம். எனவே குறைந்த பட்சம் இருபதினாயிரம் ஸ்திரீகள் விபச்சாரிகளாக இருக்க வேண்டிய அவசியமாகிறது. (பெ.தூரன் - பாரதி தமிழ் வசனத் திரட்டு, ப.94) என்ற கணக்கு ஆண் விபச்சாரத்தினால் ஏற்படும் பெண்களின் நலமின்மையைச் சுட்டிக் காட்டுவதானும். அக்காலப் பெண்கள் கேட்ட விடுதலை அல்லது பாரதி விரும்பிய பெண் விடுதலை என்பது ஒழுக்கம் மிக்க விடுதலை என்பதில் ஐயமில்லை. அந்த விடுதலைக்குள் சுதந்திரமான இயக்கம் பெண்களுக்கு ஏற்படவேண்டும் என்ற எண்ணம் அக்காலத்தில் நிலவியது.

அடிமைத் தேசங்களில் கூட ஆண் மக்களில் பெரும்பாலோர் அதாவது இரகஸிய போலீஸ் உபத்திரவத்திற்கு இடம் வைத்துக் கொண்டவர் தவிர மற்றவர்கள் தம் இஷ்டப்படி எந்த ஊருக்கு வேண்டுமானாலும் போகலாம். எங்கும் சஞ்சரிக்கலாம் தனியாக சஞ்சாரம் பண்ணக் கூடாது என்ற நியதி கிடையாது. ஆனால் பெண் தனியே சஞ்சரிக்க வழியில்லாத தேசங்களும் உள்ளன. அவற்றில் நமது தேசத்தில் பெரும்பகுதி உட்பட்டிருப்பதைப் பற்றி மிகவும் விசனப்படுகிறேன். (மேலது. 94)

பெண்ணின் விடுதலை மிக்க இயக்கத் தேவை பற்றிய விளைவு இதனுள் சுட்டப் பெற்றுள்ளது.

இவற்றில் இருந்து சில முடிவுகளுக்கு வரமுடிகின்றது. பாரதியின் காலக்கட்டத்தில் அடிமை நிலையில் பெண் இருந்துள்ளாள். அவள் வேண்டிய நேரத்தில் வேண்டிய இடத்திற்குச் செல்ல இயலாதவளாக வீட்டுக்குள்ளே கட்டுப்பட்டிருந்தாள். அவளுக்கு கற்பு என்பது மிகப் பெரிய எல்லைக் கோடாக இருந்துள்ளது. அதனை அவள் எக்காலத்திலும் மீற இயலாது. மீறக் கூடாது. ஆனால் ஆண்கள் மீறலாம். தன் பெண்களை மட்டும் மீறவிடாமல் காத்துக் கொள்ளலாம். அறிவிலும், இல்லற நடைமுறைகளிலும் அவள் இரண்டாம் நிலையில் இருந்துள்ளாள் என்பன போன்ற செய்திகள் பாரதி காலத்துப் பெண்களின் நிலையாக இருந்துள்ளது.

இத்தகைய கட்டுப்பாட்டு நிலையைப் பாரதி கடுமையாக எதிர்த்துக் குரல் கொடுத்துள்ளார். அவரின் குரல் ஆழமாக பதிவைப் பெற்றுள்ளது. கவிதைகளிலும் கட்டுரைகளிலும் விடுதலை மிக்க புதுமைப் பெண்ணை அவர் வரவேற்றுள்ளார். இவ்வரவேற்பு முன்னேற்றமற்ற நிலையில் இருந்து முன்னேற்ற மிக்க நிலைக்குப் பெண்களை அழைத்துச் செல்வதாக இருந்தது.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி வையம் தழைக்குமாம்
பூணு நலத் தேடிணங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்
நாணம் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ

இந்த வரவேற்பு பாடல் பெண்கள் கைக் கொண்டு நடக்கவேண்டிய கொள்கைகளை எடுத்துரைக்கின்றது.

பெண்களுக்கு விடுதலை கொடுப்பதில் இன்னும் முக்கியமான ஆரம்பப் படிகள் எவையென்றால்

1. பெண்களை ருதுவாகும் முன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது
2. அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தல் கூடாது.
3. விவாகம் செய்து கொண்ட பிறகு அவள் புருஷனை விட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவனை அவமானப்படுத்தக் கூடாது.
4. பிதுரார்ஜியத்தில் பெண் குழந்தைகளுக்குச் சமபாகம் கொடுக்க வேண்டும்.
5. புரு முன் இறந்த பின்பு ஸ்திரீ மறுபடி விவாகம் செய்து கொள்வதைத் தடுக்கக் கூடாது.
6. விவாகமே இல்லாமல் தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரீகள் யதேச்சையான தொழில் செய்து ஜீவிக்க இடம் கொடுக்க வேண்டும்.
7. பெண்கள் கணவனைத் தவிர வேறு புருஷர்களுடன் பேசக் கூடாதென்றும் பழகக் கூடாதென்றும் பயத்தாலும் பொறாமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்துவிட வேண்டும்.
8. பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.
9. தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்தியோகம் பெற விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.
10. சீக்கிரத்தில் தமிழருக்கு சுயராஜ்யம் கிடைத்தால் அப்போது பெண்களுக்கும் ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும். (பெ. தூரன், பாரதி தமிழ் வசனத் திரட்டு ப.)

என்ற பாரதியின் அடிப்படை பெண் விடுதலைக் கூறுகளில் பல இன்னமும் எட்டப்படவில்லை அல்லது நடைமுறைக்கு வரவில்லை என்பது மிகப் பெரிய சோகமே.

விடுதலைக்கு முந்தைய இந்தியப் பெண்களின் நிலை நாட்டு விடுதலை பெற்றாலும் சமூக விடுதலையை நோக்கிப் பயணிக்கும் பெண்களின் நிலை ஆகியவற்றின் தக்க சான்றுகளாகப் பாரதியின் படைப்புகள் விளங்குகின்றன. பாரதி காலகட்டம்.

பெண்விடுதலையின் முக்கியமான தொடக்கக் காலகட்டம் என்பதில் ஐயமில்லை. பாரதியின் பெண் குறித்த சிந்தனைகள் அவரது படைப்பு மாந்தர்களிடத்திலும் எதிரொலித்துள்ளது. சந்திரகையின் கதையில் இடம் பெற்றுள்ள பின்வரும் பகுதி அதற்கு ஒரு சான்றாகும்.

விசாலாட்சி, விசாலாட்சி, நான் இரண்டு நிமிடங்களுக்கு மேல் உயிருடன் இருக்கமாட்டேன். என் பிராணன் போகுமுன்னர் உன்னிடம் சில வார்த்தைகள் சொல்லி விட்டுப் போகிறேன். அதை உன் பிராணன் உள்ளவரை மறந்து போகாதே. முதலாவது நீ விவாகம் செய்து கொள். விதவை விவாகம் செய்யத் தக்கது. ஆண்களும் பெண்களும் ஒருங்கே யமனுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாய் அஞ்சி ஜீவனுள்ளவரை வருந்தி வருந்தி மடிய வேண்டிய அவசியம் இல்லை. ஆதலால் நீ ஆண் மக்கள் எழுதி வைத்திருக்கும் நீசத்தனமான சுய நல சாத்திரத்தைக் கிழித்துக் கரியடுப்பிலே போட்டுவிட்டு தைரியத்துடன் சென்னைப் பட்டணத்துக்குப் போய் அணுகு கைம்பெண் விவாகத்துக்கு உதவி செய்யும் சபையாரைக் கண்டுபிடித்து அவர்கள் மூலமாக நல்ல மாப்பிள்ளையைத் தேடி வாழ்க்கைப் படு. இரண்டாவது நீயுள்ளவரை என் குழந்தையைக் காப்பாற்று. அதற்குச் சந்திரிகை என்று பெயர் வை (பெ. தூரன், பாரதி தமிழ் வசனத் திரட்டு ப.184-185) என்றான்.

இப்பகுதியில் பெண்களுக்கான விதாவ விவாகம் பற்றிய செய்திகளும் அதனைச் செய்து கொள்ள அக்காலத்தில் இருந்த வாய்ப்புகளும் காட்டப் பெற்றுள்ளன.

இவ்வாறு பாரதியின் காலக் கட்டம் பெண் விடுதலை முகிழ்த்த கால கட்டமாக விளங்குகின்றது. இந்தத் தொடக்கம் இன்னம் பல தூரம் செல்லவேண்டியுள்ளது. ஆனால் தொடக்கத்தைக் கடக்கவே இன்றும் நூற்றாண்டுகள் ஆகலாம் என்ற நிலையில் தமிழகப் பெண்ணியம் நிற்கிறது என்பது சிந்தனைக்குரிய ஒன்றாகும்.

முடிவுகள்

பாரதிகால பெண்ணியம் என்பது பாரதி வாழ்ந்த காலத்தில் பெண்களுக்கு இருந்து அரசியல், சமூக நிலை குறித்து அமைவதாகும்.

அக்காலக் கட்டத்தில் பெண்கள் அடிமை நிலையில் இருந்தனர்.

அடிமை நிலையில் இருந்து அவர்கள் மாற கல்வியில் ஏற்றம், அறிவினில் ஏற்றம், கற்பினில் திடம், இல்லறத்தில் சம உரிமை ஆகியன தரப்பெற வேண்டும் என்ற எண்ணம் அக்காலக் கட்டத்தில் நிலவியது.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாரதி வரிகள் மெய்ப்பட்டுவிட்டன என்ற போதிலும் பாரதி கண்ட பெண் விடுதலைக் கருத்துகள் முழுமை பட நிறைவேறவில்லை என்பது சோகமான உண்மை.

With Best Compliments

from

UNITY PC SYSTEMS

Computer Sales, Repair, Services & Maintenance, Networking, Software Installaiton, Cd's Sales & Recording, all king of Computer Accessories

No. 394, 1/1, Galle Road, Wellawatte, Colombo 06
Tel : 011-2361777
Mobile : 0777-890532 Email : unitypc@sltnet.lk

With Best Compliments

from

S.N.S. Trades

General Merchants and Commission Agents

No. 169, 5th Cross Street, Colombo 11.Sri Lanka.
Tel : 011 4368181, 011 2424261

பாடசாலைகளுக்கிடையிலான போட்டி முடிவுகள்

கீழ்பிரிவு

பேச்சு

1ம் இடம்	மகீமா சுரேஷ்	திருக்குடும்ப கன்னியர் மடம்
2ம் இடம்	K. சானந்தனி	சைவ மங்கையர் வித்தியாலயம்
3ம் இடம்	S. விவேகா	சைவ மங்கையர் வித்தியாலயம்

கட்டுரை

1ம் இடம்	T. பிரகாஷினி	புனித அன்னம்மாள் ம.ம.வி
2ம் இடம்	A. அத்தியா	மட்டுவில் இந்து வித்தியாலயம்
3ம் இடம்	N.A. அபுனாப்	புனித தோமஸ் கல்லூரி
	V. கயோஷன்	புனித தோமஸ் கல்லூரி

சிறுகதை

1ம் இடம்	ரெனீஷா சிவகுமார்	புனித அன்னம்மாள் ம.ம.வி
2ம் இடம்	S. விதுர்ஷிகா	சைவ மங்கையர் வித்தியாலயம்
3ம் இடம்	P. மொரீன் ஸ்ரீபனி	புனித அன்னம்மாள் ம.ம.வி

கவிதை

1ம் இடம்	M.R.F. ஹில்மா	அல்-முபாறக் தேசிய பாடசாலை
2ம் இடம்	N. மிஸ்மா	திருக்குடும்ப கன்னியர் மடம்
3ம் இடம்	G. யதுர்ஷியா	சைவ மங்கையர் வித்தியாலயம்

மத்தியபிரிவு

பேச்சு

1ம் இடம்	R. துஷாரா	சைவ மங்கையர் வித்தியாலயம்
2ம் இடம்	E. உஷன்யா	சைவ மங்கையர் வித்தியாலயம்
3ம் இடம்	B. கிருத்திகா	திருக்குடும்ப கன்னியர் மடம்
	S. ரிலாகான்	அல்-முபாறக் தேசிய பாடசாலை

கட்டுரை

1ம் இடம்	M.F.F. பஸ்மிலா	அல்-முபாறக் தேசிய பாடசாலை
2ம் இடம்	ஆயிஷா ஜிப்ரி	சைவ மங்கையர் வித்தியாலயம்
3ம் இடம்	அஸ்வினி விஜயராம்	திருக்குடும்ப கன்னியர் மடம்

சிறுகதை

1ம் இடம்	F. கலிஸ்ரிகா	புனித அன்னம்மாள் ம.ம.வி
2ம் இடம்	F. ஹஸ்னா	சைவ மங்கையர் வித்தியாலயம்
3ம் இடம்	T. வினோஜ்	புனித அந்தோனியார் ஆண்கள் ம.வி
	A.M.F. பக்மா	அல்-முபாறக் தேசிய பாடசாலை

கவிதை

1ம் இடம்	தியாகரன் முத்துலிங்கம்	மட்டுவில் இந்து வித்தியாலயம்
2ம் இடம்	சாறீஜ் நிஹாட்	புனித தோமஸ் கல்லூரி
3ம் இடம்	M.R.F. பஸ்மிலா	அல்-முபாறக் தேசிய பாடசாலை

தமிழ் அறிவு

1ம் இடம்	J. ஜஸ்வர்யா மட்டுவில்	புனித மரியாள் தமிழ் ம.வி
2ம் இடம்	L. மேரி செர்லின்	புனித அன்னம்மாள் ம.ம.வி

மேற்பிரிவு

பேச்சு

1ம் இடம்	S. நிவேதிதா	இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
2ம் இடம்	S. விரர்ஷ்ஷின்	நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து கல்லூரி
3ம் இடம்	M. ஹர்ஷானா	புனித அன்னம்மாள் ம.ம.வி

கட்டுரை

1ம் இடம்	பிரியலக்ஷினி ஜெயகுமார்	இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
2ம் இடம்	M. சாரன்கி	திருக்குடும்ப கன்னியர் மடம்
3ம் இடம்	F. ஹப்ஸா கலீன்	அல்-முபாறக் தேசிய பாடசாலை

சிறுகதை

1ம் இடம்	A.N.F. நவ்ஹா	அல்-முபாறக் தேசிய பாடசாலை
2ம் இடம்	K. நாராயணி	திருக்குடும்ப கன்னியர் மடம்
3ம் இடம்	J. சாஜானி	புனித மரியாள் தமிழ் ம.வி

கவிதை

1ம் இடம்	சுகன்யா ராஜரத்னம்	புனித அன்னம்மாள் ம.ம.வி
2ம் இடம்	M.F. கமீலா	அல்-முபாறக் தேசிய பாடசாலை
3ம் இடம்	தனுஷா ஜெசீலன்	சைவ மங்கையர் வித்தியாலயம்

தமிழ் அறிவு

1ம் இடம்	கேஷிகா குமாரதீசன்	திருக்குடும்ப கன்னியர் மடம்
2ம் இடம்	காயத்திரி பெருமாள்	புனித அன்னம்மாள் ம.ம.வி
3ம் இடம்	மேரி ரேகா தியாகராஜ்	புனித அன்னம்மாள் ம.ம.வி

விவாதத் திறன்

1ம் இடம்	புனித ஆசிர்வாதப்பர் கல்லூரி
2ம் இடம்	இந்துக் கல்லூரி
3ம் இடம்	இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

பாடசாலைக்குள்ளான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் கிழ் பிரிவில்
முதலாம் இடம் பெற்ற கட்டுரை

நான் விரும்பும் ஈழத்துப்புலவர் (சுவாமி விபுலானந்தர்)

ஆங்கிலத்து எழுத்து பலப்பல
ஒற்றுமையாக தொண்டு செய்து தந்துனன்
நாங்கள் மொண்டு பருகி மகிழவும்
நன்று நன்றென உண்டு புகழவும்
தீங்கனிச் சுவை கொண்டவை தானுமே
தீட்டினான்

- மகாகவி -

என்று மகாகவி பாரதியார் விபுலானந்தரின் பெருமையை ஓர் எடுத்துக் காட்டாக பாடியுள்ளார்.

சுவாமி விபுலானந்தர் மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு காரைத்தீவு என்னும் ஊரில் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் சாமித்தம்பி, தாயின் பெயர் கண்ணம்மையார். இவருக்கு பெற்றோர் இட்டபெயர் மயில்வாகனன். இவர் 1897 மார்ச் 22 பிறந்தார்.

மயில்வாகனன் ஆங்கிலம், தமிழ், ஆரியம், சிங்களம், இலத்தீன் ஆகிய மொழிகளில் பயிற்சி பெற்றிருந்தார். விஞ்ஞான டிப்ளோமா (Dip) பட்டதாரி ஆகவும், தமிழ்ப் பண்டிதராகவும் பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியராகவும் இருந்தார். மதுரைத் தமிழ் சங்கத்தால் வைத்த பரீட்சையில் "சித்தியடைந்த முதல் இலங்கையன்" என்ற பெருமையை பெற்றார். இவரில் இளமைக்கால ஆசிரியர்கள் குஞ்சித்தம்பி, வசந்தராசப் பிள்ளை ஆகியோரிடம் கல்வி கற்றார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திலும், திருகோணமலை ஆங்கிலக் கலாசாலையிலும் தலைமையாசிரியராக திகழ்ந்தார். தென்னிந்தியா அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராக இருந்தார்.

தமிழையும், சைவத்தையும் வளர்த்த சுவாமி விபுலானந்தர் யாழ் என்ற நூலை எழுதினார். பரந்தமிழ் இசைமரபிற்கு புத்துயிர் அழிக்கும் உயரிய நூலாகும். தமிழ் இசைக்கலை நுட்பங்களை ஆராய்ந்து விளக்கும் சிறந்த நூலாகும். இவர் எழுதிய நூல்களில் பெருமை பெற்றவை யாழ் நூல், நாச்சியார் நான்மணிக்கோவையாகும்.

மயில்வாகனனுக்கு மிகவும் விருப்பமான நண்பன் ஒருவர் இருந்தார். அந்த நண்பன் தான் கந்தசாமி ஆவார். கந்தசாமி இறநத போது அவர் "ஈழம் தொட்டு சைவம் வளர்த்த" என்ற பாடலை பாடினார். விபுலானந்தருக்கு கந்தசாமி அவர்கள் கூறிய கூற்று "நமது வாழ்ககை ஓர் ஓலையை போன்ற ஒரு ஓலையை ஆற்றினுள் இட்டால் என்ன நடக்கும்? சில வேளைகளில் மிதக்கும். சில வேளைகளில் அமிழும் மற்றும் சில வேளைகளில் அமிழ்ந்து மிதக்கும். அதே போன்று நமது வாழ்வும் உயரும் தாழும். நட்டமடைவோம் என்பன நடக்கக்கூடும்" என்று கந்தசாமி அவாகள் இறக்க சில நிமிடங்கள் முன்பு கூறியது.

சைவத்தையும் தமிழையும் வளர்த்த மயில்வாகனன் 1922ம் ஆண்டு குருதீட்சை பெற்று துறவியானார். 1924ம் அண்டு சித்திரை மாத பௌர்ணமியில் துறவியானார். சுவாமி சிவானந்தா மூலம் சுவாமி விபுலானந்தர் என்ற பெயர் வைக்கப்பட்டது.

சைவத்தையும், தமிழையும் வளர்த்த சுவாமி விபுலானந்தர் பெரும் நற்றமிழ் உள்ளவரை நானிலமெங்கும் நின்று நிலைக்கும் என்பது திண்ணம். விபுலானந்தர் நாமம் வாழ்க வளர்க. இவர் 1947ம் ஆண்டு சித்தியடைந்தார்.

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்தியபிரிவில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை

இடுக்கண் களைவதாம் நட்பு

"உடுக்கையிழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்று திருக்குறளிலே திருவள்ளுவர் நாயனார் நட்புடைமை எனும் அதிகாரத்தின் கீழ் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். அதாவது, ஆடையிழந்தவனது கை எவ்வளவு அவசரமாகச் சென்று ஆடையைப் பிடித்து தன் மானத்தைக் காக்க எண்ணுமோ, அதே போல் நண்பனுக்குத் துன்பம் வந்தால் கூட உடனே சென்று அவனது கஷ்டங்களை நீக்க துணைபுரிய வேண்டும் என்று திருவள்ளுவர் பெருமான் வலியுறுத்தியுள்ளார்.

நட்பென்பது உலகில் மனிதருக்குக் கிடைக்கக்கூடிய ஒரு உன்னத வாய்ப்பாகும். உலகில் நஷ்டவாலி யாரெனில் நண்பர்களைச் சம்பாதிக்காதவனே ஆகும். நாம் பல்வேறு விடயங்களுக்காக நட்புக் கொள்கிறோம். அவற்றுள் சில திடீரென்று கூட ஏற்படலாம். எமது இன்பத்துக்காக மட்டுமன்றி துன்பத்தைக் கூறவும் நண்பர்களின் உதவி எமக்கு அவசியப்படுகிறது. ஆக, நல்ல நண்பர்களோடு பழகுவது சிறப்பானதாகும்.

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு" என்று நல்ல நண்பர்களோடு பழகும் போது ஏற்படும் தொடர்பை சுட்டிக் காட்டுகிறார். அதாவது, அறிவுள்ள நண்பர்களோடு நட்புக் கொள்ளும் போது அது வளர்பிறையைப் போல வளர்ந்து கொண்டே செல்லும். ஆனால் பேதையர்களுடன் நட்புக் கொண்டால், அந்த நட்பானது தேய்பிறையைப் போல தேய்ந்து கொண்டே செல்லும் என்று சுட்டிக் காட்டுகிறார் தெய்வப்புலவர் அவர்கள். கற்றறிந்த நண்பர்களோடு நட்பு கொள்வதானது;

"நவில்தொறும் நூல் நயம் போலும்
பயில்தொறும் பண்புடையாளர் சிறப்பு" எப்பயெனில், ஒரு நல்ல நண்பனோடு நட்புக் கொள்வதானது ஒரு நல்ல புத்தகத்தை மீண்டும் மீண்டும் வாசிக்கும் போது ஏற்படுகின்ற ஆர்வத்தையும் ஆசையும் போன்று ஆசையை ஏற்படுத்தக்கூடியதாகும் என்று தமிழ்மறை கூறுகிறது. நாம் ஒருவரோடு நட்புக் கொள்வதற்கு செல்வமோ அல்லது சொத்துக்களோ அவசியமில்லை. மாறாக, ஒற்றுமையோ அல்லது தேசவழமையோ தேவையில்லை. உள்ளங்கள் இரண்டும் அன்பு கொண்டால் போதுமானதாகும்.

இன்னும் சிலர் நட்புக் கொள்வது இன்பமாக இருப்பதற்கு மட்டுமே. நண்பர்கள் தவறு செய்யும் போது சுட்டித் திருத்துவதற்கல்ல. இதற்காகத்தான் வள்ளுவர்,

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
படைமேற்சென்று இடித்தற் பொருட்டு" என்று தெளிவுறக் கூறியுள்ளார். இது போலவே சில நண்பர்கள் எம்முடன் இருப்பார்கள். அவர்கள் எத்தகையவர்கள் எனில், நாம் சந்தோசமாக இருக்கும் போது மட்டும் எம்மோடு இருந்து இன்பத்தைப் பகிர்ந்து கொள்வார்கள். ஆனால், எமது துன்பத்தின்போது எம்மைச் சார்ந்து ஆறுதல் வார்த்தைகள் கூற மாட்டார்கள். இத்தகைய உறவினர்களும் எம்முடன் இருக்கவே, செய்கின்றனர். அத்தகையவர்களைப் பற்றி வாக்குண்டாம் எனும் நீதி நூலில் ஔவையார் இவ்வாறு கூறுகிறார்.

'அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்திலே
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போல

ஒட்டி உறவார் உறவு' என்று கூறிப் போந்துள்ளார். நாமும் கொட்டி, ஆம்பல், நெய்தல் போன்ற தாவரங்களைப் போல வாழ வேண்டும். நண்பர்களுக்குத் துன்பம் வந்தாலும் சரி, இன்பம் வந்தாலும் சரி அவர்களோடு ஒன்றி வாழ்வது அத்தியாவசியமாகும். தன் தோழனோடு இன்பத்தில் மட்டும் கூடியிருப்பவனையும் தோழனோடு இன்பம், கவலை இரண்டிலும் கூடியிருப்பவர்களையும் உற்று நோக்கினால் அவர்களது மனநிலையை அறியலாம். அவர்கள் எத்தகையவர்கள் என்றால், நண்பர்களைக் காணும் போது மட்டும் சிரித்துப் பேசி மகிழ்வார்கள். ஆனால், அவர்களின் அகமோ அவ்வாறு இருக்காது. அதனாற்றான் தமிழ் மறை இவ்வாறு கூறுகிறது;

"முகம் நக நட்பது நட்பன்று
நெஞ்சத் தகம் நக நட்பதே நட்பு" என்று கூறியுள்ளார். உண்மையாக உள்ளத்தால் தன் நண்பனை விரும்பி நட்புக் கொள்பவனே சந்தோச வேளையின் போதும் கவலையின் போதும் தன்னுடன் ஒத்துழைத்து நடப்பான். அவனுக்குத் தனது நண்பனைப் பற்றிய அனைத்து விடயங்களும் தெரியும். ஆகவே, அவன் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு முறையாக நடந்து கொள்வான்.

"உற்ற நண்பர்கள் இருவரது எண்ணங்களும் ஒரே மாதிரியானதாகக் காணப்படும்" என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். அந்த வகையில் நண்பனின் துன்பத்தைத் தனது கஷ்டமாகக் கருதி வாழும் நல் உள்ளங்கள் வாழும் இப்பூமியிலே, சுயநல வாதிகளாகவுமுள்ள சில நண்பர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

நண்பர்கள் இருவர் நட்புக்கொள்ளும் போது அவர்களது நட்பு பல சந்தர்ப்பங்களில் மேலும் மேலும் வளர்ந்து செல்கிறது. அதில் ஒன்று தான் கஷ்டத்தின் போது உதவுவதாகும். அதனால், இருவருக்கிடையேயுமான தொடர்பு மென்மேலும் அதிகரிக்கிறது. அதனால் அடம்பன் கொடி திரண்டால் மிடுக்கு போல இருவரது நட்பையும் எவராலும் பிரிக்க முடியாது.

ஒருவனுக்கு தனது உறவினர்களை விட நண்பர்களே மேன்மையானவர்கள். ஏனெனில், நண்பர்கள் என்பவர்கள் எம்மோடு கலந்து உயிரோடு ஒட்டி இருக்கின்றனர். அதனால் தான்,

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பு இன்றி
ஊன்றும் வாய் ஒல்லும் நிலை' என்று கூறப்படுகிறது.

ஒருவர் இன்னொருவரோடு எத்தகைய நட்புக் கொண்டுள்ளார் என்பதை யாராலும் அளக்க முடியாது. நண்பர்கள் இருவரும் எத்துணை பாசமுடையவர் என்று கூறினால் அவர்களது நட்பு சிறிதாகி விடும் என்று கூறப்படுகிறது. ஆகவே, நாம் துன்பத்தின் போதும் இன்பத்தின் போதும் நண்பர்களோடு ஒட்டி வாழ வேண்டும். இதுவே, 'இடுக்கண் களைவதாம் நட்பு' என்று கூறப்படுகிறது.

எமது துன்பங்களின் போது எம்முடன் கூடி இருப்பவர்கள் கற்றறிந்த நல்ல நண்பர்களாவர். அத்தகைய நண்பர்களையே நாம் தேடிக் கொள்ள வேண்டும்.

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் கிழ்பிரிவில்
முதலாம் இடம் பெற்ற கட்டுரை

தமிழ் மூலம் அறிவியல்

கல்தோன்றி, மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி, சற்றேனும் தனது சீரளமைக் குன்றாது இன்று வரை நிலைத்திருப்பது நம் தாய்மொழியாம் தமிழ் மொழி ஒன்றே! தமிழ் மொழி எம்மவர்க்கு அள்ளித் தந்த மாண்புகள் பல ஆதியிலே வெறுமனே ஏடுகளுக்குள்ளும், ஓலைச்சுவடிகளுக்குள்ளும் செய்யுள் வடிவில் முடங்கிக் கிடந்த தமிழ், இன்று அந்தமான் முதல் அலாஸ்கா வரையில் தனது புகழ் பரப்பி, புகழின் உச்சத்தில் புகலிடம் கொண்டுள்ளது.

கலை, இலக்கியம், இலக்கணம் நனி சொட்டும் எம்மவர் மொழி இன்றைய நவீன, நவநாகரிக உலகில் அனைத்துத் துறைகளுடனும் ஒன்றறக் கலந்து அழகு பயப்பது அதியுன்னதம். அவ்வகையில் இன்றைய அறிவியல் வளர்ச்சியில் தமிழன் பங்கு அளப்பரியது. தமிழ் கற்கையில் அறிவியலும், அறிவியல் கற்கையின் தமிழும் பாரிய பங்கெடுத்துக் கொள்கின்றன. ஆமாம்! தமிழ் தந்த எண்ணற்ற அறிவியல் கருத்துக்கள் இந்நிலையை எடுத்துக் காட்டும்.

அறிவியலின் சுவடு கூடப்படாத சங்ககால தமிழ் இலக்கியங்களிலே இன்றைய அறிவியல் கோட்பாடுகள் மிளிர்வதைக் காணலாம். பல்வேறுபட்ட ஆய்வுகளின் முடிவில் மிக நுண்ணிய கட்டமைப்பான அணுவை சிறு துண்டுகளாகப் பிளக்க இயலும் என்ற கருத்தை, ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் அறிவியல் முன்வைத்தது. ஆனால்,

'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி
குறுகத் தறித்த குறள்''

என்ற ஔவையின் வாக்கு. இக்கருத்தை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கோள் காட்டி நிற்கிறது. தெய்வப்புலவன் ஈன்ற பொய்யாமொழியைப் உவமிப்பதற்காய் ஔவை கூறிய வாக்கில் எத்தனை அறிவியல் அதிசயங்கள் பொதிந்துள்ளன! அது மட்டுமல்ல, இரணியன், பிரகலாதன் இருவருக்கிடையிலான கலந்துரையாடலில் "கடவுள் எங்கு உள்ளான்?" என இரணியன் வினவ, "அணுவை நூறு பங்காய்ப் பிரித்தால் அதிலே இறைவன் உறைவான்" என பிரகலாதன் பதலளித்தான். எனவே, அணுவைப் பிளக்க இயலும் என்ற அறிவியல் அதிசயம் படிந்த தமிழர்களுக்குத் தெரிந்திருந்தது என்ற முடிவுக்கு வரலாம் பழங்கால தமிழ் இலக்கியங்களே அறிவியல் வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கும் போது, இன்று, தமிழ் மூலம் அறிவியல் கற்றல் என்பது கடினமான காரியமா என்ன?

தமிழ் மூலம் அறிவியல் வளர்ந்ததற்கான சான்றுகளை மேலும் உற்று நோக்குவோம். இன்று அறிவியல் துறையின் பாரிய பங்கு வானியில் துறைக்கு உண்டு. வான்பொருட்கள் பற்றிய எண்ணக்கரு தமிழர் மத்தியில் திகழ்ந்ததை எம்மவர் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. "ஞாயிறு போற்றும் ; ஞாயிறு போற்றும்" என்ற புற நானூறு வரிகளும், "வானை அளப்போம்; கடல் மீனை அளப்போம்; சந்திர மண்டலத்தில் கண்டு தெளிவோம்" என்ற வீரத்தமிழின் பாரதியின் கூற்றும் தமிழ் சாட்டிய அறிவியல் பாதைக்கு சான்று பகருகின்றதல்லவா?

மேலும், உயிரியலின் அடிப்படைத் தாற்பரியங்களை எடுத்தியம்பி நிற்கின்ற தமிழ் இலக்கியங்கள். உயிரங்களின் உடல் "கலம்" எனும் நுண்ணிய கட்டமைப்பானது என்ற அறிவியலின் கருத்து அண்மைக் காலங்களில் வெளியிடப்பட்டது. ஆனால் "ஒன்று அறிவதுவே, உற்ற அறிவதுவே" என்ற தொல்காப்பியப் பாடல் இக்கருத்தை வரிக்கு வரி விளக்கி நிற்பது உண்மை. அதுமட்டுமல்ல, சார்ள்ஸ் டார்வினால் முன்மொழியப்பட்ட "கூர்ப்பு" தொடர்பான கோட்பாடுகள் உயிரியலின் உன்னத நிலை என்றே கூறலாம். அதாவது, உலகம் உருவெடுத்த காலத்திலே ஆரம்ப உயிரினங்கள் நீரில் தோன்றியதாகவும், பின்னர் கூர்ப்பின் விளைவால் அவை நீரிலும் நிலத்திலும் வாழும் தன்மை பெற்றதாகவும், அதனைத் தொடர்ந்து ஊர்வனவும், பறவைகளும் கூர்ப்பின் இறுதியில் மனிதன் முதலான முலையூட்டிகளும் தோன்றியதாக அவரது தத்துவம் விளக்கி நிற்கிறது. மனிதனின் பரிணாம வளர்ச்சிப் படிகளை ஆராய்ந்த டார்வினைப் பற்றி சங்ககால தமிழறிஞர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை. ஆனால், தமிழ் இலக்கியங்களிலே இந்துக்களின் கடவுளாகப் போற்றப்படும் கிருஷ்ண பரமாத்மாவின் பத்து அவதாரங்களைப் பற்றி சித்தரிக்கப்பட்டுள்ளது.

அவ் அவதாரங்கள் டார்வினின் அடிப்படைத் தத்துவங்களைத் தழுவி புனையப்பட்டிருப்பது அதிசயம். ஆமாம்! முதலில் ஆரம்பத்தில் நீரில் வாழும் இயல்பு கொண்ட மச்சாவதாரம்; பின்னர் நீரிலும் நிலத்திலும் வாழும் இயல்பு படைத்த கூர்ம அவதாரம், அதனையடுத்து நிலத்தில் வாழும் வராக, நரசிம்ம அவதாரங்கள். இறுதியில் வளர்ச்சியின் உச்சப் படியாய் முழுமை கொண்ட இராம கிருஷ்ண அவதாரங்கள். அறிவியலின் இன்றைய முன்மொழிவுகளுக்கு, அன்றே தமிழ், எதிர்வு கூறல்களை நிகழ்த்தியுள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களிலேயெ அறிவியல் சுவை ததும்பும் போது, இன்று தமிழ் மூலமான அறிவியல் என்பது சாத்தியம் தானே!

அறிவியலின் சகல அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு மிளிர்ந்தன பழந்தமிழ் இலக்கியங்கள். தண்ணீரானது அழுக்கும் தகவற்ற திரவம் என்ற கருத்தை "ஆழி அமுக்கினும் ஆழ்கடல் நீர் நாழி முகவாது" என்ற ஔவையின் கருத்து கூறி நிற்கின்றது.

ஆயினும் இந்த அறிவியல் கோட்பாட்டை பஸ்கால் எனும் அறிவியல் மேதை ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே கூறிச் சென்றார். மேலும், பெண்களின் கூந்தலுக்கு 'பிரோமோன்ஸ்' என்ற வேதியல் பொருட்களாலேயே மணம் உண்டாகிறது என்பது அறிவியல் அண்மையில் சொன்ன கருத்து. ஆனால், "மங்கையவள் கூந்தலுக்கு இயற்கையில் மணம் உண்டா?" என்ற வாதம் மதுரை மன்னன் செண்பகப் பாண்டியனுக்கும், அரண்மனைப் புலவன் தருமிக்கும் ஏற்பட்டது. தமிழ் இலக்கியங்கள் கூறும் இந்த சம்பவம் ஒரு அறிவியல் வாதம். சொக்கநாதர் தருமிக்கு தந்துதவிய பாட்டு, ஒரு விஞ்ஞான விளக்கம். அது மட்டுமல்ல, இராமாயணத்திலே இராவணன் சீதையை வானினூடான தேரிலே இலங்கைக்குக் கவர்ந்து வந்ததாகவும், சிலப்பதிகாரத்திலே விசையை பறவை வடிவிலமைந்த பொருளால் வானில் பறந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றமை பின்னாளில் விமான கண்டுபிடிப்புக்கு வித்திட்டிருக்கிறது.

எனவே காலங்காலமாக தமிழாலும், தமிழராலும் அறிவியல் வளர்க்கப்பட்டு வருகின்றதென்பது நாமனைவரும் அறிய வேண்டிய உண்மை. மாறாக, நவீனம் படைக்க தமிழாலாகாது என்பது விதண்டா வாதம். தமிழ் தனித்துவமானது; தன்னிகரற்றது; தனிச்சிறப்பு வாய்ந்தது. அதனாலாகாதது ஒன்றுமில்லை. தமிழை வாழ வைப்பதும், அதனைக் கைக்கொண்டு அறிவியலை ஏற்றம் பெறச் செய்வதும் எம்மவர் கடமையே.

வெறுமனே, இணையத்தில் தமிழ் உலா வருவதால் மட்டும் அறிவியலின் தமிழ் கைக்கொள்ளப்படுவதாய் ஆகி விடாது. தமிழை எம்மோடு ஒன்றிக்கச் செய்து அறிவியல் வளர்ச்சிக்கு வழி கோல வேண்டும்.

"எங்கள் வாழ்வும் - எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

With Best Compliments

from

SSG S.S. GNANAM & CO.

GOVERNMENT CONTRACTOR, TRANSPORT AGENT, BUILDING MATERIALS, FOD SUPPLIERS AND L.P. GAS

Head Office
68, Old Moor Street, Colombo 12. Tel : 011-2424013-14
Branch ; 166A, Market Side, Anuradhapura, Tel : 025-2224122

CA Central Agency

LAUFGS GAS DISTRBUTOR
519/C,. Jayanthi Mawatha, Anuradhapura.
Tel : 025-2234074 Fax : 025-2220422

With Best Compliments

from

SARAVANA'S STORES

Dealers in
Groceries & Indian Goods Etc.

No. 135, 137, Sri Kathiresan Street, Colombo-13
Tel : 2449092, 2336797 Fax : 2435915

மாலைக் காட்சி

மாலையில் ஒரு பொன்வெயில் இது மேனியில் பட்டாலடா!
மேனியில் ஒரு புது வித உணர்வு தோன்றுமடா
கதிரவனோ தன் பிஞ்சுக் கதிர்களை உள்வாங்கும் நேரமடா
பறவைகள் எல்லாம் ஆரவார ஒளியுடன் செல்லும் நேரமடா
அக் காட்சியை கடல் ஓரத்தில் இருந்து பார்த்தாலடா
ஆழியோ அக்கதிர்களை மெல்ல மெல்ல உள்வாங்குவது போன்ற எண்ணமடா!
அக்காட்சிக்கு நிகரே உலகில் வனப்பான காட்சி ஏதும் இல்லையடா!
அவ்வேளையில் அந்நிகழ்வைக் காண்பது அரிதே அரிதேயடா
செம்மண்ணால் மூடியிருக்கும் செவ்வானமோ
மெல்ல மெல்ல களிக்குளியல் குளிப்பதை காண்பதே அறிதடா!
மாலை வேளையிலே எவ்வேளையிலும் வராத உணர்வு எற்படுமடா
சில பூக்களோ கதிரவன் மறைவதைப் போன்று மெல்ல மெல்ல மலருமடா
அவ்வேளையில்
கிழக்கு வானில் உதித்த கதிரவனோ மெல்ல மெல்ல மேற்கு வானை நோக்கி
வரும்
நிகழ்வோ நிகழ்வேயடா!
சுற்றி வரும் பூமியடா அதில் மாலையிலே நடக்கும் நிகழ்வுகளோ
அதிசயங்களடா!
இவ்வுலகில் இதே போன்ற நிகழ்வுகளே அதிசயங்களடா அதில் மாலைக்
காட்சிகள் மிகவும் முதன்மையானதடா!
மானிடா அவ்வேளையில் உன் மனதில் ஏற்படும் உணர்வைக் கவியால் நீ
கூறிவிட்டாய்!
பறவைகளே இந்நிகழ்வை தன் ஆராவார ஒலியால் கூறிச் செல்லுமடா!
கதிரவன் அதைக் கூறும் மொழியோ அல்லது ஒளியோ மானிட நெஞ்சங்களுக்குப்
புரியாது
அது ஒரு நிகழ்வைக் குறிக்குமடா!
அதுதான் பொன்னான மாலைக்காட்சியடா!
இக் காட்சிகளைக் கூறும் எனக்கோ இவ்வேளையை உணரும் பறவைகளாய்
வாழ்ந்திட ஆசையடா!
மாலைக் காட்சியை வர்ணித்த நான் இறுதியாக என் கவியால் கவிவணக்கத்தை
கூறி பொன்னான மாலைக்காட்சியை முடிக்கின்றேன்.

வணக்கம் வந்தனம்.

கவிதை-கீழ்பிரிவு

With Best Compliments

from

Suiting Shop

Wholesale & Retail Dealers in Textiles

No. 156, Keyzer Street, Colombo 11
Tel : 2436731, 2335836 Email : suitings@yahoo.com

SPECIALIST IN SUITINGS

With Best Compliments

from

EVERGREEN TEX

Dealers in all kind of Textiles

No. 82, 1/9, 3rd Cross Street,
Colombo 11, Sri Lanka.
Tel : 2458609 / Fax : 2396126
Mobile : 077-3111515
Email : smano96@yahoo.com

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்தியபிரிவில் முதலாம் இடம் பெற்ற கவிதை

நாதம் கேட்குது

சேவல் கூவுகின்ற வேளை
செவ்வானம் அடிவானில் நிற்கிறது
பாதை வழியே செல்லும் நான்
சற்று திரும்பிப் பார்த்தேன்
யாருமே இல்லா சாலை
விடிந்துக் கொண்டிருக்கும் காலை
கள்வன் தயங்கி வருவதைப் போல
மெல்ல தயங்கி வருகிறது சூரியன்

எங்கோ ஓர் மங்கள நாதம்
அதை நாடத் துடிக்குது என் பாதம்
அதை நாடிச் செல்லும் கண்களுக்கு
தோன்றியது ஒரு மண்டபம்
மண்டபத்தினருகே மக்கள் கூட்டம்
அந்த கூட்டத்தில் என்னைக் காட்டி ஒரு சலசலப்பு
என்னைப் பற்றி கதைப்பவர்களிடையே
செல்ல நினைக்குது நெஞ்சு
விடாமல் கேட்கும் நாதத்தின் அர்த்தத்தை
யோசிக்கும் அறிவு

மண்டபத்தை நாடிச் சென்ற என்னை
யாரோ ஒருவர் தள்ளி
போ அந்தப் பக்கம் என்றார்
சற்று எட்டிப் பார்த்தேன்
மண்டபத்தில் ஒரு கல்யாணம்
எனக்கோ மிக சந்தோஷம்
இன்றாவது ஒரு பிடி உணவுண்டே
என்ற ஆனந்தம்
மண்டபம் ஒரே கூட்டம்
மண்டப வாசலினருகே
இரையை அடையப் போகிறோமே
என்ற வேட்கையும் நான்

வாசலினிலே இருந்த மக்கள்
உள்ளே சென்றனர்
மங்கள நாதம் திடீரென அதிகரித்தது
சற்று எட்டிப் பார்த்தேன்
பூக்கள் வீசப்பட்டன
அனைவரிடமும் கோலாகலம்
உணவின் மணம் மூக்கை இழுக்கத் தொடங்கியது
ஏதோ என் இனத்தோர் அருகில் இருப்பது போல தோன்றியது
திரும்பினேன் என்னைப் போன்று மூன்று நாய்கள்
அவர்களுடன் கூட்டிணைந்தேன்

மங்கள நாதம் சற்று குறையத் தொடங்கியது
உணவின் மணத்தை நான் தொடர்ந்து சென்றேன்
என்னைத் தொடர்ந்தனர் என்று நண்பர்கள்
நாடிச் சென்ற இடம் சமயலறை
நாய்களே தள்ளிப் போங்க என் என்னையும்
என் தோழர்களையும் விரட்டி அடித்தனர்
செல்வந்தனொருவன் வறியவனாகி
செல்வந்தனிடம் கடன் கேட்க சென்று
நாணத்தால் திரும்பி வந்து
பின் மீண்டும் சென்று நாணத்தால்
வருவதைப் போல
உணவின் வேட்கையால் சென்ற நான்
அடியின் பயத்தால் திரும்பினேன்
சற்று நேரம் காத்திரு
என கூறியது என் உள்ளம்

திடீரென படபடவென்று சத்தம்
திரும்பினேன், கண்களுக்கு தோன்றியது
உணவுடன் கூடிய எச்சு இவைகள்
உணவை அடைந்த ஆனந்தத்தில்
வழித்தடித்து உண்டேன்
இரு வாரமாக உணவை காணாத
தெருநாய் எனக்கு அது ஒரு அளவில்லா ஆனந்தம்
என்னை நாட வைத்த
நாத ஒலிக்கு பலகோடி நன்றிகள்

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் கிழ்பிரிவில் முதலாம் இடம் பெற்ற சிறுகதை

"எண்ணித் துணிக கருமம்"

மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பிலே, முட்டுச்சந்தியிலே ஒரு கிராமம். அக்கிராமத்திலே அறிவுக்கும் திறமைக்கும் பெயர்போன ஒரு பாடசாலை. அப்பாடசாலையிலே அழகும் அறிவும் நிறைந்த ஒரு மாணவன் அவனே கந்தன். எத்தனை அழகும் அறிவும் காணப்பட்டாலும் அவனிடம் சிறு கடுகளவு கூட தைரியமில்லை. பாடசாலையில் நடைபெறும் போட்டிகளில் சேராமல் அவனை அவனே தாழ்த்திக் கொள்வான். அவனது வகுப்பாசிரியர் எவ்வளவு தான் திட்டடினாலும் அவனது பழக்கத்தை அவன் மாற்றிக் கொள்ளவே மாட்டான்.

ஒருநாள் "பாடசாலை மட்டத்திலான சிறு கவிதைப் போட்டி ஒன்று நடைபெறப் போகிறது", என்று பாடசாலை அதிபர் திரு. கணேசலிங்கம் அவர்கள் அறிவித்திருந்தார். இதைக் கேட்ட பாடசாலை மாணவர்கள் அனைவரும் கந்தனை ஒரு நொடி உற்றுப் பார்த்தனர். ஏனெனில் கந்தன் பாரதிதாசனைப் போன்று கவிநயமாக கவிதை எழுதுபவன். வகுப்பாசிரியர் கந்தனிடம் சென்று இப்போட்டியிலாவது கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டார். ஆயினும் கந்தன் 'பயமாயிருக்கிறது, நான் ஒழுங்காக எழுதமாட்டேன் என்று பொய்ச் சான்றுகள் கூறி தப்பித்து விட்டான். இதை ராஜேஷ், ரமேஷ், கணேஷ் ஆகியோர் கவனித்துக் கொண்டிருந்தனர்.

ஆசிரியரிடமிருந்து தப்பித்து கந்தன் இடைவேளைக்கு வெளியே வந்து மாமர நிழலில் உட்கார்ந்து தாய் அனுப்பிவிட்ட தேங்காய் சட்னியை சாப்பிட்டுக் கொண்டிருந்தான். எங்கோ இருந்த ராஜேஷ், ரமேஷ், கணேஷ் ஆகியோர் கூட்டமாக வந்து கந்தனிருகில் அமர்ந்தனர். கதையோடு கதையாக ராஜேஷ் ரமேஷைப் பார்த்து, "ஏன்டா, ரமேஷ் ஒரு சின்ன கவிதையை கூட எழுத தெரியாம பாடசாலையில் படிக்கிறானா இவன்!" என்று கேலியாக கூறி ஏளனமாக சிரித்தனர். கந்தன் இவர்களின் தொல்லையை தாங்க முடியாமல், கண்ணை கசக்கிக்கொண்டு வீட்டிற்கு ஓடினான்.

வீட்டிலே கந்தனின் தாய் காரணம் என்னவென்று தெரியாமல் கந்தனின் நிலையை பார்த்து கவலையடைந்தாள்.

கந்தன் மூவரும் கூறியதை எண்ணி நிறைய நேரமாக யோசித்துக் கொண்டிருந்தான். அவனின் மனதில் 'அவர்களின் முன்னால் வெற்றி பெற்று சாதிக்க வேண்டும்' என்ற எண்ணம் வெறித்தனமாக தோன்றியது. அவ்வெண்ணத்தோடு அன்றிரவு அவன் கடுமையாக பல கவிதைகளை எடுத்து கற்றான். அவனின் வெறித்தனம் அவனை சோம்பேறித்தனத்திலிருந்து மீட்டது.

மறுநாள் காலை அவன் தனது புத்தகப்பையை தோளில் சுமந்து கொண்டு வேக வேகமாக பாடசாலைக்குச் சென்றான். வகுப்பாசிரியரிடம் வேகமாக சென்று அவரின் காதில் இரகசியமாக ஏதோ ஒரு விடயத்தை கூறினான். அதைக் கேட்டவுடன் ஆசிரியரின் முகத்தில் ஒரு எல்லையற்ற சந்தோஷம்.

மாணவர்கள் அனைவரும் பாடசாலைக்குள் வந்தவுடன் ஆசிரியர் அனைவரையும் கூப்பிட்டு "கந்தன் அக்கவிதைப் போட்டியிலே கலந்து கொள்ளப் போகிறான். அவனின் துணிச்சலை எண்ணி நான் சந்தோஷப்படுகிறேன்" என கூறினார். அதைக் கேட்டவுடன் அனைத்து மாணவர்களின் முகங்களிலும் சந்தோஷம் ஏற்பட்டது. ஆயினும் ராஜேஷ், ரமேஷ், கணேஷ் ஆகியோரின் முகங்களில் மட்டும் எரிச்சலும் பொறாமையும் காணப்பட்டது.

அக்கவிதைப் போட்டியின் நாளும் வந்தது. வழமையைப் போலவே கந்தன் தனது புத்தகப்பையை மாட்டிக் கொண்டு பாடசாலைக்கு சென்றான். அங்கே கவிதைப் போட்டி நடைபெற்றது. அவனுக்கு கிடைத்த தலைப்பு "எண்ணித் துணிக கருமம்" அவன் மெல்லிய புன்னகையுடன் தனது வாழ்க்கை வரலாற்றையே கவிநயமாக எழுதினான்.

மறுநாள் காலை அதிபர் உரையின் போது அக்கவிதைப் போட்டியின் முடிவுகளை அறிவித்தார். முதலாவதாக 3ம் இடத்தைப் பெற்ற மாணவனின் பெயரை வாசித்தார். அடுத்ததாக இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவனின் பெயரை வாசித்தார். திடீரென்று ஒரு குரல் "பெரிய கவிஞன் என்று நினைத்தான். ஆயினும் 3வது இடத்தையாவது பெறவில்லை" என்று ராஜேஷ் கேலி அடித்தான். அவர்களின் முகங்களில் கரியைப் பூசும் வித்தில் வந்தது, இறுதி முடிவு. அதிபர் சிறிய புன்னகையுடன் "1ம் இடத்தை பெற்றிருப்பவர் கந்தன்" என்று கூறினார். கந்தனுக்கு எல்லையற்ற சந்தோஷம்.

அளவிலா மகிழ்ச்சியுடன் அனைவரும் கோஷமிட்டனர். மூவரும் வெட்கத்துடன் தலை குனிந்தனர். அன்று முதல் கந்தனை யாரும் கேலி செய்வதில்லை. ஆசிரியர் பெருமிதத்துடன் கூறினார். "கந்தனைப் போல் நாமும் ஒரு காரியத்தை எண்ணி துணிச்சலுடன் செய்ய வேண்டும்". "என்பதை நாமும் எனது வாழ்வில் எடுத்து பல சாதனைகள் செய்து வெற்றி பெறுதல் வேண்டும்"

"எண்ணித் துணிக கருமம்"

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்தியபிரிவில் முதலாம் இடம் பெற்ற சிறுகதை

புறப்படு தோழா

காலி கிராமம் என்னும் ஒரு சிற்றூரிலே பொன்னி என்னும் ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு வயது 40. அவள் கணவன் திருமணமாகி இரு வருடங்களில் ஓர் திடீர் விபத்தில் இறந்து விட்டான். அவள் மகள் சுனிதா. வயது பதினைந்தே நிறைவுற்றவள் அழகின் தேவதை. குழந்தைத் தனத்திற்கும் குறும்பிற்கும் எல்லையற்றவள். எனினும் தாய் மேல் பாசம் கொண்டவள். படிப்பில் கெட்டிக்காரி. குடும்ப சூழ்நிலை அறிந்து பண்புடனும் பணிவுடனும் நடப்பவள். சாதாரண பொதுத் தராதர பரீட்சையில் தற்போது நற்சித்திகளை பெற்று விட்டாள். ஆனால் குக்கிராமமாகிய அவளது கிராமமதில் உயர்தர கல்வி கல்லாததனால் தான் பிறந்து வளர்ந்த கிராமத்தை விட்டு, ஓடி ஆடிய வயலை விட்டு, அவள் குறும்பை சகிக்கும் அயலாரை விட்டு, விளையாடும் தம்பி தங்கையர், ஆறு என தன் உள்ளம் ஈர்ந்ததை விட்டு நகரம் செல்கிறாள்.

கண்ணீர் நிறைந்த கண்களோடு ஊர் மக்கள் அவளை வழியனுப்பி வைக்க நல்ல நிலைக்கு வரவேண்டும் என்ற வைராக்கியத்தோடு பொன்னியுடன் நகருக்கு செல்கிறாள். சற்று மணித்தியாலங்களுக்கு பின் நகரை அடைகின்றனர். ஏதோ அவளுள் புதுவித தயக்கம். காரணம் பச்சேல் பசேல் எனும் வயல், வழிந்தோடும் ஓடை, அமைதியான சூழல் இவற்றுக்கு பதிலாய் குப்பை நிறைந்த இடங்கள், நெருங்கிய மாடி கட்டிடங்கள், வழிந்தோடும் சாக்கடை, வாகனங்களின் பேரிரைச்சல் அவளை பயமுறுத்துகின்றன. இவர்கள் வந்தது ஏன்? பொன்னி சுனிதாவை ஓர் மடத்திற்கு அழைத்துச் சென்றாள்.

அது தங்கி கல்வி கற்றும் இடம். அதன் உரிமையாளர் பெரும் கொடுமைக்காரி. அவள் பெயர் மல்லிகா. பணத்திற்கு ஜால்ரா போடுபவள். விருப்பமின்றி சுனிதாவை சேர்த்துக்கொள்கிறாள். இரட்டைசடை பின்னிய சுனிதாவை பார்க்கும் போதே அவளுக்கு வெறுப்பு. பொன்னியிடம் "உன் மகள் கவனமாயும், ஒழுங்காக கல்வி கற்க வேண்டுமாயின் நீ மாதா மாதம் 10ம் திகதிக்கு முன்னமே பணம் கட்டிவிட வேண்டும். இல்லையேல் உன் மகள் இங்கு படிக்க அனுமதிக்கப்படமாட்டாள். ஊருக்கே திரத்தி விடுவேன்" என தன் உரத்த குரலில் கூறுகிறாள். "சரி அம்மா" என பொன்னியும் பதிலளித்தபடி தன் இதயத்தை அங்கே விட்டு செல்லும் உணர்வுடன் வீடு திரும்புகிறாள்.

அன்னையை பிரிந்த துயரத்தை விட தைரியம் நிறைந்தவளாய் தன் அறைக்கு செல்கிறாள். ஏற்கனவே அந்த அறையில் சிந்து, பவி என இருவர் தங்குகின்றனர். அவர்களுக்கு ஒழுக்கம் என்றால் என்னவென்றே தெரியாது. அவர்கள் சுனிதாவை ஒருவழி செய்து விடுவார்கள் என்பதை அறிந்தே மல்லிகா அந்த அறையில் தங்க வைக்கிறாள்.

அறை வாசலிலே நின்று சிந்துவும், பவியும் சுனிதாவை கேலியோடும் கிண்டலோடும் வரவேற்றனர். இதை கண்டு பயந்த சுனிதா ஓ.... என அழுகிறாள். சீ..... சீ .... என்றபடி

சிந்துவும், பவியும் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடுகின்றனர். மறுநாள் காலை "ஏய்! சுனிதா" என மல்லிகாவின் குரல் கேட்டு பயத்தில் வேக வேகமாய் ஓடிய சுனிதாவை சிந்து மறைத்ததனால் சுனிதா கீழே விழுந்து விடுகிறாள்". "ஐயோ!!!" என அவள் குரல் கேட்டு மல்லிகா என்ன நடந்தது என கேட்க எதையும் கூறாது தான் தெரியாமல் விழுந்ததாக கூறுகிறாள். எனவே மல்லிகாவும் அதை பொருட்படுத்தாது சென்று விடுகிறாள்.

சுனிதாவால் எழுந்திருக்க கூட முடியவில்லை. சிந்தும், பவியும் அவளிடம் மன்னிப்புக் கேட்டு அவளை தூக்கி விடுகின்றனர். மிகுந்த சிரமத்தோடு அவள் எழுந்திருப்பதை கண்டு மனம் நொந்து பவி மல்லிகாவிடம் சுனிதாவின் நிலையை பொன்னியிடம் சொல்வோமா என கேட்க அவளை திட்ட முடியா காரணத்தால் வலியில் வாடும் சுனிதாவை வார்த்தை முட்களால் குத்துகிறாள். எனவே பவி கள்ளத்தனமாய் எவ்வாறோ இதை பொன்னியிடம் அறிவித்து விடுகிறாள்.

மறுநாள் விடியும் முன்னமே பொன்னி அலறி அடித்துக் கொண்டு ஓடி வருகிறாள். இதை சுனிதா தான் சொல்லியிப்பாள் என எண்ணி கோபத்தோடு சுனிதாவை பார்க்க விடாது பொன்னியை விரட்டி விடுகிறாள். பின் சுனிதாவை வந்து திட்டுகிறாள். அந்த தருணத்தில் பவி தான் தான் அறிவித்ததாக கூற வாயடைத்தவளாய் மல்லிகா சென்று விடுகிறாள். எதிரியாய் இருந்த சிந்துவும், பவியும் நண்பர்கள் ஆனார்கள். சுனிதா தன் சுக துக்கங்களை அவர்களோடு பகிர்ந்து கொள்கிறாள். கல்வியில் அக்கறை செலுத்தாது திரிந்த பவி மற்றும் சிந்து மனம் திருந்தி விட்டனர். ஆனாலும் தனக்கு பிடிக்காதவளோடு ஓர் கூட்டணியா? என திமிரில் மல்லிகாவின் ஆட்டத்திற்கு அளவே இல்லை. எனினும் தன் தாய் கஷ்டப்பட்டு கல்வி கற்க வைக்கிறாள் என்பதனாலும் தனக்கு பக்க பலமாய் நண்பர்கள் இருக்கிறார்கள் என்பதனாலும், மல்லிகா ஓர் நாள் அல்லது ஓர் நாள் தன்னை புரிந்து கொள்வாள் என எண்ணி அனைத்தையும் தாங்கிக் கொள்கிறாள்.

இரண்டு வருடங்கள் காற்றாய்ப் பறந்தன. உயர்தர பரீட்சையும் வந்தது. சுனிதா, சிந்து, பவி அனைவரும் நன்கு செய்தனர். இன்னும் சில மாதங்கள் துள்ளியடித்து கழிந்தன. பரீட்சை பெறுபேறுகளும் வந்தன. மூவரும் நல் சித்தி பெற்றிருந்தனர். மூவரும் தங்கள் வீடுகளுக்கு செல்ல மல்லிகாவிடம் ஆசீர்வாதம் பெற செல்லுகையில் மற்றைய இருவரை ஆசீர்வதித்த மல்லிகா சுனிதாவை ஆசீர்வதிக்கவில்லை. துயரோடு வீடு செல்கிறாள் சுனிதா. நல்மதிப்பு பெற்ற சுனிதாவிற்கு ஊரில் ஒரே வரவேற்பு தான் பட்ட துயரிற்கு பிரதிபலன் கிடைத்ததாய் உணர்கிறாள்.

சில வருடங்களுக்கு பின் மூவரும் சந்தித்துக் கொள்கின்றனர். நலம் விசாரித்ததோடு ஓர் நல்லெண்ணமும் அவர்களுள் தோன்றிற்று. அது தான் ஓர் ஆதரவற்றோர் இல்லம் ஆரம்பித்தல். இந்த யோசனை வெற்றிகரமாக நடைபெறற்று இல்லமும் திறக்கப்பட்டது. தான் சொத்துக்கள் இழக்கப்பட்டதால் மல்லிகாவே அங்கு வந்து தங்கும் நிலமை. சுனிதாவோ கோவத்தை அவள் மேல் காட்டவில்லை. அதற்கு பதிலாய் பாசத்தை காட்டுகிறாள். மல்லிகாவோ மனம் திருந்தியவளாய் சுனிதாவை புரிந்து கொள்கிறாள். சுனிதாவின் எண்ணமும் வைராக்கியமும் நிறைவேறிற்று.

எனவே நாமும் எம் வாழ்வில் வரும் துன்பங்களை கண்டு துவண்டு போகாமல் வாடி நிற்காது முயற்சி செய்வோம் முன்னேறுவோம்.

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மேற்பிரிவில்
முதலாம் இடம் பெற்ற சிறுகதை

அடையாளங்கள்

சில்லென்ற காற்று மோதும் அந்தக் கடற்கரையோரம் அவன் வருவானா என்ற தவிப்பில் இதயத்தில் பதற்றத்தோடு காத்திருந்தாள் நளினி. உயிரைக் கண்ணில் வைத்து கண்களை பாதையில் வைத்து அவன் வரவுக்காய் காத்திருந்தாள் அவள்.

அவ்வழியே ஒரு சிவப்பு நிற மோட்டார் பைக்கைக் காண்பதும் அது அவன்தான் என ஊர்ஜிதம் செய்தவளாய் விழிகளை வைத்தகண் வாங்காமலே அவ்விடத்தையே பார்த்து நின்றாள். மோட்டார் பைக் அவளை நோக்கிச் கிட்ட நெருங்கி வந்ததும் மலர்ந்து சிரிக்கும் குழந்தையைக் கண்டால் எவ்வாறான உணர்வு ஏற்படுமோ அதே உணர்வு அவளுள்.

நெற்றியில் புரண்ட ஒற்றைச் சுருள் முடிகளை தன் விரல்களால் ஒதுக்கிவிட்டவாறே வந்தவனுக்கு "ஹாய்" சொன்னாள் அவள். பதிலுக்கு, ஹாய் சொன்ன மகேஷை பொய்க்கோபத்துடன் திட்டத் தொடங்கினாள். என்ன மகி இவ்வளோ லேட் எவ்வளவு நேரமா வெயிட் பண்றன் தெரியுமா?" "ஹையோ அம்மணிக்கு கோபமெல்லாம் வருது. வேண்டாம்மா சூடு தாங்காதும்மா" என்று அன்பாய்ப் பேசி அவளது கோபத்தை அடக்கினான்.

"சரி நேரமாச்சு வாங்க போலாம்" என்று கூறியவனை வினாக்குறியுடன் பார்த்தான் மகேஷ். "எங்க போறது? இப்ப தானே வந்தன். அதுக்குள்ள போகணும்னு சொல்றியே. ஆமா! ஏதோ ஸப்ரைஸ்னு சொன்ன எங்க எதையும் காணோம்" சிறு பிள்ளைத் தனமாய் கேட்டான் மகேஷ். "அதுக்குத்தானே போகலாம்ணு சொன்னன். வாங்க ரெஸ்ரூரன்ட் போய் சொல்றன்" என்றவளை இடைமறித்து "என்ன கையில புதுசா ஒரு பாக் வச்சிருக்க ஏதாவது ஸ்பெஷலா? என்றவாறே பைக்கில் ஏறினான். அவள் மௌனமாகவே அவன் பின்னால் ஏறினாள். பைக் வழக்கமாய் அவர்கள் செல்லும் ரெஸ்ரேண்ட்க்குப் புறப்பட்டு சென்றது.

ரெஸ்ரூரன்டில் காலியான ஒரு மேசையை தேடிப்பிடித்து அதில் இருவருமாய் எதிர்எதிரே அமர்ந்தனர். மெதுவாக தன் கையில் இருந்த கேக் பெட்டியை வெளியே எடுத்தாள் நளினி. "இன்னிக்கு என்னோட பேத்டே அதுதான் இந்த ஸ்பெஷல்" என்றவாறே கேக்கை வெட்டி ஒரு துண்டை அவனிடம் நீட்டி இன்னுமோர் துண்டை தானும் ருஷி பார்த்தாள்.

சிறிது நேரம் இருவருமே மௌனம் காத்தனர். அமைதியை கலைத்தவனாக மகேஷ் எழுந்து "சரி வா கிளம்பலாம்" என்றவாறே தனது பைக்கை நோக்கிப் புறப்பட்டான். நளினியும் அவனைப் பின்தொடர்ந்தாள். நேராக பைக் ஒரு புடவை கடை ஒன்றின் முன்னால் நின்றது. "இப்போ இங்க ... எதுக்கு ...." என்றவளுக்கு விடயம் புரியவே அவனைப் பின் தொடர்ந்தாள். சேலைகள் வாங்கும் இடத்தில் வெண்மை நிறத்தில் சிவப்பு ரோஜாக்களினால் வேலைப்படுகள் செய்யப்பட்ட ஒரு சேலையை வாங்கி அதை, "இது என்னோட பேத்டே கிப்ட். அதுமட்டுமல்ல இது என்னோட அடையாளமும் கூட" என்றவாறே அதை அவளிடம் கையளித்தான். பதிலுக்கு

கன்னங்கள் குழிவிழ ஒரு சிறு புன்முறுவலை உதிர்த்தாள் நளினி.

அன்றைய நினைவுகளை அசைபோட்டவாறே புன்முறுவல் பூத்த முகத்துடன் வீட்டை நோக்கி நடக்கலானாள் நளினி ஆனால் அங்கே அவளது தூக்கத்தையும் மகிழ்ச்சியையும் கெடுக்கக்கூடிய ஒரு செய்தி காத்திருந்தது.

நளினி, மகேஷ் இரவரும் ஒரே ஆபிஸில் வேறு வேறு பிரிவில் வேலை பார்க்கிறவர்கள். ஆறுமாதங்களுக்கு முன்பு தான் மகேஷ் வேலை பார்க்கும் இடத்தில் வேலைக்குச் சேர்ந்தாள். கட்டான உடல், கொடி போன்ற அமைப்பு, எப்போதும் இதழ்களில் தவழும் ஓர் புன்னகை அதற்கு மேலாய் சுடிதாரில் கூட தேவதையாய் தெரிந்தாள் அவள். பார்த்ததுமே பிடித்துப்போயிற்று மகேஷிற்கு. அவள் மீது காதலையும் வளர்த்துக் கொண்டான். நாளாக ஆக அவனது காதல் எல்லை கடக்கலாயிற்று. ஒரு நாள் கடை வீதியில் வைத்து அவளைப் பார்த்ததும் ரெஸ்ரோறன்டுக்கு அழைத்துப் போய் அவளிடம் தன் காதலை வெளியிட்டான்.

அப்போதுதான் மகேஷை முதல் முறையாக ஒழுங்காக அவள் பார்த்தாள். நேரான பார்வை, கூர்மையான கண்கள், கட்டான தேகம், மென்மை தவழும் இதழ்கள். இதுவரை காதல் என்பதை அறியாத அவளுக்கு அவனை மறுக்கத் தோன்றவில்லை. அவனின் வேலை நேர சுறுசுறுப்பும் அவளை கவர்ந்தது. எனவே மகேஷின் காதலுக்கு பச்சைக் கொடி காட்டினாள். நாட்கள் உருண்டோடின. அவர்களின் காதல் வளர்ந்து கொண்டே சென்றது. வேலைத்தளத்தில் இருவரும் இயல்பாகவே நடந்து கொண்டனர். வெளியிடங்களில் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

இவ்வாறு கடந்து சென்ற அவர்களின் வாழ்வில் ஒரு புயல் அடிக்கும் என்று கனவில் கூட அவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை.

அன்று மகேஷ் கொடுத்த ஸாரியை எடுத்து தனது பெட்டியில் வைத்தவாறு தூங்கச் சென்ற வேளை கதவு கிறீச்சிடும் ஒலி கேட்கவே மெதுவாய் திரும்பியவள் அங்கே அவளது தந்தை நிற்பதைக் கண்டதும் திடுக்கிட்டாள். "என்..ன..ப்பா... இந்த நேர...த்து...ல' என்று திக்குமுக்காடியவாறெ கேட்டாள். அது ஒண்ணுமில்லையம்மா ஒனக்கு மாப்பிள்ளை பார்த்தாச்சு. இன்னைக்குதான் தரகர் போட்டோவ கொத்தாரு அதான் அத கொடுத்திட்டு போலாமேன்னு வந்தன். இந்தாம்மா வர்ர மாதம் பதினாறாம் தேதி நிச்சயதார்த்தம்" என்று சொல்லியவாறே போட்டோவை கையில் கொடுத்துவிட்டு போகத் தயாரானவரை தடுத்து நிறுத்தி "அப்பா நான் எங்க ஆபிஸ்ல இருக்கிற மகேஷை காதலிக்கிறன்பா.. ப்ளிஸ்பா வாழ்ந்தா அவர் கூடவே வாழுவன். என்ன மன்னிச்சிடுங்கப்பா" என்று தந்தையிடம் மன்றாடினாள் அவள். ஆனால் தந்தையோ அசைவதாய் இல்லை. "பெரிய பணக்காரன் மா சொன்னாக்கேளு பெரிய வேலைல இருக்கான். எனக்கு பணம் தான் முக்கியம். என்ன மீறி ஏதாவது செஞ்ச அப்புறம் என் பொணத்தைத்தான் பார்ப்ப. இனிமே நீ வேலக்கிப் போகக்கூடாது ரிஸைன் லெட்டரையும் நாளைக்கு நானே போய் கொடுத்துடுறன். நாளையில இருந்த நீ வெளியில போகவே கூடாது" என்று அதட்டியவாறு கோபமாய் வெளியேறினார் அவளின் தந்தை கேசவன்.

இதயத்தின் ரத்த ஓட்டமே நின்று போய் கை கால்கள் எல்லாம் மரத்து முள்ளின் மேல் இருப்பதான ஒரு வலியை உணர்ந்தாள் அவள். கண்கள் இரண்டிலும் இரட்டை அறுகள் பெருக்கெடுத்து ஓடியது. தலையணையில் முகம் புதைத்து விம்மி விம்மி அழுதாள். நிலவும் நட்சத்திரங்களும் சிரித்துக் கொண்டிருந்த அவ்வேளை அவளை அறியாமலேயே நித்ராதேவி அவளை அணைத்துக் கொண்டது. தூக்கத்தில் கூட விம்மல் சத்தம் தெளித்து விழுந்ததை யாரும் அறியவில்லை.

மறுநாள் எவ்வளவு மன்றாடியும் அவளால் தனது இலட்சியத்தை நிறைவேற்ற முடியாதவளானால். பகல் வேளை தந்தை வெளியில் சென்றதும் தாயிடம் நண்பியின் வீட்டுக்குச் செல்வதாய் பொய் சொல்லிவிட்டு மகேஷ் தந்த அந்த ஸாரியை மட்டும் அணிந்துகொண்டு கால் போன போக்கில் நடக்கத் தொடங்கினாள். பாதையில் வரும் ஒரு பஸ்ஸில் ஏறினாள். இன்னோர் இடத்தில் இறங்கி மீண்டும் கால்போன போக்கில் நடந்தாள். இவ்வாறு அவள் பயணம் தொடர்ந்தது.

நளினியின் வீட்டில் ஒரே பரபரப்பு நளினியைக் காணவில்லை என்று அவளது தாய் கேசவனை கொட்டித் தீர்த்தாள். ஆனால் கேசவனொ திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவராக மகேஷிடம் போய் "நளினி எங்கே" என்று கேட்கவே அப்போது தான் விடயமறிந்த மகேஷ் தன் தேடல் பயணத்தை தொடங்கினான். ஒரு மாதங்கள் அலைந்தும் அவள் கிடைக்கவே இல்லை.

நளினியின் நிலை பெரு மோசமாகியது. யாரைப் பார்த்தாலும் "என் மகீ எங்க? நீங்க தான் மகியா?" என்ற வார்த்தைகளோடு பாதைகளில் சுற்றித் திரிந்தாள். மகேஷின் அடையாளங்களாய் அவளிடம் அவன் கொடுத்த சேலை மட்டுமே அவள் மேனியில் மீதமிருந்தது. அவ் வெண்மையான சேலை கூட அவர்களின் காதலைப்போல் நசிந்து காணப்பட்டது.

With Best Compliments

from

Ravi

Jewellers (Pvt) Ltd

Ravi Forexae (Pvt) Ltd

(Authorised Money Changer)

115, Sea Street, Colombo 11, Sri Lanka.
Tel : (+) 94 11 2436358, 2448221, (+) 94 11 2392241, 2392242
Fax : (+) 94 11 2471966
Email : info@ravijeweller.slk Web : www.ravijewellers.lk

With Best Compliments

from

S. Sajishnavan
&
N.K. Abishekbharan

8D

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் - 2011 போட்டி முடிவுகள்.

மேற்பிரிவு

பேச்சு

1. S.Anushan	12-MSE
2. K.Pirabanjan	11-D
3. Y.Thirukumaran	12-MT
3. M.N.A. Rahuman	11-C

கவிதை

1. S.Arjunkumar	11-D
2. S.Ladurshan	11-C
3. S.A.A.Azahim	11-D

கட்டுரை

1. T.Amirthan	11-C
2. M.H.Ansaf Ahamed	12-ST
3. S.A.A.Azahim	11-D

சிறுகதை

1. A.Senthuran	11-C
2. K.Bahirathan	11-D
3. S.Balagajan	11-D

மத்தியபிரிவு

பேச்சு

1. B.Gajive	10-C
2. T.Kantharupan	10-C
3. N.Thiloshan	10-C
3. M.Pravienth	10-D

கவிதை

1. S.Sharma 9-D
2. N.Thiloshan 10-C

கட்டுரை

1. A.Sanjayan 9-C
2. B.Gajeev 10-C
3. Ilham Hasali 10-C

சிறுகதை

1. N.Thiloshan 10C
2. A.Sanjayan 9-C
3. P.Sharunthan 10-D

கீழ்ப்பிரிவு

பேச்சு

1. T.Mayooran 8-D
2. A.G. Balaratnaraja 7-C
3. M.I.M.Izyaan 7-D
3. K.Janagan 7-C

கட்டுரை

1. A.G.Balaratnarajah 7-C
2. C.Kanishgar 8-D
3. J.Satchin 6-C

பாடசாலைக்குள்ளான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்தியபிரிவில்
முதலாம் இடம் பெற்ற கவிதை

தூறல் நிற்கவில்லையே

தூறல் நிற்கவில்லையே
மழைத்துளிகள் பெய்கின்றனவே
என்ன செய்வதென் றறியேன் - இறைவா
சொல்லு என்முன்னே

மின்னல் மின்னுகிறது
இடி இடிக்கின்றது
ஐயமாக உள்ளதே - மனம்
அங்குமிங்கும் துடிதுடிக்கின்றதே

தென்றல் காத்து வீசுகின்றதே
என் சரீரம் குளிர்கின்றதே
என்னை அறியாமல் - என்
மனம் எங்கோ பறக்கின்றதோ

பல நொடிகள் சென்றனவே
தூறல் நிற்கவில்லையே
எப்பொழுது நான் வெளியேறுவன் - என்
அருமையான பாடசாலைக்கு

சிறிது நேரம் தூறல் நின்றதும்
என்மனம் மலர்ந்தது
நான் வெளியேறும் பொழுது - தூறல்
மீண்டும் தூரத்தொடங்கியதே

கண்கள் களங்கிற்றே
மனமுடைந்து உள்ளே சென்றேன்
பாடசாலைக்கு நேரமாயிற்றே - என்
அன்னை ஆறுதல் செய்தாள்

சிறுது நேரம் முற்றத்திற்குச் சென்றேன்
தூறல் என் மேனியிற் சொட்டின
தந்தை என்னை உள்ளே அழைத்து - எனக்கு
ஜலம் வரும் என்று கூறினார்
தூறல் நிற்கவில்லை
மனம் கவலையுற்றேன்
தந்தையிடம் கூறினேன் - அப்பொழுது
ஒரு அழகிய குடையைத் தந்தார்

நேரம் சென்று விட்டது
என் மனம் படபடத்தது
பெற்றோர்களிடம் கூறி - நான்
பாடசாலைக்குப் புறப்பட்டேன்

காற்றினால் தூறல்கள் என்மேல்பட
குடையை விரித்து பிடித்தபடி
இத்தூறல் இப்பொழுது நிற்காது என எண்ணி - நான்
பாடசாலைக்கு மகிழ்வாகச் சென்றேன்

பாடசாலைக்குள்ளான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மேற்பிரிவில்
முதலாம் இடம் பெற்ற கவிதை

இனியுமா?

எம்வாழ்வு - மூன்றுவரிச்
சரித்திரம்
பட்டோம்!
படுகின்றோம்!
இனியுமா?
இந்தக் கேள்வியுடன்
காத்துக் கிடக்கும்
நாமொன்றும்
புதியவர்களல்ல!

'நாம்' - எமக்குச் சொந்தமான
ஒரேயொரு வார்த்தை
இந்தப் பிரபஞ்சத்தில்

நாம்
ஒரு கோப்பை நீருக்கு
ஒரு கட்டை ஏறும்
சாதி ....
அகதிகள் முகாமில்
மந்திரிமாரின்
உறுதியற்ற உறுதிமொழிகள்
பொய்யென அறிந்தும்
நம்பிக்கெடும் தமிழர் சாதி!

சுதந்திரம் - அன்றும்
இன்றும்
என்றும் எமக்கு
எட்டாக்கனி
சீ ... இந்தப் பழம் புளிக்கும் போலும்.....

எங்களுக்கும்
காலம் வருமென்ற
பகல் கனவுடன்
பகற்குருடுகளாய்
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்!

தமிழன் தலை நிமிர்ந்த
காலங்கள்
சரித்திரமும் வெறுக்கும்
கறுப்பு நாட்கள்

'அகதிகள்' என்ற பெயர்
தமிழனின் அடையாள
அட்டையில்
இடம்பெறாதது தான் மிச்சம் ....
அடையாளமே அன்றி
வாழும் தமிழன் இங்கு விதிவிலக்கு!

நாங்கள் விட்ட
ஒரே தவறு - இங்கே
தமிழனாகப் பிறந்தது

எங்கள் கதை
கல்லைக் கரைய வைக்கும்
கதை!
உங்கள் நெஞ்சம்
எங்கள் கதையைக் கதற வைக்கும்
கல் நெஞ்சம்

செத்த பாம்பை அடித்து
விட்டு
சிங்கத்தை அடித்துவிட்டோம்
என நினைக்கும்
எதிரிகள் - எமது எதிரிகள்!

வசந்தம் என்ற பெயரில்
வதை தரும் இந்தப்
பேய்க்குணம் - இவர்களுக்குப்
பெருமையான விடயம்?!

இன்றெமக்கு
சுதந்திரமும்
விலைக்குத்தான் என்ற
நிலை ...
களைகளெனப் பிடுங்கி
எறியப்பார்க்கும்
கொலை வெறி - எதிரிகளுக்கு விளையாட்டு

இன்று
எமக்கு - சொந்த ஊர்
சிங்கப்பூர் செல்லும் தூரம்!
நாம் சிந்திய
இரத்த ஆறு - மாவலியின்
ஆறு மடங்கு!

`அம்மா` என்று அழக்கூட
எமக்கு சீவனில்லை
இனியும் எம்குறை தீராவிட்டால்
இறைவன் என்று
ஒருவன் இல்லை!

சுவாசிக்க மட்டும் தானா காற்று?
எமக்குக் காற்று
ஒரு வேளை உணவு

வீரம் ....
கடந்த சில ஆண்டுகளாக
எம்மிடம் இல்லாதது!
மனதிலே ஈரம் ....
கடந்த சில ஆண்டுகளாக
எம் எதிரிகளிடம் இல்லாதது!

அத்தனை அழுகைகளைத் தாண்டி
சிந்திய இரத்தத்தைத் தாண்டி
நாம் வாழும் வாழ்வு - ஈனவாழ்வு!

போர் முடிந்தது என்றார்கள் ....
சமரசம் என்றார்கள் ....
எங்களை சகோதரர்கள் என்று வேறு
சொன்னார்கள் ....
நல்லகாலம் என நினைத்தோம்
இந்த ஈன வாழ்வு இனியுமா?
நம்பிக் கெடுவது தமிழின் மரபு

குட்டக் குட்டக் குனியோம்!
எம்மைக்
குனிய வைத்துக் குட்டுகிறார்கள்!

நேற்றும் பட்டோம் - அடி
இன்று விழுவதோ இடி
இனியுமா?
உயிருள்ள வரை போராடிப் பார்ப்போம் ....

With Best Compliments from

Bambalapitiya

HEALTH CARE

Channelled Consultants

Consultation Hours
Monday - Sunday
8.30am - 8.30 pm

Appointment at
403, Galle Road, Bambalapitiya, Colombo 04

NEW SELLKANS

Pharmacy & Grocery

401, Galle Road, Colombo 04
Tel : 0112588195 / 0112 588215 Mobile : 0777 606858

With Best Compliments

from

KOTAHENA CHEMIST

Wholesale & Retail Dealers in Pharmaceuticals, Chemist, Druggists, Grocers

No. 58, Bonjean Road, Colombo 13
Tel : 011-2334684

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் கிழ்பிரிவில்
முதலாம் இடம் பெற்ற கட்டுரை

பெற்றோரைப் போற்றுவோம்

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்று வரிசைப்படுத்தும் நம் முன்னோர்களில் "அன்னையும் பிதாவும் முன்னேறி தெய்வம்" என்ற மணியான வாக்கையும் மொழிந்துள்ளார். தமிழ்புலவர் ஔவையார். இந்த உலகத்தின் அனைத்து சக்திகளிற்கும் அப்பாற்பட்ட உறவு முறையானவர்கள் தான் இந்தப் பெற்றோர்கள். நாம் கடவுளைக் கண்ணால் காண்பதில்லை. ஆனால் கடவுளின் உருவில் நாம் நமது பெற்றோர்களையே காண்கிறோம். நாம் கடவுளாக நினைக்கும் இத்தாய் ஆனவள் எம்மை வயிற்றில் பத்து மாதம் சுமக்கும் போது அத்தாய்க்கு ஏற்பட்ட கஷ்டங்கள், வேதனைகள் தான் என்ன! ஆனால் தாய் வேதனையைப் பொருட்படுத்தாமல் சந்தோப்படுகிறாள். குழந்தையாக நாம் பிறந்த பின்பு எம்மைத் தோளில் போட்டு சீராட்டி வளர்த்த எம் தந்தையின் தோள்கள் வலித்த வேதனை தான் என்ன! ஆனால் அதையும் பொருட்படுத்தாமல் எம்மைத் தோளில் சுமக்கிறார். கல்வி புகட்டுகின்றார்.

நமக்குத் துன்பங்கள் வரும் போது நம்மை ஆற அனைக்கும் இந்தப் பெற்றவர்களைப் பார்க்கும் போது நம் துன்பங்கள் பறந்தோடி நாம் மகிழ்ச்சியை அனுபவிக்கிறோம். நாம் ஒரு வெற்றிக் கேடயத்தை பெற்றுக் கொண்டு வரும் போதும் நம்மைப் பலர் போற்றும் போது தாய் அடையும் மகிழ்ச்சியை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அதையே திருவள்ளுவரும் "தன் மகனை சான்றோன் எனக்கூறும் போது தாயானவள் தன் மகனை ஈன்றெடுத்த மகிழ்ச்சியை விட மேலதிகமாக மகிழ்ச்சியை அவ்வேளையில் அடைகின்றாள்" எனக் கூறுகிறார். தந்தை வேலை விட்டு களைப்பில் சோர்வாக வரும் போது தாய் தன் மகன் கல்வியில் உயர்ந்த நிலையில் உள்ளான் எனக் கூறும் போது தந்தையின் முகத்தில் இன்பம் பொங்குகின்றது. ஏனெனில் கல்வியின் அத்திவாரமே தந்தையல்லவா!

பண்டிகைகள், பிறந்தநாள் என்பவற்றின் போது தமக்கு எதுவும் வாங்காமல் தம் பிள்ளைகளிற்கு உடைகள், விளையாட்டுப் பொருட்கள், பரிசுகள் என்பவற்றை வாங்கித் தரும் பெற்றவர்களின் மனம் எவ்வளவு அன்பு மிக்கது என சிந்தித்துப் பார்ப்போம். மற்றும் நாம் பாடசாலை விட்டு வீடு வரும் போது எம்மை அரவணைத்து தான் உணவு உண்ணாமல் எமக்கு ஊட்டி மகிழும் அத்தாயின் வயிற்றில் பிறக்க நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்கள்! தந்தை வேலை விட்டு வந்ததும் ஓய்வாக இருக்காமல் எம் நலனை பொருட்படுத்தி பாடசாலை வேலைகளையும் பாடங்களையும் சொல்லித் தரும் நம் தந்தையின் தோளிலும் மார்பிலும் வளரும் நாம் எத்துணை அதிர்ஷ்டசாலிகள்!.

தமக்கு எத்தணை துன்பம் வந்தாலும் அதை மனதிற்குள்ளே பூட்டி வைத்து விட்டு எம்மோடு மகிழ்ச்சியாக இருக்கும் இந்தப் பெற்றவர்களை நாம் போற்ற வேண்டும். அதனால் தான் "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என நம் முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளனர் போலும்! நாம் நம் பெற்றோருக்கு எவ்வளவு துன்பங்கள்,

கஷ்டங்கள் என்பவற்றைக் கொடுத்தாலும் நம்மை மார்பிலும் தோளிலும் வைத்துக் கண்ணுக்குக் கண்ணாக காக்கும் இப்பெற்றவர்கள் முன் எல்லாமே தூசுக்கு சமம் தான்.

எங்கு நாம் செல்லும் போதும் நமக்கு கன்னத்தில் முத்தமிட்டு வழியனுப்பும் தாய், அரவணைக்கம் தந்தை இவர்களை நாம் தெய்வத்துக்கு சமமாக மதித்துப் போற்ற வேண்டும். நம் வாழ்க்கை எனும் போட்டியில் வெற்றி பெற உதவுபவர்கள் இந்தப் பெற்றோர்களே! நமது வாழ்வு எனும் ஏணிப் படிகளில் சிறிது சிறிதாக ஏற உதவுபவர்களும் இவர்களே! நம் வாழ்க்கையில் நாம் தோல்வியைச் சந்திக்காமல் வெற்றி எனும் ஆதாயத்தை பெற உதவும் இவர்களை நினைத்து நாம் பெருமைப்பட வேண்டும்.

மாணிக்கம், இரத்தினம், வெள்ளி, தங்கம், முத்து என்பவை விலை மதிப்பானவை. ஆனால் அவற்றை விட தாய்ப்பாசம் விலை மதிக்கத்தக்கது. மாணிக்கம், இரத்தினம், வெள்ளி, தங்கம், பொன், வைரூரியம் என்பவற்றை திருடர்கள் கொள்ளையிடலாம், பணத்தால் வாங்கிவிடலாம். ஆனால் தந்தையின் அரவணைப்பையும், தாய்ப்பாசத்தையும் திருடர்கள் கொள்ளை இடவும் முடியாத பணத்தால் வாங்கிவிடவும் முடியாது.

இன்று தாய்ப்பாசம், தாயின் அன்பு, தந்தையின் அன்பு என்பவற்றைப் பற்றி பாடல்கள் வெளிவருகிறது ஏன்? என நாம் சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா? தாய் தந்தையின் பாசத்தை நாம் விலைக்கு விற்றுவிட முடியாது. நாம் எவ்வளவு கஷ்டங்களை சந்தித்து வந்தாலும் அந்த தாயின் கண்ணகிலிருந்து கண்ணீர் வரும். தந்தையின் உள்ளத்தில் சோகம் குடிகொள்ளும். ஆனால் நாம் அவற்றைப் பொருட்படுத்தாது தாய், தந்தையை தூற்றுகின்றோம், ஏசுகின்றோம். ஆனாலும் அவர்கள் எம்முடன் அன்பாகவும், அரவணைப்பாகவும் இருக்கின்றனர். எம்மைப் பாராட்டி அன்புடன் வாழ்த்துகின்றனர்.

இன்று சிலர் தம் தாய் தந்தையை அநாதை ஆசிரமங்களிலும் முதியோர் மடத்திலும் விடுகிறனர். இவ்வாறு செய்வது சரியா என சிந்திப்போம். இவ்வாறு நம் சுகதுக்கங்களில் பிறந்தது முதல் இறக்கும் வரை பங்கேற்கும் இவர்கள் மனம் பித்து தான். இதையே சில முன்னோர்கள் "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" எனக் கூறுகின்றனர். அன்பையும் அரவணைப்பையும் பண்பையும் பாதுகாப்பையும் தந்து வழிநடத்தும் இவர்களை நாம் மதித்து போற்ற வேண்டும். அவர்கள் எந்த வயதை அடைந்தாலும் பெறுமதி மிக்கவர்களே எனவே பெற்றோரை போற்றுவோம்.

With Best Compliments

from

JONISON (P) LTD.,

IMPORTERS

No. 12-18, IX Pereira Street,
(Old Butcher Street)
Colombo 11, Sri Lanka.
Ph : 0094-11-2445227 Fax : 0094-11-2347474

With Best Compliments

from

United Stores

IMPORTERS, DEALERS IN SUDURU SAMBA, BASMATHI RICE, THAI RICE, IDHAYAM BRAND GINGELLY OIL & SAMBA VARIETIES

No. 46, Old Moor Street, Colombo 12, Sri Lanka.
Tel : 2434155, 2338685, Fax ; 2441758
Email : united4@sltnet.lk

With Best Compliments

from

OMEGA TRADERS

General Merchants & Commission Agents

No. 62A, Old Moor Street,
Colombo 12
T'phone : 2341747, 2432350
Fax : 2434905

With Best Compliments

from

SURIYAN

Importers & Exportes of all food items

No. 41, Old Moor Street, Colombo 12.
Tel : +94 11 2338455, 5738191 Fax : +94 11 2330040
Email : suriyan50@yahoo.com

பாடசாலைக்குள்ளான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்தியபிரிவில்
முதலாம் இடம் பெற்ற கட்டுரை

ஒழுக்கம் விழுப்பம் தரும்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் - ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்பது பொய்யாமொழிப்புலவரான திருவள்ளுவரின் புனித வாக்கு. ஒழுக்கமானது எமது வாழ்வில் கட்டாயமாக இருக்க வேண்டும். ஒழுக்கம் அதிலும் நல்லொழுக்கமானது ஒவ்வொரு மனிதனது வாழ்வை நெறிப்படுத்தும், வாழ்வை உன்னத நிலைக்கு இட்டுச் செல்லும் சாதனங்களில் முக்கியமானதொன்று. நல்லொழுக்கத்தின் பெருமை மற்றும் சிறப்பை உணர்ந்தே திருவள்ளுவர் தனது இனிய நூலான திருக்கறளில் ஒழுக்கத்தைப் பற்றி ஒரு அதிகாரத்தையே இயற்றியுள்ளார்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் - தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்"

என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவர் தனது வாழ்வில் நல்ல பல ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வந்தால், அவரை ஊர் போற்றும்; உலகம் போற்றும் மாமனிதர் ஆவார். எமது வாழ்வில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்களாக உண்மை பேசல், விட்டுக்கொடுத்தல், பொறுமை, உயிர்களிடத்தில் அன்பு காட்டல் போன்றவற்றைச் சொல்லலாம். இவை எமது வாழ்வை அதி உன்னத இடத்திற்கு இட்டுச் செல்வன என்றால் மிகையாகாது.

"உண்மை பேசி உத்தமனாய் வாழ்"

என்பது மூத்தோர் வாக்கு. உண்மை பேசுவதால் எந்தவொரு தீமையும் ஏற்படப் போவதில்லை. இதற்கு சிறந்த உதாரணம் அரிச்சந்திரர் ஆவார். தனது வாழ்வில் ஒரு முறை கூடப் பொய் பேசாது வாழ்ந்தவர். இவ்வாறான நல்லொழுக்கங்களைப் பேணும் உன்னத மாந்தர்களின் புகழ் இவ்வுலகில் அழியவே அழியாது.

"பொறுத்தார் பூமியாள்வார், பொங்கினார் காடாள்வார்" என்பது சான்றோர் வாக்கு. பொறுமை எனும் குணம் காணப்படும் ஒருவர் தனது வாழ்வை அமைதியாகவும், நிம்மதியாகவும் களிப்பர். நாம் பொறுமையுடன் எடுக்கும் தீர்வுகள், முடிவுகள் என்பன எப்போதும் நல்லனவாகவும், சிறப்பானதாகவும் விளங்கும். இதற்குச் சிறந்த உதாரணம் கிரிசாம்பாள் கதையாகும். கடைசியாக உணவு எடுக்கும் அவளுக்கு, அந்த பஞ்சக் காலத்தில் சிறிய மோதகமே கிடைக்கும். ஆனாலும் அதை ஏற்று தன் தாயாருடன் பகிர்ந்துண்பாள். இதைக் கண்ட செல்வந்தர் சிறிய மோதகத்தினுள் மோதிரத்தை

வைத்தும், அதை திருப்பிக் கொண்டு வந்து கொடுத்து, செல்வந்தரால் பரிசு பெற்றவர். இது நடந்து பல நூற்றாண்டுகள் ஆனாலும், இன்னும் எம் நெஞ்சை விட்டு அகலாமைக்கான காரணம் நல்லொழுக்கம் ஆகும்.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் - ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

என்பது வள்ளுவர் வாக்கு. இதன் கருத்து என்னவென்றால் தீ அதாவது நெருப்பால் ஏற்பட்ட புண் ஆறினாலும், நாவினால் வெளிப்பட்ட தீயசொல்கள் எப்போதும் மாறவே மாறாது. நாம் தீய சொற்களைப் பாவிப்பதனால் மற்றவர்கள் எம்மை நேசிக்காமலும், எம்மை மதிக்காமலும் இருப்பர். எமது நாவினால் நல்ல, இனிய சொற்கள் பிறக்குமேயானால் நாம் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்வோம். அது மட்டுமின்றி எல்லா உயிர்களிடமும் இறைவன் உறைந்துள்ளார். இதனால், நாம் கூறும் தீயசொற்கள் இறைவனையே சாரும். இவற்றால் எமக்குக் கிடைக்கும் பயன் பாவங்கள் மட்டுமே ஆகும்.

நாம் உயிர்களிடத்தில் அன்பு செலுத்தல் வேண்டும். எம்மைப்போல் அவையும் உயிருள்ள ஜீவன்கள் ஆகும். எல்லா உயிர்களுள்ளும் இறைவன் வீற்றுள்ளார். நாம் உயிருள்ள ஜீவன்களுக்குச் செய்யும் தீமைகள், தீங்குகள் இறைவனையே சாரும். நாம் செய்யும் தீய செயல்கள் பஞ்சமகா பாவங்களுள் அடங்கும். நாம் நல்லொழுக்கங்களைப் பேணுவதால் எமது வாழ்வு மேன்மையடையும்.

திருவள்ளுவரின் புனித வாக்குப்படி நல்லொழுக்கமானது உயிரிலும் மேலாகக் கருதப்படும். நாம் நல்லொழுக்கங்களைப் பேணி, நல்லவர்களாய் வாழ்தல் அவசியமாகும். நல்ல பல ஒழுக்கங்களைப் பேணி வாழ்வை முன்னேற்றி சான்றோர் போற்ற நல்வாழ்வு வாழ்வோமாக. வாழ்வில் புண்ணியத்தைச் சேர்ப்போம்.

"ஒழுக்கம் பேணி சிறப்பாய் வாழ்வோம்"

With Best Compliments

from

Mahaaveer Metals

Importers, Geneal Hardware Merchants

326, 1st Floor, Old Moor Street, Colombo 12.
Tel : 5733161, 2381901 Mobile : 0777-788292, 0777-812825
Fax : 2424477

With Best Compliments

from

BESCO

BESCO STEEL CENTRE

Importes & General Hardware Merchants
Pioneer Sellers in Tor Steel

326, Old Moor Street, Colombo 12
Tel : 2334161, 2381901, 2447629, 5733161
Fax : 2424545

With Best Compliments

from

NEW COLOMBO STORES

167, 4th Cross Street, Colommbo 11
Tel : 2437405

With Best Compliments

from

N. Selvalingam

No. 28, 1st Chapel Lane, Colombo 06

பாடசாலைக்குள்ளான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மேற்பிரிவில்
முதலாம் இடம் பெற்ற கட்டுரை

திரைப்படப் பாடல்களும் தமிழ் இலக்கியமும்

தமிழின் மூலவடிவங்களான இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுள் நவரசங்களை வெளிக்காட்டும் தமிழாக நாடகம் திகழ்கிறது. நாடகங்களின் மேடை அரங்கேற்ற வடிவு, காலத்துடனான தொழில்நுட்ப வளர்ச்சியுடன் பாரிய மாற்றங்களுடன் இன்றைய உலகில் வெள்ளித்திரை என வர்ணிக்கப்படும் திரை அரங்குகளில் திரைப்படங்களாக நவரசங்கள் ஒன்பதினையும் அளித்து மனிதனின் ஐம்புலன்களிற்கும் விருந்தளிக்கின்றது.

திரைப்படத்தின் அடிப்படை அம்சங்களுள் இசை அமைப்பு இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கிறது. திரைப்படக் கதை நிகழும் சூழலையும், அக் காட்சி எம்மிடம் தூண்டும் உணர்வுகளால் எம்மை அச் சூழலுக்கு ஈர்ப்பதற்கும், அக் காட்சி மூலம் வெளிக்கொணர இருக்கும் உணர்வுகளையும் மிகச் சிறப்பான முறையில் பார்வையாளன் மனதில் பதிப்பதற்கு பின்னணி இசை இன்றியமையாததாகும். இசையமைப்பு இன்றி காட்சிப்படுத்தப்படும் படங்கள் நவரசங்களைத் தரக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்காது. எனவே தான் ஒரு திரைப்படத்தின் வெற்றியில் இசையமைப்பாளரது பணி மிகவும் அத்தியாவசியமானதும் இன்றியமையாததுமாகும். திரைப்படம் ஒன்றில் இசையமைப்பு முக்கியம் பெறுவது அப்படத்தில் அமையும் பாடற்காட்சிகளாலாகும். காதல், போர்க்களம், நட்பு, அன்பு, பக்தி எனும் காட்சிகளிலேயே பெரும்பாலும் இரு கதாப்பாத்திரங்களையோ அல்லது தனியோர் கதாப்பாத்தரத்தை மையமாகக் கொண்டு ஏதாவது ஓர் உணர்வை மையாமக் கொண்டு அதனை பார்வையாளரிடம் ஏற்படுத்துவதற்காக இடம் பெறுகின்றன.

திலையுலக வரலாற்றின் ஆரம்ப கால கட்டத்தில் அதாவது கறுப்பு - வெள்ளைத் திரைப்பட காலங்களில் பெரும்பாலும் கர்நாடக சங்கீத இராகங்களைப் பின்பற்றி எழுந்தவையாகும். தமிழின் பாரம்பரிய வாத்தியங்களான ஆர்மோனியம், நாதஸ்வரம், மேளம் போன்ற மங்கல வாத்தியங்களும், துக்கப் பாடல்களின் போது அமங்கல வாத்தியங்களும் பயன்படுத்தப்பட்டன. திரைப்படப் பாடல்களில் சிறந்த இசையமைப்பால் மனதை விட்டு நீங்காத பாடல்களும், சிறந்த சொல்லமைப்பால் சிறப்புற்ற பாடல்களும் இருக்கின்றன.

கறுப்பு - வெள்ளைத் திரைப்பட பாடல் வரிகள் தமிழ் இலக்கிய பாதையைத் தழுவி எழுந்தவையாகும். பல அணிகள் பாடல் வரிகளில் கையாளப்பட்டு அக்கால திரைப்பட இரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்டு, இன்று வரை நாவினால் உச்சரிக்கப்படுவனவையாக திகழ்ந்த வண்ணமே காணப்படுகின்றன.

"அவளுக் கென்ன அழகிய மனம் ....
அவனுக் கென்ன இழகிய குணம்"

எனும் பாடல் வரிகளில் எதுகை அணியும், மோனை அணியும் கையாளப்பட்டு பாடல் அதன் வரிகளால் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அக் காலப் பாடல்களில் மரபு வழியான

பாடல்களுக்கான விதியையும், இராகங்களையும் பின்பற்றி வந்ததனைக் காணக்கூடியதாக உள்ளது. கண்ணதாசன் தமிழ் திரையுலக வரலாற்றில் சிறந்த கவிஞனாகத் தடம் பதித்து, என்றும் புகழ் மங்காதவராக மக்கள் மனதில் நீங்கா இடத்தைத் தக்க வைத்த சிறந்த பாடலாசிரியராவார்.

தமிழ்த் திரையுலகத்தின் காலத்துடனான வளர்ச்சியின் போது 1980 - 1990 காலப்பகுதிகளில் திரைப்படப் பாடல்கள் தமிழின் மரபில் மாற்றத்தை ஏற்படுத்துபவையாக அமைந்தன. பாடலாசிரியர்கள் தமது புலமைக்கேற்ப, தமது சொந்தக் கருத்துகளை பாடல்களில் சேர்த்து, பாடல்களுக்கான மரபை மாற்றியமைத்தனர். இக் காலத்திலே தமிழ் திரையுலகம் மேற்கத்தையப் பாணியில் தனது பயணத் திசையை மாற்றிச் சென்ற காலமாகும்.

அக்காலகட்டத்தில் ஒலித்த பாடல்களே தமிழ் இலக்கியத்தில் புதுக் கவிதை மரபை வேரூன்றச் செய்யக் காரணமாய் அமைந்தது என்றால் அது மிகையாகாது. இரசிகர்களது இரசனைக்கேற்ப இவ்வாறு புது மரபைப் பின்பற்றி பாடல்களை இயற்றி திரைப்படத்தை வெற்றிகரமாக திரையில் திரையிட்டு தமது வணிக நோக்கத்தில் வெற்றி பெறுவதற்கென, தமிழ் மரபில் மாற்றம் ஏற்படுத்தத் தயங்கலாகினர். இக் காலகட்டத்தில் தான் இதுவரை காலம் தூய தமிழ்ச் சொற்களால் அலங்கரிக்கப்படடு வந்த பாடல் வரிகள்,மக்கள் ஒவ்வோர் சூழலில் வாழ்ந்த வெவ்வேறு சமூக பேச்சுமொழி வழக்கைப் பின்பற்றி எழுந்தவையாகும்.

“மலையோரக் குயிலே என்தன் .. பாடல் சத்தம் கேக்குதா ..... கேக்குதா” எனும் பாடல் வரிகள் இதற்கோர் உதாரணமாகும்.

கால மாற்றங்கள் திரைப்படப் பாடல்களை தமிழ் இலக்கியங்களிலிருந்து பிரித்துக் கொண்டே செல்கிறது. ஏனெனில் இன்றைய இளைஞரது தமிழ் மீதான அவாவை குறைத்துக் கொண்டே செல்கிறது. தற்காலத் தமிழ் சமூகத்தில் ஏற்பட்ட ஆங்கிலக் கலப்பு திரையுலகில் மேலும் ஆங்கிலக் கலப்பை ஆதரித்த வண்ணமே உள்ளது. இவ் ஆங்கிலக் கலப்பு பாடல்களில் அதிகரித்தது. இன்று தமிழ் மொழியின் செம்மையை வெகுவாகப் பாதிக்கிறது. பாடல்களில் கலக்கும்ஆங்கில வார்த்தைகளும் அவற்றின் தவறான பொருள்களும் தமிழன் அழிவை காலத்தால் கிட்டுகிறது. எனினும் சில பாடல்களில் இன்றும் தமிழ் இலக்கிய மரபு பேணப்பட்ட வண்ணமே உள்ளது. “கரிகாலன் காலைப் போல கறுத்திருக்கு குழலு குழலில்லை குழலில்லை தாஜ்மஹால் நிழலு..” எனத் தொடங்கும் பாடலின் அனைத்து வரியுமே முதல் அடியின் இறுதிச் சொல்லை முதற் சொல்லாகக் கொண்டு அமைந்துள்ளது. அந்தாதி முறை பின்பற்றப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியக் கலப்பு இன்றி, தமிழ் திரைப்படப் பாடலோ திரைப்படப் பாடலின் சிறப்பின்றி தமிழ் மொழியின் நிலைப்போ தற்காலத்தில் சாத்தியமற்றது. எனவே தமிழ்த் திரையுலக பாடல்களின் துணையின்றி தமிழை வளர்க்க, பாதுகாக்க இயலாது. எனவே தமிழ்த் திரைப்படப் பாடல்களை தமிழ் இலக்கிய மரபை திசைக்க வைக்கும் பயன்படுத்தப்பட்டு செம்மொழியான தமிழ் மொழி பாதுகாக்கப்பட வேண்டும்.

நன்றி

With Best Compliments from

Mr. S. Premnath

No. 61, 37th Lane (Peniquick Lane) Wellawatte
Tel : 011-3159302, 2586674
Email : info@ctscademylk.com

With Best Compliments from

P. Thangarajah

Vayirava Puliyangkulam
Vavuniya

With Best Compliments

from

Suruthie's

A Women world

Dealers in textiles

3B, Station Road, Hendala, Wattala
Tel : 011 2943309

Best Compliments

from

A.D. Anojan
12 MT

பாடசாலைக்குள்ளான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்தியபிரிவில்
முதலாம் இடம் பெற்ற சிறுகதை

வசந்தம் பிறக்கட்டும்

"அம்மா நான் பிளேன்ல ஏறீட்டன்"

கிட்டத்தட்ட அரை மணித்தியாலம், அடிக்கடி விமானப் பயணம் செய்பவன் என்பதை மறந்து புதிதாக விமானத்தில் ஏறியவனுக்கு வழங்கும் அறிவுரைகளை போல் கூறிவிட்டு அரை நிம்மதியோடு கதிரையில் அமரும் தன் தாயை நினைத்தவாறு விமானப் பணிப்பெண் வழங்கிய தேநீர் கோப்பையை பெற்றுக் கொண்டான் சருணன். பன்னிரண்டு வருடங்களின் பின் தனது நாட்டை, தனது ஊரை, தனது மண்ணை மிதித்த சந்தோஷத்தில் அவன் இருந்தான். பன்னிரண்டு வருடங்களாக தான் பார்க்க முடியாமல் இருந்ததன் அன்னையை, தன் சொந்தங்களை, தன் சினேகிதங்களை பார்த்திருந்த. அவனது உள்ளம் பூரிப்படைந்திருந்தது.

சேர் வுட் யு லைக் டு காவ் சம் மோர் கொபி" தேநீர் மேலும் வேண்டுமா என கேட்ட பணிப்பெண்ணிற்கு இல்லை என சிரித்தவாறு கூறிவிட்டு முடிந்த தேநீர் கோப்பையை கொடுத்தான்.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன் உள்நாட்டு யுத்தம் காரணமாக புலம் பெயர்ந்து கனடாவிற்கு சென்றுவிட்டு இரு மாதங்களுக்கு முன்தான் இலங்கை வந்திருந்தான். நேராக தனது ஊரிற்கு புறப்பட்டு சென்றான். கொழும்பிலிருந்து தனியார் பேருந்துகளில் புறப்பட்டால் பத்து மணி நேரத்தில் யாழ் மண்ணின் சாவகச்சேரியை அடைந்து விடலாம். அதன் பின் ஒரு இருபது நிமிடம் முச்சக்கர வண்டியில் கழித்தால் நேராக வீடுதான். கறுப்பு கேற்றில் அன்னத்தின் அச்சு வார்க்கப்பட்டிருக்கும் கேற்றை திறக்கும் முதலே "மச்சான்" ஒருவர் வந்து கேற்றை திறந்து பைகளை வாங்கி "வாங்கோ வாங்கோ" என அழைக்கத் தொடங்கிவிட்டார். பதினைந்து, பதினாறு 'மிகவும் வேண்டப்பட்டவர்கள்' வீட்டில் குழுமி இருந்தார்கள். அனைவரும் உறவினர்கள் தான். சருணனை பார்க்கத்தான் வந்திருந்தார்கள் நடுவில் அம்மா மிகவும் இளைத்து விட்டார். என்னதான் வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பினாலும் இருபது வருடங்களுக்கு முன் இருந்த அந்த சூழலை அதே சூழலை அனுப்ப முடியாது.

அன்று முதல் அவனைச்சுற்றி கும்மாளமும், குதூகலமும் தான். ஒவ்வொரு நாளும் கூட்டமாக வெளியே கிளம்பி விடுவான். கோயில், பூங்கா, நண்பர், வீடு, குளங்கள், டவுன் என ஒரே அல்லோல கல்லோலம் தான். என்னதான் சந்தோஷத்தில் திளைத்திருந்தாலும் ஒவ்வொரு நாளும் தூங்கும் போதும் அவன் உள்ளத்தை ஏதோ

ஒன்று குடைந்து கொண்டிருந்தது. ஏன் இப்போதும் கூட குடைய தொடங்கி விட்டது.

"சேர் யூ கான் வொட்ச் எ (f)பிள்ம் இ(f)ப் யூ வோன்ட்" என்றவாறு அதே பணிப்பெண் சருணனிற்கு முன்னிருந்த இருக்கையின் பின்பிறத்தில் ஒரு பொத்தானை அழுத்தினாள். திடீரென திரை ஒன்று தோன்றி அதில் ஆங்கிலப்படம் ஒன்று ஓடத் தொடங்கியது.

"தங்க் யூ' என்றவாறு அத்திரையை பார்த்தான்.

அவனது மனம் எனும் நாய் தான் ஏற்கனவே பொறுக்கிய எலும்பையே மீண்டும் பொருக்க எண்ணியது. பின் ஏன் திரைப்படம் வேண்டாம் என சொல்ல சருணன் விரும்பவில்லை. அது தன் பாட்டுக்கு ஓடட்டும் என விட்டுவிட்டான்.

அவன் வந்த இரண்டாம் நாள்தான் அது நடந்தது.

"அம்மா பக்கத்து காணியில விளாம்பழம் புடுங்க போறம். அந்த கொழுக்கி தடி எங்க?" தன் நண்பர்களுடன் பழம் பறிக்க சருணன் தயாராகிக் கொண்டிருந்தான்.

"எது? இந்த வாய்க்கால் காணியோ?" விசரே உனக்கு அது உவன் சண்முகம் காணி. அங்க பேபாய் நீ பேச்சு வாங்காத. இங்கால வா"

"அங்க யாரும் இல்லையே. சத்தம் இல்லாமல் போய் எடுத்திட்டு வாறன். யாராவது சண்டுகம் என்டு என்ன பார்த்தாலும் எனக்கு பயமில்லை. என்ன பொலீசையே கூப்பிடப்போறினம்".

"டேய் அங்கதான் அவயல் இருக்கினம். சண்முகம் செத்துட்டான். அவனின்ட மனிசி, பிள்ளைகள் தான் இருக்கினம். அதுகளண்ட வயித்தில அடிக்காத, பாவம் அதுகள். அதுகளண்ட குடிசை இருக்கிறதும் ஒண்டுதான் இல்லாததும் ஒண்டு தான்.

வேறு வழியின்றி நண்பர்களை அனுப்பிவிட்டு அவன் மட்டும் தனியாக அந்தக் காணிக்கு போனான். சிறிய காணிதான். ஒரே புதரும் பற்றையும் அம்மா சொன்னது சரிதான். அது குடிசையா என்டு தெரியாத மாதிரி ஒரு இடம். கூரையின்ட அரைவாசிக்கு கிடுகு இல்லை. வெட்டவெளி இருக்கிற அரைவாசியும் ஒழுங்கான கிடுதி இல்லை. ஆங்காங்கே ஓட்டை விழுந்து. வயலில் படுக்கிறதுக்கும் இந்த குடிசைக்குள படுக்கிறதுக்கும் வித்தியாசமே இல்லை. இரவில் இரண்டிலும் நட்சத்திரம் தெரியும், காத்தடிக்கும், சுற்றி புதர் வளர்ந்திருக்கும்.

மதிலுக்கு பதிலா இருந்த களிமண்ணும் பெரும்பாலும் தூர்ந்து விட்டது. மரக்கிளைகளை கொண்டு தெண்டி கொடுக்கப்பட்டது. மாரி காலங்களில் இது எவ்வாறு தாக்குப்பிடிக்கின்றதோ தெரியவில்லை. பத்து பேர் வெளியே வந்து நாலாபக்கமும் குடிசையை இழுத்துக் கொண்டிருந்தால் தான் விழாமல் காப்பாற்றலாம் போலிருந்தது. அது மட்டுமா? சேறும், சகதியும் வேற பாம்பு பூச்சி வந்தா அதுகளின்ட பிரச்சினை.

மெதுவாக குடிசை வாசலை நோக்கி சென்றான் சருணன். வீட்டில் யாரும் இல்லைதான். ஒருவேளை ஆறு மணி கோயில் பூசைக்கு நேரத்தோடு சென்றிருப்பார்களோ என்னவோ? உள்ளே சென்ற போது சருணன் அப்படியே நின்று விட்டான். அதைப்பார்த்தால் வீடு என்றே சொல்ல முடியாது. இரு பாய்கள் மட்டுமே அவர்களின் சோபா செட் இடையில் அறைகள் எதுவும் இல்லை. ஒரு மூலையில் அடுப்பளை அவ்வளவு தான். இரண்டே இரண்டு பானைகள். நான்கைந்து தட்டு, சில தம்ளர் இருந்த கொஞ்ச நஞ்ச சரக்கு போத்தல்களும் காலியாகவே இரந்தது. ஒரு அரிக்கன் லாம்பு. ஓர் இரவிற்கு தாக்கு பிடிக்கக்கூடிய மண்ணெய். அவ்வளவும் தான். நிலம் ஒரே ஈரமாக இருந்தது.

இவ்வீட்டில் எவ்வாறு ஐந்து பேர்கள் இருக்கின்றனரோ இறைவனுக்குத்தான் வெளிச்சம். சண்முகம் ஏற்கனவே ஏழை தொழிலாளி. ஓர் பெண்ணை திருமணம் செய்தான். நான்கு பிள்ளைகள் பிறந்தன. சில வருடங்களில் இறந்து விட்டான். அதன் பின் இக்குடும்பம் படும் கஷ்டங்கள் வார்த்தைகளால் விபரிக்க முடியாது. ஒரு நாளும் ஒரு வேளையாவது வயிறாற உண்டதில்லை. திருவிழாக்களில் அன்னதானத்தின் போது தான் அவ்வாறான சாப்பாடு. உடுத்த மாற்று உடுப்பில்லை. பிள்ளைகளின் ஒரே ஒருவன் ஆண். அவனும் மேலே ஒன்றும் உடுப்பதில்லை. காணியில் விளையும் ஒரு குறிப்பிட்ட தொகை பழங்கள், வேறு பொருட்களை விற்றுத்தான் சீவியம். அப் பெண்ணிற்கு ஆஸ்த்துமா அவளும் ஓடி ஆடி வேலை செய்ய முடியாது. பிள்ளைகளுக்கும் வயது வரவில்லை. தினந்தோறும் அவ்வீட்டில் அழுகையும், பசியும், வேதனைகளும் தான் நிறைந்திருக்கும்.

இது எல்லாம் சருணனிற்கு அன்று இரவு அம்மாவுடன் கதைத்துதான் தெரியும்.

அடுத்த நாள் கோவிலுக்கு செல்லும் போது அவ்வீட்டு பிள்ளைகள் நால்வரையும் கண்டான். கோயில் பூசை முடித்த பின் பூசாரி தரும் பொங்கல் தான் வீட்டில் அம்மா உட்பட அனைவருக்கும் காலை உணவு. பூசை முடியும் வரை அவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களின் விளையாட்டில் சந்தோஷம் இருக்கவில்லை. ஏதோ நேரத்தை கடத்த வேண்டும் என்றே விளையாடியது போல் இருந்தது. அவர்கள் அருகில் சருணன் சென்றான். கீழே இருந்து அவர்களிடம் ஏதோ கேட்டான். தனது பொக்கட்டிலிருந்து ஒரு தாள் நோட்டை எடுத்து அவர்களுக்கு கொடுத்தான். அவர்களின் முகம் திடீரென மாறியது. உணர்ச்சிகள் இவ்வளவு வெகமாக மாற்றமடைய முடியும் என சருணனிற்கு அப்போது தான் தெரிந்தது. துள்ளிப் பாய்ந்துகொண்டு அந்த பிள்ளைகள் மூவரும் கோவிலுக்கு வெளியே சென்றனர்.

With Best Compliments

from

Amro Steels

126 2/1, Mahavidyalaya Mawatha,
Colombo 13
Tel : 0777-328454

With Best Compliments

from

Mr. Suranga Manoj

Sandali Construction

326, 1st Floor, Old Moor Street, Colombo 12
Mobile : 0777 764907

With Best Compliments from

Udayaa Jewellers

303, Galle Road, Wellawatta, Colombo 06. Sri Lanka.
Tel : +94 11 2554933

With Best Compliments from

Ruby International Associates

Importes of Machinery, General Hardware, Manufacturers' Agents & Suppliers of Fluid Control Engineering Items for any type of industry

No. 346, Old Moor Street, Colombo 12, Sri Lanka.
Tel : 011 2384105, 2432445 Fax : 0094-11-2446506
Email : rubyia@dynaweb.lk rubyia@sltnet.lk Website : www.rubyia.lk

---

With Best Compliments from

Rathnams

Special Award Holders of M.S.S.T. Bombay

No. 251 1/23, Main City, Main Street, Colombo 11
Tel : 0117 901010

With Best Compliments from



R P MOBILE

535A, Galle Road, Colombo 06
Tel : 011-2362611 Mob: 071-4765606

With Best Compliments from

Worldlink Impex

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS

Office
No. 35/1, New Kelani Bridge Road,
Wellampitiya, Colombo 14.
Tel : 0112542493
Email : kumadev@sltnet.lk

Hardware Unit
No. 464P, Old Moor Street,
Colombo 12.
Tel : 011 4910670
Mobile : 077 3991767

With Best Compliments from

S.P.S. ENTERPRISES

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS

355, Old Moor Street, Colombo-12 Tel : 2332962

With Best Compliments from

MICRO METALS

IMPORTERS, GENERAL HARDWARE MERCHANTS

AUTHORISED DEALERS FOR CHICO PRODUCTS

No. 126, Mahavidyalaya Mawatha, (Barber Street), Colombo 13Tel : 2445349, 2325764. Fax : 91-11-2332435

With Best Compliments from

RELAXS STEEL

Importesr & General Hardware Merchants
311, 449, Old Moor Street, Colombo 12.
Tel : 011 4628462, 2478380, 2438308
Fax : 2335653 Mobile : 0777 221034
Email : relaxs_steel@yahoo.com

பாடசாலைக்குள்ளான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மேற்பிரிவில்
முதலாம் இடம் பெற்ற சிறுகதை

முடியவில்லை

சுன்னாகம் ..... யாழ்ப்பாணத்தின் மத்தியிலுள்ள ஒரு நகரம் .... அமைதிப் பூங்காவாக இருந்த நகரத்தில் போர் எனும் குழப்பநிலை ..... அனைவரும், இன்றைக்கோ நாளைக்கோ என உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்கின்றனர்.

அங்கே ஒரு நடுத்தர குடும்பம் ..... என்றோ நடந்த குண்டு வீச்சில் கணவனை இழந்துவிட்ட குடும்பத்தலைவி ..... தாயின் உழைப்பிலும், அரவணைப்பிலும் வாழும் ஒரு இளைஞன் .... இவனது பெயர் அரவிந்த்.

கதிரவன் கீழைத் திசையில் ஒளி பரப்பத் தொடங்குகின்றனான். அரவிந்தை எழுப்புகிறாள், அவனது தாய் மீனாட்சி ..... சோம்பல் முறித்து எழுந்தவனாய் வீட்டுச் சாளத்தினூடே கதிரவனைப் பார்க்கின்றான் அரவிந்த். அவனது மனம், ஏதேதோ சொல்லியது .... இவ்வளவு காலமும் தாயின் அரவணைப்பில் கீழ் வளர்ந்த அரவிந்த், இன்று அவனது சொந்தக் கால்களில் நிற்கும் நோக்கில் கொழும்புக்குப் புறப்படுகிறான்.

காலை 7.00 மணியாகும் போது அவன் உடுத்தாகிவிட்டது. தன் தாயை விட்டு பிரியப் போகும் ஏக்கம் ஒருபுறம், சொந்தப் காலில் நிற்கப்போகும் உத்வேகம் ஒருபுறம். தாயுடன் பஸ் தரிப்பிடத்துக்கு வந்தடைந்தான். கொழும்பிற்கு செல்லவிருந்த பேரூந்தில் ஏறி உட்கார்ந்தான். "அம்மா .... இன்னும் ரெண்டு மாசம் பொறுத்துக்கோ .... நான் வந்த உன்னை கூட்டிக்கொண்டு போறேன் .... "

பேரூந்து புறப்படத் தயாரானது. "மகன் ... உடம்பைக் கவனமாக பார்த்துக்கொள் ... நேரத்துக்கு சாப்பிடு...." போன்ற பலவித அறிவுரைகளைக் கூறினாள் மீனாட்சி. மீனாட்சியின் கை அசைவு, பேரூந்து சிறிது தூரம் செல்லும்வரை அரவிந்துக்கு தெரிந்தது. ஒருமுறை தன் பையை எடுத்து, தான் தங்கப்போகும் இடமான 'சாம்பசிவம்' ஆசிரியரின் விலாசத்தைப் பார்த்தான்... பின்னர் அதனை உள்ளே வைத்துவிட்டுத் தூங்கினான்.

ஆழ்ந்த உறக்கத்தின் பின்னர் விழித்தெழுந்தான் அரவிந்த். நேரத்தைப் பார்த்தான்.... இரவு 8.00 மணி ... வெளியே இருந்த கடைகளின் பெயர்ப்பலகைளை வைத்துத் தெரிந்து கொண்டான் - இப்போது இருப்பது கொழும்பில் என்று. தன் பையை எடுப்பதற்காக காரியரில் கையை விட்டான்.... பையைக் காணவில்லை! அவன் எல்லா இடத்திலும் தேடினான், பை கிடைக்கவில்லை... கண்டெக்ரரிடம் கேட்டான்.... "அண்ணா ... என்ட் பாக் இங்க இருந்திச்சு ... இப்ப காணேல்ல... பார்த்தீங்களா?". "ஒழுங்கா வெச்சுக்கொள்ள தெரியா... இங்க எங்க உசிர வாங்குறது ... எவனாச்சும் ஆட்டய போட்டிருப்பான்....! தம்பி நீ நெனக்கிற மாதிரி இல்ல கொழும்பு ... எங்க பார்த்தாலும் களவும் கொள்ளையும் தான் ... பாக்க ஊருக்கு புதுசு மாதிரி தெரியுற அது தான் சொல்றன் ... இனியாச்சு பத்திரமா இரு ... இப்ப எடத்த காலி பண்ணு" நடத்துனரின் இந்த வார்த்தைகளைக் கேட்கக் கேட்க இவனுக்கு ஏதோ போல் இருந்தது. வேறு வழியில்லாமல் பஸ்ஸை விட்டிறங்கினான். .... "ஐயோ! சாம்பசிவம் சேர்ட அட்ரஸ்ஸையும் துலைச்சுட்டேனே... இப்ப என்ன செய்யிறது...? ஆ!.. ஏதோ வெள்ளவத்த

பஸ் ஸ்டான்ட் பக்கத்துல வீடு என்டு சொன்னவர் தானே! யாரிட்டையாவது கேட்டு அங்க போவம் ... பஸ் காசு எவ்வளவு எண்டு ... என்ன இது! பேர்ஸையும் காணேல்ல! ஐயோ ஆரோ அடிச்சுப் போட்டாங்கள் ... கடவுளே! இப்ப நான் என்ன செய்யிறது? .... எல்லோரும் சிங்களவனா வேற இருக்கிறான் ....''

அங்க ஒரு நடுத்தர வயதுடையவரைக் கண்டான் ... கையில் இருந்த புத்தகத்தில் ஓரிரண்டு தமிழ் எழுத்துக்களை அவதானித்தான் அரவிந்த். அவரினருகில் சென்றான்... "ஐயா ... நீங்கள் தமிழோ?" ..... "ஆமா .... தமிழ் தான் ... என்ன ஒணும் ஒங்களுக்கு ....? " .... "ஐயா என்ட பேர் அரவிந்த் ... யாழ்ப்பாணத்திலை இருந்து வாறன் ... பஸ்ஸுக்குள்ள வைச்சு என்ட பாக்கையும் பேர்ஸையும் ஆரோ அடிச்சிட்டாங்கள் ... நான் தங்க வேண்டிய அட்ரஸ்ஸையும் துலைச்சுப்போட்டன் ... நீங்கள் தான் எனக்கு அந்த இடத்தக் காட்டவேணும்" .... "அட்ரஸ் தொலஞ்சிடிச்சினு சொல்றீங்க ... ஏரியா சரி நெனவிருக்கா ...? " "ஓம் ஐயா! வெள்ளவத்த பஸ் ஸ்டான்டுக்கு கிட்ட எண்டு சொன்னவையள்" "ஆ இவளவும் காணும் ... வெள்ளவத்த எல்லாதம் நமட எரியா ... நீங்க பயப்புட வாணாம் ... இன்னெக்கு ராவைக்கு என்ட் ஊட்ல இரிங்களென் ... நாளைக்கு விடிஞ்ச பொறவு தேடுவம்!" "ரொம்ப நன்றி ஐயா! உங்களப் பாத்தா நல்லவராய்த் தெரியுது!" "இப்டி ஐயா போட்டு பேச வாணாம் ... என்ட பேர் மௌஜுட் .. பேர செல்லியே கூப்பிடுங்களே?!"

மௌஜீட்டுடன் புறப்பட்டான் அரவிந்த். அவனது வீட்டிலேயே அன்றிரவைக் கழித்தான்... அடுத்த நாள் விடிந்தது .. மௌஜுட் வந்து அவனை எழுப்பினான் ... "அரவிந்த்! குட் மோனிங் ... டக்குனு போய் ப்ரஷ் பன்னிட்டு வாங்க... கௌம்புவம்" என்று கூறியபடி ஒரு பல்துலக்கியையும், பேஸ்டையும் கொடுத்தான். அரவிந்தும் தயாராகிவிட்டான். இருவரும் புறப்பட்டனர். காலை உணவை ஒரு கடையில் சாப்பிட்டனர். "அரவிந்த்! இப்போ நாங்க இங்ஙன 'ஹந்திய'ல கொஞ்சம் நிப்போம் ... ஏன்ட கூட்டாளி ஒத்தரு வருவாரு... அவருகிட்ட ஒரு பொருள வாங்கிட்டு அப்பொறம் போவம் ...''

அவன் கூறியபடியே ஒரு பையை வாங்கிக் கொண்டான் மௌஜுட் ... "சரி! எங்க வெள்ளவத்த பஸ் ஸ்டாண்ட் என்னா? ... இந்த பாக கொஞ்ஞும் கொண்டு வாங்க ... யார்ட்ட ஊட்டுக்கு போணும்? " "சாம்பசிவம் சேரின்ட வீட்டை போகோணும்" "சாம்பசிவம் சேரா? அவர் எங்கட வாப்பாட நல்ல கூட்டாளியே! இப்ப நான் உங்கள விட்டுட்டு அங்கன தான் போக இருந்தேன்! இந்த பாகும் அவர்ட தான்!!" அரவிந்த் மிகவும் மகிழ்ச்சியுற்றான்... சிரமமே இல்லாமல் இடத்தை கண்டுபிடித்தாகி விட்டதே!" இருவரும் தொடர்ந்து நடந்தார்கள் ... ஒரு வீட்டைக் காட்டினான் மௌஜுட் .... "இதுதான் அவருட ஊடு ... இப்ப அவரு ஊட்ல இல்லையாம் ... கொஞ்சத்துல வந்துடுவாரு! இங்ஙனயே நில்லுங்க... இந்த பாக்கையும் குடுத்துருங்க ..." சரி மௌஜுட்! நன்றி!" எனக் கூறிக்கொண்டு விடைபெற்றான்.

சிறிது நேரத்தில் இரண்டு பொலிஸார் வந்து அரவிந்தை மடக்கிப் பிடித்தனர்.. "கௌத பங் உம்ப.... மெதன மொகத கரன்னே? மூகே பாக் எகே தியென்ன மொகத கியலா பலபங்!" என்று ஒருவன் மற்றொருவனைப் பார்த்து கூறினான்...! "ஐயா ... என்ன நடக்குது இஞ்ச?..." "தெமளத? சுட்டக் இதங்" என்று சொல்லிவிட்டு பையைக் கிண்டினான் அவன் ... "சேர்! பாக் எக்கே குடு தியென்னே!" "குடு! மூவ நக்கபங் ஜீப் எகட..." "ஐயா என்ன ...

என்ன ஐயா நடக்குது...'' அடே இங்க பாரு ... அபிட ஆவா கோல் எகக் ... இங்க குடு பிஸ்னஸ் நடக்குது கியலா..... அது தான் நாங்க இங்க வந்தது ...'' ''சேர் ... இது சேருக்கு குடுக்க வேண்டிய பாக் ... மௌஜுட் எண்ட ஒருத்தர் தந்தது!'' உடனே பொலிஸ்காரர் கூறினார்.... "ஒவ் தன்னவா பங்! ஊ தமய் மேவா சப்ளை கரன்னே ... உம்பத் எயாகே செட் எகே கெனெக்னே...?'' அவனை தரதரவென இழுத்துச் சென்று ஜீப்பில் ஏற்றினர் ... ஜீப்புக்குள் மௌஜுட்டும் இருந்தான்! "என்னெய் மச்சான் அம்பட்டுட?'' .... ஜீப் புறப்பட்டது ... இருவரும் பொலிஸ் நிலையத்தில் கூட்டுக்குள் போடப்பட்டனர்... அடுத்த நாள் பத்திரிகையில் ஒரு செய்தி "பிரபல போதைப்பொருள் விற்பனையாளர்கள் இருவர் கைது!'' ..... இருரது புகைப்படத்துடனும்!

அந்தச் செய்தியை வாசித்தார் ..... சாம்பசிவம் ஆசிரியர்! "இது என்ன இது? .... இவன் அந்த மீனாட்சியின்ட மகன் அரவிந்தெல்லே? ....!'' யோசித்தவாறு விடுவிடுவென புறப்பட்டார் .... பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸ் நிலையத்துக்கு சென்று பொலிஸாருடன் கதைத்தார். அதை கூட்டுக்குள்ளிருந்தே பார்த்தான் அரவிந்த் ... "சாம்பசிவம் சேர் .. இவரப் பாக்கப் போய் அறியாயமா இப்பிடி வந்து அகப்பட்டிட்டேனே.....! '' இவனை ஒருவாறு வெளியில் எடுத்துவிட்டார் ஆசிரியர் .... "தம்பி .... இஞ்ச ... நீ ஆரோட கதச்சாலும் கவனமாகக் கதையடா... என்ட விலாசம் உன்னட்ட இருக்கெல்லே...? நேரா வீட்ட வராம எங்க சுத்தனனீ....?'' "இல்ல சேர் ... உங்கள விலாசத்த வச்சிருந்த பாக் துலஞ்சிட்டுது!'' "சரி சரி வாடாப்பா போவம்...''

அவர் இவனை அழைத்துக் கொண்டு போய் வீட்டில் தங்கவைத்தார். மறுநாளே அவருக்குத் தெரிந்த யாரோ ஒருவரது கடையில் வேலைக்குச் சேர்த்து விட்டார்... "தம்பி ... வேலை முடிஞ்சவுடன வீட்டுக்கு வா... வேற எங்கையும் போயிடாதை .... வீடு பக்கத்தில தான் இருக்கு ... வந்த வழி நினைவிருக்குத் தானே? "ஓம் சேர் ... வந்திடுறன் அன்று இவனுக்கு அவ் இடம் புதிதாக இருந்தது ... ஆனால் போகப்போகப் பழகி விட்டது.

சரியாக இரண்டு மாதம் கடந்துவிட்டது .... அவன் அன்று யாழ்ப்பாணத்துக்குப் போய் தாயாரைக் கூட்டிவர இருந்தான்! சாம்பசிவம் சேர் கேட்டார் "தம்பி ... போன் பண்ணிட்டு போகப் போறியோ? ....'' "ஹ்ம்ம்ம் ... எங்கட வீட்டில என்னையா உந்த போன் வசதிகள்....?!'' "சரி சரி .... ! கவனமாக போயிட்டு வா...'' அரவிந்தை வழியனுப்பி வைத்தார் ஆசிரியர்.

அரவிந்த யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்து விட்டபோது மதியம் 12 மணி இருக்கும் .... தனது வீட்டுக்குச் சென்றான் ... வீடு பூட்டியிருந்தது ... சுற்றிப் பார்த்தான்.... "சிவலிங்கம் அண்ணை! அம்மா எங்க போயிருக்கிறா?'' சிவலிங்கத்தின் பார்வையில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது ... "தம்பி ... அம்மா செத்து 2 கிழமையாச்சு ...!'' அரவிந்தின் கண்களில் நீர் பெருக்கெடுத்தது ... "ஏன் எனக்கு சொல்லவில்லை? .... "உன்ன எப்பிடி தொடர்பு கொள்ளுறதெண்டு தெரியேல்ல .... அதுதான் ...''

அரவிந்த் அடியற்ற மரமானான் .... இவ்வளவு கஷ்டப்பட்டு ... யார் யாரிடமோ அகப்பட்டு கஷ்டப்பட்டுழைத்தது அம்மாவை இந்தப் கோலத்தில் பார்க்கத் தானா...? கவலையை அழுதே தீர்த்துவிட்டான்... இதற்கு மேலும் அவனுக்கு ஏதும் செய்வதற்கு முடியவில்லை .....!

With Best Compliments

from

Varatharajah Sathananthan

12MT (A/L 2013)

With Best Compliments

from

M.M.B. Traders

No. 65, Mill Road, Vavuniya
Tel : 024 2224310

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் - 2011
ஆரம்பப் பிரிவு போட்டி முடிவுகள்.

பேச்சு

4C		4D	
1st	B.Vaidesh	1st	J.Kavienan
2nd	M.Aflal Ahamed	2nd	M.A.C.Aakif Ahamed
3rd	P.Nikesh	3rd	V.Balavan
			S.Branavan

உறுப்பெழுத்து

4C		4D	
1st	A.C.M.Saihaan	1st	A.Asny Ahamed
2nd	A.H.Amhar	2nd	R.Taron Aksath
3rd	Mohamed Saaid Ali	3rd	M.F.Mohamed Rizni
			M.H.A.Shamran

கட்டுரை (4C/4D)

1st	M.Haridhayal
2nd	T.Shathusan
3rd	Y.Yohinth
	J.Adcharan

சொல்வதெழுதல்

4C		4D	
1st	A.Abishek	1st	V.Kavihscan
2nd	H.F.Umar	2nd	S.Suchan Suvisheshan
	M.Z.Faaiq		N.Senthuran

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் - 2011
ஆரம்பப் பிரிவு போட்டி முடிவுகள்.

பேச்சு (5C/5D)

1st M.I.Ishfaq
2nd M.Hariramana Kogul
3rd Y.Kowmaran
S.Vithyasagar

உறுப்பெழுத்து

5C		5D	
1st	Aaqil Ahamed Nizar	1st	A.Najman
2nd	Ameelan Ashwinsai	2nd	M.Koushal
3rd	K.Sriharan	3rd	Kalki Bahavan
	L.Lafri Suhood		S.Kreshaan

கட்டுரை

1st S.Sathyan 5C
2nd C.Veespathip 5D
3rd Azardeen Akash 5D

சொல்வதெழுதல்

5C		5D	
1st	M.I.T.Ahamed Adheeb	1st	Sivabalasundaram Nitharshanan
2nd	Mohamed Shuhaib Hassen	2nd	Srikumar Rishigeshan
3rd	M.R.Thasneem Ahamed	3rd	Sooriyakumaran Sooriya Prasanna

இக்கால உலகின் மத நல்லிணக்கத்திற்குத் திருக்குறள் தேவை

திருக்குறள் தனிமனித வாழ்வு, சமுதாய வாழ்வு, நாட்டு வாழ்வு, உலக வாழ்வு என்று அனைத்தையும், அணைத்துத் தழுவிய ஒரு வாழ்வியல் நூல். இது வெறும் கற்பனையால் உருவாக்கப்பட்டது அன்று. அறமென்னும் பாலியல் உலகியல் என்னும் ஊடு நூலிழைத்து அது அழகிய வாழ்க்கை என்னும் ஆடையாக அமைந்துள்ளது. ஆன்மீகமும், உலகியலும் கலந்து முக்காலத்திற்கும் உரியதாக உள்ளது. நடைமுறைக்கு ஒத்த கருத்துக் கருவூலத்தை அரசியலாகவும், மதமாகவும், பொருளியலாகவும், வாழ்க்கைச் சட்டங்களாகவும் தந்துள்ளது. நீதிநெறி முறைகளோடு மக்களின் உரிமைகட்கு முக்கியத்துவம் அளித்துள்ளன. இதுவே அறம். அதில் கூறப்படும் எல்லாக் கருத்துகளும் என்றும் வாழும். என்றும் நிலைத்திருக்கும் என்று எண்ணி உருவாக்கப்பட்ட நூலே திருக்குறள். வள்ளுவர் ஏன் பிறந்தார்? என்ற வினாவை நாம் கேட்போமேயானால் அது மண் செழிக்க மழை பொழிவது போல் மானிடம் செழிக்க, மனித உள்ளங்கள் செழிக்க, இந்த உலகம் செழிக்க அதைக் கண்டு உயர் கடவுள் சிரித்து மகிழ வள்ளுவர் பிறந்தது என்று கூறலாம்.

மனித இனம் நடமாடும் பூஞ்சோலை. பூஞ்சோலையில் மலர்ந்து குலுங்கும் மலர்கள் எல்லாம் நல்ல மணம் பரப்புவது போல, மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வநிலை அடைய வேண்டும் எனக் கருதி திருக்குறள் என்ற மறையைத் தந்தவர் திருவள்ளுவர். திருவள்ளுவருக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. ஆனால் கடவுளே எல்லாம் என நினைத்து நூல் எழுதவில்லை. மனித வாழ்வின் அனைத்துத் துறைகளையும் வளப்படுத்த விரும்பி, அதற்காகக் கடந்தகால வரலாற்று நிகழ்வுகளை நிகழ்கால நிகழ்வுகளோடு இணைத்து, எதிர்காலத்தை தன்னுடைய தூய சிந்தையால், தீர்க்க தரிசனத்தால் கண்டு, எக்காலத்திற்கும் பொருந்தும்படியாக நீதிநெறியோடு சார்ந்த அறத்தின் அடிப்படையில் எவ்விதச் சாதி, சமய, சமுதாயச் சார்புமின்றி எழுதியுள்ளார். வள்ளுவரின் கொள்கை என்றாலும், வள்ளுவரின் மதம் என்றாலும் ஒன்று எனலாம். அப்படியாயின் வள்ளுவரை சைவர் எனச் சாதிப்பவர்களும் உளர். வைணவர் என்று வாதிடுவோரும் உளர் இல்லை, இல்லை அவர் சமண சமயத்தவரே என்று இறுமாப்போடு எடுத்தியம்புவரும் உளர். பௌத்தக் கொள்கை மேலோங்கி இருக்கின்றது என மார் தட்டுவோரும் உளர். கிறித்துவுக்கும் வள்ளுவருக்கும் 31 ஆண்டுகளே இடைவெளி; அதனால் கிறித்துவ மதத்தவரே என்போரும் உளர். திருக்குறளுக்கும் திருக்குரானுக்கும் உள்ள வித்தியாசம் "ன்" என்ற எழுத்தே எனக் கூறி வள்ளுவர் ஒரு இஸ்லாமியர் என்போரும் உண்டு. அவருடைய புறட்பாக்களில் பகுத்தறிவுக் கொள்கைகள் ஏராளம் உள்ளன. எனவே அவர் ஒரு பகுத்தறிவுவாதி என்போரும் உளர். வள்ளுவர் காலத்தில் மகாவீரரின் சமண சமயமும், புத்தரின் பௌத்தமும், வேத மார்க்கங்களாகிய சைவம், வைணவம், வேதாந்தம் இந்திய மண்ணில் நிலவிய சமயங்களாம். அவருடைய குறட்பாக்களில் மேற்கண்ட சமயக் கருத்துக்கள் எடுத்தாளப்படுவது மட்டுமின்றித் தேவையற்றவற்றை நீக்கித் தன்னுடைய அறிவார்ந்த சிந்தனைகளால் தீர்க்க தரிசனமாகத் தோன்றிய கருத்துகளையும் சேர்த்துக் கொண்டுள்ளார். உலக சமயங்களாகிய கிறிஸ்துவம், இஸ்லாம் இவற்றின் கருத்துகளும்

அவரது குறட்பாக்களின் ஆங்காங்கே அமைந்துள்ளமை பெரிதும் வியப்பிற்குரியதாகும். அதனால் தான் எல்லாச் சமயத்தாரும் வள்ளுவரை தத்தம் சமயத்தவர் என வாதிடுகின்றனர். வள்ளுவரின் காலத்திற்குப் பின்னர் வாழ்ந்தவர்களின் கருத்துக்களை வைத்து ஆய்ந்து பார்த்தல் வேண்டும். மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் புறச் சமயவாதிகளின் உரையையெல்லாம் பழித்தும், வள்ளுவர் உரையை மட்டுமே பொருளுரை எனப் புகழ்ந்தும், "பொய்யிற் புலவன் பொருளுரை தேறாய்" என்கின்றனர். சமணக் காப்பியம் நீலகேசியோ, "தேவன் உரைப்பத் தெளிந்தேன்" என்று வள்ளுவரைப் பாராட்டிக் கூறும். சைவ சித்தாந்த செம்மல் வச்சிரவேல் முதவியார் அவர்கள்

"வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழால் உரை செய்தல்"
என்று கூறுவது வள்ளுவத்தில் தமச் சார்பின்மையை விளக்கும்.

அப்படியானால் திருவள்ளுவரின் சமயம் தான் எது? என்ற கேள்வி எல்லோருக்கும் எழுகின்றது. எல்லாச் சமயங்களும் காட்டுகின்ற இறைவழிபாட்டைத் தான் வள்ளுவரும் பேசுகின்றார். இன்பங்கள் எல்லாவற்றிற்கும் மேலான இன்பங்களை நல்கி, அதன் வழிப் பேரின்பத்தை நல்கும் ஆற்றல் உடையது இறைவழிபாடு கவலையைப் போக்கிக் களிப்படையச் செய்வதே இறைவழிபாடு. துன்பத்தை மாற்றி இன்பத்தை வழங்குவது இறைவழிபாடு எனலாம். நாவுக்கரசர் கூறுவது போன்று,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படடோம் நடலை யல்லோம்
எமாப்போம் பிணிஅறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை"

என மக்கள் எப்போதும் இன்பத்தோடு இருக்க வழிகாட்டுவதே திருக்குறள். அதற்கு எங்கும் எதிலும் அன்பைச் செலுத்துகின்ற மனோபக்குவம் வேண்டும். அறவழியில் நடக்க வேண்டும். இவற்றைக் கடைப்பிடித்து இலட்சியத்துடன் வாழ்ந்து ஆன்மாவை உருக்கிக் கசியவைத்து நன்னெறியில் நடக்க வைக்க வேண்டும்.

இன்றைய சமுதாயத்தில் நாம் காண்பது சமயச் சண்டைகள், பூசல்கள். இவற்றை கற்றறிந்தவர்களும் நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டு வருகின்றனர். உலகமெங்கும் ஒன்றுபட வேண்டும் என்ற உணர்வை அன்றே வள்ளுவர் கருதினார். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமூலர் கருத்தும், "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற புறநானூற்றுப் புலவனின் பரந்த உள்ளமும் வள்ளுவரின் வாய்மொழியால் இன்றும் நின்று நிலவுகின்றன. வள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடினாரா? என்பதில் பல கருத்துகள் ஆராய்ச்சியாளர்களிடம் நிலவுகின்றன. ஆயினும் அவர் கடவுள் வாழ்த்துடன் நூலைத் தொடங்கியுள்ளாராயினும் தொல்காப்பியம் போன்று நான்கு நிலக் கடவுளரைப் பாடவில்லை. கடவுள் வாழ்த்தைப்

பொருட் குறிப்பாலே, குணக் குறிப்பாலே, பாலில் படுநெய்போல் இந்த உலகில் வாழும் உயிர்களோடு இறைவன் கலந்திருப்பதாகக் காண்கின்றார். வேறுபாடற்ற ஒருமித்த கடவுள் கொள்கை இந்த உலகில் நிலவ வேண்டுமென்று வலியுறுத்துகின்றார். நினைத்தலையும், சிந்தித்தலையுமே சிறந்த வழிபாடு எனக் காட்டுகின்றார்.

இந்தச் சமுதாயத்தில் சமயங்களால் ஏற்படும் பிரச்சினைகள் எவை? எவை? என ஆய்ந்து அவற்றை அகற்ற வேண்டுமென்று கருகின்றார். கடவுள் பெயரால் பலியிடப்படுவதை வெறுக்கின்றார். எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் ஒத்த கருத்தை, கடவுள் கொள்கையாகக் காட்டுகின்றார். அதற்கு முன்னர் ஏன்? இன்றுவரை யாராலும் கூறமுடியாத கருத்தை வள்ளுவர் கூறுகின்றார். கடவுள் பெயரால் நடைபெறும் தீமைகளைச் சாடுகின்றார். கடமையைச் செய், பலன் தானே கிடைக்கும் என்ற நம்பிக்கையை உலக மக்களுக்கு ஊட்டுகின்றார்.

பிற்கால மேலைநாட்டு அறிஞர்கள் கருத்து ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வள்ளுவர் கருத்தை உறுதி செய்வதாக அமைந்துள்ளது. கடமையே மிகச் சிறந்த நோக்கம். ஏனெனில் அது கடவுட் கருத்தைத் தழுவியதாக இருக்கின்றது என்று "லக்கர் டயர்" கூறுகின்றார். கடமையை விருப்பத்தோடு செய்பவர்களுக்குக் கடவுள் எப்பொழுதும் உதவியாக இருக்கின்றார் என்று "கெய்லர்" கூறுகின்றார். கடமையைச் செய்யாமல் தட்டிக்கழித்தல் அறிவையும் மனத்தையும் பலவீனப்படுத்தித் தூய்மையான தவ வாழ்க்கையைப் புதைத்து விடுகிறது என்று ட்ரயான் எட்வார்ட்ஸ் என்பவர் கூறுகிறார். உயிர்கள் தம்முடைய கடமைகளை உடனடியாகச் செய்வதாக முடிவெடுத்துக் கொள்வது கடவுளின் இதய சந்நிதிக்குச் செய்வது என்று பேகன் கூறுகின்றார். ஆகவே வள்ளுவர் காட்டும் கடவுள் "வாலறிவனே" தவிர ஆதிக்க சக்திகளின் தலைவனல்லன். அவன் வழி நடத்துபவனே தவிர ஆட்டிப் படைப்பவனுமல்லன். வள்ளுவர் காட்டும் கடவுள் எல்லா மதத்திற்கும் பொருத்தமான தூய்மையான அறிவே ஆகும். என் குணங்களின் உருவமேயாகும். அ.ஃது ஒரு பண்பும் பயனும் அகும். அந்த பண்பையும், பயனையும் திரும்பத் திரும்ப உயிர்கள் நினைத்தலின் மூலமே பெற முடியும். அத்தகைய நெறியைத் தான் மத நல்லிணக்க வழிபாட்டு நெறியாக வள்ளுவர் காண்கின்றார். மனிதனுக்குள்ளேயே போற்றல் அடங்கிக் கிடக்கின்றது. "தெய்வம் நீ என்று உரை" என்றும், "கைவருந்தி உழைப்பவர் தெய்வம்" என்றும் பாரதியார் பாடவார். "சமயக் கணக்கர் மதிவாழிக் கூறாது, பொருளிது வென்ற வள்ளுவன்" என்று கல்லாடர் வள்ளுவரைச் சிறப்பித்துக் கூறுவார்.

எனவே திருக்குறள் எல்லாச் சமயங்களும் ஏற்றுப் போற்றக்கூடிய பொதுமறையாக அமைந்து விளங்குகின்றது. கடவுளை நம்பாத உலகாயதவாதிகள் கூட, திருக்குறளை நம்பி ஏற்றுக் கொள்கின்றார்கள். எந்த ஒன்று எல்லாரும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கின்றதோ, அதுவே உயர்ந்த சமய நெறியின் பொது இயல்பாகும் என்பது திருக்குறள் காட்டும் சமயநெறி வேறுபாடுகளையும், காழ்ப்புணர்வுகளையும் நீக்கி நிறைவான உயர்ந்த உலகச் சமயங்கள் எல்லாம் ஏற்றுக் கொள்கின்ற சமயமாக அமைந்துள்ளது. தத்துவ சீலங்களால் உயர்ந்தோங்கி நிற்கின்றது. அது தனிமனிதனை அறிவூட்டி, உணர்வூட்டி,

ஆள்வினை காட்டி அன்பில் தோய்ந்து, அறநெறியில் நின்று, ஒழுக்க நெறியில் செலுத்தி, அருள் நெறியில் நிற்கச் செய்து, இறுதியாக இறை நெறியில் கொண்டு செல்கின்றது. குறள் நெறி தனி மனிதனோடு உறவு கொண்டு வளர்ந்து சமுதாயமாக மலர்ந்து உலகளாவிப் பரவிட வேண்டும். அங்ஙனம் உலகளாவிப் பரவுமேயானால் உலகம் செழிக்கும். எங்கும் சமத்துவமும், சகோதரத்துவமும் மலரும்; அதன் மூலம்தான் பலரை வாழ்வித்து நாமும் வாழலாம்.

இன்றைய உலகிற்குத் தேவை இத்தகைய ஒருமைப்பாட்டுடன் கூடிய உயர்ந்த மத நல்லிணக்கமே.

இன்று உலகில் காண்பதென்ன? மதச் சண்டைகள்! அன்புக்கு ஏங்கும் மக்கள் எங்கே? இன்பம் எங்கே இன்பம்? என்று தத்தளிக்கும் மக்கள். மானுடம் தன்னுடைய மதியை இழந்து நிற்கின்றது. மக்களுடன் சண்டை...! அறம் செத்து விட்டதோ? என்று எண்ணத் தோன்றுகிறது. நீதி விலை பேசப்படுகின்றது. பொருள் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்ற உணர்வுகள் எல்லோரிடமும் வளர்ந்துள்ளன. உழைப்பு என்றால் என்ன? என்ற கேள்வி எழுகின்ற காலமாகிவிட்டது. எப்படியும் பொருள் சேர்க்க வேண்டும் என்ற குறுகிய உள்ளம் வளர்ந்துவிட்டது. இதையெல்லாம் தூக்கி எறிந்து இன்பவாழ்வு வாழ, உழைத்துப் பொருள் ஈட்ட, அறநெறியில் வாழ, இன்றைக்குத் தேவை திருக்குறள்.

உலகத்தில் தனி மனிதனுக்காயினும் சரி, சமுதாயத்திற்காயினும் சரி, வளம் பல பெற்று நலமோடு வாழ, பகையிலிருந்து விலிகிப் பண்புடன் கூடி வாழ வள்ளுவம் காட்டுவது மத நல்லிணக்கமே ஆகும். அன்புநெறி, ஒழுக்க நெறியாக, அறநெறியாக, அருள்நெறியாக, அறிவுடன் சிந்தித்து செயல்பட்டு ஒருமைப்பாட்டுடன் உலகமே ஒரு குடும்பமாக வாழ வழிகாட்டும் திருக்குறள், இன்றைய உலகின் மதநல்லிணக்கத்திற்குத் தேவை.

- த. சிவரூபன் 13 CT

Shafeek

Imaz

Siva

Piranavan

Shaan

Pavithran

Sasi

Ragu

Mathi

Maalik

Asst Directors

Piranavan, Sasi, Ragu, Mathi

Co Directors

Mothies, Veeshman, Sabeshan

Story, Dialogue, Songs & Music

Soori

Direction

Aravinth

With Best Compliments

from

AMEER MAHAL

RECEPTION HALL



No. 4, Rohini Road, Wellawatte, Colombo 06
Tel : 2589173, 0777 238987, 0777 421220
www.ameermahal.lk

நானும் வருகிறேன் ....

அன்று
தாய்தந்தை தான்
உலகமென்றிருந்த எனக்கு
புதியதொரு உலகம்
அறிமுகம் செய்யப்பட்டது
அது - என் ஆசிரியர்கள்

அன்றே - என்
மனதென்ற நிலத்தில்
பயமென்ற களைபிடிங்கி
ஆர்வம் என்ற பயிர் நட்டார்கள்
அவர்கள்! .....

தொடர்ந்து
என் வாழ்க்கைக்கு
பாதையமைத்து .....

எனக்காய் இலக்கியமொன்று
தேர்வு செய்து .....
நான் தொலைந்த போது
தேடிப்பிடித்து .....
நான் குழம்பிய போது
தெளிவாக்கி .....
எனையும்
மனிதனாய் வளர்த்தெடுத்தார்கள்
என் ஆசான்கள்!

அச்சான ஒரு நூலில்
எழுத்துக்கள் இல்லை
அந்த வெண்மைப்பக்கங்களில்
எழுத்துக்களை நிரப்பி
நூலைப்பிரபலமாக்கினார்கள்
சிலர் ; அச்சிலர்
என் ஆசிரியர்கள் என்றால்
அந்நூல் - நானே ..... !

என் கவிதைகள் வாசிக்கப்பட்ட
அரங்கங்களில் இருக்கைகளில்
முன்வரிசையை - என்றும்
அலங்கரித்தவர்கள் என் ஆசிரியர்கள்
நான் வரைந்த ஓவியங்கள் - என்றும்
ஆசிரியர்களின் பார்வை பட்டபின் தாள்
முழுமைப் பெற்றிருக்கின்றன!

அவர்கள் இல்லையென்றால்
என் கால்கள்
வேர் விட்டிருக்க முடியாது
என் வார்த்தைகளுக்கு
சிறகு முளைத்திருக்க முடியாது

வருகிறேன் ஆசிரியர்களே .....
உங்கள் பாதத்தினூடே.....
நானும் வருகிறேன்
கொடுக்கப் பெருகும் கல்விச் செல்வத்தை
என்னில் வரவு வைத்தீர்கள்
அதனை நான் செலவில் வைத்து
பெருக்கிக் கொள்ள வேண்டாமா?
வருகிறேன் உங்களைத் தொடர்ந்து
நானும் வருகிறேன் .....

M.N.M. நைஷபான்
12 MT
கணிதப்பிரிவு 2013

With Best Compliments from

Ganesh Textiles

(Private) Limited

Wholesale & Retail Dealers in Textiles

81, 83, Main Street, Colombo 11, Sri Lanka.
Tel : +94 11 2325128, +94 11 2343078 Fax : +94 11 2458937
Web : www.ganeshtextiles.lk Email : info@ganeshtextiles.com

With Best Compliments from

VISAKA SUPPLIES (PVT) LTD

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS

No. 430-C, Old Moor Street, Colombo-12
Tel : 2423316 Fax : 2437310

With Best Compliments from

THE ATLANT STEEL

Importers & Geneal Hardware Merchants

No. 4/3/A, Old Moor Street, Colombo-12
Tel : 4996072 / 2432806 Mob : 077 6315032

With Best Compliments from

LORDS ENTERPRIESE

IMPORTERS & GENRAL HARDWARE MERCHANTS

10-A, Quarry Road, Colombo-12
Tel : 011-2333936, 011-2333937 Fax : 011-2333969
Email : lordsent@sltnet.lk

With Best Compliments

from

Hawana Textile

Wholesale & Retails

No. 163/1, Keyzer Street, Colombo 11
Tel : 2393364

With Best Compliments from

KUMARAVEL COY

General Merchants & Commission Agents

DEALERS IN PROVISIONS

217, 5thCross Street, Colombo 11. Phone : 2421057

With Best Compliments from

Om Saravana Co.

Imprters General Merchants & Commission AGents
(Dealers in Sugar & Flour)

No. 229, 5th Cross Street, Colombo 11
Tel : 2433864, 2435168 Fax : 2435189 Email : athy52@hotmail.com

பண்டைத் தமிழர் நாகரிகம்

இன்றைய நிகழ்வுகள் .... நாளைய சரித்திரங்கள் ! இதைப் புரிந்து கொண்டால், இன்று நாம் செய்யும் செயல்கள் எல்லாவற்றையும் சீராகச் செய்வதிலும் அதனை அழியாமல் வைத்துக் காப்பத்திலும் நம் அக்கறை அதிகரிக்கும்.

இன்றைக்கு இருக்கும் தகவல் தொழில்நுட்பம் அன்று இல்லாதபோதிலும் நமக்குக் கிடைத்துள்ள ஒரு சில தடயங்களை வைத்து அன்றைய நாள் நடப்புகளையும், நாகரிக வளர்ச்சியையும், ஊகித்து அறிவது என்பது, பனித்துளி நுனியில் பனை மரத்தைப் பார்ப்பது போன்றது.

தென்னிந்திய தீப கற்பத்தின், குமரிக்கண்டம் கடல் கோள் என்ற சுனாமியால் கடலுக்குள் புதைந்து போனது. "ப.ஃறுளி" ஆறு என்ற அறு பாய்ந்த குமரிக்கண்டம், உயர்ந்த நாகரிக மேம்பாட்டுடன் இருந்து வந்திருக்கின்றது. சங்கப் பாடல்களில் அது பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.

இன்றைய குமரி முனையில் "பரளி" என்ற ஆறு தற்போது ஓடிக்கொண்டு இருக்கின்றது. தாத்தாவின் பெயரைப் பேரனுக்கும், பாட்டியின் பெயரைப் பேத்திக்கும் வைத்து அழைக்கும், நம் மரபின் படி கடல் கொண்ட பகுதியின் நினைவார்த்தமாக அடுத்த பிரதேசத்திற்கு அதே பெயரையும், நதிக்கு அதே ஆற்றின் பெயரையும் வைத்து அழைத்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

குமரிக் கண்டத்தை லெமூரியாக் கண்டம் என்றும் அழைப்பார்கள். 'லெமூர்' என்றால் மனிதனுக்கும் குரங்கிற்கும் இடைப்பட்ட நிலை ஆகும். உலகின் முதலாவது பரிணாம வளர்ச்சி குமரிக் கண்டத்தில் தான் நடந்தேறியிருக்கிறது.

இன்றைய கண்டங்கள் ஒரே நிலப்பரப்பாக இருந்து, கடல் ஊடுருவியதால் விலகி பிரிந்தன என்ற கருத்து பரவலாக இருந்து வருகிறது. இன்றும் கூட அவுஸ்திரேவிய நாட்டு பழங்குடியினர் 'சிவா நடனம்' என்ற பழம் பெரும் நடனத்தை ஆடுகின்றனர். உலகில் மிகப் பழமை வாய்ந்த குடிகளாகக் கருதப்படும் இவ் ஆஸ்திரேலிய பழங்குடிகள் நெற்றியில் கண் வைத்துக் கொண்டு ஆடுவார்களாம். லிங்க வழிபாடு நடைபெற்றமைக்குச் சான்றுகளும் உண்டு.

ஆபிரிக்க பழங்குடிகளுக்கும், இந்திய லெமூரியக் கண்ட பண்டைத் தமிழர் பண்பாட்டிற்கும் கூட ஒற்றுமை இருக்கிறது. அம்மி, உரல் போன்றவை புழக்கத்தில் இருந்திருக்கின்றன. கல்லால் ஆன நாணயங்கள் மற்றும் அயுதங்கள் புழக்கத்தில் இருந்திருக்கின்றன. தற்கால ஆராய்ச்சியாளர்கள் கற்காலத்தின் சுவடுகளைத் தேடிக் கொண்டேயிருக்கின்றனர்.

இவ் ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்கள், கிடைக்கப் பெற்றிருக்கும் சான்றுகள், மனிதனின் படிப்படியான வளர்ச்சிக் கட்டங்கள், இன்றும் உலகிலுள்ள அல்லது ஏற்கனவே மறைந்து போன பழங்குடியினரின் வாழ்க்கைக் கோலங்கள், நடத்தைகள் இவ் எல்லாவற்றையும் எடுத்து நோக்கும் பொழுது பண்டைத் தமிழர்களின் நாகரிக மேம்பாடு பிற நாட்டு நாகரிகங்களை விட மூத்த நாகரிகமாகும் என்ற முடிவுக்கு வர முடிகின்றது.

இ. பிரணவன்
உ.த வர்த்தக பிரிவு-2012
மன்றத்தலைவர்

உலக நியதி

உறுதி வேண்டும்
பெற்ற தாயுன்னை தெருவில் வீசி எறிந்த போதும்
பொறுமை வேண்டும் - மனதில்
உறுதி வேண்டும்

உன்னைத் தவிர வேறு ஒன்றும் நிலையில்லை
உயிர் வாழ்க்கை என்று சொல்வதற்கு இடமில்லை
ஒன்றை ஒன்று கட்டுப்படுத்தும் உலகம்
திருந்தாது
வெல்வதற்கும் தோற்பதற்கும் இது ஆட்டமில்லையடா
உயிர் வாழ்க்கை இதுவடா

மூர்க்கருக்கும் முனிவருக்கும் பேதமில்லையடா
கயவர்க்கும் கற்றவர்க்கும் பண்பு ஒன்றடா
குணங்கள் பல பிரிந்தாலும் ஜாதி
ஒன்றடா
நானும் நீயும் இவனும் அவனும் மனிதன் தானடா

உண்மை வெல்லும் நன்மையாக்கும் இது உலக சத்தியம்
உயிர்பிரிவதற்குள் உரிய பலன் உன்னைச் சேரும்
கள்ளன் நெல்வன் மல்லன் என்று எதுவும்
நிலைக்காது
கயவர் கள்வம் தகர்த்து எறிய தெய்வம் வருமடா - அந்த
தெய்வம் வருமடா

த. மயூரன்
8D

எங்கள் தமிழ்

தேன் சுவையாம் தமிழ் மொழி எங்கள் தமிழ்
இன்னிசை இலக்கணமுடையது எங்கள் தமிழ்.
தொன்னூல் புகழுடையது எங்கள் தமிழ்
உயர் பாவலர் அனந்தம் உடையது எங்கள் தமிழ்

அமிர்த நிறை செந்தமிழாம் எங்கள் தமிழ்
பல் மொழிகளின் தாயாம் எங்கள் தமிழ்
தனக்கு நிகர் சாற்றும் தமிழே எங்கள் தமிழ்
ஈரடி சீர் வள்ளுவரைத் தந்தது எங்கள் தமிழ்

மூன்று குல தமிழ் மன்னர் வளர்த்தது எங்கள் தமிழ்
ஆதி சிவன் கண்ணில் தோன்றியதும் எங்கள் தமிழ்
இராமாயணம் தந்த கம்பர் வளர்த்தது எங்கள் தமிழ்
தரணியில் என்றுழளது எங்கள் தமிழ்

முச்சங்கத்தில் தழைத் தோங்கியது எங்கள் தமிழ்
புலவர் தம் தமிழால் வளர்ந்தது எங்கள் தமிழ்
அறிஞர்கள் வாழ்த்தொளியால் வளர்ந்தது எங்கள் தமிழ்
அன்றும் இன்றும் என்றும் வாழும் எங்கள் தமிழ்.

Ashwin Ganesh Balaratnarajah
7C

With Best Compliments from

RAJAH STEEL CENTER

Importers & General Hardware Merchants

320,Old Moor Street, Colombo 12
Tel : 2388100, 2388085 Fax : 2459864

GTB Tor Steel

Authorised Dealer for GTB Tol Steel

With Best Compliments

from

Aries Pharmacy

14A, New Chetti Street,
Colombo 13

With Best Compliments from

Mr. S. Varnam

Bsc. (Hons), Dip.in.Ed

19B 32nd Lane, Colombo 06
Tel : 011-2360079

ரகு இங்கிலீஸ் கதைக்கிறான் !

எனது நண்பன் ரகு ஆங்கிலேய கம்பனி ஒன்றில் வேலை பார்க்கிறான். உங்களில் சிலருக்கு ரகுவைத் தெரியவில்லை. அது தான் ஆச்சரியப்படாமல் இருக்கிறீர்கள். அவனுக்கு ஏ, பி, சி, டி, யே சரிவரத் தெரியாது. கூடுவிட்டு கூடு பாய்வது மாதிரி ஏ, பீ, சீ, டி, எப், ஜி, கே .... என்று ஆங்கில அகராதியையே தலை கீழாகப் புரட்டவான். பாவம்! எமது கதாநாயகனை நாங்களே 'இன்ஸல்ட்' பண்ணக்கூடாது! விடுங்கள் ஆளை.

அவன் வேலை செய்யும் "கம்பனி" 'டிரெக்டர்' ஒருவர் ஓய்வு பெறுகிறார் என்பதற்காக ஒரு பார்ட்டி வைக்கப்பட்டது! பார்ட்டி என்றால் சும்மாவல்ல. போத்தல்கள் உடைபடும், டுவிஸ்ட் முதல்யோ நடனம் வரை கொண்ட நாகரீகமான பார்ட்டி! அதற்கு ஊழியர்கள் யாவரையும் உண்மையுள்ளத்துடன் வந்து பிரியாவிடை பெறும்படி மேலிடத்தின் அன்புக் கட்டளை.

அன்று காலை ரகு என்னிடம் வந்து, சில நாகரீகமாகவும் சரளமாகவும் பேசக்கூடிய ஆங்கில் வார்த்தைகளை எழுதித் தரும்படி கேட்டான். எழுதிக் கொடுத்தேன். நன்றி கூறிவிட்டு விரைந்து சென்று விட்டான். பின்னர் தான் யோசித்தேன்; அவற்றின் கருத்துக்களை கூறாது விட்ட மடத்தனத்தை! சரி! இனி என்ன செய்வது.

நானும் பார்ட்டிக்கு எமது அலுவலகத்தின் பிரதிநிதியாக சென்றிருந்தேன். ரகு வந்தான். வாசலில் நின்றவர் ரிட்டயர் ஆகும் ஆங்கிலேயருக்கு அவனை அறிமுகப்படுத்தினார். "மீட் மிஸ்டர் ரகுராம்".

"குட்மார்னிங்" என்றான் ரகு. ஆனால் அந்நேரத்திலோ மாலை வெயில் வெளியே கொளுத்தி எறிந்துகொண்டிருந்தது. ஆங்கிலேயர் அவனை வியப்புடன் பார்த்தபடியே "கிளாட் டு மீட் யு!" என்றபடி கைகுலுக்கினார். ரகு விட்டானா? "ஒப் கோர்ஸ்" (of course) என்றால் பார்க்கலாமே. அவர் அந்த அப்பாவிப் பிரதிநிதியை பார்த்து மெல்லச் சிரித்தார். "மார்வலர்ஸ்" என்றான் ரகு!.

ஒருவர் ரகுராமை நெருங்கி "ஐ திங் யூ ஆர் மிஸ்டர் ரகுராம்" என வினாவினார். ரகு சிரித்தபடி "Thank you very much" என்றான். கேட்டவர் விளங்கவில்லை என எண்ணி மீண்டும் கேட்டார். வந்த பதில் "டோன்ற் மென்சன்" கேட்டவர் ரகுவுக்காக இரங்கினார்.

பார்ட்டி ஆரம்பமாகியது. இளம் பெண்கள் பரிமாறினார்கள். ரகுவுக்கோ இருக்கமுடியவில்லை! ஒரு பெண் ஸ்வீட் வகைகளை அவனருகே நீடினாள். அவனோ

அவள் ஸ்வீட் முகத்தை இரசித்தபடியிருந்தான். "டேக் எ ஸ்வீட்" என்றாள். ரகு இளித்தபடி "குட்பை" எனக் கூறிவிட்டு ஒரு ஸ்வீட்டை எடுத்துச் சுவைத்தான். அவள் பரிதாபப்பட்டாள்!

ஒரு ஆங்கிலேயர் அவனை அணுகி வேடிக்கையாக "வீ வோன்ற் யுவர் ஸ்பீச் ஆப்டர் திஸ் ஐட்டம்" என்றார். ரகு சிரித்துவிட்டு "யு அர் எ பிளடி புல் டு ஆஸ்க் திஸ் குவெஷ்ஷன்". ஆங்கிலேயர் பயந்தே விட்டார். நீண்ட ஆங்கிலம் கதைத்ததால் ரகுவுக்கு வேர்த்தொழுகத் துவங்கி விட்டது. ஸ்டைலாக ஹாங்கியால் ஒத்திக் கொண்டான்.

இதற்கிடையில் கூட்டத்திற்குள் ரகுவைப்பற்றிய விஷயம் பரவி விட்டது. எல்லோரும் அவளை வினோதமான பிறவி ஒன்றை பார்ப்பது போல் அதிசயமாகப் பார்த்தனர். தன்னை எல்லோரும் கவனிப்பதை அறிந்ததும் அவன் தனது ஆங்கிலத்தை கூடுதலாக விளாச ஆரம்பித்து விட்டான். "யேஸ், கம், கோ, டொங்கி, மங்கி ...." இவை ரகுவின் வாயிலிருந்து வெளிவந்த பொன்மொழிகள் சில.

இதற்கிடையில் சிலர் "யாரோ விசரன் நுழைந்துவிட்டானாம். அங்கொடைக்கும் இவ்விடேசன் அனுப்பி அதன் பிரதிநிதி ஒருவரும் வந்திருக்கிறார்" எனக் கதைத்தது எனது காதுக்கும் கேட்டது. என்ன செய்ய அவன் தலைவிதி அப்படி!

ரகுவிற்காக இறங்கி நான் அவனிடம் "டேய் உன்னை எல்லோரும் விசித்திரமாக பார்க்கீனம்! வா போகலாம்!" என்றேன். அப்போது ஒரு தமிழன் அவனை நெருங்கி. மெல்ல "தம்பி உமக்கு ஆங்கிலம் படிப்பிச்சவர் யார்?" எனக் கேட்க எம்முடைய கதநாயகன் என்னைக் காட்டி, "ஹீ இஸ் த மான் ஹு டீச் மீ இங்கிலீஸ்" (He is the man who teach me English) என்றான்!.

A.H.M. Maalik 13CT
2012 A/L

With Best Compliments

from

SRI 72

ශ්‍රීරාම් ඉම්පෙක්ස්

දේශීය නිෂ්පාදන වෙළෙන්දෝ

නො. 72, 4 වන හරස් වීදිය, කොළඹ 11
දුරකථන : 2422640

With Best Compliments from

MICRO Zone

Imported in Electronic Spare parts & CCTV Cameras

No. 25, First Cross Street, Colombo - 11
Tel/Fax : 0112-333396

With Best Compliments from

RICE
NEW SAINUGAS

137, 5th Cross Street, Colombo 11.
Tel : 2344990, 4368680

With Best Compliments

from

Mr. S. Nithiyananthan

(Combined Mathematics)

Tel : 0770517559

ஓய்வு பெற்ற முன்னால் யாழ் பிரபல இரசாயனவியல் ஆசிரியரினால் தற்போது கொழும்பில் புதிய அணுகுமுறைகளில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் க.பொ.த உயர்தர வகுப்பிற்குரிய இரசாயனவியல் பாடநெறி இலகு முறையில் துரிதமாக கற்பித்துத் தரப்படுகிறது.
மேலதிக விபரங்களுக்கு.....

Lt. T. Nagarathnam
B.Sc, (Ceylon) Dip-In-Ed
All Island J.P

அழைப்புகளுக்கு.

0786334959, 011-3159184

கவியரசு வாய்மொழிகள்

காலத்தால் அழியாத புகழ் படைத்தோர் சிலரே! அவர்களுட் கவியரசு கண்ணதாசன் முக்கியமானவர். திரைப்படப் பாடல்களை மட்டுமல்ல அர்த்தமுள்ள இந்துமதம், பகவத்கீதை விளக்கம், இயேசு காவியம் எனப் பல தத்துவ நூல்களையும் அவர் எமக்கு அளித்துச் சென்றுள்ளார். கவியரசரின் கவியரசுப் பட்டத்தைச் சிலர் திருடிச் சென்றிருக்கலாம். ஆனால் அவர்தம் கவிதை நயத்தை அந்த பித்தர்களின் கவிதைகளில் காண முடியவில்லை. கவியரசர், வைரம் போன்ற வார்த்தைகளை முத்தாகக் கோர்த்து தந்த இனிய கவிதைகளை வேறு எவராலும் வடிக்க முடியவில்லை. அவர்தம் கவியரசுப் பட்டத்தைத் திருடியோர் வைரத்தையும், முத்தையும் தம் பெயரில் மட்டுமே சேர்க்க முடிந்தது. கவிதைகளில்லை!

எனவே திறந்த பெட்டகமாய் தன் வாழ்வினை அப்படியே உலகுக்கு எடுத்தியம்பிய ஒரு பெருமகன் கூறிய சில வாய்மொழிகளைத் தொகுத்து தமிழ் நயம் வாசர்களுக்குத் தரலாம் என நினைக்கிறேன். இவற்றில் சூடு இருக்கும்! அருஞ் சுவையும் இருக்கும்! படிப்போரைச் சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கும் இவற்றை வாசித்தும், கவியரசின் திறமையை உங்கள் மனகண்ணில் நீங்களே காண்பீர்கள்.

இதோ!

- என்னுடைய பேனாவிலிருந்து சிந்தும் மை பணமாகாமற் போனாலும் போகலாம் சரித்திரமாகாற் போகாது.
- தமிழ்நாட்டில் இப்போது நிறையக் கவிஞர்கள் பிறந்திருக்கிறார்கள், சமூகம் உருப்படாமற் போனதற்கு இதுவே முதற் காரணம்.
- வீழ்த்தியவன் ஜாக்கிரதையாக இல்லையென்றால், வீழ்ந்தவனுக்குத் தான் வெற்றி.
- காதல் உன்னதமானதென்று முதன் முதலில் சொன்னவனே அதில் தோல்வி கண்டவனாகத் தான் இருப்பான்.
- நீங்கள் சொன்ன விஷயம் பொய்யாகி விட்டால், அதற்காக வருந்தாதீர்கள் ஏனென்றால் அதன் மூலம் ஒரு உண்மையை நீங்கள் தெரிந்து கொள்கிறீர்கள்.
- சுவையான சொற்பொலிவு எது? பேசி முடிக்கும் வரை இது பொய் என்று தெரியாமலிருப்பது.
- வாசனைத் திரவியங்கள் எவன் அதிகம் பூசிக் கொள்கிறனோ அவன் உடம்பு இயற்கையிலேயே நாற்றமடிக்கிறதென்று பொருள். எவன் அளவுக்கு மீறிச் சுயவிளம்பரம் செய்து கொள்கிறானோ அவன் இயற்கையிலே தகுதியற்றவனென்று பொருள்.
- இன்று நீங்கள் சிரிப்பது நாளை அழுவதற்காகத் தானென்றால், அதற்காக இன்று சிரிப்பதை நிறுத்தாதீர்கள் நாளை அழுவதைத் தடுப்பது எப்படி? என்று யோசித்துக் கொண்டே சிரியுங்கள்.
- விஞ்ஞானிகள் கண்டு பிடிக்காதது எது? எதுவுமே இல்லை; கடவுளைத் தவிர கடவுள் கண்டு பிடிக்காதது எதுவுமே இல்லை - விஞ்ஞானிகள் உட்பட
- தற்புகழ்ச்சி என்பது வேறொன்றுமில்லை. விற்பனையாகத சரக்குக்குச் செய்யும் விளம்பரமே.

- விட்டுக்கொரு நாயை வளர்த்தும், மனிதன் விசுவாசத்தை வளர்க்கவில்லையே! இனி நாய்கள் மனிதனை வளர்த்து விசுவாசத்தை கற்றுக்கொடுக்குமா?
- இன்று ஒரு மருந்துக்கடையைப் பார்க்கும் மனிதனுக்கு தோன்றுவது என்ன? ஆகா! இவ்வளவு மருந்துகளா? என்பதல்ல. ஐயோ! இவ்வளவு நோய்களா என்பதே.
- தாய்ப்பால் கொடுக்காத குழந்தைக்கு தாய் பாசம் இருக்காது. தமிழ் படிக்காத தமிழ் நாட்டுக் குழந்தைக்கு எப்படி தாய் நாட்டுப் பற்றிருக்க முடியும்?
- என்னுடைய துயரங்கள் என்னிடமே இருக்கட்டும் நீங்கள் ஒன்றும் அதில் பங்கு பெற வேண்டாம். நீங்கள் கொடுத்திலயே பங்கு பெறுவது எதற்காக?
- ஒரு பிரபல நடிகையின் தாய் பொதுத் தேர்தலில் ஓட்டுப்போட முடியாமற் போய்விட்டது காரணம் ஓட்டு போடும் வயது வாரததே!
- கூத்து நடத்துபவன் மழை வரக்கூடாது என்று பிரார்த்திக்கின்றான். விவசாயி மழை வர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றான்; எது நடந்தாலும் கடவுளுக்கு இரண்டு தேங்காய்கள் கிடைக்கின்றன.
- மேல் நாட்டுக்காரர்கள் வாழ்க்கையை தத்துவமாக்குகின்றனர். நாம் தத்துவத்தையே வாழ்க்கையாக்குகின்றோம். நாம் வாழ முடியாமற் போனதற்குக் காரணம் இதுதான்.
- சிலரை நாம் அடியோடு மறந்து விடுவதற்குக் கடைசியாகச் செய்யும் சடங்குகள் இரண்டு; ஒன்று பொன்னாடை போர்த்துவது; இன்னொன்று நூற்றாண்டு விழாக் கொண்டாடுவது.
- கலியுகத்தில் என்னென்ன நடக்குமெனச் சொன்ன கண்ணன், கீழ்க் கண்ட கருத்தையும் சொன்னதாகக் கேள்வி; நடிகையின் பாட்டி, அந்த நடிகைக்கே மகளாக நடிப்பாள்!
- சோழன் காலத்தில் மின்சாரத்தைப் பற்றி யாரும் பேசியதில்லை. ஆகவே மின்சார காலத்தில் சோழனைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தம் என்ன?
- வெற்றியிலே நிதானம் போகிறது. அதைத் தொடர்ந்து வெற்றியும் போகிறது.
- தமிழின் மீது வெறுப்புற்ற ஆண்டவன் தமிழைச் சரியாக தண்டிக்க நினைத்தான் அதை தூக்கி புலவர் கையில் கொடுத்து விட்டான்.
- கேட்கும் போது சிரிப்பு வரவேண்டும். சிந்தித்துப் பார்த்தால் அழுகை வர வேண்டும் அதுதான் நல்ல நகைச்சுவை.
- தானாக பிறந்து, தானாகவே வளர்ந்து, தானாகவே உற்பத்தியானதை எல்லாம் தானகவே உண்டு மாண்டு போகிறவனுக்குப் பெயர் நாஸ்திகன். அவன் பிணம் தானாகவே மயானத்துக்குப் போக முடியாததால், அப்போது அஸ்திகன்.
- அழும்போது தனியாக இருந்து அழ வேண்டும், சிரிக்கும் போது நண்பர்களோடு இருந்து சிரிக்க வேண்டும். கூட்டத்தோடு அழுதால் நடிப்பு என்பார்கள். தனியாக இருந்து சிரித்தால் சந்தேகப்படுவார்கள்.
- விஸ்கியைக் குடித்தவன் தான் ஆடவேண்டும். விஸ்கி பாட்டில் தானே ஆடக்கூடாது. நம்மை பிறர் தான் புகழ வேண்டும், நாமே புகழக்கூடாது.
- எதிரி ஆயுதத்துடன் வரும் போது நீயும் ஆயுதத்துடன் தான் சந்திக்க வேண்டும் அவன் தன்னை பற்றி புகழ்ந்து கொள்ளும்போது, நீயும் உன்னைப் பற்றிப் புகழ்ந்து கொள்ளத்தான் வேண்டும்.
- ஆண்டவனே அணு குண்டிலிருந்து உலகை காப்பாற்று, கவலையிலிருந்து மனிதனை காப்பாற்று. தமிழ் புலவர்களிடமிருந்து தமிழை காப்பாற்று.

- இரண்டு பக்கமும் கூர்மையான கத்தி ஜாக்கிரதையாக கையாள வேண்டும் எந்த பக்கமும் சேரக்கூடிய மனிதர்களுடன் ஜாக்கிரதையாகப் பழக வேண்டும்.
- கோபுரத்தை பொம்மை தான் தாங்குகிறது. தேசத்தை மந்திரிகள் தான் தாங்குகின்றனர்.
- பட்டம் பெற்றுக் கல்லூரிக்கு வெளியில் வந்தபின் பாடப்புத்தகங்களைப் படிக்க மனம் வருமா? வோட்டு வாங்கி பதவிக்கு வந்தபின் ஜனங்களை நினைக்க நேரம் இருக்குமா?
- ஒழுங்காகச் சம்பாதித்துப் பணக்காரனானவனும் குறைவு, உண்மையை பேசிப் பதவிக்கு வந்தவனும் குறைவு.
- லட்சக்கணக்கில் செலவழித்துத் தங்க ரதம் செய்தாலும் சக்கரம் போட மறந்துவிடின் எந்தத் திருவிழாவுக்குப் பயன்படும்? லட்சக் கணக்கான வாக்குகள் வாங்கி ஆட்சிக்கு வந்தாலும் நிர்வாகம் செய்யத் தெரியிவில்லை எனின் அந்த ஆட்சிக்கு மதிப்பென்ன?
- நம்முடைய மனைவி தானே என்று நடுரோட்டில் முத்தம் கொடுக்கக் கூடாது. நம்முடைய வீடுதானே என்று நடுவீட்டில் மலங்கழிக்க கூடாது. பதவி கைக்கு வந்ததும் நீ ஆட்டமாடினால் உன்னையே அவமானப்படுத்திக் கொள்ளப் போகிறாய் என்று அர்த்தம்.
- நமது சட்டத்துறையும் நீதித்துறையும் அற்புதமானவை என்பதைச் சிறைச்சாலையிலுள்ள நிர்வாகிகள் நிருபிக்கிறார்கள்.
- என்னிடம் ஒரு கல்லை கொடுத்தால் அதனால் ஒரு மாங்காயை அடிப்பேன் அதை ஒரு சிற்பியிடம் கொடுத்தால், அவன் சிலையாக வடிப்பான், தமிழனிடம் கொடுத்தால் அடுத்த பொதுக்கூட்டம் எங்கே நடக்கிறதென்று தேடுவான்.
- சட்ட சபைக்குள் நுழையும் வரை ஒவ்வொரு இந்தியனும் யோக்கியனாகவே இருக்கிறான்.
- ஜனங்கள் தங்களது துயரங்களைத் தாங்களே தேடிக் கொள்வதற்கு அளிக்கப்படும் வாய்ப்பே தேர்தல் என்பது.
- சட்டத்தையும், ஒழுங்கையும் யாரோ குலைப்பதாகச் சொல்வதை நான் மறுக்கின்றேன். சட்டம் தான் ஒழுங்கை குலைத்துக் கொண்டிருக்கிறது.
- ஒரு கட்சியில் எம்.எல்.ஏ ஆகி இன்னொரு கட்சியில் மந்திரி ஆகும் பழக்கத்தை உருவாக்கியவன் இறைவனே! எந்த முட்டையையும் எந்தக் கோழியும் அடைகாத்துக் குஞ்சு பெறும்படி ஏற்பாடு செய்தவன் அவன் தானே!
- எங்கே நீ தூங்கப் போகிறாய் என்று ஒருவனைக் கேட்டேன், கட்டிலறையைக் காட்டினான். இன்னொருவனைக் கேட்டேன்; கல்லறையைக் காட்டினான். இரண்டாமவனை என் குருவாக ஏற்றுக்கொள்கிறேன்.
- நான் இறந்த பிற்பாடு, என்னையே நான் விமர்சனம் செய்து கொண்டால் இப்படித்தான் சொல்வேன் முட்டாள்களிடையே வாழ்ந்து கொண்டிருந்த கெட்டிக்காரனொருவன், கெட்டிக்காரர்களுடன் படிக்கத் தொடங்கி, முட்டாளகச் செத்துப் போனான்.

ஆதாரங்கள் : கவிஞர் கண்ணதாசன் செப்பு மொழிகள்

- கி. பிரபஞ்சன் 11-D

அறம் செய்ய விரும்பு

தமிழரின் முதல் எழுத்து 'அ' அந்த 'அ' விற்கு முதல் பதமாய் அம்மாவை தவிர்த்து எனக்கு மட்டும் அல்ல அனைத்துலக தமிழ் சமுதாயத்திற்கும் 'அறம்' என போதிக்கிறது தமிழ். இதன் மூலம் அறத்திற்கு தமிழ் வழங்கும் சிறப்பிடம் தெரிகிறது. இந்த கிளவியை தமிழுக்கு வழங்கிய கிழவி ஔவையார். அந்த கிழவியை தமிழ் உலகத்திற்கு வழங்கிய கன்னித் தமிழ் அன்னையை போற்றி வணங்குகிறேன்.

அறம் செய்ய விரும்பு - எனக்கு என்றில்லாமல் நாம் அனைவருக்கும் படிக்கும் போது அனைவருக்கும் போதிக்கப்பட்ட ஒன்று, இந்த வாசகம். இரண்டு கோடு போட்ட தாளில் அழுத்தம் திருத்தமாக எழுதிப்பழகி நாம் கற்றுக்கொண்ட இந்த வாசகம். இன்றும் இந்த வாசகம் சொல்லிக் கொடுக்கப்பட்டு கொண்டிருக்கிறது. சிறு வயதில் சொல்லி கொடுத்தார்கள். அறம் செய்ய விரும்பு என்று.

இந்த அறம் என்றால் என்ன? என்று நாம் ஆராய போனால் நம்மால் இப்போது மீண்டு வர முடியாது. அதனாலேயே அப்பொழுது அறம் என்றால் நல்ல செயல்கள், கருமங்கள் என்று சொல்லி, நாம் பிறருக்கு உதவ வேண்டும் என்று நம் சின்ன அறிவுக்கு புரியும் படி சொல்லி ஒப்பேற்றி விட்டார்கள்.

அறம் என்றால் பிச்சை போடுவதா? இல்லையெனின் தன்னால் உண்ண முடியாத பழங்கஞ்சியை வறியவனுக்கு கொடுத்து பசி ஆற்றுவதா? இல்லை என்பது என் கருத்து. ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பொறுப்பு, பணி, வேலை, கடமை இருக்கும் அதனை தன் மனசாட்சிக்கு பயந்து நீதியுடனும், நேர்மையுடனும் செய்வதே அறம் ஆகும். இது சாதாரண ஊழியர்களுக்கு மட்டுமன்றி நல்ல, வல்ல அரசுக்கும் பொருந்தும்.

- அப்துல் மலிக்
8C

With Best Compliments

from

Ambal Stores

No. 136, 2 Road,
Colombo 2
Tel : 0112432123

Gajen Travels

Tel : 0777556112

ஸ்கை கிங் டிராவல்ஸ்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலையம்

1454

இல : 17 1ம் 2ம் மாடி,
மாளிகாகந்தை ரோட், மருதானை
கொழும்பு-10 ஸ்ரீ லங்கா.
தொ:பே : 94-11-4922642, 7210679 : 94-112671784, 011-3071988
பெக்ஸ் : 94-11-2690197 கை.தொ.பே : 94-72-7833558

With Best Compliments from

Present Solution

Mobile Phones, Sales, Repairing, Software Accessores &
Unlokcing Computer Sales, Repairing

Shop No. 1/35R, 1st Floor, Liberty Plaza, Colombo 3
Mail : zakpresentsolution@gmail.com Hotline : 0773 671682 Tel : 011 2370775

Best Compliments

from

S. Arunan

12 MT

Best Compliments

from

R. Braveen

7C

"வேண்டும்"

முன்வைத்தல் பின்வாங்கா முழுத்துணிச்சலெமக்கு
வேண்டும்!
முயற்சிக்கோர் நல்முடிவு நாம் காண
வேண்டும்!
வீழ்ச்சிக்கு விடாமுயற்சி விடையாக
வேண்டும்!
வினாக் கண்டால் விடைதே மாராய்ச்சி
வேண்டும்!
கண்ணீர் சிந்தி எம் பாவம் நாம் களைய
வேண்டும்!
தண்ணீர் கொண்டு பிற தாகம் நாம் தீர்க்க
வேண்டும்!
தன்னறிவினாழத்தைத் தானறிய
வேண்டும்!
என்னங்கலையாத முழுநோக்கு
வேண்டும்!
அச்சத்தை அடியோடு தீ மூட்ட
வேண்டும்!
மன இச்சைக்கோ ரணைகாட்டி நீயாள
வேண்டும்!
உச்சத்தைக் காண்கின்ற வழிவிரைய
வேண்டும்!
உற்சாகமில்லாத வாழ்வளிக்க
வேண்டும்!
தகராறு காணாது நல்வாழ்வு
வேண்டும்!
வரலாறு காண்கின்ற மனிதனாக
வேண்டும்!
மனதோடு மனமினைந்த நாம் வாழ
வேண்டும்!
சாட்சி சொல்வோர்க்கு வாய்மை
வேண்டும்!
ஆட்சி செய்வோர்க்கு நேர்மை
வேண்டும்!

காட்சி காண்போர்க்கு இரசணை
வேண்டும்!
பாவமீட்சி கேட்போர்க்கு மனவுறுதி
வேண்டும்!
தானத்தைச் சொத்தினது சொந்தமாக்க
வேண்டும்!
மானத்தை வாழ்வோடொன்றாக்க
வேண்டும்!
ஞானத்தை மூளைக் குடைமையாக்க
வேண்டும்!
நானத்தை மங்கையர் குடையாக்க
வேண்டும்!

A. Haashir Ahamed
13 Com (T)

சிலப்பதிகாரம்

ஐம்பெரும் காப்பியங்களில் முதன்மையானது சிலப்பதிகாரம் அது முத்தமிழ், மூவேந்தர், முந்நகரம், முத்தெய்வம், மும்நீதி என்றெல்லாம் மூன்றுகளைக் கொண்ட சிறப்பிற்குரியது. "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்றார் பாரதியார். சிலம்பின் செயலை மையமாக கொண்ட கதையைக் கூறுவதால் இந்நூல் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது.

இந்தநூல் சொல்நயம், பொருள்நயம் சிறந்து விளங்குவதால் நெஞ்சை அள்ளும் நூலாக உள்ளது. தமிழில் தோன்றிய முதற்காப்பியம் இதுவாகும். இநநூல் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது. புகார்க் காண்டத்தில் பத்துக் காதைகளும், மதுரைக் காண்டத்தில் பதின்மூன்று காதைகளும், வஞ்சிக் காண்டத்தில் முப்பது காதைகள் இந்நூலில் அமைந்துள்ளன.

இதில் சிலம்பு காலில் அணியப்படுவதாயினும் சிலப்பதிகாரக் காப்பியம் உயர்ந்த இலக்கியச் சிறப்புடன் விளங்குவதால் அது தமிழன்னைக்கு மணிகளால் பூட்டப்பெற்ற ஆரம் போன்றது என்ற கருத்துடனேயே பாரதியாரும் "சிலப்பதிகாரம் என்றோர் ஆரம்படைத்த தமிழ்நாடு" என வாழ்த்தினார். மூவேந்தருக்கும் மூன்று நாட்டினருக்கும் முத்தமிழுக்கும் பொருந்தும் வகையில் இக்காப்பியம் வரையப்பட்டுள்ளது. பண்டைத் தமிழர் தம் கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை பறைசாற்றும் கண்ணாடியாக இது மிளிர்கிறது.

இந்நூல் மூன்று அறநெறிகளை உலகுக்கு உணர்த்துகிறது. அறநெறிகளுக்காகவே இக்காப்பியத்தைப் படைப்பதாக இளங்கோ அடிகள் கூறுகின்றார். அவையாவன அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பனவாகும்.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவியாக கற்பின் செல்வியாக அறிவின் கொழுந்தாக உணர்த்துகின்றது. கோவலன் பெருஞ் செல்வனாகவும், கலை ஆர்வம் மிக்கோனாகவும், கலைக்காக எதையும் இழக்கும் பண்புடையோனாகவும் காட்டுகிறார். மாதவியோ ஆடும் மயிலாகலும், பாடும் குயிலாகவும், கற்பின் செல்வியாகவும் வாழ்ந்தமையை காப்பியத்தில் காட்டுகின்றார். மற்றது அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்ற உண்மையை பாண்டிய மன்னனின் மடிவினைக் காட்டி புலப்படுத்துகின்றார்.

மற்றது கண்ணகியை தெய்வத்தின் நிலைக்கு உயர்த்தி காட்டுகின்றார். "ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்பதை கண்ணகி கோவலன் வாழ்க்கை மூலம் புலப்படுத்துகின்றார். சிலம்பு கூறும் இச்செய்திகள் எக்காலத்துக்கும் பொதுவான உண்மைகளாகும்.

இளங்கோ அடிகள் இக்காப்பியத்தினை முத்தமிழ் நாடகக் காப்பியமாகவே உருவாக்கியுள்ளார்.

"தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சில்பதிகாரமதை ஊனிலே உயிர் உள்ளளவும் ஓதி இன்பம் பெறுவோமாக"

நன்றி, வணக்கம்

- S. Achintiya 7 C

இயற்கையின் நாடக மேடை

பூப் பூத்துக் குலுங்கும்
பூங்காவனத்தில் தேடுகின்றன
வண்டுகள்.. தேன்சிந்தும் பூக்களை

நடமாடிக் கொண்டிருக்கின்றன
தென்றல் வந்து தாலாட்டுச் சொல்ல
அன்று மலர்ந்த பூக்கள் அன்றே
மடிவதையறியாமல்

காற்றுக்கு கடிவாளமிட்டு
தன்னோடு கட்டிப்போட முனைந்து
கொண்டிருக்கின்றன மரங்கள்

இரைதேடிச் சென்ற தாய்ப் பறவையை
எதிர்பார்த்து இசைமீட்டிக் கொண்டிருக்கின்றன
குஞ்சுப் பறவைகள்

தன்னில் இருந்து உயிர்பெற்ற
வெண்ணிலவை இரவின் பாதுகாவலனாய்
அனுப்ப விரைந்து கொண்டிருந்தது
சூரியன் மலைகளுக்கு நடுவே

நட்சத்திரங்கள் அணிவகுக்க
பவனி வருகின்றது நிலா
விண்ணைச்சுற்றி.....

மு. புர்ஹானுத்தீன்
வர்த்தகப் பிரிவு தரம் 13

With Best Compliments

from

BARIK

BARIK ENTERPRISES (PVT) LTD.

Importers, Exporters Millers & Commission Agent

No. 71, Fourth Cross Street, Colombo 11
Tel :+94 (11) 2421430, 2421432
Fax : +94 (11) 2421447

With Best Compliments

from

MT

NEW
MT TEXTILES

Importers & Wholesale Dealers in Textiles

No. 168-1, Keyzer Street,Colombo 11
Tel : +94 11 2381003

With Best Compliments

from

BETHEL TRADING COMPANY

No. 01, 3rd Cross Street,
Colombo -11
Tel : 011 3134571

ISLAMIC BOOK HOUSE

Importers, Wholesale & Retail Dealers in Islamic Literature in Arabic, Urudu, Tamil, Sinhala and English, Stationery, School Books, Perfumes, Caps, Cd's and Cassettes



Accepted

AMERICAN EXPRESS MasterCard VISA

77, Dematagoda Road, Maradana, Colombo 9. Sri Lanka.
Tel : (0094) 11 2684851, 011 2669197 Fax : 011 2688102
Email : info@islamicbookhouse.net
Web : www.islamicbookhouse.net, www.ibh.lk

With Best Compliments from

SANCIGA MOTOR

Spareparts Dealers in Motor Cycle Parts, Water Pump Spare, Kuboda Land Master Spare & all spares

No. 86, 1st Cross Street, Vavuniya,
Tel : 024-2220317, 024-2221974

வகுப்பறை
நேற்று - இன்று - நாளை

நேற்று

ஆதவன் அன்றைய அந்தத்தைத் தொடும் நேரம்
குருவிகள் ஊர் சுற்றி ஓயும் காலம்
பச்சைப் புல்வெளியின் முனையில்
பதித்த கால்வாய் சிறு வீடு
திண்ணைதனில் ஆசானும் முன்னே மாணவரும்
கருநிறத்தில் ஒரு பலகை மேலால் தமிழ் எழுத்துக்கள்
கையில் ஒரு பிரம்பு - சிறுவனை
சிற்பமாக்கும் உன்னத கருவி!
சொல்லென்று சிறிதும் எண்ணென்று சிறிதும்
உள்வாங்கிக் காலம் கடத்தும் சிறார்கள்
பாடமதன் ஆதியில் ஒரு வணக்கம்
அந்தமதில் ஒரு 'நன்றி'
ஆசான் பாதமதில் சரண் புகுந்து மனை ஏகும் மழலைகள்
என்றோ ஒரு நாள் உருப்பெறும் மனிதனை
உருவாக்கிய அகநிறைவில் அவர் - ஆசிரியர்

இன்று

நாற்பது நிமிடமொருமுறை 'டிங் டொங்'
இசைபாடும் ஒலிபெருக்கி
நடந்து வந்தபடி பெருமூச்சுவிடும் வாத்தியார்
முன்வரிசை எழுந்து நிற்க ஒரு சில நிசப்தம்
விழிக்கும் பின்வரிசை - அமைதியில்
உறங்கவியலாத் துன்பம் அவர்கட்கு
பேனா எடுத்து வெண்பலகை மீதெழுதி
அறிந்ததெலாம் அளவளாவி
ஜன்ஸ்டைனின் விதியை எட்டும் போது
ஒரு சிரிப்பொலி
விண்கல் வளிமண்டலத்துள் புகுந்தது போல
வேகமும் வெப்பமும் கலந்த
செ[illegible]களால் 'குற்றவாளி'
கண்டிக்கப்படுகிறான்

ஒருவாறு மணியொலிக்க நிம்மதியாய்
சில மூச்சுக்கள்
"டேய் இன்னொரு பீரியட் இருக்குடா"
"ஐயோ அறுவை இன்றும் முடியலையா"
"டேய் எழும்பி வெளிய போங்கடா
ரெண்டு பேரும்" - இது ஆசிரியர்

நாளை

அலறிய செல்போனின் மறுமுனையில்
அம்மா* "வேக் அப் சண்"
எழுந்தான், குளித்தான் இரண்டு பாண்
துண்டு - அவன் காலை உணவு
கையில் புத்தகப்பை; இல்லையில்லை
லப்டொப் பேக்
காரில் ஏறினான்; அடைந்தான் ஸ்டடி
சென்டரை - இயந்திரமாகிப் போன
வாழ்ககை
கணக்கு தெரியலையா, கணணி செய்தது
- வந்திராத 'டியுட்டர்'
கூட ஸ்கைப்பில் வந்து 'கல்வி'
புகட்டினார்
இடைவேளையில் 'ஐபோட்டில்' பாடல்
கேட்டு - பின் வாயால்
அதை முணுமுணுத்து புத்தகத்தை -
லப்டொப்பை திறந்தால் தூக்கம் வரும்
சொப்ட்வேர் ப்ரொப்ளம் என புளுகி - கன
நேரம் பாடம் மறந்து
பேஸ்புக், ட்விட்டர் எல்லாம்
மலையடிவார எலிபோல குடைந்து
பின் சற்று படிப்பது போல் பாசாங்கு
செய்யும் போது
'லெசன் இஸ் ஓவர்' என்றவாறு, கணணி
அணையும் முன் - கார்
கதவை மூடியும் மூடாமலும் அவரசமாய்
சினிமா செல்லும் - இவரும் ஆசிரியர்

- அ. டானியல்
பௌதீக விஞ்ஞானம் (12 MSE)

With Best Compliments from

Gift Voucher
Buy a frame and get a free pair of lens
This voucher valid till
31st December 2011

V & Eye Opticians

We are at your service : Monday to Friday 9.00 am. to 7.00 pm. Saturdays 9.00 am. to 5.00 pm

05, Hospital Road, Dehiwala,
(Opp. William Grinding Mills)
Tel : 2721969, 5640190
Email : vili@zeynel.com

With Best Compliments

from

MAIYURA Textiles

IMPORTERS & WHOLESALE, RETAIL DEALERS IN TEXTILES

149, 155, Keyzer Street, Colombo 11
Tel : 2324060, Fax : 2332823, Mob : 0777-885217

With Best Compliments

from

M.M.B. TRADERS

No. 65, Mill Road, Vavuniya
Tel : 024-2224310

With Best Compliments from

GLOBAL GRAPHIC SOLUTION

Offset/screen/duplo printing computer type setting/english/tamil/sinhala/ leaflets/ graphic designing/ calender, exercise book/book binding/wedding cards/polythene bag. bill book/letter head/visiting cards/greeting cards/computer forms/stichers/

35A, Vivekananda Road, Wellawatta Tel : 0113070696 Mob: 0714245155, 0773355267
Email : gg-solution@yahoo.com

Diploma in Computerized Accounting
Ace Pac + M.Y.O.B + Quick Book + Tally — Individual Classes 2500/=
Diploma In English 5900/= | Spoken English 4400/=
Advanced Dip in Computerized Accounting
Ace Pac , M.Y.O.B , Quick Book , Tally , Peachtree , Sage 6700/=
External Degree Classes English & Linguistic
IELTS Academic & General 8700/=
Auto CAD 2011
2D & 3D Modeling 6700/=
Programming Any Course
VB.Net, Java, C, VB 6.0, C++, C# 6300/=
Dip.in Web Development
Javascript, CSS, PHP, Mysql, Ajax 7300/=
Degree Foundation Access Programme 26700/=
MS.Office 1300/=
Dip in Computer Studies 2300/=
Dip in Video Editing 4200/=
Dip in Graphic Designing 3300/=
Dip.in Information Technology 17700/=
AICT 3,1/1,Fernando Road,Wellawatte,Colombo-06
Tel No:0112-363632,0112-364567
www.aictstudy.com,www.srilankait.com

திகதி 26.12.2004

26.12.2010 .....

ஐந்து மணி முப்பது நிமிடங்கள், மாலை நேரம் தொடர்மாடிக் கட்டிடத்துள் என் வீடு. 'தென்றல் காற்று, சொர்க்கத்தின் மறு பெயர்' என்று சொல்வதற்கு இடமே இல்லை. சென்னை வெப்பம் தோற்றுவிடும். அந்தாட்டிக்கில் இருப்பது போன்றதோர் குளிர்மை எனக்கு தேவைப்பட்டது. அவ் மாலைக் கதிரவனின் நெருப்புக் குளியலில் இருந்து விடுபட வீட்டில் இருந்து வெளியேறி என் பிஞ்சுப் பாதங்களை தீக்குழம்பில் வைப்பது போல் என் தொடர்மாடிக் கட்டிடப்படியில் ஏறி மொட்டை மாடியை அடைந்தேன். மொட்டை மாடிக்கே காற்று கிடைக்கப்பெறாத வண்ணம் அலங்கரிக்கப்பட்ட Dish TV களிற்குள் ஒரு மாதிரியாக ஓர் இடைவெளியைத் தேடி மேற்கு கடற்கரைக் காற்றை சுவாசிக்க ஓர் சந்தர்ப்பத்தைப் பெற்றேன். அச்சந்தர்ப்பம் ஒளியையும், ஒலியையும் ஒருங்கே கொடுக்கும் அற்புதக் காட்சி. தன் பிள்ளைகளுக்கு பறக்கச் சொல்லிக் கொடுக்கும் தாய் பறவைகளும், காட்டுன்களிலே வெக்கத்தால் சிவப்படைந்த முகத்தை போல் தோற்றமளிக்கும் பஞ்சு மிட்டாய் முகில்களும் விண்ணிலே விதைக்கப்பட்டிருந்த வினோதமான காட்சி, என்னை மெய்மறக்க வைத்த மென்மையான காட்சி. அவ் அழகிய புன்னகைப்படம் என் பழைய ஞாபகங்களை நொறுங்கிய கண்ணாடிகள் மீண்டும் ஒட்டிக்கொள்வது போல் காலத்தை பின்னோக்கி எடுத்துச் சென்றது.

அது அவளைப் பார்த்து என் மனம் நொறுங்கிய அழகிய காலம், அவஸ்தைக் காலம் கூட.

01.01.2004

அந்த முதல் நாள் அவளைக் கண்ட நாள், சங்கரினதும் கௌதம் மேனனதும் கற்பனைக்கு அப்பால் அவள் வந்தாள். கண்களில் இருந்து முத்துக்கள் விழுவது போன்ற கண்ணீர் மழையுடன் தாயைத் தன் இரு பிஞ்சுக் கைகளால் கட்டிப் பிடித்துக் கொண்டு நேசறி வகுப்பிற்கு வரமாட்டேன் என அடம்பிடித்துக் கொண்டு இருந்த ஒரு, இரு மின்னல் நிமிடங்கள் வாழ்வின் நான் கண்ட Tornardo சம்பவம்.

என் பேரே எனக்குத் தெரியாத பொம்மைகளுடன் சேர்ந்து விளையாடும் வயசது. இருந்தும் அவளது பேரை அறிய துடிக்கும் என் கள்ளங்கபடமற்ற மனம். Motherboard இல் திக்குத் திசை தெரியாமல் வரையப்பட்டிருக்கும் மின்கம்பிகளைப் போல் திணறிக் கொண்டிருந்த என் இதயம்.

மாதங்கள் சில கழிந்தன வர்ணப் பெட்டியுடனும், விளையாட்டு கைத் துப்பாக்கிகளுடன் நடை போட்டுக் கொண்டிருந்தன.

05.05.2004 .....

பிறிதொரு நாள் காலை வேளை, பத்து மணி, தன் முழங்கையை வானவில்லைப் போல் பிடித்துக் கொண்ட அம் மடிப்பு நடையுடன் என்னை நோக்கி வந்தாள். அவ் கம்பன் கண்டிராத டம்பிள் வடிவழகி. அருகில் வந்தவுடனே 'உம் பேரு என்ன?' என தன் பொன்வாயால் புன்னகைத்தாள். திரைப்பட நடிகர்கள் slowmotion இல் பறந்து பறந்து சண்டை பிடிப்பது போல் அவள் வினவிய கேள்வி என் முன் slowmotion இல் வட்டமிட்டது. கேள்விக்கு விடை தெரியாமல் இருந்த என் முன்னே ஒரு மௌனராகம்! மனதிற்குள் மைக்கிள் ஜாக்சனின் நடன மேடை. ஒரு மாதிரியாக என் பேரை நானே கண்டு பிடித்து சொன்னேன். '-1-1-1', ஆகா என் பேரை கேட்ட அடுத்த நொடி, பூமியின் அடியில் உள்ள தட்டுக்கள் இடமாறுவதைப் போல் அவளது செவ் உதட்டில் ஏற்பட்ட அழகிய மாற்றங்கள், அதை சிரிப்பு என்று கூறுவார்கள். சிரித்தபடியே விலகிச் சென்றால், அவளுடன் பேசிய களிப்புடன் பட்டாம் பூச்சிகள் பறக்கும் வேளையில் எனக்கு ஒரு கேள்வி 'அவளது பேர் என்ன?' அவளிடம் கேட்க மறந்த வினா, விடை தெரியாத வினா!

உசைன் போல்ட்டை விட வேகமாக ஓடியது நாட்கள்.

25.12.2004

நேசறி வகுப்பின் கடைசி நாள். மீண்டும் ஒரு விசித்திரமான நாள், எல்லையற்ற சிரிப்புடன் அவள் என்னிடம் வந்து, 'உனக்கு என்னைப் பிடிக்கும் தானே' எனக் கேட்டாள். கேள்வியின் அர்த்தமும், பதிலும் தெரியவில்லை. நானோ ஒன்றும் சொல்லாமல் கண் இமைத்தேன். அவளுக்கு அதில் என்ன புரிந்ததோ தெரியவில்லை. ஆனால் மீண்டும் அவளுடைய Bombay sweet சிரிப்புடன் என்னை விட்டு அகன்றாள்.

அவளைக் கண்ட இறுதிக் காட்சி அவளது சிரிப்புடனே என் நெஞ்சைக் கல்லில் வரையப்பட்ட ஓவியமாய் இருந்தது.

26.12.2010 .....

அவளது பெயர் என்ன!!! திடீரென A.R. Rahuman இன் Airtel இசை, என்னவென்று பார்த்தால் மொட்டை மாடியில் நிற்கும் எனக்கு நண்பனிடம் இருந்து செய்தி வந்தது 'Gud nite'.

ஒரே நினைவுகள் ஒவ்வொரு வருடமும் அந்த ஒரே நாளில் 26ம் திகதி மார்கழி மாதம்.

- Y. திருக்குமரன் 12 MT

With Best Compliments from

- ★ Is your the child having difficulty in understanding
- ★ Is the child showing great difficulties expressing ideas
- ★ Is your child having difficulties in memorizing and using math and other subject facts at appropriate grade levels.
- ★ Does your child having emotional problems.
- ★ Cannot start or maintain a social conversation.
- ★ Communicates with gestures instead of words.

Please visit to our school for solution

Happy Feet School

19/5, Priyarahanarama Road,
Dehiwala
Tel : 077 5109497

With Best Compliments

from

Organizing Committee
2011 / 2012

Best Compliments from

Kavinkalaya

8B, 2/3, Perera Lane, Wellawatte, Colombo 6
Tel : 0714190259, 0114955375

With Best Compliments from

Metro Travels & Tours (Pvt) Ltd

All Taxes Included, Credit Cards Accepted with a surcharge, Tour package & Travel Insurance, Above Fares Are Subject to Seat Availability Terms & Conditions apply

Further details please contact
Branch Office
345, Galle Road, Bambalapitiya, Colombo 04
Tel : 2553440, 2553441, 5736715, 5736716
Fax : 2553800
Email : info@metrotravels.lk
Office Hours
Weekdays from 9.00 am. to 5.30 pm
Saturday from 9.00 am to 1.30 pm

COLOMBO - CHENNAI - COLOMBO (Sri Lankan Airlines)	15500.00
COLOMBO-TIRUCHIRAPALLY - COLOMBO (Mini 2 Pax)	13500.00
COLOMBO - THIRUVANATHAPURAM - COLOMBO (mini 2 Pax)	17500.00
COLOMBO - KOCHI-COLOMBO (Mini 2 pax)	15500.00
COLOMBO - BANGKOK - COLOMBO	28000.00
COLOMBO - SINGAPORE - COLOMBO	28000.00
COLOMBO - KUALALUMPUR - COLOMBO	27500.00
COLOMBO - DOHA	22000.00
COLOMBO - KUWAIT	22000.00
COLOMBO - LONDON	42500.00
COLOMBO - MILAN	37000.00
COLOMBO- TORONTO	80000.00
COLOMBO - MELBOURNE - COLOMBO	99500.00
COLOMBO - SYDNEY	52500.00

With Best Compliments from

G.T.V. ENTERPRISES (PVT) LTD

Importers Exportes, Food Producers Forwarding & Clearing Agents Cargo Services to all Countries by Air & Sea, Courier Service, Sri Lankan Airlines Cargo Agent

VIJEYA ENTERPRISES **MAHARAJA FOOD PRODUCTS**

No. 18/3, Dr. E.A. Cooray Mawatha, Colombo 06
Tel : 011 2360926, 0114654444 Fax : 0112361139 Email : info@maharajafoodproduct.com
gtvcourier@yahoo.com

With Best Compliments from

MUSIC J ENTERTAINERS

SHOW LIGHTING & SOUND SOLUTION PROVIDERS, DJ'ING FOR ANY OCCASIONS

No. 593, Kandy Road, Pattiya Junciton, Kelaniya.
Voice : 0778 212992, 0786 414229, 0314 909508

'என்னை அறியாமல் எனக்குள் நுழைந்த ...'

பூபாளம் ஒலிக்கும் இனிய வேளைதனில்
மேனி வருடும் இளந்தென்றல் என
என் மனதைத் தழுவி
இதயம் வருடினாய் நீ !

மழலை மொழி இரசித்ததும் இல்லை
பனித்துளி ருசித்ததும் இல்லை
மாற்றங்கள் பல கொண்டு
மனதினுள் நுழைந்த மங்கையடி நீ !

சாமான்யனாய் இருந்தேனடி; உன்னைக் கண்ட அந்த நொடி
சகலமும் மறந்து சிறுபிள்ளை ஆனேனடி
உன்னை அறியாது உன்னைக் கண்டேன்
என்னையே அறியாமல் என்னுள்ளே நுழைந்தாய் நீ!

சட்டென்று காதல் வரும் என்று
நேற்று வரை நம்பவில்லை
சடுதியாய் உன்னைப் பார்த்ததும்
எதுவுமே எனக்கு நினைவில்லை!

ரோஜா இதழில் ஒட்டி இருக்கும்
சிறு பனித்துளி போல
முகப்பரு கூட அழகு தான் - அது
உன்னில் இருப்பதால்!

கடலலை கரையோடு விட்டுச்செல்லும்
நுரை போல
என் மனதோடு ஒட்டிக் கொண்டது
உன் முகம்!

இனம் புரியா இன்பம் உன்னைப் பார்க்கையில்
என்னைப் பற்றி, பற்ற வைத்து விடுகிறது
அவை உனக்காக என எண்ணுகையில்
தீ கூட தேனாகிறது என் பார்வையில் !

அமாவாசை தினங்களில்
ஊரே இருளில் மூழ்கிப் போயிருப்பினும்
உன் வீடு மட்டும் நிலவொளியால்
ஒளிர்வது உன் மதி முகத்தால் தானடி!

நீ பூப் பறிக்கையில்
பூக்கள் கண்ணீர் விட்டழுகின்றன
அவற்றுக்கு வலித்திடும் என்பதால் அல்ல
உன் பிஞ்சு விரல்களுக்கு வலித்திடுமோ என்பதால்!

தங்கத்தை உருக்கி மேனி செய்து
விண்மீன்கள் கொண்டு விழிகள் அமைத்து
கொவ்வைப் பழத்தால் உதடு தீட்டி
பூமியில் மிதந்து வரும் வான் தேவி நீயடி!

கள்ளூறும் பார்வையில் நான்
கதி கலங்கிப்போக
சிறு பிள்ளைச் சிரிப்பில் நான்
சின்னாபின்னம் ஆனேனடி!

தூரத்தில் உன்னைப் பார்த்தால் கூட
இதயம் விட்டு விட்டுத் துடிக்கிறது
உன்னில் உள்ள பயத்தால் அல்ல
உன்னைக் கண்ட பரவசத்தால்!

சங்கீதப் புன்னகையில்
சர்வமும் மறந்தேன் - உன்
முலாம் பூசாத பேச்சில்
என்னையே நான் இழந்தேன்!

ஆகாரம் கூட எனக்கு வேண்டாம்
உன் அழகு விழிகள் பார்த்தால்
என் ஆயுள் கூட போதாது
உன் அளவிலா அழகை ஆராதித்தால்!

நாடாளும் மன்னன் எனும்
எண்ணம் தோன்றும்
உன் காதல் தேசங்கள்
என்னை ஆளும் போது!

நீ பார்க்கும் பார்வை ஒன்றே போதும்
எனக்கு பசி போகும்
உன் மந்திரப் புன்னகை ஒன்றே போதும்
என் வாழ்வின் துன்பங்கள் பறந்தோடும்!

புன்னகை புரியும் பூவை
பூமியில் கண்டேன்
அப் பூவை பார்த்து பிற பூக்கள்
பொறாமை கொள்ளும் அதிசயமும் இன்று கண்டேன்!

கார் காலத்திலும் என் தேசத்தில்
வெய்யில் தான் உன் விழிகளால்
கோடையிலும் எனக்கு
குளிர் தான் உன் புன்னகையால்!

வாள் இன்றி வலி இன்றி
துளி கூட இரத்தம் இன்றி
உன் விழிகள் செய்யும் வேள்வியில்
தினம் தினம் மடிந்து மாய்கிறேனடி!

நானேதும் அறியாமல் என்னுள் வந்து
என் இதயம் நுழைந்து ;
காதல் எனும் விதை தூவி
காலமெல்லாம் கண்விழியில் சிறைபிடித்தாள்
கன்னியவள் என்னை !

A. D. Anojan 12 MT

நான் விரும்பும் பெரியார்

நான் விரும்பும் பெரியார் மகாகவி பாரதியார். அவரது நடையிலும் பேச்சிலும் வீரம் துள்ளும். அவரது பாடல்களில் புரட்சிக் கருத்துக்கள் துள்ளும். சோம்பேறிகளையும் அவரது பாட்டுக்கள் சுறுசுறுப்பாக்கும். இந்திய சுதந்திர தாகத்தை ஊட்டியவர். "ஓடி விளையாடு பாப்பா" என்று விளையாட்டை முதன்மைப்படுத்தியவர். "சோம்பல் மிகக் கெடுதி" என்று சொன்னவர். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிப்போல் இனிதாவது ஒன்றும் காணோம்" என்று தமிழைப் பெருமைப்படுத்தியவர். இவர் வாழும் போதே வாழ்த்தாத சமூகத்தில் வாழ்ந்து போன கவிஞன். பாரதி என்ற உலக மகாகவி தான் நான் விரும்பும் பெரியார்.

- இந்திரபாலன் யோஹித்
4 C

வீட்டுத் தோட்டம்

தாத்தா வைத்த தென்னையும்
தலையில் இளநீர் தருகிறது
பாட்டி வைத்த வாழைமரம்
பாங்காய் பழங்கள் தருகிறது
அப்பா வைத்த மாமரமும்
எப்போதும் பழம் தருகிறது
அம்மா வைத்த முருங்கையுமே
அளவில்லாமல் காய்க்கிறது
மாமா நட்ட மிளகாயும்
மணி மணியாகக் காய்க்கிறது
அண்ணா வைத்த மாதுளையோ
கிண்ணம் போலப் பழுக்கிறது
அக்கா நட்ட கத்தரியோ
அடுக்கு அடுக்காய் காய்க்கிறது
சின்னஞ் சிறுவர் நாங்களுமே
செடிகள் நட்டு வளர்ப்போமே

- M. Yusri Ziardeen
3 D

www.slt.lk

Your trusted communications partner
for over 150 years

Sri Lanka Telecom

**One Country.
One Voice.**

Pioneering technology | Strengthening Economy | Uplifting Society

நானிலம் பாட வாழ்வோம் !

மாதா பிதா குரு வார்த்தைகளை
வேத வாக்காய் மதிக்க வேண்டும்
சதா காலமும் இம் மூவரையும்
நாதனாய் துதிக்க வேண்டும்

ஆசான் பாடம் போதிக்கையில்
கண்ணும் கருத்தாய் இருக்க வேண்டும்
பாசாங்கு கர்வம் பண்ணினாலோ
பாழாய் போய் நாளை வருந்த வேண்டும்

எந்த உயிர்கள் மீதினிலும்
என்றும் அன்பாய் இருக்கணுமே
அந்த அன்பை வளர்த்தாளே
ஆண்டவன் நமக்குள் உறைவானே!

அகத்தில் உடலில் ஆடையில்
அழுக்குப் படியாமல் பார்க்க வேண்டும்
செகத்தில் சுத்தம் காத்தாலே
சுகமாய் நிதமும் வாழலாம்

வஞ்சகம் பொறாமை எல்லாம்
நெஞ்சை விட்டு விலகணுமே
நெஞ்சில் அவற்றை வளர்த்தாலே
நீண்ட ஆயுளைக் குறைத்திடுமே

தீய சிந்தனைகள் அனைத்தையும்
தொலையச் செய்ய வேண்டும்
தூய சிந்தனை தன்னையே
தினமும் சிந்தையில் வளர்க்க வேண்டும்

மூத்தோர் முதியோர் எல்லோரையும்
மதித்தே நாளும் நடக்கணுமே
நீத்தோர் சொன்ன வார்த்தைகளை
நினைத்துக் கொஞ்சம் பார்க்கணுமே

நல்ல நல்ல நூல்களையே
நாளும் தேடிப் படிக்கணுமே
நல்லறிவு அதனால் கூடிடுமே
நானிலம் நம்மைப் பாடிடுமே

- K. Sasitharan
12MT

தமிழ்

எங்கோ பிறந்து
ஏனோ வளர்ந்த
ஏதொ ஒரு மொழியல்ல
தமிழ்

சிந்து வெளியின்
சின்னங்கள் கூறும்
தொண்மை தமிழின்
வித்தை

சிந்தையின்
சிகரங்கள் தாண்டும்
வீரத்தமிழர்
வித்தை

"எழு" என்ற பெயரில்
ஏராள மொழிகளுக்கு
தாயாகி நின்றாள்
தமிழின் தாய்

ஏழுலகாலும்
வீரப்புதல்வர்களை
பெற்றகம் மகிழும்
தமிழ்த் தாய்

இலக்கணக் கட்டுடல்
இலக்கியப் பட்டாடை
அழகிய திரு நுதலில்
பொட்டாய் பண்பாடு
இயல் இசை நாடகம்
இலங்கும் ஆபரணமாய்
பூண்ட தமிழ் மகளின்
உலகப் பவனி
கருக்கொண்ட
சொற்கள் கண்டதுண்டா?
தமிழுண்டு
தினை, பால், வழுவற்ற
செருக்குடன் மிளிரும்
செல்வ மொழி தமிழ்.

விண்ணுலகம் வியக்கும்
கோபுரங்கள்
கண்தவம் செய்த
சிற்ப ஓவியங்கள்
மண்ணில் கவியெழுதும்
ஆடல் என
இன்னும் பல கலை வளர்த்த
பக்தி மொழி
தமிழ்

வாகை மலருக்கு
தட்டுப்பாடு
வானம் வரை இல்லை
கட்டுப்பாடு
என வேலும் வாளும்
சரித்திரம் எழுதிய
வீர மொழி
தமிழ்

காற்றை உருக்கி
காதலுக்கு தூதனுப்பி
நாற்று நடுபவரும்
நாடாளும் மன்னர்களும்
போற்றும் குலப்
பண்பு குறையாமல்
பேசி மகிழ்ந்த
காதல் மொழி
தமிழ்

ஆதியோடு அந்தமும்
இல்லாத மொழி இது
அலைமோதும் கடற் கோளும்
அலைக்கழிக்கும் இடம் பெயர்வும்
அண்டியும் அழியாத
ஆரோக்கிய மொழி தமிழ்
ஆறாயிரம் ஆண்டு
தொண்மையின் சான்றுகள்
இன்னும் உறுதியாய் வாழும்
நூறாயிரம் ஆண்டுகள்

- ம. தமிழேந்தி
12 MT

ஒழித்திடுவோம் ஊழலை

தனிமனித ஒழுக்கமே என்றும்
தேசத்தில் தவறுகளை தீர்மானிக்கும்
ஊழல் ஊழல் என்று மக்கள்
அரசியல்வாதிகளையும்
அரசாங்க ஊழியர்களையும்
ஆங்காங்கே கண்டறிந்து
ஆர்ப்பாட்டம் நடத்தினாலும்,
தான் செய்யும் தனிமனித ஊழலை
தரம் கண்டு திருத்துகின்றனரோ?
தன் தவறை மறைக்க
தன் காரியம் கைகூட
தகுதிக்கு மேல் லஞ்சம் தருகிறோம் நம்
தனிப்பட்ட தேவைகளுக்காக
தவறின் ஆரம்பமே இங்குதானே.
எத்தனைபேர் சாலை விதியை
சரியாகப் பின்பற்றுகிறோம்
மருத்துவ ஊர்திக்கு (அம்புலன்ஸ்)
மனதார் வழிவிடும் எண்ணம்
மனிதனில் எத்தனை பேருக்கு உள்ளதோ?
சட்டதிட்டத்தை சகட்டுமேனிக்கு தாண்டுகிறோம்
விதிகளையும் கண்டபடி மீறுகிறோம்
சாலை விதியை மீறிவிட்டால்
காவலர் கேட்கும் முதல் கேள்வி
இங்கு கொடுத்தால் இத்தனை
நீதிமன்றம் சென்றால் இத்தனை
சட்டென்று நம் கை சரளமாக கொடுக்கிறதே ....
இதுதானே ஊழல்
இதன் பெயர் தானே லஞ்சம்
ஊழல் லஞ்சம் என உணர்வில்லாது வாழும்
ஒவ்வொருவருக்கும் உயர்வான தண்டனை
உடனடியாக தர வேண்டும் ....
ஒவ்வொரு குடிமகனும்
தன் கடமை இதுவென
தானறிந்து நடந்து கொண்டால்
தவறுகளை திருத்திடலாம்
தன்னுரிமை பெற்றிடலாம்
ஊழல்களை ஒழித்திடலாம்
உண்மையாக வாழ்ந்திடலாம்

A. R. Naseef
12MT

கல்வி

★ கல்வி என்பது மனிதனுக்கு அறிவூட்டும் ஒளி விளக்குப் போன்றது

★ மனிதரிடத்துள்ள அறிமையைப் போக்கி நல்வழி காட்ட வல்லது

★ உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன. அவை கல்விச் செல்வம், பொருட் செல்வம்.

★ எவ்வளவு பொருட் செல்வத்தை நாம் தேடி வைத்தாலும் அவை நிலைப்பதில்லை.

★ கல்வி செல்வமானது நிலையானது. அழியாதது கல்வி செல்வமானது பிறருக்கு கொடுக்கும் தோறும் பெருகிக் கொண்டே செல்லும்.

(கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு)

- பவகுகன்
3D

தேர்வுகளின் முடிவு

எப்போதெல்லாம் தேர்வுகளின் முடிவுகள் வெளிவருகின்றனவோ அப்போதெல்லாம் தோல்வி கண்ட பல இளங்குருதிகள் தங்களை தாங்களே அழித்துக் கொள்ளும் அவல நிலையை காண்கின்றோம்.

அச்சம் போக்கும் கருவியாயிருக்க வேண்டிய கல்வி அச்சத்தையும் அவநம்பிக்கையையும் உண்டு படுத்துவது எமது சமூக கோளாறு என்பதன்றி வேறென்ன?

தேர்வுகளை மன்னித்தாலும் தற்கொலையை மன்னிக்கவே முடியாது.

தேர்வு என்பது அறிவின் அளவு கோலன்று அது ஓர் பயிற்சி அவ்வளவு தான். அது உயிர் வாங்கும் தூக்குமேடை என காண்பது தோற்றப்பிழை.

தேர்வுகள் இல்லாமலே உயர்ந்தவர்களை உருவாக்கும் ஒரு கல்வி முறைகாக காத்திருப்போம்.

தேர்வற்ற யுகம் காண்போம்.

- H.B.A. Azad
12 MT

திருவள்ளுவர்

1.திருவள்ளுவர் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்.
2.இவர் திருக்குறள் என்னும் நூலை இயற்றியுள்ளார்.
3. திருக்குறள் 1330 குறட்பாக்களைக் கொண்டது.
4. திருவள்ளுவர் தமிழ் நாட்டில் மயிலாப்பூரில் வாந்ந்தார்.
5. இவரது கருத்துக்கள் உலக மக்கள் அனைவருக்கும் ஏற்றது.
6. திருவள்ளுவரின் திருக்குறள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
7. திருவள்ளுவர் மக்கள் வாழ்க்கைக்கு வழி காட்டும்ட பல கருத்துக்களை தெரிவித்துள்ளார்.
8. இவரை செந்நாப்பபோதர், வள்ளுவர், பொய்யாமொழிப் புலவர், ஐயன் என்றெல்லாம் அழைப்பர்.
9. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டதமிழ் நாடு என்று பாரதியார் பாடியுள்ளார்.

M.N ஆதிப் அமான்
தரம் 3C

பொது அறிவு

தேனிக்கு எத்தனை கண்கள் ?
5 கண்கள்
வண்ணத்துப் பூச்சி எதனால் தன் சுவையை அறிகிறது?
பின் இரண்டு கால்களினால்
வண்டுகளின் காது எங்குள்ளது?
வண்டின் முன் இரு கால்களில்
எந்த நாட்டில் இரு கைகளினாலும் எழுதக் கற்றுக்கொடுக்கிறார்கள்?
ஜப்பான்.
தன் எடையைப்போல் 50g பொருள் தூக்கும் பூச்சி எது?
எறும்பு
கண்கள் திறந்தபடி உறங்கும் பிராணிகள் எவை?
பாம்பு,மீன்

ம. ருக்சன்
4-D

கனவுகள் நனவாகுமா...?

கொடி இடை
வெளிர் உடை
சிறு நடை - வெண்நிலாவே
தடி பிடித்து
தடை தாண்டி பூமிக்கு
இறங்கி வந்திடாதே ஏனென்றால்!
உன்னை விட ஓர் அழவிகிய நிலவு என் வீட்டில் உண்டு
அவசரம் எதற்கு
ஆச்சரியம் எதற்கு
அரைமணி கழித்து
காட்டுகின்றேன் என் அன்னையை உனக்கு
பத்து மாதம் என்னை கருவுற்று
பத்தாம் மாதம் என்னைப் பெற்று
பத்திரமாய் என்னை எடுத்து
பாசத்தோடு வளர்த்தவள் என் அன்னை
கவிதையே வழி விடு
விடுகதையே விடைபெறு
பழமொழியே பக்கம் ஒதுங்கு
என் அன்னையை பற்றி கூறப் போகிறேன் இன்று
கலைகளில் மாமணி அவள்
என் இதயத்தின் எதிரொலி அவள்
என் இன்னிசையின் சங்கமம் அவள்
என் இரவுகளின் முழு நிலவு அவள்

இளைஞனே

உழைப்பையே உன்
உயிராகக் கொள்.....
உன் பாதையில் என்றும்
நீ தெளிவாக நில்.....
எறும்பின் உழைப்பும்
தேனீக்களின் சுறுசுறுப்பும்
உனக்குப்பாடங்கள்
புகட்டும்.....

A.C.M SAIHAAN
GRADE :4C

புவி தாயக்கு ஒப்பாகுமா?

பூமியே உன் பந்து போன்ற
வடிவத்தை நீ ஏன் கொண்டாயோ?
ஒரு கால் பந்து பலரின் கொடுமையால்
மூழ்கியும் மகிழ்ச்சியை தூண்டுவது போலோ!

பூமியே நீ பல மனிதரின்
கொடுமையால் வாடியும் ஏன்
நீ மானிடனை தாங்க வேண்டும்?
உனக்கென்ன தாய் போன்ற எண்ணமோ?

தாய் பத்து மாதத்தில் தன்
சுமையை நீக்கினாலெனினும் உன்
சுமையை நீ யுகங்கள் தோறும் சுமப்பாயோ!

தாய் தன் மகளை சான்றோனென
கேட்பாலாயினும் நீ உன் பிள்ளைகளை
சான்ரோனென கேட்டாயோ?
உன் பிள்ளைகள் சாதித்தது என்னவோ
உன் அழிவைத் தூண்டுவதோ!

உன் தேகமெங்கும் அதிர்வுகளோ!
ஆழ் கடலின் சீற்றமோ! எரிமலைகளோ!
ஆனால் நீயோ தாயின் சமத்துவத்தை அடைந்தாயோ!

பிள்ளை தன் தாயை மதிக்கானேன்
தாய் தன் பிள்ளையை
காப்பாளாயின் உன் பிள்ளைகளை
நீ காக்க மறந்தாயோ?

- J. Jeshan Mishel
12MT

திருக்குறளில் அறம்; பொருள்; இன்பம், வீடு

நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிகள் பற்றிக் கூறுவது மரபு. இந்த மரபின் வழியே இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்கள் எழுந்திருத்தல் காணலாம். இதே மரபு வழுவாது எழுதப்பட்டிருக்கும் நூல் 'திருக்குறள்'. இந்நூல் 'பொதுமறை' எனப் போற்றப்படும்.

திருக்குறளில் இந்நான்கு உறுதிகளும் கூறப்பட்டிருக்கும் விதத்தைக் கூறமுன், அந்நான்கு உறுதிகளையும் விளங்கிக் கொள்ளல் சிறப்பு. அறமாவது 'மனு' முதலிய நூல்களில் விதித்தன செய்தாலும், விலக்கியவற்றை விலக்கி வாழுதலும் ஆகும். பொருள் என்பது சமூகம் தத்தமக்கு விதிக்கப்பட்ட நிலைகளில் ஒழுகுவது பற்றிக் கூறுவது ஆகும். இன்பம் இல்வாழ்க்கையைப் பற்றிக் கூறுவதாகும். வீடு என்பது இறைவனைப் பற்றியும் இறைவனுடன் ஒன்றிவிடும் நிலை பற்றியும் விளக்குவது ஆகும். ஆனால் இவற்றுள்ளே வீடு என்பது 'சிந்தையும் மொழியும் சொல்லா நிலைமைத்து' ஆதலின் அது பற்றி விளக்கமாகக் கூறப்படாது சுட்டியே சொல்லப்படுகிறது.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. வீடு பற்றி எவராலும் கூறமுடியாதென்பதால் திருவள்ளுவர் வீடு பற்றி தனிப்படக் கூறாது விட்டிருக்கலாம். ஆனால் குறன் நூல் முழுவதிலும் வீடு பற்றிய செய்திகள் விரவி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. திருக்குறளிலே அறம் ஏனைய உறுதிப் பொருட்களாகிய பொருள், இன்பம், வீடு என்பவற்றிலும் ஊடுரு நிற்கின்றது. அறத்தில் திருவள்ளுவர் கொண்டுள்ள பிரீதி அவரை

"அறத்தாள் வருவதே இன்பம்"

என்று அறுதியிட வைக்கின்றது. அறம் என்பது மாசற்ற மனம் என்பது வள்ளுவரின் எண்ணம். இல்லத்தினருக்குரிய அறங்களென இறை வணக்கம், அறஞ் செய்தல், மக்கள் பெற்றோருக்கு நன்றியாய் இருத்தல், தந்தையின் கடன், அன்புடமை, ஒழுக்கமுடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், நடுநிலைமை, அடக்கவுடமை, பொறை, அழுக்காறாமை, பிறர் மனம் நயவாமை, களவெடாமை, புறங்கூறாமை, ஈகை நற்செயல்கள் செய்தல் என்பன கூறப்படுகின்றன. துறவறத்தாருக்குரிய அறங்கள் என அருளுடைமை, புலால் மறுத்தல், தவம், கூடாவொழுக்கம், நீத்தல் கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, சொல்லாமை, உலக ஆசைகள் அழித்தல், மெய்யுணர்தல் ஆகியன என்று வள்ளுவர் கூறுகின்றார்.

அறத்திலே அவர் கொண்டுள்ள நம்பிக்கையை

'அறத்தினூங் காக்கமில்லை - அதனை
மறத்தலின் ஊங்கில்லைக் கேடு"

என்று கூறும் திருக்குறளில் அறியலாம். பொருள் என்ற உறுதிப் பொருள் பற்றிக் கூறுகையில் வள்ளுவர் அரசாங்கத்திற்கும் சமூகத்திற்கும் உரிய கடமைகளைக் தெளிவாகக் கூறுகிறார்.

அரசாங்கத்தினருக்கும் பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராமை, தெரிந்து தெளிதல், மறதியின்மை, செய்கோண்மை, குடிகள் அஞ்சுவன செய்யாமை, விதாட்சண்யம், ஊக்கம் ஆகியவற்றுடன் அரசன் அல்லது ஆளுவோனுக்கு துணையானோருக்கு அமைச்சு, அன்று அமைந்த சொல்வன்மை, வினைத் தூய்மை, வினைத் திட்டம், தூதுவர்கடன், குறிப்பறிதல், அவையறிதல், அவையஞ்சாமை என்பனவும் நாடு எங்ஙனம் அமைய வேண்டும், அதன் காவல், படைப்பலம் என்பனவும் கூறப்பட்டுள்ளன.

இன்பம் என்பது காதல் வாழ்வு பற்றிக் கூறுவது ஆகும். காதல் வாழ்க்கையை விழுமியது ஆக்குவது என்பது வள்ளுவர் கருத்து. ஒருவனும் ஒருத்தியும் பிறர் அறியாது அன்பு கொண்டு ஒழுகுவதை 'களவு' என்றும், மணம் புரிந்து வாழுதலைக் 'கற்பு' என்றும் பாகுபடுத்தி அவ்வொழுக்கங்களை விபரிக்கின்றார்.

என்றும் நிலையான இன்பம் தருவது 'வீடு'. அதைப் பெறுவது அரிதாகையால் அதை வள்ளுவர் 'அரும் பயன்' என்று குறிப்பிடுகின்றார். அந்த வீட்டினை அடைந்தால் மீண்டும் பிறப்பில்லையாதலால் 'மற்றீண்டு வாழாநெறி' என்றும் குறிப்பிடுகின்றார். இதைத் தவிர, ஆங்காங்கே 'வீடு' என்பதை வானோர்க்கும் உயர்ந்த உலகம் என்றும் 'சிறப்பு' என்றும் 'உயிர்ப்பு' என்றும் கூறுகின்றார். ஆசைகள் அற்றுப் போனாலே இறைவனுடன் கலக்கலாம் என்பதை

"ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

என்று குறிப்பிடுகின்றார்.

இங்ஙனம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருளைக் கூறும் திருக்குறள் நூல் தமது வாழ்க்கையைச் செம்மையாக்கக் கூடியது என்பதில் ஐயமில்லை.

நன்றி

- A.H. Mohamad Maalik 13 CT

மகாபாரதத்தில் கர்ணன்

குந்திதேவியால் பெறப்பட்டு அதிரதனால் வளர்க்கப்பட்ட சூர்ய புத்திரனே கர்ணனாவான். மகாபாரதத்தில் ஒரு முக்கிய புள்ளியாக இருந்தும் பலரால் அறியப்படாத ஒரு கதாப்பாத்திரம் தான் கர்ணன். அப்படிப்பட்ட கர்ணனின் சிறப்புக்களையும் நாம் அறிய வேண்டியது எமது கடமை.

கர்ணனின் தாயான குந்திதேவியின் தகப்பனாரின் அழைப்பில் துர்வாச முனிவர் அவரின் வாஸஸ்தலத்திற்கு எழுந்தருளியிருந்தார். குந்திதேவி அவர் கேட்காமலேயே அவருக்குத் தேவையானவற்றை அளித்து பணிவிடை செய்து வந்தார். இப்படியே ஓராண்டு காலம் அவர் மனங்கோணாமல் நடந்ததால் மகிழ்வுற்ற துருவாசர் அவருக்கு பிற்காலத்தில் ஏற்படும் பிரச்சனைகளை அறிந்து மந்திர பாக்கியத்தால் குழந்தை பெறும் மந்திரத்தை கூறியிருந்தார். ஆனால் அதை நம்பாத குந்திதேவி பரீட்சித்து பார்க்க முயன்றார். அதற்காக சூரிய பகவான் குந்திதேவியின் முன் தோன்றி புத்திர பாக்கியம் அளித்தார். அதனால் பத்து மாதங்களில் சிசுவொன்றை பெற்றெடுத்த குந்திதேவி அதிர்ச்சியடைந்தர். காரணம் அது கவச குண்டலங்களுடன் பிறந்ததாகும். பின் அதை தன் தோழியுடன் சேர்த்து ஒரு பெட்டியில் வைத்து தனது சேலையொன்றால் போர்த்தி கடலில் விட்டாள்.

அந்தப்பெட்டி கங்கை நதியில் மிதந்து சென்று திருதராட்டினனின் தேரோட்டி அதிரதன் தேர் கழுவிக் கொண்டிருந்த இடத்தை அடைந்தபோது அதைக் கண்ட அதிரதன் அதை எடுத்து திறந்து பார்த்தபோது ஓர் அழகிய குழந்தை கவச குண்டலங்களுடன் உயரிய சேலையால் போர்த்தப்பட்டது கண்டு தமது புத்திரனாக எடுத்து வளர்க்கத் தொடங்கினார். இன்று முதல் கர்ணன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தான்.

கர்ணன் பதினாறு வயதை எட்டிய போது வில்வித்தை பயில துரோணரிடம் சென்றான். அவர் கர்ணன் ஒரு தேரோட்டியின் மகன் என்பதால் கற்பிக்காது மறுத்தளித்தார். அதனால் அவர் அப்பயிற்சிகளை பரசுராமரிடம் கற்றுக் கொள்ள முடிவு செய்தார். பராசுராமரிடம் அவர் மனங்கோணாமல் நடந்து கொண்டதால் எல்லாக் கலைகளையும் இலகுவில் கற்று பரசுராமருக்கு நிகரான வில்வீரன் என்ற பட்டம் பெற்றான். பின்னொரு காலத்தில் பரசுராமர் தூங்குவதற்காக தலையனை ஒன்று கேட்ட பொழுது கர்ணன் தனது மடியையே கொடுத்தான். அந்த நேரம் அங்கு வந்த இராட்ச்சத வண்டு கர்ணனின் மடியைத்துளைக்க கடும் வலியை பொறுத்துக் கொண்டிருந்தார். இரத்தம் பட்டு விழித்தார். இதனால் கர்ணன் பொய்யுரைத்திருப்பதை அறிந்த பரசுராமர் சாபமிட்டார். இதனால் கவலையடைந்த கர்ணன் அவரிடம் மன்னிப்பு கோரியதால் சாபத்தை மாற்றியமைத்தார்.

பின்னொரு நாள் அஸ்தினாபுரத்தில் துரோணர் இளவரசர்களின் திறமைகளைக் காட்டும் வகையில் ஒரு போட்டி வைத்தார். அதில் கர்ணன் அர்ஜுனனிடம் சவால் விட்டபொழுது கிருபாச்சாரியார் அவனின் குலம் தாய் தந்தை பெயர் என்பவற்றைக் கேட்டார். இதனால் தலைகுனிந்து நின்றான். அர்ஜுனனிடம் போரிட ஒரு வீரன் உள்ளான் என்ற மகிழ்ச்சியால் உடனே எழுந்து மத்தியில் சென்று கர்ணனுக்கு அங்கதேச அதிபதியென்ற அரச பதவியையும் வழங்கி கௌவித்தான். இதுவே மகாபாரத கதையின் முக்கிய அம்சமாகும். இதனாலேயே இவர்களின் நட்பின் இறுதிவரை செய்நன்றி மறவாதவனாய் இருந்தான் கர்ணன்.

இவன் அங்கதேச அதிபதியாக இருந்த நேரத்தில் தினமும் சூரிய நமஸ்காரம் செய்வதையும் கேட்பவர்கட்கு இல்லையெனாது கொடுக்கும் பழக்கத்தையும் வைத்திருந்தார். இதுவே அவரை புகழின் உச்சிக்கும் வீழ்ச்சிக்கும் வித்திட்டது. ஒரு முறை துரியோனனும் சகுனியும் சேர்ந்து பகடை விளையாட்டு பற்றி யோசித்த போது கர்ணன் அதை தடுக்க முயன்றார். இவற்றைவிட போரிட்டு அனைவரையும் வெல்வோம் என்றான். குறுக்கு புத்தியை விட எதையும் போரிட்டு வெல்லலாம் என்றான்.

இவற்றிலிருந்து கர்ணன் எதையும் நேர்வழியில் வெல்ல விரும்புவான் என்பது இலகுவில் தெளிவாகிறது. பாண்டவர்கள் காடு சென்று திரௌபதியின் சுயம்வர நிகழ்விற்கு மாறுவேடத்தில் சென்றிருந்தனர். அங்கே இருந்த கர்ணன் அசாதாரணமாக எடுத்து நாணேற்றுவது கண்ட கண்ணன் திரௌபதிக்கு வைகை செய்ய திரௌபதியோ கர்ணனைப் பார்த்து தேரோட்டியின் மகனை நான் மணக்க மாட்டேன் என்றாள். இதனால் துயரடைந்த இராதேயன் வீடு சென்றான். பின்னர் திரௌபதியை மணந்தது பாண்டவர்கள் என்பது தெரிய வந்தது அவர்கள் மீது மிகவும் கோபமடைந்தான்.

பின்னர் கர்ணன் துரியோதனனை பேரரசராக்கும் பணியை தானே எடுத்துக் கொண்டார். எந்தவொரு நாட்டிடமும் போர் செய்யும் போது பின்வாங்குபவன் வீரன் அல்லவென்றும் எப்படிப்பட்டவர் வந்தாலும் எதிர்த்து நிற்பவனே போர் செய்யத் தகுதியானவன் என்றும் தன் படை வீரர்களிடம் கூறியிருந்தார். பின்னொரு நாள் கிருஷ்ணர் கர்ணனை அணுகினார். அவரிடம் கர்ணனே பாண்டவரின் மூத்தவன் என்றும் பாண்டவர் பக்கம் சேர்ந்தால் பாண்டவர் வெல்வது உறுதி என்றும் கூறினார். ஆனால் கர்ணன் செஞ்சோற்றுக்கடன் காரணமாக மறுத்துவிட்டார்.

கர்ணன் தனது கவச குண்டலங்கள் வைத்திருக்கும் வரை பாண்டவரின் தோல்வி உறுதியென அறிந்த அர்ஜுனனின் தந்தையான இந்திரன் கர்ணன் மதிய நேர சூரிய வணக்க நேரத்தில் இருக்கும் பொழுது ஏழைப் பிராமணனான வேடம் தரித்து கர்ணனின் கவச குண்டலங்களை இரந்து கேட்டார். அது இந்திரன் என்று தெரிந்தும் தனது

கவச குண்டலங்களை அளித்தார். இதனால் அவர் வைகர்த்தனா என்ற பெயரும் பெற்றான்.

கர்ணனின் மகன்களான வீரசேனா, சத்யசேனா, சுதமர், ஷித்துஞ்ஜயா, த்விபடா, சுஷேனா, சுஷர்மா, விரிஷகேது ஆகியவர்கள் அனைவரும் கர்ணன் இறப்பதற்கு முன்னே இறந்துவிட்டனர் என்பது கர்ணன் போரில் சரியாகச் செயற்படாமைக்கு காரணமாகும்.

மாபெரும் பாரதப்போரான குரு ஷேத்திர போரின் 16ம், 17ம் நாட்களில் கர்ணன் கௌரவப் படையின் தலைவனாக இருந்தார். இந்த நாட்களில் கர்ணன் பாண்டவர்களை நிலைகுலைத்து கௌரவர் படையை நிலைநிறுத்தி இருந்தாலும் அந்த நாட்களே அவரது இறுதி நாளாக அமைந்தது. 16ம் நாள் அர்ஜீனனின் அம்புகள் கர்ணனின் தேரை நூறு அடிகளுக்கு அப்பால் தள்ளியது. கர்ணன் அர்ஜீனன் தேரை, பத்து அடிகளுக்கு அப்பால் தள்ளியது. இதற்கு கிருஷ்ணர் அவனைப் பராட்டினார் காரணம் கிருஷ்ணர் அண்டத்தின் பாரத்தை தேரில் தாங்கி இருப்பதாலாகும்.

கர்ணன் போர்க்களத்தில் வீழ்ந்து கிடந்த போது குந்திதேவியால் கர்ணன் குந்தியின் மகன் என்பது தெரியவந்தது. இந்த நேரத்தில் கிருஷ்ணர், "எத்தனையோ தர்மங்கள் செய்து வாழ்ந்து வந்த ஜீவன் பிரிந்து விட்டது" என்று அர்ஜுணனிடம் கூறினார். கர்ணனுக்கு கிருஷ்ணர் ராதை ருக்மணியுடன் காட்சியளித்தார். கர்ணன் மறைந்த பின்னரும் பலரின் மனதில் கர்ணன் அகலவேயில்லை.

- சி. சஜிஷ்ணவன் 8 D

குற்றம் நீக்கி நூல் எழுதுவோம்
நன்னூல் கூறும் நூலமைவில் குற்றங்கள்

நூல் ஒன்று அமையும் போது சில குற்றங்கள் காணப்படக்கூடாது என நன்னூல் கூறுகின்றது. இன்றைய சம காலத்தில் நூல்களின் பிரவசங்கள் அதிகமாதலின் வரும் நூல்கள் சிறப்புற்று இருக்கு அக்குற்றங்கள் எவை எனக் காணப்பது சிறந்ததாகும்.

1. முதலாவது குன்றக்கூறல் - பொருள் விளங்காத அளவிற்கு அமையாது விளங்க ஆனால் குறைவு படக் கூறுதல்.
2. மிகைபடக் கூறல் - சொற்களை மிகுதிபடக் கூறுதல் ஒரு தவறு

   இந்த இரண்டையும் தான் பொதுவாக சுருங்கக்கூறி விளங்க வைத்தல் என்கிறோம்
3. கூறியது கூறல் - முன்பு சொன்னதையே திருப்பியும் திருப்பியும் கூறுதல்
4. மாறுகொளக் கூறுதல் - முன் கூறியதற்கு பின் மாறுபடக் கூறுதல்
5. வழுஉச் சொற்கள் கூறுதல் - குற்றமுடைய சொற்களை கூறுதல்
6. மயங்க வைத்தல் - இதற்குப் பொருள் இதுவோ அதுவோ என மயங்க வைத்தல்
7. வெற்றெனத் தொடுத்தல் - பயனில்லாத சொற்களைக் கூறுதல்
8. மற்றொன்று விரித்தல் - சொல்ல வந்த பொருளை விடுத்து மற்றொரு பொருளை விரித்தல்
9. சென்று தேய்ந்து இறுதல் - செல்ல செல்ல சொற்செறிவும், பொருட் பொலிவும் தேய்ந்து முடிதல்
10. நின்று பயனின்மை - பயனற்ற சொற்களை பயன்படுத்துதல்

இவைகளைக் கவனித்து நூல் அமைவதே சிறப்பென்று நன்னூற் காண்டிகையுரை சிறப்பித்துக் கூறுகின்றது.

இதன்படியே அமைந்து தமிழ் உலகம் சிறப்புறட்டும்.

- என்.கே. அபிஷேக்பரன்

விடியலை நோக்கி

எத்தனை ஆட்சி மாற்றம்
இங்கு எத்தனை (அ)நாகரிகத் தோற்றம்
இருந்தும் ஒருபிடி சோற்றிற்காய்
அலைகின்ற கூட்டம் - இது
எம் வறுமையின் முன்னேற்றம்!
எத்துணை சந்தித்தோம்
இதுவொன்றும் புதிதல்ல எமக்கு
பிணங்களிடையே உண்ணப்பழகிக்கொண்டோம்
இரத்த வாடையே எமக்கு
நுகர்வுச் சுவாசமானது
போரின் கோரப்பிடியிலும்
தளராமல் வாழ்கின்றோம்
உயிர் இருக்கும் வரை!
வீடில்லை எமக்கு - தார்
வீதியில் படுத்துறக்கம்
நத்தைக்கே முதுகில் வீடு உண்டு
இந்த நாதியற்ற உலகினிலே
சூதாட்டம் கொண்டாடும்
வசதிவாய்ந்த கூட்டம் - ஆனால்
வறுமையின் வழியினிலே எம்மால்
அலைநீரோட்டம் ஆகிவரும் இந்த
வாழ்க்கை ஒரு போராட்டம்
ஊரவர்க்கு சொல்லிவிட வார்த்தையில்லை
எத்தனையோ பாடங்களைப் பொக்கிஷமாக
பதுக்கி வைப்போம் எம்மில்
சோதனை தான் வாழ்க்கை என
தெரிந்து கொண்ட போது
அரிசிமாக் கோலம் - அங்கு
உப்புவரிக் கோலம் ஆகியதே!
அழுதுகொண்டே வாழ்வதனால்
விடியலைக் காணமுடியாத இருண்ட
கண்கள் எமக்கு
இருளிலே தேடுவதனால்
இன்னமும் கிடைக்கவில்லை
இன்பம் எனும் அனுபவம்
அன்பு காட்ட யாருமில்லை
பரவாயில்லை உபத்திரமாவது

செய்யாமல் இருங்கள்
பூப்பறிக்கப் போய், வெறும்
காம்பை மட்டும் பறிப்பதுதான்
எம்நிலை என்றாகிவிட்டது
வறுமையை நாங்கள் வரையவில்லை
அதுவே எம்மை வரைகின்றது
கசக்கும் உப்பு வரிகளால் .....
வழியோரம் விழும் இலைகள் கூட
சருகுகளாய் காற்றில் பறந்து
சுதந்திரமாய் வாழக் கற்றுக்
கொண்டிருக்கிறது எம்மை விட
நீண்ட பெருமூச்சுக்கள் மட்டுமே
எம்கையில் அதைத்தவிர
ஒன்றும் இல்லை
அதைத் தாண்டி ஒன்றுமே
இல்லை நம்மவர்க்கு
நெருப்போடு வெந்தாலும்
நீரில் முழ்கிப் பலம் பெறும் தங்கம்.
அதுபோல
சோதனைத் தீயில் வெந்து
கண்ணீரில் நாம் பெற்ற
வைரமானது எமது உள்ளம்!
காலில் போடும் செருப்பு
தேய்வது போல்
அன்றாடம் நாமும் தேய்கின்றோம்
வாழத்தெரியாது என்று இல்லை - ஆனால்
வாழ விடவில்லை எம்மை
வாழத் தெரியாத வாழ்க்கை
இல்லை - வாழ்ந்து
மடிந்தவர் சொன்னவைகள் பல ....
வறுமை கொடிது அதனிலும்
கொடிது இளமையில்
வறுமை என்றாள் ஔவை.

T. Thiviyan 12MT

கற்றனைத்தூறும் அறிவு

அறிவு எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதது. மனித வாழ்வு அறிவையும், உணர்வையும் அடிப்படையாகக் கொண்டமைந்தது எனலாம். அதன் வழி பொறிகளால் உணர்ச்சியும், புலன்களால் அறிவும் அடையப்படும். அந்த அடிப்படையில் உணர்வையும், அறிவையும் வளர்க்கும் கருவியாக கல்வி திகழ்கிறது. அறிவு என்பது பகுத்தறிவு சிந்தனை, சீர்தூக்கல், துணிவு போலப் பலவகைப்படும்.

நல்ல அறிவானது கல்வியால் வளர்ச்சியடையும். இந் நல்லறிவை அடைய நல்ல நூல்களை தேர்ந்தெடுத்து தொடர்ந்து கற்க வேண்டும். அதுவே உண்மையான அறிவை தரும். 'உண்மை அறிவே மிகும்' எனும் அடிகள் இதனையே எமக்கு புலப்படுத்தி நிற்கின்றன. அறிவை வளர்ப்பதற்கு கல்வியும் கேள்வியும் வேண்டப்படுவன. கற்றல் என்பது பயிற்சியை அடிப்படையாகக் கொண்டதாகவே அமையும். இங்கு பயிற்சியானது பல நூல்களை கற்று தேறுவதைக் குறிக்கின்றது.

எனவே தான்

"நுண்மான் நுழைபுலம் இல்லான எழில் நலம்
மண்மாண புனை பாவையற்று"

என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். எல்லா வகையான அழகுகளிலும் பார்க்க ஆராய்ந்து நல்ல பல நூல்களை கற்பதே உண்மையான அழகாக அமையும் என்பதே இதன் அடிப்படை.

தூயின் மனதையும் திரிய வைக்கும் கல்வியை நாம் சாதாரணமாக அடைந்து விட முடியாது. கல்வியை எவ்வாறு கற்க வேண்டும் என்பதை புறநானூற்றுப் பாடலடிகள் கோடிட்டு காட்டுகின்றன.

"உற்றழி உதவியும் உறுப்பொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்பது புறநானூற்று அடிகளாகும். கல்வி பற்றி பழந்தமிழர் என்ன கருதினார் என்பதற்கு இப்பாடலடிகள் நல்லதோர் எடுத்துக்காட்டு. ஆசிரியரக்கு வேண்டிய நேரத்தில் உரிய உதவிகளைச் செய்வதும், தேவை ஏற்படின் மிக்க பொருளைக் கொடத்தும், இழப்போ வருத்தமோ ஏற்படின் அந்நிலைகளைக் கண்டு வேறுபடாது முயற்சியுடன் கற்பதே சிறப்பானது என இவ்விரு பாடலடிகளும் தெளிவுபடுத்துகின்றன.

"கல்வி கரையில் கட்பவா நாள் சில
மெல்ல நினைக்கின் பிணி பல தென்னிதின்

ஆராய்ந்தமையுடைய கற்பவே நீரொலியப் பாலுன்
குருகின் தெரிந்து"

என்பது நாலடியார் பாடல் கல்விக்கு அளவில்லையாதலாலும் அதனை கற்பவரின் வாழ் நாட்கள் மிகச் சொற்பமானவையாகவே காணப்படுவதாலும் சற்று நிதானமாக சிந்தித்தால் அச் சில வாழ்நாட்களிலும் பிணிகள் பல விருப்பதாலும் நீரும் பாலும் இருக்குமிடத்து நீரை விட்டு பாலை மட்டும் குடிக்கும் அன்னப் பறவைப் போல பொருத்த முடைய நூல்களை தெரிந்தெடுத்து அவற்றைத் தெளிவாக ஆராய்ந்து கற்பதே நமக்கும் பொருத்தமாகவிருக்கும் அதுவே எமது அறிவை பெருக்குவதற்கான வழியுமாகும்.

!!! அற நெறி நிற்போம்
அறிவை பெருக்கி கொள்வோம் !!!

- கு. ஜெருட்ஷன் 12 MT

சூழலின் தூய்மையை பேணுவோம்

இயற்கையை போற்றிப் பயன்படுத்திக் கொள்ள மனிதன் கற்றுக்கொண்ட போதே நாகரிகம் தொடங்கி விட்டது. நாகரிகம் நாள்தோறும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. பண்பாடுகள் பழக்கவழக்கங்களும் மாற்றம் பெறுகின்றன. இதனால் இயற்கை சூழல் மாற்றம் பெற்று வருகிறது. எமக்கு அருங்கொடையாய் கிடைத்த இயற்கையை மாற்றாமல் அதை உயிர் வாழ்வுக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்ளும் திறமைகளே அறிவியலாக விரிவடைகின்றன. அறிவியலும் நாகரிகமும் வளர்ந்தாலும், பண்பாடும் பயனும் என்றும் நிலைத்திருக்க பாடுபடுவதே, இயற்கையோடு இயைந்த வாழ்வாகும். இயற்கைச் சூழல் மாசடைந்தால் வளமான வாழ்வு கேள்விக்குறியாகிவிடும்.

சூரியக் குடும்பத்தில் உயிர்க் கோள் பூமியாகும். பூமியில் பல் வகை உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் உள்ளது. உயிர்களின் வாழ்வுக்கு இன்றியமையாதது உணவு. எனினும் சுவாசித்தல் இல்லாமல் உயிர்கள் வாழ முடியாது. சுவாசித்தலுக்கு தூய காற்று தேவை. ஆனால் இன்று காற்று அளவுக்கதிகமாக மாசடைந்து வருகிறது.

தொழிற்சாலையிலிருந்து வெளிவிடப்படும் கழிவுப் புகையாலும் வாகனப் போக்குவரத்தால் வெளியாகும் கழிவுப் புகையாலும் காற்று மாசுபடுகிறது. இப்புகை போதாதென்று வாயினாலும் சிலர் புகை விடுகின்றனர். புகையிலை பலவகைத் தீமைகளை ஏற்படுத்தும். அதைப் பயன்படுத்துவோர் தம் நலத்தை கெடுத்துக் கொள்வதுடன் பிறர் நலத்தையும் கெடுக்கிறார்கள். காற்று மாசில் கலந்துள்ள கரியைத் தாவர வகை எடுத்துக் கொண்டு, பகலில் ஒளித்தொகுப்பின் மூலம் எமக்குத் தேவையான உயிர் வளியை வெளிவிடுகிறது. ஆகவே தான் அதிகமான மரங்களை வளர்க்க வேண்டும் என்றும் காடுகளை அழிக்கக்கூடாதென்றும் பிரச்சாரம் செய்கிறார்கள். காடுகள் காற்றைப் தூய்மைப்படுத்துகின்றன. மழை பெய்யவும் உதவுகின்றன. தூய்மையான காற்றே உயிர்களின் நல்வாழ்வுக்குச் சிறந்த துணையாகும்.

'நீர் இன்றி அமையாது உலகு' என்றார் வள்ளுவர். தண்ணீர் மக்களுக்கு மட்டுமல்ல, அனைத்து உயிர்களுக்கும் மிக மிக முக்கியமானதொன்றாகும். தாவரங்கள் வளரவும் நீர் தேவை. உலகத்தில் முக்கால் பாகத்திற்கு மேல் நீர் இருந்தாலும் உயிர் வாழ்க்கைக்குத் தேவையான நன்னீர் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதை ஈடு செய்ய நிலத்தடி நீரை வளம் வற்றி வருகிறது. கடல் நீர் அந்த அந்த இடத்தில் புகுந்து நிலத்தடி நீரை ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து உறிஞ்சுகிறோம் இதனால் நிலத்தடி நீர் வளம் மாசுபடுத்துகிறது. இவ்வாறு செய்வதால் மண்ணின் இயற்கை சமநிலை சிதைந்து ஒரு நாளில் நில நடுக்கம் கூட ஏற்படலாம்.

நிலம்தான் நமக்குத் தேவையான உணவுப்பொருள் உற்பத்தியைப் பெருக்க உதவுகின்றது. மனிதன் தன் பேராசையால் இரசாயன உரங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை பெருக்கினான். இதனால் விளை நிலம் தன் இயல்பு கெட்டது. விவசாயத்திற்கு உதவிய நுண்ணுயிர்கள் அழிந்து போயின. மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் வண்டு வகைகளும் பறவை இனங்களும் அழிந்தன. போதாதற்குத் தொழிற்சாலைகளும் பெரிய பெரிய மாட மாளிகைகளையும் கட்டியதால் நல் விளை நிலங்களை இழந்து நிற்கிறோம். அத்துடன் குப்பை, கூழக்கழிவும் நீர்க்கழிவும் எஞ்சியுள்ள நிலத்தையும் ஆறுகளையும் மாசுபடுத்தி உயிர் வாழ்வை கேள்விக் குறியாக்கி விட்டன.

இதெல்லாம் போதாதென்று இக்காலத்தில் புதிதாக ஓசோன் படலமும் சிதைந்து வருகிறது. எம்மை சூரியனிலிருந்து வரும் கழியூதாக் கதிர்களிலிருந்து பாதுகாப்பது இந்த ஓசோன் படலம் தான். ஓசோன் படலத்தில் ஓட்டை ஏற்படுவதன் மூலம் மனிதனுக்கு பல நோய்கள் உண்டாகும். சுருக்கமாக சொல்வதானால் இயற்கை சமநிலை என்பது கெட்டு விட்டது.

மனித இனமும் மற்ற உயிரினங்களும் இனி உலகில் வாழ வேண்டுமானால் நம் செயல்முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். இயற்கை வாழ்வு நெறி முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நாம் வாழும் உலகம் நம்முன்னோர்கள் நமக்காக விட்டுச் சென்றது என்பதையும் நம் சமுதாயத்தின் வருங்காலச் சந்ததியினருக்கு உரியது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இயற்கை வளங்களைச் சுரண்டி நாசம் செய்வதை நிறுத்த வேண்டும். இப்போது இருக்கும் இயற்கை வளங்களை பாதுகாப்பதன் மூலம் எதிர்கால சந்ததியினரும் எம்மைப்போல நல் வாழ்வை வாழலாம்.

- M. Mayooran 8C

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு' என்றார் மகாகவி பாரதியார். மனித குலத்தின் மாண்புக்கும், வெற்றிக்கும், எழுச்சிக்கும் உரிய மார்க்கம் ஒன்றுபடுதலே. ஒன்றுபட்ட உழைப்பின் மூலமே எச் செயலையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். வெற்றியின் பின்னணியில் விடா முயற்சியோடு ஒற்றுமையும் உள்ளடங்கியுள்ளது. இந்த உண்மையை நன்குணர்தல் வேண்டும்.

இந்த உலகில் இன்றைய சூழ்நிலையில் யாரும் தனித்து வாழ முடியாது. சமூகத்தோடு ஒன்றுபட்டே வாழ முடியும். சமூகம் என்றால் கூட்டமைப்பு என்று பொருள்படும். சமூக வாழ்வே மனிதனுக்கு உயர்ச்சி தரும். 'தனி மரம் தோப்பாகாது' என்பது ஆன்றோர் வாக்கு. ஒரு கை தட்டி ஓசை எழாது; இரு கையும் சேர்த்தாற்தான் ஓசை எழும். அதுபோல மனிதர்கள் இணைந்தாற்றான் செயல் சிறக்கும். குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் ஒற்றுமை அவசியம். "யான் மட்டும் தனியாக வாழ்வேன்" என்பது இயலாத காரியம். தனித்திருக்கும் போது வரும் தாக்குதல்கள் வாழ்வைத் தகர்த்து விடும். இதற்கு மாடுகள், நரி மற்றும் சிங்கம் என்பவற்றிற்கிடையே நடந்த சம்பவம் சிறந்த உதாரணமாகும். 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பது பழமொழி. ஒன்றுபட்டு உழைப்பதன் மூலமே எதனையும் சாதித்துக் கொள்ளலாம் என்பதை மனதிற்கொண்டு நாம் செயற்பட வேண்டும். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பர். கூடி வாழ்ந்தால் வாழ்வு சிறக்கும். ஒற்றுமை வளரும். சிற்றெறும்புகள் பல ஒன்று சேர்ந்து தமது உணவுப் பொருள்களை நகர்த்திச் செல்வதைப் பார்த்திருக்கிறோம். தேனீக்கள் பல சேர்ந்து தமக்கான கூட்டை அமைத்துக் கொள்கின்றன. சிறுகச் சிறுகத் தேனைச் சோக்கின்றன. இவை எல்லாம் கூடி வாழ்ந்தால் ஏற்படும் நன்மையினையே நமக்கு உணர்த்துகின்றன. கூட்டுப் பண்ணை, கூட்டுத் தொழில், கூட்டுக்குடும்பம் என்பன எல்லாம் கூட்டுறவின் அவசியத்தையே எடுத்துக் காட்டுகின்றன. கூடித்தொழில் செய்யும் போது காலம் மிச்சமாகிறது. காரியம் உளிதில் கைகூடுகிறது. விரல்கள் இணையும் பேதுதான் கை செயலாற்றும் கருவியாகிறது. அதுபோல மனிதர்கள் இணைந்தால் செயல் உருவாகிறது.

இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சி பல துறைகளிலும் மாற்றங்களைத் கொணர்ந்துள்ளது. கட்டடங்கள், அணைகள், அலைகள் என பல வியத்தகு விடயங்கள் (பல முறைகளில்) உருவாகியுள்ளன. இவை எதுவும் தனி மனித முயற்சியினால் உருவானவையல்ல. மனிதர்களின் ஒன்றுபட்ட உழைப்பின் மூலமே உருவானவை.

உலகில் ஏற்பட்ட பெரும் புரட்சிகளை எண்ணிப்பாருங்கள் இப்புரட்சிகள் எல்லாம் தனி மனிதனால் ஏற்பட்டவையல்ல. மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியின் மூலம் -

ஒற்றுமையின் மூலமே ஏற்பட்டவை எனலாம். பிரிவு என்பது துன்பம் தரும். தனி மனித வாழ்வில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். கூடி வாழ வேண்டிய இருவர் பிரிந்தால் இருவருக்குமே துன்பம் பிறக்கும். பிரிவதால் இருவர் பலமும் குன்றும். முன்னேற்றம் தடைப்படும். ஒன்றுபட்டு வாழ்வதன் மூலமே வாழ்வு சிறக்கும். குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் ஒற்றுமை உறுதியாக நிலைபெற முடியும். ஒரு இனம் தமக்குள் மாறுபட்டு பிரிந்து நிற்குமாயின் அந்த இனம் ஒருபோதுமே உயர்வடைய முடியாது. உலக வரலாற்றில் இதற்கான சான்றுகள் பலவற்றைக் காணலாம்.

உலகம் போற்றும் உத்தமர்கள், பெரியோர்கள் யாவரும் ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளனர். "கார்ல்மார்க்ஸ்" 'உலகத் தொழிலார்களே! ஒன்றுபடுங்கள்' என அழைப்பு விடுத்தார். 'சமாதானமே எங்களுக்கு வேண்டும்' என மக்கள் இன்று குரல் எழுப்புகிறார்கள். இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் காக்க போராடினார் காந்தியடிகள். அதற்காக தம்முயிரையே அர்ப்பணித்தார். எல்லாத் தலைவர்களும் ஒற்றுமையே உயர்ந்ததென்றும் ஒன்றுபட்டே வாழவேண்டும்மென்றும் வலியுறுத்தியுள்ளனர். அவர்களது வாழ்வும் வாக்கும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதையே நமக்குணர்த்தி நிற்கின்றன.

நாடும் வீடும் சிறக்க ஒற்றுமை வேண்டும். ஒற்றுமையே வெற்றிக்கு வழி. நாம் கற்றறிய வேண்டிய முதல் மொழி அது. சாதி, சமய பேதங்கள் மறப்போம். சமத்துவம் நிலைத்திட ஒன்றுபட்டு உழைப்போம். ஒன்றுபட்ட உழைப்பின் மூலம் உயர்வு காண்போம்.

- M.H.M. Musthaque 12MT

தெய்வம் தொழுவோம்

இன்று நாம் இருபத்தோராம் நூற்றாண்டில் முதற் தசாப்தத்தைக் கடந்து வாழ்ந்து வருகின்றோம். இந்நூற்றாண்டானது அறிவியல் சிகரத்தின் பல படிகளைக் கண்டதாக இருக்கின்றது. இத்தகைய சிறப்பு மிக்க உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் மனிதத்தன்மையை இழந்து உயிரற்ற வெறும் எந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதனால் மனிதர்கள் நிம்மதி இழந்து உலகம் முழுதும் உழன்று கொண்டு உள்ளனர். இதற்குக் அடிப்படைக் காரணம் என்ன என்று எடுத்து நோக்கினோம் ஆயின் மனிதன் தன் உயிர் போல் மண் உயிர் ஓம்பும் பண்பை விடுத்து வாழ்வதே ஆகும். இதற்கான ஒரே தீர்வாக அமைவது மனிதன் தெய்வத்தை தொழுது வாழ்வதே ஆகும்.

இறைவன் அல்லது தெய்வம் என்றால் என்ன? மனிதன் மனிதனை மதிக்க மனிதன் மனிதனிற்கு மேலானவன் என்று காட்ட உருவாக்கப்பட்ட படைப்பு தான் தெய்வம். ஒவ்வொரு மனிதனினதும் உயிரே இறைவனாக இருப்பவர் இதனைத் தான் திருமூலரும்

"உள்ளம் பெரும் கோயில்
ஊனுடம்பு ஆலயம்"

எனத் தொடங்கும் பாடலின் மூலம் நமக்கு விளக்குகின்றார். நமது சகோதர இனமான சிங்களவரின் மதமான பௌத்தத்தின் கர்த்தாவாக விளங்கும் புத்தர் "உனக்கு நீயே சரணாக இரு" எனக் கூறுகின்றார். பதங்கள் உருவாக்கப்பட்டதன் பிராதன நோக்கம் உயிர்கள் மீது அன்பு செலுத்துவதே ஆகும். அதாவது தான் செய்யும் வினைகளுக்கு தண்டனைகள் கிடைக்கும் என்று பயத்தினை ஏற்படுத்தினால் குற்றங்கள் குறையும் அன்பு பெருகும் எனினும் இன்றைய மனிதர்கள் தெய்வத்தை மறந்தும் சிலர் மறுத்தும் வாழ்கின்றனர். மனிதனை மனிதனாக மாற்றுவது நம்பிக்கை அதை தெய்வத்தின் மீது வைத்தால் உலகத்தில் மக்கள் சிறப்புடன் வாழலாம். அதற்காக 108 தேங்காய் உடைத்தல், அங்கப்பிரதட்சணம் பண்ணல் 1000 பிறை காணுதல் போன்றவை மூட நம்பிக்கைகளை வளர்ப்பனவாக இருக்கக் கூடாது. இரண்டாவது தெய்வமாக நாம் கண்ணால் காணச் செய்யும் தெய்வமாக விளங்குவது நம் பெற்றோர்களே ஆவர்.

பெற்றோர்களிற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளோ ஏராளம் ஏராளம் அவர்களே நம்மைத் தாலாட்டியும் சீராட்டியும் வளர்த்தவர்கள். எனவே அவர்களது தேவை உணர்ந்து காலம் அறிந்து சேவை செய்ய வேண்டியது ஒவ்வொரு தனையனினதும் தலையாய கடமையாகும்.

"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க
மந்திரம் இல்லை ஆயிரம் உறவுகள் இருக்கு என்றாலும்
அன்னை தந்தையே அன்பின் எல்லை"

என்று ஔவையார் பாடித் தந்து தாய் தந்தையரது சிறப்பையே அகம் எனினும் இன்றைய மக்கள் தங்கள் பெற்றோரை முதியோர் இல்லங்களிலும் அனாதை இல்லங்களிலும் சேர்க்கும் துர்பாக்கிய நிலையை நாம் கண்ணூடாகக் காணக் கூடியதாகத் தான் உள்ளது.

ஒவ்வொரு பெண்ணும் தங்கள் கணவனை கண் கண்ட தெய்வமாக வழிபட வேண்டும் தெய்வத்தை தொழாவிடினும் கணவனை தொழுதால் அது சரித்திரமாக மாறும் இதனைத் தான் திருவள்ளுவர் தன் ஈர் அடிகள் மூலம்

"தெய்வம் தொழால் காழுநன் தொழுதழுவான்
பெய் என பெய்யும் மழை" என்கிறார்

அது மட்டுமல்லாது கொங்கண முனிவரின் தவத்தையும் அறியும் ஞான திருஸ்டியைப் பெற்ற பதிவிரதை செய்த தவமானது கன்னியாக இருக்கும் பொழுது பெற்றோரிற்கும் மனைவியாகும் போது கணவனிற்கும் செய்த பணிவிடையாலேயே ஆகும். இதே போல் ஆணும் தன் மனைவியை இறைவியாக நடத்த வேண்டும். பிள்ளைகளை வயிற்றில் சுமந்து உருவாக்கி வறுமை இன்னல்களை மறைத்து தீய குணங்களை அழித்து நம் அனைவரையும் கண்போல் காத்து வாழ்க்கை அளிக்கும் பெண் ஆனவள் நிச்சயமாக தெய்வத்தை அஞ்சியே நிற்கின்றாள்.

எவன் ஒருவன் குருவை அவமதிக்கின்றானோ அவன் தெய்வத்தை அவமதித்தலிலும் பெரிய பாவத்தை பெற்றுக் கொள்கிறான். அறியாமை என்னும் இருளில் இருந்து அறிவு எனும் ஒளியை ஏற்றும் விளக்கான கசப்பான கல்வியின் மேல் இனிப்பைத் தடவி இனிமையாய் எமக்கு ஊட்டும் ஆசிரியர்களை மதிக்காவிட்டால் அவனால் வாழ்வின் இலட்சியங்களை நிறைவேற்ற முடியாது. "மாதா, பிதா, குரு, தெய்வம்" மாதா, பிதா, குரு போன்றவர்களே நாம் கண்ணால் காணக்கூடிய தெய்வமாக விளங்குகின்றனர் என்று இந்த வரி நமக்கு அழகாக விளக்குகின்றது. எனவே மனிதனானவன் நிச்சயமாக குருவை மதித்து வாழ்பவனாக இருக்க வேண்டும்.

செய்யும் தொழிலே தெய்வம். ஒரு மனிதனானவன் மனிதனாக வாழ்வது அவன் செய்யும் தொழிலாலேயே ஆகும். எவன் ஒருவன் தன் கடமையை சரிவர செய்கிறானோ அவனது வாழ்க்கை முன்னேற்றம் அடையும். தன் ஐம்புலங்களை அடக்க துறவறத்தின் மூலம் இன்பத்தைத் தேடுபவரிலும் பார்க்க தன் கடமையை உரிய நேரத்தில் சரிவர நிறைவேற்றுபவரானவர் மேலானவராக கருத்தப்படுவார். உதாரணமாக கொங்கண

முனிவரின் கதையை எடுத்துக்கொண்டோம் ஆயின் இறைச்சி வெட்டுபவனானவன் தன் தொழிலை ஈனத் தொழிலாக நினைக்காமல் அதை தெய்வமாக வணங்கியதால் தான் அவன் ஞானத்தை அடைந்து கொண்டான். இந்து மதத்திலே ஆயுத பூசை எனும் நாளில் தான் தொழில் செய்யப் பயன்படுத்திய உபகரணங்களை வைத்துப் பூசை செய்வர். இதிலிருந்து அந்தக் காலத்தில் இருந்தே மனிதன் தன் தொழிலிற்கு பூசை செய்தது எடுத்துக் காட்டப்படுகின்றது.

ஆகவே இறைவன் என்பவர் நம் உள்ளத்திலும், சுற்றத்திலும், கடமையிலும் தங்கியிருக்கிறார். அத்தகைய இறைவனை நாம் வணங்க வேண்டும் எனினும் இந்த இறைவனை நாம் வணங்க வேண்டும் எனினும் இறைவனை அந்த இறைவனா பெரிது என்று மதத்தால் மதம் பிடித்து மதத்திற்காக அடிப்பட்டுக் கொள்வது மூடத்தனமான செயல். "எம்மதமும் சம்மதம் என்பது நம் முன்னோர் வாக்கு எனவே நம் முன்னோர் வாக்கிற்கிணங்க எம்மதமும் சம்மதமாக தெய்வத்தை தொழுது ஆலயத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வாழ்க்கையை வென்று முடிப்போமாக.

- பா. கஜீவ் 10 C

எல்லாம் கடவுள் செயல்

ஒரு சிற்றூரில் ஒரு முதியவர் தனது 25 வயது மகனுடன் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு குதிரையை வளர்த்து வந்தார். அதனை உபயோகித்து தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர். அந்த முதியவர் மிகுந்த தெய்வ நம்பிக்கை கொண்டவர் அது வொன்று இறைவனின் ஆணையின் பேரில் தான் நடக்கிறது அதன் காரணமாகவே எல்லாம் நல்ல விதமாக முடியும் என்ற திட நம்பிக்கை கொண்டவர்.

ஒரு நாள் இவரது ஒரே குதிரையும் மேய்ச்சலுக்குச் செல்லும் போது வழிதவறிக் காணாமல் போய்விட்டது. உடனே ஊரார் முதியவரிடம் வந்து உங்கள் ஜீவனத்துக்கு உறுதுணையாய் இருந்த ஒரே குதிரையும் காணாமல் போய் விட்டதே நீங்கள் மிகவும் கஷ்டப்படுவீர்களே என வினவினர்.

முதியவரோ எல்லாம் இறைவன் செயல் நன்மையிலேயே முடியும் எனறு கூறி ஊராரை அனுப்பி வைத்தார்.

சில நாட்கள் கழித்து அந்தக் குதிரை நண்பர்களுடன் முதியவர் வீட்டுக்கு வந்து சேர்ந்தது உடனே ஊரார் முதியவரை சந்தித்து தங்களது சந்தோஷத்தை தெரிவித்தனர். முதியவர் மிகவும் சந்தோஷம் அடைந்தார்.

- Devin 3C

சங்கிலிய மன்னன்

சங்கிலிய மன்னன் என்பவன் 1519 தொடக்கம் 1560 வரை யாழ்ப்பாண அரசை ஆண்ட அரசன் ஆவான். இறுதி வரை யாழ்ப்பாணத்திற்குள் நுழைய முற்பட்ட போர்த்துக்கேயரை துணிந்து எதிர்த்த மன்னன் தான் சங்கிலி ஆவான். பலர் இந்த சங்கிலி மன்னனையும் இவன் பின் வந்த அடுத்த சங்கிலி மன்னனையும் ஒன்றாக கருதிக்கொள்கிறார்கள் ஆனால் போர்த்துக்கேயரின் குறிப்பு இவர்கள் இருவரையும் நன்கு வேறுபடுத்திக் காட்டியுள்ளது.

குடும்பம்

இவன் 1440 தொடக்கம் 1450 வரையும், பின்னர் 1467 தொடக்கம் 1478 வரையும் யாழ்ப்பாணத்தை ஆண்ட கனகசூரிய சிங்கையாரியனின் மகனாவான். இவனுக்கு 2 மூத்த சகோதரர்கள் இருந்த போதிலும் அரசை முறையற்ற விதத்தில் கைப்பற்றிக் கொண்டான்.

சங்கிலியனும் போத்துக்கேயரும்

சங்கிலியன் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலம் போத்துக்கேயர் இலங்கையில் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்த காலமாகும். இலங்கையின் அரவியலிலும் தலையிடத் தொடங்கியிருந்தனர். இவர்களுடன் வந்து குருமார் மதப்பிராசங்களிலும், மத மாற்றங்களிலும் ஈடுபட்டு இருந்தனர். யாழ்ப்பாண அரசைச் சேர்ந்த மன்னார் பகுதியில் பெருமளவில் மதமாற்றம் நடந்ததை கேள்வியுற்று, மன்னாரில் புனித சவேரியாரின் பாதிரியார்களால் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியவர்களையெல்லாம் தானே நேரில் சென்று வெட்டிக் கொன்றான். போத்துக்கேயர் அந்த இடத்தில் வேத சாட்சிகள் கோயில் என்ற தேவாலயத்தைக் கட்டினர். அது இன்னும் தோட்டவெளி பகுதியில் உள்ளது. இதையடுத்து இலங்கை பதிலாளுனரான பிறகன்சா சங்கிலியனை தண்டிக்க படையெடுத்து வந்தான்.

நல்லூர் வீழ்ச்சி

சிறப்பான போர் அனுபவம் கொண்ட போத்துக்கேயர் நல்லூரை கைப்பறினர். இதனால் சங்கிலியன் தம் அரண்மனைக்கு தீயூட்டி விட்டு வன்னிக்குச் சென்றான். போத்துக்கேயர் அவனை பிடிக்க வந்த படைகள் அங்கேயே முகாமிட்டு தங்கினர். நோயாலும் பசியாலும் வந்த படைகள் இறந்து போனார்கள். இதனால் நல்லூர் பாதுகாப்பான இடமாக கருதப்படவில்லை.

சங்கிலியனின் தந்திரம்

இந்நிலையை சாதகமாக பயன்படுத்திய சங்கிலியன் போத்துக்கேயரிடம் சமாதான தூது அனுப்பினான். சிக்கலான நிலையில் இருந்த போத்துக்கேய ஆளுனர் சில கட்டளைகளுடன் அந்த தூதை ஒப்புக் கொண்டான். இந்நிபந்தனைகளை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்காக தன் மகனையும் இன்னுமொரு அதிகாரியையும் பிணையாக அனுப்பினான். சங்கிலி நல்லூருக்கு திரும்பினான். ஆனால் அவன் போத்துக்கேயரை இலங்கையில் இருந்து விரட்டுவதிலேயே கண்ணாக இருந்தான். ஒரு நாள் ஒரே சமயத்தில் மக்கள் கிளர்ந்தனர். அங்கிருந்த போத்துக்கேயர் பலர் கொல்லப்பட்டனர். சிலர் பெரும் சிரமத்திற்கு மத்தியில் தப்பிச் சென்றனர். எனினும் சங்கிலியன் பிணையாக கொடுத்த இருவரையும் காப்பாற்றுவதில் தோல்வி கண்டான்.

சங்கிலியனின் முடிவு

இவன் எப்படி இறந்தான் என சான்றுகள் இல்லை எனினும் இவன் நம்பிக்கை அற்றவன் என்பதால் மக்களால் மன்னன் பதவியில் இருந்து அகற்றப்பட்டான் என போத்துக்கேய பாதிரியாரான குவைறோஸ் குறிப்பிட்டுள்ளார்.

- K. Thivvyan 8C

நன்றி மறந்த செல்வன் .....

" மகேஷ் ..... மகேஷ் ..... சீக்கிரம் போய் பல் துலக்கிக் கொண்டு வா! ....." என்று அதிகாலையிலேயே மகேஷின் தாய் லட்சுமி மகேஷைஎழுப்பி பல்துலக்கக் கூறுவதனால் லட்சுமி கடுமையானவள் என்றோ அல்லது அவள் இரக்கமற்றவள் என்றோ நினைக்க வேண்டாம். ஏனெனில் பாவம் ! லட்சுமி ஒரு விதவை. முப்பத்தைந்து வயதிலேயே தன் கணவனை காலனிற்கு பறிகொடுத்த அவள் என்னதான் செய்வாள். லட்சுமி விதவை என்றாலும் பெயரிற்கு ஏற்றாற்போல லட்சணமாகத் தான் இருக்கிறாள். அதனால் தான் அவள் விதவையான பின்பும் பல ஆண்கள் அவளை பெண் கேட்டு வந்தார்கள். ஆனால் தான் திருமணத்தை மீண்டும் செய்வது தன் மகன் மகேஷிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்ற ஒரே காரணத்தால் அவள் மீண்டும் திருமணம் செய்வதை தவிர்த்தாள்.

மீண்டும் திருமணம் செய்து கொள்ளாத லட்சுமி தன் மகனை எப்படியாவது படிக்கவைத்து சமூகத்தில் உயர்நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் இருந்தாள். இதனால், அவள் தன் இளமை மினுமினுப்பு, வெட்கம் அனைத்தையும் விட்டு விட்டு வீடுவீடாகச் சென்று துணி துவைத்து சிறுதொகையை சம்பாதித்து வந்தாள். ஆனால் அவ்வாறு ஈட்டும் சிறு பணம் மகேஷின் படிப்புச் செலவிற்கு ஈடு கொடுக்கவில்லை. இதனால் அவள் அதிகாலையிலேயே எழுந்து இடியப்பம் சுட்டு அதை கடைகளிற்கு விற்று பணம் ஈட்ட ஆரம்பித்தாள். அவள் அதிகாலையில் சுடும் இடியப்பத்தை கடைகளிற்கு சென்று வழங்கும் பொறுப்பு 15 வயதேயான மகேஷிற்கு வழங்கப்பட்டிருந்தது. இதனால் தான் லட்சுமி மகேஷை தினமும் அதிகாலையில் எழுப்பி விடுவாள்.

லட்சுமி கஷ்டப்பட்டு உழைத்த பணத்தின் பலனாக மகேஷும் எவ்வித குறையும் இன்றி சிறப்பாக படித்து வந்தான். லட்சுமியின் கனவை நிறைவேற்றும் வகையிலும் அவளது எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்யும் வகையில் மகேஷ் படித்து வந்தமையினால் அவள் படும் கஷ்டம் அவளுக்கு பெரும் பாரமாக விளங்கவில்லை.

மகேஷ் சாதாரண தரம், உயர்தரம் பரீட்சையில் சிறந்த புள்ளிகளை பெற்றான். உயர்தர பரீட்சையில் அவன் அதிதேர்ச்சி பெற்று மருத்துவபீடத்திற்கு தெரிவு செய்யப் பட்டான். இதன் போது லட்சுமி அடைந்த மகிழ்ச்சியை எழுத்துக்களினால் வர்ணிக்க முடியாது. அவள் தன் கஷ்டங்களிற்கு பலன் கிடைத்ததையிட்டு மீளா இன்பத்தில் இருந்தாள்.

அன்று பல்கலைக்கழகத்தில் இறுதிப் பரீட்சை நடைபெறும் தினம் அறிவிக்கப்பட்டது. அத்துடன் பரீட்சைக் கட்டணமாக 20,000/- ரூபாவும் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டது. மகேஷ் முகத்தை தொங்கப் போட்ட வண்ணம் வீட்டிற்கு சென்றான். காரணம் 20,000/- என்பது அவர்களை பொறுத்தவரை அத்தொகையானது மிகப் பெரிய தொகை யொன்றாகவே காணப்பட்டது.

மகேஷ் வீட்டிற்கு தொங்கிய மகத்துடன் வந்ததைக் கண்ட லட்சுமி காரணத்தை வினவினாள். மகேஷும் காரணத்தை கூறினான். லட்சுமியிற்கு அத்தொகை கொடுப்பதற்கு எவ்வழியும் காணப்படவில்லை.

லட்சுமி கடுமையாக யோசித்த பின் ஒரு முடிவுக்கு வந்தாள். அது தான் அவளது தங்க மாலையை அடகு வைத்து பணத்தை ஏற்பாடு செய்வதாகும். அவளிற்கு எப்படி தங்கமாலை? என்று நீங்கள் யோசிப்பீர்கள். அதுதான் அவளது கணவன் அவளிற்கு திருமணத்தின் போது வழங்கிய மாலையாகும். அவளது கணவனின் ஞாபகார்த்தமாக அவளிடம் இருந்த அம்மாலையும் தன் மகனின் படிப்புக்காக இழக்கத் தயாரானாள். அம் மாலையை விற்று பெற்ற பணத்தைக் கொண்டு மகேஷ் பரீட்சை எழுதி சித்தியடைந்தான்.

காலம் வேகமாக நகர்ந்தது. நாட்கள் வாரங்களாயின, வாரங்கள் வருடங்களாயின. மகேஷ் வைத்தியராகி திருமண வயதை அடைந்தான். அவன் அவனுடன் படித்த பெண்ணை லட்சுமியின் விருப்பத்துடன் கரம் பிடித்தான்.

லட்சுமியிற்கும் மகேஷின் மனைவி திவ்வியாவிற்கும் இடையே மாமியார் - மருமகள் சண்டை தொடங்க ஆரம்பித்தது. லட்சுமியை பிடிக்காத திவ்யா அவளை எப்படியாவது வீட்டைவிட்டு விரட்ட வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டாள். ஒரு நாள் மகேஷ் கோபத்துடன் இருந்த சமயம் பார்த்து திவ்யா லட்சுமியைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாக பொய்களை கூறி தான் இவ்வீட்டில் இருக்க வேண்டும் எனின் லட்சுமி வீட்டை விட்டு செல்ல வேண்டும் என்று ஒரே காலில் நின்றாள். புது உறவின் மீதான அன்பின் காரணமாக தன் தாயை வீட்டை விட்டு விரட்டினான் மகேஷ் .....

தான் கஷ்டப்பட்டு வளர்த்த மகேஷாஇது என்று வானமே தன் தலையில் விழுந்தது போல் ஏமாற்றம், சோகம், வெறுப்புடன் லட்சுமி வீட்டை விட்டுச் சென்றாள்.

வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட லட்சுமி தெருவோரங்களில் பிச்சையெடுத்து சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வந்தாள்.

இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் மகேஷ் தன் காரில் வைத்தியசாலை சென்று கொண்டிருந்த போது கண்ட சம்பவம் அவனை நிலைகுலைய வைத்தது. ஒரு சிறிய நாய் காயப்பட்டிருந்த தன் தாய் நாயை பிற மனிதர்கள் சீண்டாமல் இருக்க வள் .... வள் .... என குரைத்து தன் தாய் நாயை காப்பாற்றிக் கொண்டிருந்தது. இதனைக் கண்ட மகேஷின் குற்ற உள்ளம் தடுமாறியது. ஒரு நாய்க்குட்டியே தன் தாய் நாயை காப்பாற்றுகிறது எனின் தாயை விரட்டிய நான் நாயை விட கீழானவன் என்று அவனது உள்ளம் அவனை உறுத்தியது. பின் எப்படியாவது தன் தாயை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக தன் தாய் வழமையாக இருக்கும் இடத்திற்கு சென்றான்.

ஆனால் அவ்விடத்தில் சனக்கூட்டம் இருந்தது. ஏதோ நினைத்தவனாக மகேஷ் கூட்டத்தினை விலக்கி முன்னால் சென்றான். அங்கு ..... நாயால் கடித்து குதறப்பட்ட லட்சுமியின் அனாதைப் பிணம் காணப்பட்டது. இதைக் கண்ட மகேஷ் மூர்ச்சிறைத்து கீழே விழுந்தான், தாயை விட கேவலமானவனாக .....

(முற்றும்)

- Shifkhan Hafeel 12MT

With Best Compliments

from

TAIAN LANKA STEEL COMPANY (PVT)., LTD

MANUFACTURE OF ERW PRECISION STEEL TUBE

No. 33-1/16, Old Moor Street, Colombo 12, Sri Lanka.
Tel : 0094 11 2333096, 11 4341960 Fax : 0094 2333097

Factory
HORANA EXPORT PROCESSING ZONE, BORALUGODA,
PORUWADANDA.
Email : info@tailanlankasteel.com

With Best Compliments from

ARUNA ENTERPRISES (PVT) LIMITED
IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS

337, Old Moor Street, Colombo 12, Sri Lanka.
Tel : 94 11 2440961, 2421950, Fax : 94 11 2438902
Email : arunaeps@sltnet.lk

With Best Compliments from

Treasure

Garments, Pink tea, Jewellery, Travels

No. 67/, Pradeepa Mawatha, Maligawatta, Colombo 10, Sri Lanka.
Tel : 011 5833320 Mobile : 077 3158307
Email : ayincar@gmail.com

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

ஒழுக்கம் என்பது நற்குணம் நற்செய்கை நன்னடத்தை ஆகும்.
இவ்வொழுக்கம் எல்லோருக்கும் மேன்மையை தரவல்லது.
ஒழுக்கம் உடையவரே உயர்ந்த குடி பிறப்பாகும்.
ஒழுக்கம் பிறப்புக்கு சிறப்பைத் தரும்.
நல் ஒழுக்கம் வாழ்க்கைக்கு மேன்மையைத் தரும்.
ஒழுக்கம் உடையவரே சமூகத்தால் உயர்ந்தோர் எனப் போற்றப் படுவர்.
அதனால்தான் உலகப் பொதுமறையான திருக்குறள் இவ்வாறு கூறுகிறது.
ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழக்கம் உயிரினும் ஓம்பப்படும். எனவே உயிருக்கு மேலாக
ஒழுக்கத்தை போற்றுவோம்.
எனவே சின்னஞ்சிறார்களாகிய நாம் சிறுவயதிலேயே நலலொழுக்கத்தைக் கற்று நல்ல குடிமகனாக வாழ்வோமாக.

காசு பணம்

கடைக்கு நாமும் போகலாம்
கானும் பொருட்களை வாங்களாம் !
ஊரு ஊராய் சுற்றலாம்
உணவு விதமாய் உண்ணலாம் !

உடைகள் பல தைய்களாம்
உல்லாச மாய் இருக்கலாம்!
உலோகத்தில் ஆனது
ஊரு முழுவதும் புழந்தது!

அப்பா தந்த காசிலே
அளவாய் செலவு செய்யலாம்!
கொஞ்சம் செஞ்ச அகவே
சேர்த்து சேர்த்து வைக்கலாம்!

அன்பு கலந்த நன்றிகள்.....

★ பிரதம விருந்தினராகக் கலைவிழா 2011 ற்கு கலந்து சிறப்பித்த திரு. எம். கே. ராகுலன் அவர்கட்கும் (ஜனாதிபதி தொடர்பாடல் பணிப்பாளர்)

★ அதிபர் திரு. எச்.ஏ. உபாலி குணசேகர அவர்களுக்கும் உப அதிபர் திரு. கீர்த்திசேன அவர்களுக்கும்,

★ பிரதி அதிபர் திரு. மா. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும்,

★ மன்றப் பொறுப்பாசிரியர் திரு. S.R. ஜெயகுமார் அவர்கட்கும், ஏனைய பொறுப்பாசிரியர்களுக்கும்,

★ பாடசாலைகளுக்கிடையிலான, பாடசாலைக்குள்ளான தமிழ் திறன்கான் போட்டிகளுக்கு நடுவுநிலைமை வகித்த நடுவர்களுக்கும், அதில் பங்கு பற்றிய மாணவர்களுக்கும்,

★ என்றுமே எமக்கு உறுதுணையாய் இருக்கும் பழைய மாணவர்களுக்கும்,

★ இவ்விழாவில் கலந்து சிறப்பித்த பெற்றோர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும், ஏனையவர்களுக்கும்

★ விழாவை சிறப்புற நடாத்த உதவிய விளம்பரதாரர்களுக்கும்.

★ "தமிழ் நயம் 2011" மலரை அச்சிட உதவிய A.J அச்சகத்தார்களுக்கும்,

★ ஒலி, ஒளி வசதி செய்து தந்த "Music J Entertainers" நிறுவனத்தாருக்கும்

★ என்றும் உடன் நின்ற வேத்திய வேங்கைகளுக்கும் ....

★ பெயர் குறிப்பிட மறந்த அனைத்து நெஞ்சங்களுக்கும்

நவில்கின்றோம் நன்றிகள்
பலகோடி

Our Sincere Thanks to....

- To our chief guest Mr.M.K.Rahulan, Director Presidential Communication for gracing this occasion despite his busy schedule.
- Our principal Mr.H.A.U.Gunasekara and Senior Deputy Principal Mr.Sarath Keerthisena for their guidance during the year.
- Deputy Principal Mr.M.Ganapathipillai,Teacher -In-Charge Mr.S.R.Jeyakumar and all the other teachers-in-charge of our society for their whole hearted support and encouragement for making this event a success.
- Judges who have taken their time to evaluate the interschool and inter grade competitions.
- Teacher-In-charge of other schools and students for their enthusiastic participation at the interschool competition.
- Sponsors, advertisers and well wishers who provided us with advertisements and banners for the 'kalai vizha 2011'.
- Teachers, students, old boys and others who have contributed for 'Thamizh Nayam 2011'.
- A.J.Printers for the marvelous job done under a tight schedule of printing the souvenir, certificates and invitations.
- Music J entertainers for providing light and sound system. The entire young royalist who took part in all events.
- Teachers, patrons whom we are unable to thank individually and the parents who have helped us innumerable ways.

Autograph

With best compliments from.....

Mr.S.Varatharajah

VARATHAN RICE MILL

Horopothane Road,
Rambaikulam,
Vavuniya,
Tel: 024-5670360



Royal College
Group of 2007 - Tamil Guild

TOGETHER FOREVER